
கல்கி
மணியம்
KALKI செப்டம்பர் 26. 1954
4 அணா



நாள் முழுவதும்
காலை வேளையில்
புத்துணர்ச்சி
பிற்பகலில்
அளிக்க...
இரவில்
Himalaya Bouquet
Himalaya Bouquet
குளுமையான, நறுமணம் கொண்ட
ஹிமாலயா புக்கே பௌடர்களை உபயோகியுங்கள்
ஹிமாலயா புக்கே ஸ்னோ எல்லா சீதோஷ்ண நிலைகளிலும் சருமத்தைப் பாதுகாக்கிறது.
HBP 10-50 TM

கல்கி பொருளடக்கம்

மலர் 14
இதழ் 9

1954 செப்டம்பர் 26

ஜய ௵
புரட்டாசி 10

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


நீங்கள் புகழத்தக்க குடித்தன ஸ்திரீயா?
அப்படியானால், மாதாந்திர தேவையான சாமான்களை முன்கூட்டியே திட்டமிட்டு வாங்கவேண்டும். அப்பப்போது திட்டமில்லாமல் வாங்கினால் பண்டமும் பணமும் வீண்.
புதிய துஷார் டின்களை நீங்கள் வரவேற்பீர்கள். ஏனெனில், உங்கள் தேவைக்கு தகுந்தபடி, மிக சுத்தமான முறையில் நன்றாய் மூடப்பட்ட 10, 5, 2 பவுண்ட் டின்களில் இப்போது கிடைக்கிறது.
10 lbs
5 lbs
2 lbs
Tushar
துஷார்-
சமையலுக்கு இன்றியமையாதது
இலவசம்
பல்வேறு இந்தியத் தின்பண்டங்கள் செய்யும் விதம் எப்படி என்று சொல்லும் புத்தகம் இலவசமாய் அனுப்பப்படும்.
துங்கபத்திரா இண்டஸ்ட்ரீஸ் லிமிட்டெட், கர்நூல்.

கல்கி

மலர் 14

தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார்

இதழ் 9

ஏழு வருஷத் தொல்லை!

பாங்கிகளின் நிர்வாகிகளுக்கும் பாங்கிகளில் வேலை செய்யும் சிப்பந்திகளுக்கும் சென்ற ஏழு ஆண்டு காலமாகத் தகராறு நடந்து வருகிறது. சம்பள விகிதம், கிராக்கிப்படி முதலியவை பற்றிய தகராறுதான். இது பற்றிப் பொதுமக்கள் அடிக்கடி பத்திரிகைகளில் படித்து வருகிறார்கள். ஆனால் அதிகமாக சிரத்தை கொண்டிருக்க மாட்டார்கள்.

ஏனென்றால், பாங்கிகளை நடத்துவோர் கோடீசுவரர்களான முதலாளிகள் என்பது பொது மக்களின் எண்ணம். கோடிக் கணக்காகப் பணம் புரளும் பாங்கிகளில் வேலை செய்யும் சிப்பந்திகளும் நல்ல வசதிகளுடன் இருக்க வேண்டும் என்று எண்ணுவோர் மிகப் பலர். ஆதலின், பெரிய பெரிய பணக்காரர்களும் அவர்களுடைய சிப்பந்திகளும் செய்து கொள்ளும் தகராறுகளில் நாம் எதற்காகத் தலையிட வேண்டும் என்று பலரும் எண்ணுவது இயல்புதான்.

உண்மையில், பாங்கிகளிலும் பாங்கியின் நிர்வாகத்திலும் பொது மக்கள் கவலை கொள்வதற்குப் போதிய காரணங்கள் உண்டு. நாடெங்கும் தொழில் வளம் பெருக வேண்டும் என்று நாம் எல்லோரும் விரும்புகிறோம். பெரிய தொழில்கள், சிறிய தொழில்கள், ஆலைத் தொழில்கள், குடிசைத் தொழில்கள், இயந்திரத் தொழில்கள், கையினால் செய்யும் தொழில்கள் எல்லாம் பெருக வேண்டும். எல்லாத் துறையிலும் தொழில் வளம் வளர்ந்தால்தான் தற்கால உலகத்தில் ஒரு நாடு முன்னணிக்கு வர முடியும்.

தொழில்கள் பெருகுவதை யொட்டி வர்த்தகமும் பெருக வேண்டும். ஆலைகளிலோ, குடிசைகளிலோ உற்பத்தியாகும் பொருள்கள் எல்லாம் அவ்வப்போது விற்பனையாக வேண்டும் அல்லவா? இதற்கு வியாபாரத் துறையின் வளர்ச்சியும் அவசியமாகும். ஓர் ஆலையில் உற்பத்தியாகும் துணிகளை நூறு கடைகளில் வைத்து விற்றாக வேண்டும். நூறு கைத்தறிகளில் உற்பத்தியாகும் துணிகளை விற்பதற்கு ஒரு கடையாவது வேண்டும்.

இவ்வாறு கைத்தொழில் உற்பத்தி பெருகி வர்த்தகமும் செழித்து வளருவதற்குப் பாங்கிகள் மிக அவசியமான சாதனங்களாக இருக்கின்றன.

எவ்வளவு பெரிய ஆலைத் தொழிலாயினும், எத்தனை பெரிய வர்த்தகமாயினும், பாங்கிகள் கடன் கொடுத்து உதவினாலன்றி நடைபெற முடியாது.

பத்துக்கோடி ரூபாய் மூலதனம் போட்டு ஆலைத் தொழில் நடத்துகிறவர்கள் அந்தத் தொழிலைத் தங்களுடைய சொந்த மூலதனத்தைக் கொண்டே நடத்துவதில்லை. பாங்கிகளில் கோடிக் கணக்கில் கடன் வாங்கித்தான் நடத்துகிறார்கள்.

இருபதினாயிரம் மூட்டை சர்க்கரையும், முப்பதினாயிரம் மூட்டை அரிசியும், நூற்றுக் கணக்கில் மோட்டார் வண்டிகளும், லட்சக் கணக்கில் பெறுமான முள்ள இரும்புச் சாமான்களும், இயந்திரங்களும், தங்கமும் வெள்ளியும் வைர நகைகளும் வியாபாரம் செய்கிறவர்கள் எல்லாரும் பாங்கிகளில் கடன் வாங்கித்தான் வியாபாரம் செய்கிறார்கள்.


தொழில்களுக்கும் வர்த்தகத்துக்கும் கடன் கொடுக்கப் பாங்கிகளுக்குப் பணம் எங்கே யிருந்து கிடைக்கிறது?

பாங்கிகளை நடத்தும் நிர்வாகிகளும் முதலாளிகளும் பாங்கியில் புழங்கும் பணம் எல்லாவற்றையும் தாங்களே போடுகிறார்களா? இல்லை! அவர்கள் மூலதனமாகப் போடும் பங்குப் பணம், பாங்கியில் மொத்தம் புழங்கும் பணத்தில் ஒரு சிறு பகுதிதான்.

பொது மக்கள் தங்களிடம் சேரும் பணத்தை வேண்டு மென்கிற சமயத்தில் வாங்கிக் கொள்ளலாம் என்று பாங்கிகளில் போடுகிறார்கள். சிலர் வட்டிக்காகப் பாங்கியில் பணம் போடுகிறார்கள்; சிலர் பத்திரத்துக்காகப் போடுகிறார்கள்; சிலர் 'செக்கு'கள் மூலம் பணம் விநியோகிப்பதிலுள்ள சௌகரியத்துக்காகப் போடுகிறார்கள்.

பெரிய பணக்காரர்களும் பாங்கிகளில் பணம் போடுகிறார்கள்; சொற்ப பணமுள்ளவர்களும் போடுகிறார்கள்; நடுத்தர வகுப்பாரும் ஏழை எளிய மக்களும் கூடச் சேமிப்புக்

கடுமையான சிகிச்சை!



பழைய 'கிரிமினல் புரோசிஜர் கோடு' சட்டத்தில் இந்திய சர்க்கார் உள்நாட்டு மந்திரி டாக்டர் கட்ஜு புதிய திருத்தங்கள் செய்ய முனைந்துள்ளார்.

காகவும் பத்திரத்துக்காகவும் பாங்கிகளில் பணம் போடத் தொடங்கியிருக்கிறார்கள்.

பாங்கியில் பணம் போடும் வழக்கம் மிக்க நல்ல வழக்கம் என்று அறிஞர்கள் பலர் பிரசாரமும் செய்து வருகிறார்கள்.

இதனுலெல்லாம் லட்சக் கணக்கான மக்களின் பணம் பாங்கிகளில் சேர்கின்றது.

பாங்கிகளில் தவணை டெபாஸிட்டில் பணம் போடுகிறவர்களுக்குச் சொற்ப வட்டி கொடுக்கப் படுகிறது; நடை முதல் கணக்குகளுக்கு வட்டியே கிடையாது.

ஆனல் பாங்கிகள் கடன் கொடுக்கும் போது 100-க்கு 8 வரையில் வட்டி வாங்கப் படுகிறது.

இவ்விதம் குறைந்த வட்டிக்கோ, வட்டியே இல்லாமலோ பணம் வாங்கி, அதிக வட்டிக்குப் பணம் கொடுப்பதில், லாபம் கிடைக்கிறது.

அந்த லாபத்தைக் கொண்டுதான் பாங்கி சிப்பந்திகளின் சம்பளம் கொடுக்கப்படுகிறது; பாங்கி நிர்வாகிகள்—பங்குதாரர்களுக்கு லாபப் பணமும் பகிர்ந்து கொடுக்கப்படுகிறது.

மேலே சொன்னவற்றிலிருந்து, பாங்கிகளின் நிர்வாகம் சரியாக நடைபெற வேண்டும் என்பதில் பொது மக்களும், பொது மக்களின் சர்க்காரும் ஏன் நிரம்பச் சிரத்தை கொள்ள வேண்டும் என்பதை நன்கு அறியலாம்.

லட்சக்கணக்கானவர்களின் சேமிப்புப் பணம் பாங்கிகளில் இருக்கிறபடியால், பாங்கி நிர்வாகம் சரியாக நடைபெறாமல் ஒரு பாங்கியை மூடும்படி நேர்ந்தால், அதனல் எத்தனையோ பேர் தங்கள் சேமிப்புகளை இழந்து நஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையே பாழாய்ப் போகிறது.

1947-ம் ஆண்டிலிருந்து 1951 வரையில் சில பாங்கிகள் மூடப்பட நேர்ந்த காரணத்தினல், அந்த பாங்கிகளில் பணம் போட்டிருந்தவர்கள் மொத்தம் 93 கோடி ரூபாய் நஷ்டம் அடைந்தார்கள்! இதனல் எத்தனை ஆயிரம் பேருடைய நெஞ்சு உடைந்து போயிருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

பாங்கிகளில் பங்குதாரர்களான முதலாளிகள் போடும் மூலதனம் எவ்வளவு, பாங்கிகளின் மூலம் வழங்கப்படும் பணம் எவ்வளவு என்பதைப் பின் வரும் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

வருஷம்	பாங்கிகளின் மூலதனம்	வழங்கப்படும் பணம்	நிகர லாபம்
1949	36 கோடி	988 கோடி	7 கோடி
1950	35 கோடி	990 கோடி	7 கோடி
1951	34 கோடி	979 கோடி	9 கோடி
1952	33 கோடி	952 கோடி	7 கோடி

பாங்கிகளில் நிர்வாகிகள் போடும் மூலதனத்தைக் காட்டிலும், டெபாஸிட்டு செய்யப்பட்டு வழங்கப்படும் தொகை எவ்வளவோ மடங்கு அதிகம் என்பதைக் காணலாம். இந்த அதிகப்படிப் பணம், மக்களின் சேமிப்புப் பணம் ஆகும். இந்தச் சேமிப்புப் பணத்தைப் பத்திரப் படுத்துவதும் அவசியம்; அதை நாட்டுக்கு உபயோகமான கைத்தொழில்கள்-வர்த்தகங்கள் இவற்றுக்

குப் பயன்படுமாறு பார்த்துக் கொள்வதும் இன்றியமையாதது. ஆதலின் பொது மக்களும் பொது மக்களின் சர்க்காரும் பாங்கி நிர்வாகம் நன்கு நடைபெறும் விஷயத்தில் கண்ணும் கருத்துமாயிருக்க வேண்டும். பாங்கிகளின் நிர்வாகம் சீர்கேடுற்றால், தேசத்தின் பொருளாதார வாழ்வே சீர்குலைந்து போய் விடும்.

பாங்கிகள் தங்களிடம் 'டெபாஸிட்' செய்யப்படும் பணத்தைக் கடன் கொடுத்து உதவுகின்றன அல்லவா! எந்தெந்தத் துறைக்கு எவ்வளவு விகிதம் பாங்கிகள் உதவுகின்றன என்பதை இப்போது பார்க்கலாம்:

வருஷம்	தொழில்கள்	விவசாயம்	வர்த்தகம்	இதர இனங்கள்
1949 நூற்றுக்கு	30·4	1·9	51·4	16·3
1950 நூற்றுக்கு	32	2·3	51·8	13·9
1951 நூற்றுக்கு	34	2	53	11

ஆகவே வர்த்தகத்துக்கு மிக அதிகமாகவும் தொழில்களுக்கு அடுத்தபடியாகவும் விவசாயத்துக்கு மிக மிகச் சொற்பமாகவும் பாங்கிகள் கடன் கொடுத்து உதவுகின்றன என்று ஏற்படுகிறது.

நாட்டில் உணவு உற்பத்தி செய்து முப்பத்தைந்து கோடி மக்களின் பசியைத் தீர்க்கும் விவசாயத் துறைக்குப் பாங்கிகளின் மூலம் உதவி மிகச் சொற்பம். விவசாயிகள் தனிப்பட்ட லேவாதேவிக் காரர்களிடம் 100க்கு 12 வீதம் முதல் 24 வீதம் வரையில் கடன் வாங்க வேண்டியிருக்கிறது. விவசாயிகளின் கடன் தொல்லையைத் தீர்ப்பதற்காகச் சர்க்கார் அவ்வப்போது தலையிட்டு விவசாயக் கடன் ஒழிப்புச் சட்டம், விவசாயக் கடன் வசூல் நிறுத்தச் சட்டம் முதலியவற்றை இயற்ற வேண்டி வருகிறது. இதனால், விவசாயிகளுக்குக் கிடைக்கும் கடன் வசதி மேலும் குறைந்து விடுகிறது.

விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலுக்கும் தக்க பாங்கிகளின் மூலம் நியாயமான வட்டியில் கடன் கிடைப்பதற்கு இந்திய சர்க்காரும் இராஜ்ய சர்க்கார்களும் இதுவரையில் வழிகாணவில்லை. இந்த விவசாய நாட்டில் நமது சர்க்கார்கள் செய்ய வேண்டிய முக்கியமான கடமைகளில் ஒன்றைச் செய்யத் தவறி விட்டார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

பாங்கிகள் விவசாயத்தைத் தவிர்த்த மற்றத் தொழில்களுக்கும் வர்த்தகங்களுக்கும் தாராளமாகக் கடன் கொடுத்து உதவி வருகின்றன. பாங்கிகள் செய்யும் இந்தக் கைங்கர்யம் மிகவும் முக்கியமானதுதான். பாங்கிகளின் கடன் உதவியினால்தான் பெரிய தொழில்களும் வியாபாரங்களும் நடந்து வருகின்றன.

"சேத் மோசஷியாம் தாஸ் சக்கர் வாலா என்பவர் கல்கத்தாவில் ஐம்பதினாயிரம் மூட்டை சர்க்கரையை ஆறு மாதம் முடக்கிப் போட்டு வைத்திருந்தார். அந்த மூட்டைகளைத் தீபாவளியின் போது விற்கப் பம்பாய்க்கு அனுப்பினார்" என்றெல்லாம் சில செய்திகளைப் படிக்கிறோம் அல்லவா! இப்படியெல்லாம் அந்தச் சர்க்கரை வியாபாரி முடக்கி வைக்க இயல்வது, பாங்கிகள் கொடுக்கும் கடன் வசதியினால்தான். அந்தச் சர்க்கரை மூட்டைகளைக் கிடங்கிலே அடகு வைப்பதாகச் சொல்லித்தான் மேற்படி வியாபாரி பாங்கியில் கடன் வாங்குவார்.

சில சமயம் சர்க்கரை மூட்டைகளுக்குப் பதிலாக மணல் மூட்டைகள் கிடங்குகளில் அடகு வைக்கப்படுவதும் உண்டு!

பாங்கி நிர்வாகிகளே ஆலை முதலாளிகளாகவும் வர்த்தக முதலாளிகளாகவும் இருக்கும் போது இப்படியெல்லாம் ஊழல்கள் ஏற்படக் கூடும்.

ஆகவே, பாங்கிகளின் நிர்வாகத்தில் சர்க்கார் கவனம் செலுத்திக் கண்ணும் கருத்துமாயிருப்பது எவ்வளவு அவசியம் என்று தெரிகிறதல்லவா!

இன்னும் தீரவில்லை!

பாங்கிகளின் நிர்வாகம் சரியாக நடைபெறுவது, பாங்கி டைரக்டர்கள் — பங்குதாரர்கள் முதலியோர் நேர்மையாகவும் திறமையாகவும் நடந்து கொள்வதையும் சர்க்காரின் கண்காணிப்பையும் பெரிதும் பொறுத்திருக்கிறது.

அத்துடன் பாங்கிகளில் வேலை செய்யும் சிப்பந்திகள் மனத் திருப்தியுடனும் ஊக்கமாகவும் வேலை செய்வதையும் பெரிதும் பொறுத்திருக்கிறது. பாங்கியில் பணம் போடவோ, பணம் வாங்கவோ வரும் பொது மக்களிடம் பழக வேண்டியவர்கள் பாங்கி சிப்பந்திகள்தான். ஆகையால் அவர்கள் மனக் குறையுள்ளவர்களாயிருந்தால், வருகிற ஜனங்களிடம் சிடுசிடு வென்று விழுந்து கொண்டிருப்பார்கள். காரியங்களும் சுமாராகத்தான் நடந்து கொண்டிருக்கும்.

கோடிக்கணக்கில் பணம் புரண்டு கொண்டிருக்கும் பாங்கிகளில் வேலை பார்க்கும் சிப்பந்திகளின் சம்பள விகிதம் அதற்குத் தகுந்தபடி பிரமாதமாக இருக்குமென்று சிலர் எண்ண இடமுண்டு அல்லவா! அப்படியொன்றுமில்லை யென்பது ஏழு வருஷங்களுக்கு முன்பே வெளியாகி விட்டது. (பாங்கி சிப்பந்திகள் அந்த விவரத்தை வெளிப்படுத்தினார்கள். ஆனால் பலர் அதை அச்சமயம் கவனிக்க வில்லை.) 1946-ம் வருஷத்துக்கு முன்னால், (மகா யுத்தத்தினால் பணவீக்கம் பிரமாதமாயிருந்த காலத்திலேயும்) பாங்கி சிப்பந்திகளின் ஆரம்பச் சம்பள விகிதம் மாதம் ரூ. 50-க்குக் குறைவாகவே இருந்தது. "ஊரெல்லாம் பாலாக ஓடினாலும் பூனை நக்கித்தான் குடிக்க வேண்டும்" என்ற பழமொழிக்கிணங்க பாங்கி சிப்பந்திகளின் நிலை இருந்து வந்தது. அந்த வருஷத்திலே பாங்கி சிப்பந்திகள் விழித்தெழுந்தார்கள். "நாலா பக்கமும் எல்லாத் துறைகளிலும் சம்பளம் அதிகமாகி வருகிறது. நம் நிலைமை மட்டும் இப்படியே மோசமாயிருந்து வருகிறதே!" என்று ஆத்திரப் பட்டார்கள். அந்த ஆத்திரம் பாங்கிச் சிப்பந்திகளின் தொழிற் சங்கமாக உருக் கொண்டது. சில இடங்களில் வேலை நிறுத்தங்களும் நடந்தன.

* * *

தனித் தனியாக இருப்பவர்கள் சேர்ந்து ஒரு ஸ்தாபனமாகி விட்டாலே, அவர்களுக்கு ஒரு புதிய பலம் ஏற்பட்டு விடுகிறது. அவர்களுடைய கோரிக்கையை வெகு காலம் புறக்கணிக்க முடிவதில்லை. ஆங்காங்கே, சம்பள விகிதங்கள் அதிகமாகத் தொடங்கின. இராஜ்ய சர்க்கார்களும் பாங்கி நிர்வாகிகள்–சிப்பந்திகள் தகராறுகளில் கவனம் செலுத்தத் தொடங்கினார்கள். ஆங்காங்கே தொழில் தகராறு விசாரணை மன்றங்களை ஏற்படுத்தினார்கள்.

இப்படித் தனித் தனியாக ஒவ்வொரு இராஜ்யத்திலும் விசாரணைகள் நடந்து, தனித் தனி முடிவுகள் கூறப்பட்டு, வெவ்வேறு சம்பள விகிதங்கள் ஏற்படுவது உசிதமல்ல என்று இந்திய சர்க்கார்

கருதி, 1949ம் வருஷத்தில் நீதிபதி கே. ஸி. ஸென் என்பவரைத் தலைவராகக் கொண்ட மூன்று ஹைகோர்ட் நீதிபதிகள் அடங்கிய விசாரணை சபை ஒன்றை ஏற்படுத்தினார்கள். இதற்கு 'ஸென் டிரிபுனல்' என்று பெயர் வழங்கியது.

இந்தச் சபையார் சாங்கோபாங்கமாக விசாரித்துச் சில சிபாரிசுகளைச் செய்தார்கள். இவை ஓரளவு பாங்கிச் சிப்பந்திகளுக்கு அநுகூலமாயிருந்தன. ஆனால் இந்த விசாரணை நடக்கும்போதே, சபையின் அங்கத்தினரில் ஒருவரான நீதிபதி சந்திரசேகரய்யரை இந்திய சர்க்கார் வேறு காரியத்துக்காக அழைத்துக் கொண்டார்கள்.

ஆகையால் இந்தச் சபையின் முடிவு செல்லாது என்று ஸுப்ரீம் கோர்ட்டு தீர்ப்புச் சொல்லியது.

இந்திய சர்க்காரின் காரியாலயத்தில் ஒருவரோ, அல்லது இந்திய சர்க்காரின் மந்திரி ஒருவரோ செய்த முட்டாள்தனமான தவறு காரணமாகத் தேசத்தின் பணம் பல லட்சம் நஷ்டமாயிற்று. பிரச்னையும் தீர்ந்தபாடில்லை.

பிறகு இந்திய சர்க்கார் பாங்கி நிர்வாகிகளையும், பாங்கி சிப்பந்திகளின் பிரதிநிதிகளையும், சர்க்கார் பிரதிநிதிகளையும் சேர்த்து ஒரு சமரச மகாநாடு நடத்தினார்கள். அதில் ஒரு சமரச முடிவுக்கு வர இயலவில்லை. அரசாங்கத்தார் பின்னர் சமரச போர்டு ஒன்றை அமைத்தார்கள்; அதுவும் சட்டப்படி செல்லாது என்று ஏற்பட்டது.

பின்னர் இந்திய சட்ட சபையில் தொழில் தகராறு சட்டம் ஓரளவு திருத்தப் பட்டது. பாங்கி நிர்வாகிகளின் பிரதிநிதியையும் கொண்ட 'இலேஹியா டிரிபுனல்' சர்க்காரால் அமைக்கப்பட்டது. இந்தச் சபையுடன் ஒத்துழைக்கப் பாங்கி சிப்பந்திகள் மறுத்து விட்டார்கள்.

1952-ம் வருஷத்தில் புதியதொரு டிரிபுனல் அமைக்கப்பட்டது. இதற்கு நீதிபதி பஞ்சாபகேச சாஸ்திரி தலைவராயிருந்தபடியால், 'சாஸ்திரி டிரிபுனல்' என்று அழைக்கப்பட்டது.

இந்தச் சபை ஒரு வருஷமும் மூன்று மாதமும் விசாரணை நடத்திச் சில முடிவுகளைக் கூறியது. அந்த முடிவுகள் பாங்கி சிப்பந்திகளுக்குப் பாதகமாக இருந்தபடியால், சிப்பந்திகள் பெருங் கிளர்ச்சி செய்தார்கள். அவர்களுடைய கிளர்ச்சியில் நியாயமும் இருந்தது. ஏனெனில் சாஸ்திரி டிரிபுனல் தீர்ப்பின்படி, பாங்கி சிப்பந்திகளில் பலர் அப்போது வாங்கிக் கொண்டிருந்த சம்பள விகிதமும் குறைந்து போவதாயிருந்தது! முன்னர் வாங்கிய அதிகப்படி சம்பளத்தைத் திரும்பக் கொடுக்கும்படியும் ஏற்பட்டது!!

ஆனாலும் பாங்கி சிப்பந்திகள் முறை தவறாக எதுவும் செய்ய வில்லை. தொழில் தகராறு சட்ட முறைப்படி அப்பீல் செய்து கொண்டார்கள். இந்திய சர்க்கார் அப்பீல் டிரிபுனல் ஏற்படுத்துவது அவசியமாயிற்று.

இந்த அப்பீல் டிரிபுனல் மறுபடியும் ஆலோசனை புனராலோசனைகளும், விசாரணை—புனர் விசாரணைகளும் செய்த பிறகு, இந்த வருஷம் ஏப்ரல் மீ 28உ ஒரு தீர்ப்புச் சொன்னார்கள்.

அந்தத் தீர்ப்பு சாஸ்திரி டிரிபுனல் தீர்ப்பைக் காட்டிலும் பாங்கி சிப்பந்திகளுக்குக் கொஞ்சம் அநுகூலமாயிருந்தது. இதுவும் அவர்களுக்குப் பூரண திருப்தி அளிக்கா விட்டாலும், "ஏதோ முன்னம் வாங்கிய சம்பளத்தைத் திருப்பிக் கொடுக்கும்படி கேட்காமலாவது விட்டார்களே!" என்று பெருமூச்சு விட்டார்கள்.

இதற்குப் பிறகுதான் மேற்படி ஏழு வருஷத் தகராறின் சிகரமான சம்பவம் நிகழ்ந்தது.

இந்திய சர்க்கார் ஓர் அமெரிக்க அணு குண்டைத் தூக்கிப் போட்டார்கள்!

அப்பீல் டிரிபுனல் தீர்ப்பை அமுலுக்குக் கொண்டு வந்தால் பாங்கிகளின் வளர்ச்சி தடைப்படும் என்று தெரிகிற படியால், மேற்படி தீர்ப்பை அமுலாக்காமல் நிறுத்தி வைப்பதாக ஓர் அவசர உத்தரவைப் பிறப்பித்தார்கள்.

இந்திய சர்க்கார் இந்த அமெரிக்க அணு குண்டை எறிந்த சில நாளைக்கெல்லாம், இந்திய சர்க்காரின் தொழில் மந்திரியாயிருந்த ஸ்ரீ வி. வி. கிரி ஒரு மாஸ்கோ ஹைட்ரஜன் குண்டைச் சாவதானமாக எறிந்தார்! தொழில் தகராறு அப்பீல் தீர்ப்பில் இந்திய சர்க்கார் குறுக்கிட்டு நிறுத்தி வைப்பதைக் கண்டிப்பதற்கு அறிகுறியாகத் தொழில் மந்திரி பதவியை ராஜிநாமாச் செய்தார்!

ஏழு வருஷ காலமாகப் பாங்கி சிப்பந்திகள் கிளர்ச்சி செய்தபோதெல்லாம் "இந்திய சர்க்கார் பாங்கி முதலாளிகளின் கட்சியில் இருக்கிறார்கள்" என்று புகார் சொல்லி வந்தார்கள். இதை அவ்வளவாகப் பொது மக்கள் நம்பவில்லை!

ஆனால், ஸ்ரீ வி. வி. கிரியின் ராஜிநாமா மேற்படி புகாரை இதுவரை நம்பாதவர்களையும் ஓரளவு நம்பும்படி செய்து விட்டது.

அப்பீல் தீர்ப்பு அமுலுக்கு வந்தால் பாங்கிகளின் வளர்ச்சி தடைப்படலாம் என்று இந்திய சர்க்கார் காரணம் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆனால் இந்திய சர்க்கார் எந்தத் தீமையைத் தடுக்க முயல்கிறார்களோ, அந்த தீமை அவர்களுடைய செயலினாலேயே அதிகமாக வளர்வதற்கு இடமேற்பட்டு விட்டது.

"பாங்கிகள் ஏதோ முதலாளிகள் தங்கள் சொந்த நலத்துக்காக நடத்தும் ஸ்தாபனங்கள்; அந்த முதலாளிகள் இந்திய சர்க்காரிடம் மிக்க சலுகை உள்ளவர்கள்" என்ற அபிப்பிராயம் பொது மக்களிடையே பரவுதல் பாங்கியின் வளர்ச்சிக்கு அநுகூலமானதா! ஒரு நாளுமில்லை. ஆனாலும் இந்திய சர்க்காரின் நடவடிக்கை அத்தகைய அபிப்பிராயம் பரவுவதற்கு இடம் கொடுத்து விட்டது.

* * *

ஆகவே, ஏழு வருஷமாக நடந்து வரும் இந்தத் தகராறு இன்னும் தீர்ந்தபாடில்லை. ஸ்ரீ வி. வி. கிரிக்குப் பதிலாகத் தொழில் மந்திரியாக வந்திருக்கும் ஸ்ரீ கண்டுபாய் தேஸாய் என்பவர் மறுபடியும் பாங்கி சிப்பந்திகளின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசியிருக்கிறார்.

மறுபடியும் ஒரு விசாரணை ஏற்படுத்தப் போகிறார். நீதிபதி ராஜாத்யக்ஷரை இதற்காக நியமித்திருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. இன்னும் எத்தனை காலம் இந்த விவகாரம் இழுத்துப் பறித்துக் கொண்டிருக்குமோ, தெரியவில்லை! பாங்கி சிப்பந்திகள் மன நிம்மதி யில்லாமல் இன்னும் எத்தனை காலம் வேலை செய்ய வேண்டியிருக்குமோ தெரியாது.

சுதந்திர இந்திய சர்க்கார் சென்ற ஏழு வருஷ காலத்தில் எவ்வளவோ நல்ல காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள். அதுபோலவே சில பெருந் தவறுகளையும் செய்திருக்கிறார்கள்.

இந்தப் பாங்கிச் சிப்பந்திகளின் தகராறு விஷயமாகக் கையாளப் பட்டிருக்கும் மௌடீகத்தனம் எல்லாவற்றையும் தூக்கி யடிப்பதாயிருக்கிறது. அரசாங்க நிர்வாகத்தின் சரித்திரத்தில் திறமையின்மைக்கும் மௌடீகத்துக்கும் முதற் பரிசு கொடுப்பதாக இருந்தால், இதற்குத் தான் கொடுக்க வேண்டும்.

டிரிபுனலுக்கு மேல் டிரிபுனல் நியமிப்பது, விசாரணைக்கு மேல் விசாரணை நடத்துவது, இதற்காகக் கோடிக் கணக்கில் பொது ஜனங்களின் பணம் விரயமாவது, கடைசியாக வெளியாகும் தீர்ப்பை அவசர உத்தரவு போட்டு நிறுத்தி வைப்

படு என்றால், இவையெல்லாம் உண்மையில் அரசாங்க நிர்வாகத்தைச் சேர்ந்ததா, நாடக மேடையில் நடிக்கப்படும் கேலிக் கூத்தா என்று சந்தேகப் படவேண்டியிருக்கிறது.

** ** **

பாங்கி சிப்பந்திகளுக்கு நாம் சொல்லுவது, "எது எப்படியானாலும் வேலை நிறுத்தம் போன்ற நேரடி நடவடிக்கைகளை மேற்கொள்ளாதீர்கள்!" என்பதுதான்.

நேரு சர்க்கார் நமது சர்க்கார்; பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்கார்; இந்தியா தேசத்துக்கு உலகத்தின் முன்னிலையில் சிறந்த கௌரவத்தை அளித்து நிலைநாட்டி வரும் ஜனநாயக சர்க்கார்.

இந்தியப் பொது மக்களின் நன்மையைத் தவிர நேருஜிக்கு வாழ்க்கையில் இலட்சியம் வேறு கிடையாது. தொழிலாளிகளின் நலத்துக்குப் புறம்பாக முதலாளிகளைத் தாங்க வேண்டிய அவசியமும் நேருஜிக்குக் கிடையாது.

ஆனால் நேருஜியும் சரி, மற்றும் இந்திய அரசாங்கத்தை நடத்தும் மந்திரிகளும் சரி, இராஜ்ய காரியங்களை நடத்திப் பழக்கப் பட்டவர்கள் அல்ல. ஆங்கிலேய அமெரிக்க இராஜ தந்திரிகளைப் போல், இராஜ்ய நிர்வாகத்தில் பரம்பரையாகப் பயிற்சியும் அநுபவமும் பெற்றவர்கள் அல்ல.

ஆகையால் தவறுகள் அவ்வப்போது நேர்வது இயல்பு. "இந்தத் தீர்ப்பை அமுலாக்கினால் பாங்கிகள் எல்லாம் மூடப்பட்டு விடும்; தேசத்தின் பொருளாதார வாழ்வே சீர்குலைந்துவிடும்!" என்று பக்கத்தில் உள்ளவர்கள் சொன்னால், "ஒருவேளை அப்படிசும் நேர்ந்து விடுமோ! நேர்ந்து விட்டால் என்ன செய்வது!" என்று நேருஜி தயக்கம் கொள்வது இயல்பேயாகும்.

"பண்டித நேரு பணம் படைத்த முதலாளிகளுக்கு அடிமையாகி விட்டார்" என்றெல்லாம் பேசுகிறவர்களுடைய துர்ப்போதனைகளுக்குச் செவிகொடுக்க வேண்டாம்.

"ஏழு வருஷம் பொறுத்தவர்கள் இன்னமும் பொறுமையைக் கடைப்பிடியுங்கள்; இத்தனை நாள் சாத்வீகக் கிளர்ச்சி முறையில் உங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தி வந்ததுபோல் இனியும் வற்புறுத்தி வாருங்கள்!" என்று பாங்கி சிப்பந்திகளைக் கேட்டுக் கொள்கிறோம்.

பிரமையும் பீதியும்

மகா சமுத்திரத்தை முதல் தடவையாகப் பார்த்த மன்னன், "இங்கு இவ்வளவு தண்ணீர் எங்கிருந்து வந்தது!" என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

"பல நதிகளிலிருந்தும் விழுந்த தண்ணீர் இப்படி சமுத்திரமாகி யிருக்கிறது" என்று கூறினார் மந்திரிகள்.

"நமது மகா நதியும் இதில் தானே வந்து விழுகிறது!"

"ஆமாம். ஆமாம்."

"மகா நதி சமுத்திரத்தில் வந்து விழுவது போல், சமுத்திரம் மகா நதியை நோக்கிப் பாயும் காலம் வரக் கூடும் அல்லவா!"

மன்னனின் இந்த சந்தேகம் மந்திரிகளைத் திகைக்க வைத்தது.

இதைப் போல் மன்னன் மனத்தில் எழுந்த அர்த்தமற்ற பல சந்தேகங்களையும் பீதியையும் மந்திரிகளால் நிவர்த்திக்க முடியவில்லை.

அதன் விளைவாக மன்னனிடமிருந்து சில கட்டளைகள் பிறந்தன.

மகா நதியின் வழியாகச் சமுத்திரம் பாய்ந்து வந்து நாட்டுக்கு விபத்து எதுவும் நேராமல் இருப்பதற்காக அந்த நதியைத் தூர்த்துவிடவேண்டும்!

கடல் பொங்கி வராமல் தடுப்பதற்காகக் கடற்கரை நெடுகப் பெரிய சுவர் எழுப்ப வேண்டும்!

ஒரு வேளை கடல் தண்ணீர் வற்றி விட்டால் (பெரிய கப்பல்களும் விமானங்களும் ஏற்படாத காலம் அது)—பிறநாட்டினர் படையெடுக்காமல் தடுப்பதற்காகச் சுவரை அடுத்துச் சிப்பாய்களைக் காவல் வைத்து விடவேண்டும்!

இவ்விதமெல்லாம் முன்னேற்பாடுகள் செய்யும்படி அந்த மன்னன் கட்டளை யிட்டானும்.

இன்று இந்தியாவினிடம் இலங்கைப் பிரதமர் சர் ஜான் கொத்தலாவலை கொண்டுள்ள பீதியும் அத்தகையதாகவே இருக்கிறது.

திருகோணமலையை இந்தியப் படைத்தளமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதே இந்தியாவின் நோக்கம் என்று சில தினங்களுக்கு முன் சர் கொத்தலாவலை கூறினார். தென்னிந்தியாவிலிருந்து இந்தியக் கம்யூனிஸ்டுகள் இலங்கை மீது படை யெடுத்து வரக் கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்தகைய நிலைமை ஏற்படுமாயின், அதைச் சமாளிக்க பிரிட்டன் முதலிய 'ஸியாட்டோ' நாடுகளுடன் இராணுவக் கூட்டுறவு வைத்துக் கொள்வது நன்மை அல்லவா என்பதை இலங்கை ஆலோசிக்க வேண்டும் என்றும் இலங்கைப் பிரதமர் ஆலோசனை கூறினார்.

ஆனால் இலங்கைப் பிரதமரின் பீதிகளுக்குச் சிறிதும் ஆதாரம் இல்லை என்று ஜவஹர்லால் நேரு சென்ற வாரம் பார்லிமெண்டில் கூறியுள்ள உறுதி சர் கொத்தலாவலையின் பீதியையும் பிரமையையும் தணிக்கும் என நம்பலாம்.

இலங்கைப் பிரதமரின் கூற்றுக்கு, இலங்கை முன்னாள் மந்திரியும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவருமான ஸ்ரீ ஜி. பி. பொன்னம்பலமும் தகுந்த பதில் அளித்துள்ளார்.

இலங்கை சர்க்கார், அடுத்துள்ள மாபெரும் தேசமான இந்தியாவுடன் நெருங்கிய உறவுக்கு வழி தேடாமல், ஏழாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள பிரிட்டனின் இராணுவ உதவியை நாடுவது விவேகமற்ற காரியம் என்பதை ஸ்ரீ பொன்னம்பலம் சுட்டிக் காட்டி யுள்ளார்.

* * *

இந்தியாவின் மீது அபாண்டமான புகார்கள் கூறும் இலங்கை சர்க்கார் தங்களுடைய நடவடிக்கைகள் ஆட்சேபணைக்கு இடமில்லாமல் இருக்கிறதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

டில்லியில் ஏற்பட்ட இந்தியா — இலங்கை ஒப்பந்தத்துக்கு விரோதமான நடவடிக்கைகளில் முழு மூச்சுடன் ஈடுபட்டுள்ள இலங்கை சர்க்கார் மேற்படி ஒப்பந்த ஷரத்துக்களை இந்திய சர்க்கார் சரிவர நிறைவேற்ற வில்லை என்று புகார் கூறுவது விந்தையாக இருக்கிறது.

இலங்கைக்குக் கள்ளத்தனமாகக் குடியேறுவோரைத் தடுக்கும் விஷயமாக இந்திய சர்க்கார்

இலங்கை சர்க்காருடன் பூரணமாக ஒத்துழைத்தனர். அதன் பலனாக, கள்ளக் குடியேற்றம் அறவே நின்று விட்டதை இலங்கை சர்க்காரே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்வோருக்கு வசதியாக இலங்கையில் இந்திய சர்க்கார் ஒரு தனி இலாக்காவை அமைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

ஆனால், இலங்கை சர்க்காரோ வெனில், இலங்கை இந்தியர்களை இந்தியா செல்லும்படி வற்புறுத்துவதற்காக அரிசி ரேஷனை மறுக்கத் துணிந்திருக்கிறார்கள். ஆயிரக் கணக்கான இந்தியர்களின் வேலைகளைப் பறித்து அவர்களை திக்கற்றவர்களாகத் தவிக்க விடவும் திட்டமிட்டிருக்கிறார்கள்.

இலங்கை இந்தியர்களின் பிரஜா உரிமை மனுக்கள் யாவையும் இரண்டு வருஷ காலத்துக்குள் விசாரித்து முடிவு செய்துவிட வேண்டும் என்று டில்லி ஒப்பந்தம் கூறுகிறது.

ஆனால், அந்தக் கெடுவுக்குள் மேற்படி மனுக்களின் பரிசீலனை முடிவு பெறாது என்று இப்போது இலங்கை சர்க்கார் கூறத் தொடங்கி யிருக்கிறார்கள். இலங்கை இந்தியர்களுக்கு விரோதமான நடவடிக்கைகளைக் கைக்கொள்வதில் வாயு வேகம் மனோ வேகத்தில் செல்லும் இலங்கை சர்க்கார், அவர்களுக்கு உரிமை அளிக்கும் விஷயத்தில் மாத்திரம் நத்தையைக் காட்டிலும் மெதுவாகச் சென்று வருகிறார்கள்.

சென்ற மூன்று வருட காலத்தில் இலங்கை சர்க்காரிடம் இந்தியர்கள் சமர்ப்பித்த 2,37,000 பிரஜா உரிமை மனுக்களில் இதுவரை 28,733 மனுக்களே பைசல் செய்யப்பட்டிருக்கின்றன. சென்ற ஒரு வருஷ காலத்தில் 3.117 மனுக்கள் தான் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. 12,008 மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இவ்விதமாக, பிரஜா 'உரிமை பெறுவோரின் தொகையைக் காட்டிலும் மேற்படி உரிமை மறுக்கப் படுவோரின் தொகையே அதிகமாக இருந்து வருகிறது. இதுவரை 64,050 இந்தியர்கள் ராஜ்யமற்ற அனாதைகள் என்று பிரகடனம் செய்யப் பட்டிருக்கிறார்கள்.

இவ்வாறாக, இலங்கை சர்க்கார் ஒரு புறம் அரசியல் துறையில் இந்தியா மீது அபாண்டமான புகார்கள் கூறி வருகின்றனர். மற்றொரு புறம் டில்லி ஒப்பந்தத்துக்கு நேர் முரணான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

போதாக் குறைக்கு, இலங்கையில் புதிதாக முளைத்திருக்கும் "மூச்சிங்கள முன்னணி" என்ற ஸ்தாபனம் தொன்று தொட்டுத் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையே நிலவி வரும் நல்லுறவைச் சீர்குலைக்கத் துவேஷப் பிரசாரத்தில் இறங்கி யிருக்கிறது.

மேற்படி பிரசாரத்தைத் தடுக்க இலங்கை சர்க்கார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனினும், இந்தியா-இலங்கை உறவு சம்பந்தப்பட்ட வரையில் அந்தகாரம் சூழ்ந்துள்ள இச் சமயத்திலே இலங்கை மந்திரி சபை ஏகமனதாக நிறைவேற்றியுள்ள தீர்மானம் மின்னொளி போல் ஆறுதல் அளிப்பதாக இருக்கிறது.

இந்தியா-இலங்கை ஒப்பந்தத்தை ஒட்டி எழுந்துள்ள பிரச்னைகளைத் தீர்க்க நேருஜியுடன் மேற்கொண்டு சமரசப் பேச்சு நடத்தும்படி இலங்கை மந்திரி சபையினர் பிரதமர் சர் ஜான் கொத்தலாவலையை ஒருமித்துக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதிலிருந்து, இந்தியா-இலங்கை நல்லுறவுக்குப் பங்கம் ஏற்படக் கூடாது என்பதில் இலங்கை மந்திரிகளுக்கு உள்ள சிரத்தையும் நல்லெண்ணமும் நன்கு தெரிகிறது. ஆனால் அவர்கள் தங்களுடைய சிரத்தையையும் நல்லெண்ணத்தையும் செயலில் காட்டினாலன்றி, இந்தியா - இலங்கை பிரச்னை தீருவதற்கு வழி பிறக்கும் என்று தோன்றவில்லை.

தவிர, இலங்கைப் பிரதமர் மேற்கொண்டு நேருஜியுடன் சமரசப் பேச்சு வார்த்தை நடத்த முற்படுமுன், ஏற்கெனவே ஏற்பட்டுள்ள டில்லி ஒப்பந்த ஷரத்துகளுக்கு முரணாகவாவது நடந்து கொள்ளாமல் இருக்க வேண்டியது அவசியம் ஆகும். ஏற்கெனவே இரு சாராரும் சம்மதித்துச் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறி வரும் இலங்கைப் பிரதமர் ஸர் ஜான் கொத்தலாவலை, மேற்கொண்டு சமரசப் பேச்சு நடத்துவதால் அதிக பலன் ஏற்படுமெனத் தோன்றவில்லை.

இலங்கை அகதிகள்

பாரத நாடு சுதந்திரம் பெற்றதும் பெருந்தொகையாக மேற்கு பாஞ்சாலத்திலிருந்தும் கிழக்கு வங்காளத்திலிருந்தும் சொத்து சுதந்திரம் எல்லாவற்றையும் இழந்த அகதிகள் இந்தியாவுக்கு வந்து குவிந்தனர். அவர்களுக்காக இந்திய சர்க்கார் வருஷக்கணக்கில் கோடி கோடியாகச் செலவு செய்தார்கள்; புது நகரங்களைச் சிருஷ்டித்தார்கள். இதை யெல்லாம் அதற்குள் யாரும் மறந்திருக்க முடியாது. அந்த அகதிகளை யெல்லாம் பராமரிக்கும் பொறுப்பை மாகாண சர்க்கார்களும் சேர்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது.

அகதிகள் பிரச்னையைச் சமாளிப்பதில் வெற்றி பெற்றுவிட்டதாக இந்தியா பெருமிதம் அடைந்து வரும் இச் சமயத்தில், அகதிகள் பிரச்னை இப்போது வேறு இடத்திலிருந்து வேறு உருவத்தில் எழுந்திருக்கிறது. கூடிய சீக்கிரம் இலங்கையிலிருந்து ஒன்றரை லட்சம் இந்தியர்களை இந்தியாவுக்கு அனுப்ப இலங்கை சர்க்கார் தீர்மானித்து விட்டதாக இலங்கைப் பிரதமர் சர் ஜான் கொத்தலாவலை சில தினங்களுக்கு முன் அறிவித்துள்ளார். எனவே, உடனடியாக இலங்கை சர்க்கார் அவர்களைத் திருப்பி அனுப்ப முடிவு செய்து விட்டார்கள் என்பது நிச்சயமாகி விட்டது.

அவ்விதம் திரும்பி வரும் இந்தியர்களையும் அகதிகள் என்று கூறுவது தவறாகாது. அவர்கள் சொத்து இல்லாமல், வேலை இல்லாமல், திக்கற்றவர்களாகவே திரும்பி வருவார்கள்.

அவர்களில் பெரும்பாலோர் தமிழர்களாதலால், அவர்களைப் பராமரித்து, அவர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டிய பொறுப்பு சென்னை சர்க்காரைச் சேர்ந்தது என்று இந்திய சர்க்கார் பேசாமல் இருந்து விடக் கூடாது. பஞ்சாப், வங்காள அகதிகள் விஷயத்தில் இந்திய சர்க்கார் அக்கறை காட்டியது போல், இலங்கையிலிருந்து வரும் அகதிகளைப் பராமரிக்கும் பொறுப்பையும் பாரத்தையும் வகிக்க இந்திய சர்க்காரும் முன் வர வேண்டும். அவ்விதம் முன் வந்தால்தான் இலங்கை அகதிகள் பிரச்னையைச் சமாளித்து, அவர்களுக்கும் பொது மக்களுக்கும் அதிகக் கஷ்டங்கள் ஏற்படாமல் தவிர்ப்பது சாத்தியமாக இருக்கும்.

விவசாயத் தூதர்களின் விஜயம்

அமெரிக்காவிலிருந்து "சில விவசாயத் தூதர்கள்" இந்தியாவுக்கு வந்திருப்பதாகப் புது டில்லிச் செய்தி கூறுகிறது. இந்தியாவில் உள்ள விவசாயிகளின் குடும்பங்களுடன் சேர்ந்து பழகி, இங்குள்ள விவசாய முறைகளை அறிந்து செல்லுவதற்காக வந்துள்ள பத்து அமெரிக்க மாணவர்களையே அச்செய்தி அவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

அந்த மாணவர்கள் இந்தியாவில் மூன்று மாத காலம் தங்கியிருப்பார்கள். ஒவ்வொரு மாணவரும் பல்வேறு இடங்களுக்குப் பிரிந்து சென்று எட்டு வாரங்கள் வரையில் ஒவ்வொரு இந்திய விவசாயக் குடும்பத்துடன் தங்கி யிருப்பார்கள். அவர்கள் வயல்களைத் தாங்களே நேரில் உழுவார்கள்; இந்திய உணவையே சாப்பிடுவார்கள்; இந்திய விவசாயிகளுடன் அளவளாவி அவர்களுடைய பழக்க வழக்கங்களையும் விவசாய முறைகளையும் அறிந்து சென்று தங்கள் நாட்டில் பிரசாரம் செய்வார்கள்.

உலகத்தில் உள்ள பல நாடுகளையும் சேர்ந்த மாணவர்களுக்குள் நட்பும் நல்லுறவும் ஏற்பட வேண்டும் என்பதற்காகவே சர்வதேச விவசாய இளைஞர் பரிவர்த்தனைத் திட்டத்தின் கீழ் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

* * *

அமெரிக்கா கனத் தொழில் துறைகளில் உலக நாடுகளிடையே முதல் ஸ்தானம் வகிப்பது போலவே, விவசாயத்திலும் முக்கிய ஸ்தானம் வகிப்பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். அமெரிக்காவில் அந்த நாட்டு மக்களின் தேவையைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக உணவுப் பொருள்கள் உற்பத்தியாவதால், கப்பல் கப்பலாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். உலகத்தில் உற்பத்தியாகும் பருத்தி, சோளம், கோதுமையில் பாதி அமெரிக்காவில் உற்பத்தியாகிறது. கால்நடைகளின் உற்பத்தியிலும் அமெரிக்கா உலகத்தில் முக்கிய ஸ்தானம் வகிக்கிறது. அமெரிக்காவின் உயர்வுக்கு, விவசாயத் துறையில் அது அடைந்துள்ள அபரிமிதமான முன்னேற்றமும் காரணம் ஆகும்.

அப்படியிருந்தும் அமெரிக்க மாணவர்கள் இந்திய விவசாய முறைகளையும் இந்திய விவசாயிகளின் பழக்க வழக்கங்களையும் அறிந்து செல்லுவதற்காக இங்கு வந்திருப்பது அவர்களுடைய எல்லையற்ற ஆர்வத்தையே காட்டுகிறது. இதனால் ஒரு நாட்டினர் மற்றொரு நாட்டினருடன் நெருங்கிப் பழகி, பரஸ்பரம் நல்லெண்ணமும் நட்பும் உண்டாவதற்கும் வழி உண்டாகும்.

முக்கியமாக இந்தியா நவீன விவசாய முறைகளை அறிந்து கொண்டு, விவசாயப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதுடன், பயிர்களுக்கு ஏற்படும் பேராபத்துகளையும் தடுத்துப் பாதுகாக்கவேண்டியிருக்கிறது. அதிக மழையினாலும், அதிகக் காய்ச்சலினாலும் பயிர்களுக்குச் சேதம் ஏற்படுவது ஒருபுறமிருக்க, வெட்டுக்கிளித் தொல்லையினால் வருஷா வருஷம் பதினாயிரக்கணக்கான ஏக்கர்கள் பாழாகின்றன என்று இந்திய சர்க்கார் சென்ற வாரம் அறிக்கை விடுத்துள்ளனர். அதனால் ராஜஸ்தானிலும், பஞ்சாப், பெப்சு, உத்தரப் பிரதேசம் முதலிய மாகாணங்களிலும் மிகுந்த சேதம் ஏற்பட்டிருக்கிறதாம். மேற்கொண்டு சேதம் ஏற்படாமல் தவிர்ப்பதற்காக விமானங்களிலிருந்து கிருமி நாசினி மருந்துகளைத் தெளித்து வருகிறார்கள்.

அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள மாணவர்கள் இந்திய விவசாய முறைகளை அமெரிக்காவில் பத்திரிகைகள், மேடைகள், வானொலி, டெலிவிஷன் முதலிய பல்வேறு ஸ்தாபனங்களின் மூலம் கோடிக்கணக்கான அமெரிக்கர்களுக்கு எடுத்துக் கூறுவார்கள் என்று புது டில்லிச் செய்தியிலிருந்து தெரிகிறது. அது போலவே அமெரிக்க விவசாய முறைகளை இந்தியாவில் உள்ள கோடிக்கணக்கான மக்கள் நன்கு அறிந்து கொள்ளும்படி செய்தால், விவசாயத் துறையில் மகத்தான பலன் ஏற்படும்.

அமெரிக்க மாணவர்கள் இங்கு வந்து விவசாயிகளுடன் தங்குவதால் இன்னொரு பெரிய பலன் ஏற்படும் என்று எதிர்பார்க்கிறோம். அமெரிக்க மாணாக்கர்கள் வயல்களில் இறங்கி ஏர் பிடித்து உழுவதை நேரில் பார்த்த பிறகாவது, நம் நாட்டு மாணாக்கர்கள் உடல் உழைப்பு வேலை செய்வதில் இழிவு ஒன்றுமில்லை என்று தெரிந்து தெளியக் கூடும் அல்லவா!

ஒப்பந்தத்தை மீறியது யார்?

கொழும்பு, செப்டம்பர் மீ 18உ

இலங்கை – இந்தியா உறவு எவ்வளவு படுமோசமான நிலைமையிலுள்ளதென்பதையும் இங்குள்ள இந்தியர்கள் எவ்வளவு திக்கற்ற நிலைமையிலிருக்கிறார்களென்பதையும் இவ்வாரம் இங்கு நடைபெற்ற ஒரு மகாநாடு, சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் நன்கு அறிவுறுத்தி யிருக்கிறது.

இலங்கைப் பிரஜா வுரிமைக்கு மனுக் கொடுத்து அந்த மனு நிராகரிக்கப்பட்டதினால் நாடற்றவர்களாக்கப் படுவோரின் நிலைமை என்ன என்பது தான் இரு தேச அரசாங்கங்களுக்கு மிடையிலுள்ள முக்கியமான பெரிய தகராறு. இவர்களுக்கு இலங்கை அரசாங்கம் பிரஜாவுரிமையளிக்க மறுக்கும் காரணத்தினால் இந்தியப் பிரஜைகளாகிவிட மாட்டார்களென்பதும், இலங்கை நியாயத்தை உணர்ந்து தன்னுடைய பிரஜைகளாக்கிக் கொள்ளும் வரையில் இவர்கள் நாடற்றவர்களாகவே இருப்பார்களென்பதும் இந்தியாவின் கட்சி. இந்நாட்டிலுள்ள இந்திய வம்சாவளியினர்களில் இலங்கைப் பிரஜைகளாகாம லிருக்கும் அனைவரும் இந்தியப் பிரஜைகளென்பதும், எவ்விதக் கேள்வியும் கேட்காமல் இவர்களை இந்தியப் பிரஜைகளாக இந்திய ஹைகமிஷனர் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்பதும் இலங்கை சர்க்காரின் கட்சி.

நாடற்றவர்களை இந்தியப் பிரஜைகளாகுமாறு தூண்ட இலங்கை அரசாங்கம் அவர்களுக்கு ரொக்கப் பணம் கொடுத்தல், இலவசப் பிரயாண வசதிகள் செய்து கொடுத்தல் முதலான பல சலுகைகளை அறிவிக்க வேண்டுமென்றும், அதற்கு ஆசைப்பட்டு வலுவில் வருகின்றவர்களை இந்திய ஹைகமிஷனர் இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்றும் டில்லி ஒப்

பந்தப் பேச்சுகளின் பொழுது ஒப்புக்கொள்ளப் பட்டது. இவ்விதம் இலங்கை அரசாங்கம் செய்யத் தவறி விட்டதோடு, நாடற்றவர்களுக்குச் சலுகைகளை வழங்குவதற்குப் பதிலாக அவர்களை இந்தியப் பிரஜைகளாகுமாறு வலுக்கட்டாயப் படுத்த பல பொருளாதார நிர்ப்பந்தங்களைக் கடைப்பிடிக்கப் போவதாகவும் அறிவித்து ஒப்பந்தத்தை மீறியது. இந்த விபரீதச் செயலைத் தடுக்க, வலுக்கட்டாயத்தின் பேரில் இந்தியப் பிரஜைகளாக விரும்புவோர்களை அவ்விதம் பதிவு செய்து கொள்ள முடியாதென்றும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி இந்தியப் பிரஜைகளாகும் யோக்கியதாம்சம் உடையவர்களை மட்டுமே பதிவு செய்துகொள்ள முடியுமென்றும் இந்திய அரசாங்கம் அறிவித்தது. எனவே, புதுடில்லி ஒப்பந்தத்தை முதலில் மீறியது யார் என்பது மிக மிகத் தெளிவானது. இவ்வார மகாநாட்டில் இதைப் பற்றி விவாதித்து ஒரு முடிவும் காணமுடியாமற் போய் விட்டபடியினால், இந்திய அரசாங்கத்துடன் மறுபடி பேச்சு நடத்துவதென்றும் நேருஜிக்கு ஒரு விரிவான கடிதம் அனுப்புவதென்றும் இலங்கை சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள்.

ஸ்ரீ சேனநாயகாவின் சீற்றம்

இந்தச் சமயம் பார்த்து முன்னாள் பிரதம மந்திரி ஸ்ரீ டட்லி சேனநாயகா "இலங்கைப் பிரஜாவுரிமை பெறாத இந்திய வம்சாவளியினர்களை இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்ள இந்திய சர்க்கார் சம்மதிக்கும் வரையில் இந்தியர், பாகிஸ்தானியர் பிரஜா வுரிமைச் சட்டத்தையும் அதன்கீழ் இலங்கைப் பிரஜைகளாக இந்தியர்களைப் பதிவு செய்வதையும் நிறுத்தி வைக்க வேண்டும்" என்று வலியுறுத்தி ஒரு அறிக்கையை வெளியிட்டார். அடுத்த வாரம் நடைபெற விருக்கும் சர்க்கார் பார்லிமெண்டரிக் கட்சிக் கூட்டத்தில் அவரும் ஸ்ரீ உன்னம்புவ என்ற ஒரு கண்டிய பார்லிமெண்ட் அங்கத்தினரும் பரபரப்பான விவாதத்தைக் கிளப்பிவிடக் கூடிய மூன்று தீர்மானங்களுக்கு முன்னறிக்கை கொடுத்திருக்கிறார்கள். ஒரு தீர்மானம், இலங்கை இந்திய ஒப்பந்தம் அமுல் நடத்தப்படுவதை இலங்கை அரசாங்கம் உடன் நிறுத்தி வைக்க வேண்டு மென்று கோருகிறது. இலங்கைப் பிரஜைகளாகும் யோக்கியதாம்சம் உடையவர்களைப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்ளுவதை உடனே நிறுத்தி வைக்க வேண்டு மென்றும் இந்திய ஹை கமிஷனர் ஸ்ரீ வி. வி. தேசாயை உடனே இலங்கையிலிருந்து வெளியேற்ற வேண்டு மென்றும் மற்ற இரண்டு தீர்மானங்களும் கோருகின்றன. நிலைமை மிக நெருக்கடியான கட்டத்துக்கு வந்து விட்டதையே இவை காட்டுகின்றன.

ஸ்ரீ தொண்டைமான் அறிக்கை

தற்போதைய நிலையை விளக்கிக் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ எஸ். தொண்டைமான் வெளியிட்டிருக்கும் ஒரு அறிக்கையில் டில்லி ஒப்பந்தத்தின் கையொப்பத்தில் மை காய்வதற்கு முன்பே இலங்கை அரசாங்கம் அதைக் கிழித்தெறிய ஆரம்பித்து விட்டதென்றும், ஆகையால் அந்த ஒப்பந்தம் உருப்படாமல் போய் விட்டதில் தமக்கு ஆச்சரியமோ அல்லது ஏமாற்றமோ இல்லை யென்றும் கூறியிருக்கிறார். பிரச்னையை அரை குறையாகத் தீர்க்க முயற்சியாமல் பூராப் பிரச்னையையும் மனிதாபிமானம், தர்மம், நேர்மை ஆகிய அடிப்படையில் தீர்க்க இரு தேச அரசாங்கங்களும் மறு படியும் சந்தித்துப் பேசவேண்டுமென்று ஏற்கெனவே காங்கிரஸ் கோரியதை எடுத்துக் காட்டி அதை மீண்டும் வலியுறுத்தினார் ஸ்ரீ தொண்டமான். "பிரஜா உரிமைச் சட்டத்தை நேர்மையின்றி இலங்கை அரசாங்கம் இப்பொழுது அமுல் நடத்துவதைக் கவனிக்கும்பொழுது அதைத் தொடர்ந்து அமுல் நடத்துவதை விட அமுல் நடத்தாமல் நிறுத்தி வைப்பதே சம்பந்தப்பட்ட பல லட்சம் மக்களுக்கும் நியாயம் செய்வதா யிருக்கும்" என்று கூறினார்.

டில்லியில் நடந்த மகாநாட்டுக்கும் கொழும்பில் இவ்வாரம் நடந்த மகாநாட்டுக்கும் பல லட்சம் இந்தியர்களின் பிரதிநிதித்துவ ஸ்தாபனமாகிய இலங்கை ஜனநாயக காங்கிரஸ் அழைக்கப்படாததை "வீரகேசரி" பத்திரிகை எடுத்துக் காட்டி, "இதுமாதிரி மகாநாடு ராமன் இல்லாமல் ராமாயண நாடகம் நடத்துவதைப் போன்றது" என்று சொல்லி யிருக்கிறது. மனிதர்களைப் பற்றிய பிரச்னையில் சுமுகமான முடிவு காண வேண்டுமாயின் மனிதாபிமானம் இன்றியமையாதது என்று வீரகேசரி பத்திரிகை மேலும் கூறுகிறது.

— ரஜனி

"கல்கி" கைத்தொழில் மலர்

குடிசை உயர நலன்கள் உயரும். நலன்கள் உயர நாடு உயரும். நாடு உயர மக்கள் உயர்ந்து மகோன்னத நிலையை அடைவார்கள். எனவே, பாரத மக்களின் உயர்வுக்கு அடிப்படையான குடிசைகள் வீடுகளாகவும் மாளிகைகளாகவும் உயர வேண்டும். அவ்வாறு உயருவது அவற்றில் வாழும் உழைப்பாளிகளின் கைத் தொழில்கள் பெருகுவதையே பொறுத்திருக்கிறது. இந்த லட்சியத்தை முக்கியமாகக் கொண்டு அக்டோபர் மாதம் மூன்றும் தேதி "கல்கி" இதழ் கைத் தொழில் மலராக வெளி வரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ் நாட்டிலே சிறிய இயந்திரங்களின் உதவியால் வீடுகளில் நடைபெறும் பனியன் செய்யும் தொழில் சம்பந்தமான பல அரிய கட்டுரைகளும் விசேஷப் படங்களும் அடுத்த வாரத்திய கைத் தொழில் மலரில் வெளியாகும். திருப்பூர், சேலம், மதுரை, கோயமுத்தூர் முதலிய பல இடங்களிலுமாகப் பதினாயிரக் கணக்கான ஆடவர்களும் பெண்களும், படித்தவர்களும் படிக்காதவர்களும் மேற்படி தொழிலைக் கொண்டு ஜீவனம் செய்கிறார்கள் என்றால், அது எவ்வளவு முக்கியமான தொழில் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

வீடுகளில் இருந்து கொண்டே அத்தொழிலின் மூலம் இன்னும் ஏராளமானவர்கள் பிழைக்கலாம் என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

ஏற்கெனவே, தீக்குச்சித் தொழில் சம்பந்தமாக வெளியான முதலாவது "கல்கி" கைத்தொழில் மலருக்குப் பொது மக்கள் மகத்தான வரவேற்பு அளித்தனர். அதை வெகுவாகப் பாராட்டி உற்சாகத்துடன் கடிதங்கள் எழுதினர். அது போலவே "கல்கி" கைத்தொழில் பனியன் மலரும் பொது மக்களின் பேராதரவுக்குப் பாத்திரமாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.



Bharat Jyoti OF COURSE!

The BHARAT JYOTI is a family paper.

Its features, from the Women's Page to the reviews on current literature and literary trends in all the languages—do not discriminate. For people of all tastes, it is The BHARAT JYOTI, with exclusive magazine features and comprehensive reviews by special contributors, Political Cartoons, Exclusive Personality Interviews, Serialisation of Kulapathi's Letter by Shri K. M. Munshi, Governor of U. P., The Sunday Charivari, an exposition of the stray thoughts of a not too common man. Extensive coverage of the Film World—Indian and Foreign—Sports and Commerce.

The **Bharat Jyoti** comprising 12 pages is priced at 2 annas only.

FROM BOMBAY, EVERY SUNDAY.

அமர தாரா




ஏழாம் அத்தியாயம்

"விரோதிக்கு விரோதி!"

என்னைப் பெற்ற தாய் தந்தையரைப் பற்றி மந்திரமூர்த்தி எனக்குப் பிராயம் வந்த பின்னர் அடிக்கடி என்னிடம் சொல்லி யிருக்கிறார். சில சமயம் அவர் "இந்துமதி! நல்ல குணங்களுக்கெல்லாம் உன் அன்னையையும் பிடிவாதத்துக்கும் முன் கோபத்துக்கும் உன் தந்தையையும் கொண்டிருக்கிறாய்!" என்பார். "அதெல்லாம் ஒன்றுமில்லை, அப்பா! என்னிடமுள்ள நல்லது, கெட்டது எல்லாவற்றுக்கும் நீங்கள்தான் பொறுப்பாளி. எனக்குச் செல்லம் கொடுத்துக் கொடுத்துத்தான் இப்படிப் பிடிவாதக்காரியாகச் செய்து விட்டீர்கள்!" என்று நான் பதில் சொல்வேன்.

"ஆமாம்; ஆமாம்! ஆனால் அன்றைக்கு உன் தந்தை இரைந்து கொண்டிருந்தபோது, 'இவர்கள் எக்கேடு கெட்டாவது போகட்டும்!' என்று நான் திரும்பி வீட்டுக்குப் போயிருந்தேனானால், ஒரு தொந்தரவும் நேர்ந்திராது. உன் அம்மாவை உன் தந்தை அடித்துக் கொல்லுகிறார் என்று எண்ணிக் கொண்டபடியால், அவ்வாறு விட்டு விட்டுப் போக மனம் வரவில்லை. எப்படியாவது நல்ல வார்த்தை சொல்லிக் காசிலிங்கத்தின் கோபத்தைத் தணிக்கலாம் என்று நினைத்தேன். அவ்விதம் அவர்களுடைய சச்சரவில் தலையிட்டால் எனக்கும் இரண்டு அடி விழுந்தாலும் விழலாம் என்று பயமா யிருந்தது. அதற்கும் தயாராயிருக்க வேண்டியதுதான் என்று மனத்தைத் தைரியப்படுத்திக் கொண்டேன். கால்கள் பின்னால் பிடித்து இழுத்தன; மனம் உள்ளே போகச் சொல்லிப் பிடரியைப் பிடித்துத் தள்ளியது. இவ்விதம் தயங்கித் தயங்கி உள்ளே போய்ப் பார்த்தால், நான் நினைத்தது ஒன்றும் அங்கே கண்டது ஒன்றுமாக இருந்தது. அதிலிருந்துதான் உன்னை வளர்க்கும் பொறுப்பும் எனக்கு ஏற்பட்டது!" என்பார் மந்திரமூர்த்தி.

"அப்பா! குழந்தைகள் பிறந்த வேளையைப் பார்த்து உலகில் ஜாதகம் கணிப்பார்கள். இந்தக் குழந்தையினால் பெற்றோர்களுக்குக் கஷ்டமோ, சுகமோ உண்டாகும் என்று சோதிடம் சொல்வார்கள். நானோ என் அன்னையின் வயிற்றுக்குள்



இருந்த போதே என் தாய் தந்தையர்களுக்குத் துன்பத்தை உண்டு பண்ணி விட்டேன். உங்களையும் கவலைக்கு உள்ளாக்கி விட்டேன். இன்னமும் உங்களுக்குக் கவலை அளித்துக் கொண்டுதான் இருக்கிறேன்!" என்று சொல்லுவேன்.

"இல்லை, இந்துமதி! நீ பிறந்து என் வாழ்க்கையில் ஆனந்தமாகிய விளக்கை ஏற்றி வைத்தாய்! நீ மட்டும் என் வீட்டுக்கு அப்போது வந்திரா விட்டால், என் வாழ்க்கை பாலைவனத்தைப் போல் ஈரப் பசையே யற்றதா யிருந்திருக்கும். கடவுளுடைய திருவிளையாடல்களுக்கு நாம் காரண காரியங்கள் கற்பிக்க முடியாது. ஆனாலும், அன்றொரு நாள் எருமை மாடு குறுக்கே வந்து பஸ் விபத்தை உண்டாக்கியதும், பின்னொரு நாள் மோட்டார் சைக்கிளின் சத்தத்தினால் மிரண்ட குரங்கு குதித்து மாட்டு வண்டி குடை கவிழ்ந்ததும், உன்னை என்னிடம் சேர்ப்பிப்பதற்காக இறைவன் செய்த திருவிளையாடல்களே என்று கருதுகிறேன்!" என்பார் மந்திரமூர்த்தி.

நல்ல வேளையாக அவர் தற்போது இந்த உலகில் இல்லையே என்று எண்ணி ஆறுதல் அடைகிறேன். அவர் இன்று இருந்திருந்தால், கடவுளின் கருணையினால் அவருக்குக் கிடைத்த அருமை மகள் கொலைகாரி என்று 'கீர்த்தி' பெற்று மரண தண்டனையை எதிர்பார்த்து இந்த எட்டடிச் சதுரக் கொட்டடிக்குள் அடைபட்டிருக்கும் காட்சியைப் பார்த்திருந்தால், இதை யெல்லாம் சகித்துக் கொண்டிருந்திருப்பாரா? என்னை 'இறைவன் அருளினால் கிடைத்த இணையில்லாச் செல்வம்' என்றுதான் எண்ணியிருப்பாரா? 'ஐயையோ! அந்த அருவிக் கரைப் பங்களாவில் அன்றைக்கு ஏன் நுழைந்தோம்? இந்தத் தம்பதிகள் எப்படியாவது தொலைந்து போகட்டும் என்று திரும்பிப் போயிருக்கக் கூடாதா?' என்றுதான் அங்கலாய்த்திருப்பார்!

ஆம்; அதிர்ஷ்டவசமாகத்தான் அவர் போய் விட்டார்! புகழ் என்னும் மலையின் சிகரத்தை நான் அடைந்து ஆயிரமாயிரம் மக்களின் போற்றுதலுக்கு ஆளாகி யிருந்த நாட்களையும் அவர் பார்க்கவில்லை. அந்தப் புகழ்ச் சிகரத்திலிருந்து தலைகுப்புற விழுந்து துன்பக் கேணியில் கிடந்து தவிப்பதையும் அவர் காணும்படி நேரவில்லை. அவர் புண்ணியசாலி; நல்ல குணங்கள் எல்லாம் உருக்கொண்ட உத்தமர். அதனாலே தான் அவர் போய் விட்டார்!

இந்த என்னுடைய வரலாற்றை நான் எழுதத் தீர்மானித்தது எவ்வளவு நல்ல காரியம் என்பதை நான் நன்கு உணர்கிறேன். சோகக் கடலிலே விழுந்து கரைகாணாமல் தத்தளித்துக் கொண்டிருந்த எனக்கு அவரைப் பற்றி எழுதுவது ஒருவாறு உற்சாகத்தை அளித்திருக்கிறது. அவரைப் பற்றி எண்ணும் போதே உள்ளத்தில் புதியதொரு சாந்தி பிறக்கிறது. இந்தக் கொடுஞ் சிறையாகிற நரகமும் சொர்க்கமாகி விடுகிறது.


* * *

தயக்கத்துடன் அருவிக்கரை பங்களாவுக்குள் நுழைந்த மந்திரமூர்த்தி அங்கே பார்த்த காட்சியைக் கண்டு வியப்பும் ஆறுதலும் அடைந்தார். காசிலிங்கத்தின் மடியில் சந்திரமணி தலையை வைத்துப் படுத்திருப்பதையும், கண்களில் நீர்ததும்ப விம்மிக் கொண்டிருப்பதையும் கண்டார். இதனால் அவர்களுக்குள் சச்சரவு எதுவுமில்லை யென்பதை ஒருவாறு உணர்ந்தார்.

மந்திர மூர்த்தியைக் கண்டதும் காசிலிங்கம் "ஐயா! நான் ஒரு படுபாதகன்; சண்டாளன். மறுபடியும் இவளுடைய காலை முறித்து விட்டேன்!" என்று வாய் விட்டு அலறினார்.

மந்திரமூர்த்தி ஒன்றும் புரியாமல் சந்திரமணியின் முகத்தைப் பார்த்தார்.

சந்திரமணி விம்மலை நிறுத்திக் கண்ணீரையும் துடைத்துக் கொண்டு, "இப்படியெல்லாம் பேசாதீர்கள்! அவர் என்ன நினைத்துக் கொள்வார்? நீங்கள்





உண்மையாகவே என்னுடைய காலை ஒடித்து விட்டதாக எண்ணிக் கொள்ளப் போகிறார்!'' என்றாள்.

''உண்மை இல்லாமல் என்ன? முன்னே உனக்கு பஸ் விழுந்து கால் ஒடிந்ததையாவது விதியின் செயல் என்று சொல்லலாம்! இந்தத் தடவை நான் தானே முழுப் பொறுப்பாளி? இவர், விட்டுக்குள் வாருங்கள் என்று கூப்பிட்டவுடனே உன்னை வண்டியிலிருந்து இறக்கி விட்டு அழைத்துப் போயிருந்தால், இப்படி நேர்ந்திராதல்லவா? அல்லது வண்டியிலிருந்து நீ விழும்போது உன்னைப் பிடித்துத் தாங்கிக் கொண்டிருக்கலாம் அல்லவா? ஐயோ! இரண்டு மாதம் நீ ஆஸ்பத்திரியில் இருந்து காலைச் சரிப்படுத்திக் கொண்டு வந்தாய்! அதெல்லாம் இந்தப் பாதகனுடைய அஜாக்கிரதையினால் பயனில்லாமற் போய் விட்டதே!'' என்று கூறிக் காசிலிங்கம் தம் வைரம் பாய்ந்த கைகளினால் தலையில் அடித்துக் கொள்ளப் போனார்.

சந்திரமணி அவருடைய கைகளைப் பிடித்துக் கொண்டு, மந்திர மூர்த்தியைப் பார்த்து, ''பாருங்கள், ஐயா! வண்டி குடை கவிழ்ந்து நான் கீழே விழுந்து விட்டால் அதற்கு இவர் என்ன செய்வார்? இவரையும் கஷ்டப்படுத்திக் கொண்டு என்னையும் கஷ்டப்படுத்துகிறார். கால்நோவு போதாது என்று என் மனத்தையும் நோகச் செய்கிறார்! நீங்கள் கொஞ்சம் சொல்லுங்கள்!'' என்றாள்.

மந்திர மூர்த்திக்கு இதற்குள் விஷயம் இன்னதென்று விளங்கி விட்டது.

அவர்கள் பக்கத்தில்போய் உட்கார்ந்து கொண்டு, ''ஐயோ! பாவம்! வண்டி குடை கவிழ்ந்ததில் கால் மறுபடியும் ஊனமாகி விட்டதா, என்ன?'' என்று சாவதானமாகக் கேட்டார்.

காசிலிங்கம் சந்திரமணியின் முழங்காலுக்குக் கீழே தொட்டு அமுக்கினார். சந்திரமணி 'வீல்' என்று கத்தினாள்.

''பார்த்தீர்களா? வண்டியிலிருந்து தான் கீழே விழுந்தாளே? உடனே இவளுடைய காலைப்பற்றி நான் கவனித்திருக்க வேண்டும் அல்லவா? அப்படிச் செய்யாமல் இவளை நடக்கப் பண்ணி விட்டேன். மறுபடியும் உங்கள் வண்டியில் ஏறி இறங்கும்படியும் செய்து விட்டேன்!'' என்றார் காசிலிங்கம்.



மந்திரமூர்த்தி அவருக்கு ஆறுதலாக, "உங்கள் பேரில் குற்றம் அதிகமில்லை. குடை சாய்ந்த வண்டி உங்கள் மனைவி பேரில் விழுந்து விடாமல் தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்தீர்களே? வண்டி மட்டும் விழுந்திருந்தால்..." என்றார்.

"என் உடம்பிலுள்ள எல்லா எலும்புகளும் நொறுங்கிப் போயிருக்கும்! அங்கேயே என் உயிரும் போயிருக்கும்!" என்றாள் சந்திரமணி.

"அந்தச் சனியன் பிடித்த மோட்டார் சைக்கிள் அந்தச் சமயம் பார்த்து வந்து தொலைந்தது பாருங்கள்! அது வந்திரா விட்டால், இது ஒன்றும் நேர்ந்திராது!" என்றார் மந்திரமூர்த்தி.

உடனே காசிலிங்கம் சந்திரமணியின் தலையை மடியிலிருந்து கீழே இறக்கி வைத்து விட்டு எழுந்து நின்றார். அவர் முகத்தில் குரோதம் கொதித்தது.

"அந்த மோட்டார் சைக்கிள்காரன் யார்? இந்த ஊர்க்காரனா? வெளியூர்க்காரனா? அவனை உடனே கண்டு பிடித்து அவன் உடம்பிலுள்ள அத்தனை எலும்புகளையும் நொறுக்கி விட்டு வருகிறேன். இல்லாவிடில் எனக்கு மன நிம்மதி ஏற்படாது போலிருக்கிறது. அவன் யார், சொல்லுங்கள்!" என்றார்.

"மோட்டார் சைக்கிள்காரன் பேரில் கோபித்து என்ன பயன்? அவன் வேண்டுமென்றா அவ்விதம் செய்தான்? நம் வண்டியைக் குடை கவிழ்க்க வேண்டும் என்றா மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தான்?" என்றாள் சந்திரமணி. காசிலிங்கம் ஏதாவது வீண் வம்புச் சண்டையில் மறுபடியும் அகப்பட்டுக் கொள்ளாமலிருக்க வேண்டுமே யென்ற கவலையினால் சந்திரமணி அவ்வாறு சொன்னாள் என்பதை மந்திர மூர்த்தி அறிந்து கொண்டார். அதற்கிணங்க, "ஆமாம்; மோட்டார் சைக்கிள்காரர் பேரில் குற்றம் என்ன?" என்றார்.

"ஏதேது? நீங்கள் இரண்டு பேரும் அந்தக் கிராதகனுடைய கட்சி பேசுகிறீர்களே? அவன் பேரில் உங்களுக்கு என்ன அத்தனை பரிவு?" என்றார் காசிலிங்கம்.

"பரிவு ஒன்றுமில்லை. அவர் வேண்டுமென்று அவ்விதம் செய்யவில்லை என்று தான் சொன்னேன். மேலும் அவர் எங்கள் ஊர் ஜமீன்தார். இந்தப் பக்கங்களிலே மிக்க செல்வாக்கு உள்ளவர்!"

"செல்வாக்குள்ள ஜமீன்தாரா யிருந்தால் எனக்கு என்ன? மகாராஜாவாக இருந்தால்தான் எனக்கு என்ன?......"

"அவரை 'மகாராஜா' என்றுதான் இந்தப் பக்கங்களில் உள்ள எல்லோரும் அழைப்பது வழக்கம்."

"நீங்கள் எப்படி வேண்டுமானாலும் அழையுங்கள்! 'மகாராஜா' 'சக்கரவர்த்தி' 'ஏக சக்ராதிபதி' 'அகில உலகையும் ஒரு குடை நிழலில் ஆளும் மன்னாதி மன்னர்' என்று வேண்டுமானாலும் அழைத்து அவர் காலிலே விழுந்து கும்பிடுங்கள். எனக்கு ஒருவருடைய தயவும் வேண்டியதில்லை!......"

"ஆனால் ஒருவருடைய விரோதமும் வேண்டியதில்லை யல்லவா?"

"ஏன் வேண்டியதில்லை? நான் சிநேகிதருக்குச் சிநேகிதன்; விரோதிக்கு விரோதி! எனக்குக் கெடுதல் செய்தவனை இலேசில் விடமாட்டேன்! அவன் மகாராஜாதி ராஜாவாக இருந்தாலும் சரிதான்; தலையிலே கொம்பு முளைத்தவனாயிருந்தாலும் சரிதான்!"

"காசிலிங்கம்! நான்கூட அப்படிப் பட்ட மனிதன்தான்! இந்த ஜமீன்தார் குடும்பத்துக்கும் எனக்கும் இருபது வருஷமாக விரோதம். கோர்ட்டிலே இன்னும் வழக்கு நடந்து வருகிறது. இவருடைய தகப்பனார் மிக்க பொல்லாதவர். தசகண்ட ராவணன், சூர பதுமாசுரன் என்றெல்லாம் கதைகளில் படிக்கிறோமே, அந்தமாதிரி ராட்சத வர்க்கத்தைச் சேர்ந்தவர். அவர் காலமாகி ஒரு வருஷம் ஆகிறது. அவருடைய குமாரர் இந்த ஜமீன்தார். இவர் கொஞ்சம் நல்ல மனிதராகத் தோன்றுகிறது. ராஜியாகப் போய் விடலாம் என்று எனக்குக்கூட இரண்டு மூன்று தடவை ஆட்கள் மூலம் சொல்லி அனுப்பினார். நானும் 'வீண் விரோதம் என்னத்திற்கு?' என்பதாக யோசித்து வருகிறேன்......"

"நீங்கள் விரோதியாகத்தா னிருங்கள்; சிநேகிதர்களாகிக் கட்டிக் கொண்டு புரளுங்கள்! எனக்குக் கெடுதல் செய்தவனை நான் இலேசில் விட மாட்டேன்! அதுவும் இந்தச் சமயத்தில், இவள் எட்டு மாதக் கர்ப்பிணியா யிருக்கும் சமயத்தில், இவ்விதம் செய்தவனை......"

சந்திரமணி அப்பொழுது 'கல கல' வென்று சிரிக்கும் சத்தம் கேட்டு, இருவரும் அவளைத் திரும்பிப் பார்த்தார்கள்.

"இது என்ன சிரிப்பு?......பார்த்தீர்களா, ஐயா! என் நெஞ்சு கொதிக்கிறது! இவள் சிரிக்கிறாள்!" என்றார் காசிலிங்கம்.

மந்திர மூர்த்திக்கும் அது சிறிது வியப்பாகவே இருந்தது. காசிலிங்கத்தின் கோபத்தை மாற்றுவதற்காகச் சந்திர

மணி ஒருவேளை அவ்விதம் சிரிக்கிறாளோ என்று எண்ணிக் கொண்டார்.

ஆனால் சந்திரமணி சிரித்ததற்கு வேறொரு காரணம் வைத்திருந்தாள்.

"இந்த வேடிக்கையைக் கேட்டீர்களா? பட்ட காலிலேயே எனக்குப் படவில்லை! முன்னே வலது கால் எலும்பு அல்லவா முறிந்தது? இப்போது இடது கால் வீங்கி வலிக்கிறது!" என்றாள்.

காசிலிங்கமும் இரண்டு கால்களையும் உற்றுப் பார்த்துப் பிறகு தொட்டும் பார்த்து விட்டு, "ஆமாம்; அது உண்மைதான்! ஆனால் அதில் என்ன திருப்தி? முன்னே ஒரு காலை மட்டும் விந்தி நடந்தாய்! இப்போது இரண்டு காலும் ஒடிந்து நொண்டுவதில் உனக்குச் சந்தோஷமா?" என்று கேட்டார்.

"எதற்காக அவ்வளவு அதிகப்படுத்தி நாமே எண்ணிக் கொள்ள வேண்டும்? இது அவ்வளவு கடுமையான காயமாக எனக்குத் தோன்றவில்லை. எலும்பு முறிந்திருக்கும் என்று எண்ணவில்லை."

"முன்னேயும் இப்படித்தான் 'ஒன்றுமில்லை' என்று சொன்னாய்! உன் பேச்சைக் கேட்டுக் கொஞ்ச நாள் உன்னை அங்குமிங்கும் இழுத்து அடித்ததில் அதிகமாகி விட்டது. 'முன்னமேயே ஏன் அழைத்து வரவில்லை?' என்று ஆஸ்பத்திரிக்காரர்கள் என்னைக் கோபித்துக் கொண்டார்கள். கடவுளே! மறுபடியும் உன்னை அதே ஆஸ்பத்திரிக்கு எப்படி அழைத்துப் போவேன்? எல்லாரும் சிரிப்பார்களே?.........இதைக் கேளுங்கள், ஐயா! 'இவளைக் குங்குமத்துறைக்கு அழைத்துப் போய்க் கொஞ்ச நாள் அமைதியாக இருக்கச் செய்யுங்கள். உடம்பில் கொஞ்சம் தெம்பு வரும்!' என்று டாக்டர்கள் சொன்னதின் பேரில் இங்கு அழைத்து வந்தேன். வந்த இடத்தில் இப்படியாகி விட்டது!"

"அதற்காக நீங்கள் சிறிதும் கவலைப்பட வேண்டாம்......"

"கவலைப்பட வேண்டாம் என்று நீங்கள் சுலபமாகச் சொல்லி விடுகிறீர்கள்! சேந்தமங்கலம் ஆஸ்பத்திரியில் மூன்று மாதம் இவளை விட்டு வைத்ததில், இவளுடைய நகைகளில் பாதிக்கு மேல் விற்றாகி விட்டது! பாவிகள் என்னுடைய உத்தியோகத்தையும் பறித்துக் கொண்டு விட்டார்கள்!"

"என்ன உத்தியோகம் பார்த்தீர்கள்?" என்று மந்திரமூர்த்தி கேட்டார்.

"பெரிய உத்தியோகம் ஒன்றுமில்லை. ஜில்லா போர்டு பள்ளிக்கூடத்தில் 'டிரில் மாஸ்டர்' வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். இவளுடைய பந்துக்களுக்கு அது கூடப் பொறுக்கவில்லை. மெனக்கட்டு ஜில்லா போர்டு தலைவருக்கு ஆள் அனுப்பி என் பேரில் புகார் சொல்லி வேலையை விட்டு நீக்கச் செய்து விட்டார்கள். நீங்கள் பார்த்துக் கொண்டேயிருங்கள்! ஒரு நாள் இல்லாவிட்டால் ஒருநாள்......அந்த ஜில்லா போர்டு சனீசுவர மூர்த்தி முதலியாருக்குச் சரியான பாடம் கற்பிக்கத்தான் போகிறேன்!"

இவ்விதம் காசிலிங்கம் சொல்லிக் கொண்டிருக்கும் போது, சற்றுத் தூரத்தில் 'பட் பட் பட பட் பட்' என்று மோட்டார் சைக்கிளின் சத்தம் கேட்டது. காசிலிங்கம் பரபரப்புடனே சென்று வாசற்படியில் நின்று பார்த்தார்.

"ஆம், ஆம்! உங்கள் ஜமீன்தார்தான்! அவரிடம் ஒரு வார்த்தை கேட்டு விட்டு வரப் போகிறேன்!" என்று சொல்லிக் கொண்டே வெளியேறினார்.

சந்திரமணி மந்திர மூர்த்தியைப் பார்த்து, "உங்களுக்குப் புண்ணியம் உண்டு; நீங்களும் கொஞ்சம் அவருடன் போங்கள். வீண் சண்டை பிடித்து வம்புக்கு இழுக்கப் போகிறார். நடந்தது நடந்து விட்டது. இனிச் சண்டை பிடித்து என்ன பயன்?" என்றாள்.

மந்திரமூர்த்தியின் மனத்திலும் அதே எண்ணம் தோன்றியிருந்தது. "நீ கவலைப்படாதே, அம்மா! நானும் போகிறேன். சண்டை ஒன்றுமில்லாமல் பார்த்துக் கொள்கிறேன்!" என்று சொல்லி விட்டு அவரும் சென்றார்.

அந்த பங்களாவுக்குச் சற்றுத் தூரத்தில் இருந்த புனலருவித் தடாகத்தின் ஓரமாகக் கொண்டு வந்து ஜமீன்தார் தமது மோட்டார் சைக்கிளை நிறுத்தினார். மத்தியானம் நடந்ததைப் பற்றிக் கேள்விப்பட்டு அதைப் பற்றி விசாரித்து அறிவதற்காகத்தான் வந்திருந்தார். பண்ணையார் மந்திர மூர்த்தியுடன் ராஜியாகிச் சிநேகமாய்ப் போய் விடலாம் என்று எண்ணியிருந்த சமயத்தில் இப்படி நேர்ந்து விட்டதே என்று வருத்தப்பட்டு, தாம் செய்யக் கூடிய உதவி ஏதேனும் உண்டா என்று தெரிந்து கொள்ளும் நோக்கத்துடன் வந்தார். பங்களாவுக்குள்ளிருந்து இரண்டு பேர் வெளிப்பட்டு வருவதைப் பார்த்ததும், தடாகக் கரையிலேயே ஒரு கற்பாறையின்மீது உட்கார்ந்தார். வேட்டையாடப் போவதற்காகக் கிளம்பி யிருந்தபடியால்

அவருடைய கையில் ஒற்றைக் குழல் துப்பாக்கி ஒன்றும் இருந்தது.

காசிலிங்கமும், அவரைத் தொடர்ந்து மந்திர மூர்த்தியும், தடாகக் கரையை அடைந்தார்கள். ஜமீன்தார் மந்திர மூர்த்தியை நோக்கி "உட்காருங்கள், பண்ணையாரே! இவர் யார் புதிதாக இருக்கிறதே?" என்ருர்.

மந்திரமூர்த்தி ஒரு பாறையில் உட்கார்ந்து கொண்டு, காசிலிங்கத்தையும் உட்காரச் சொன்னுர்.

"ஆமாம்; இவர் இந்த ஊருக்குப் புதியவர்தான். வாடகைக்கு விடு வேண்டும் என்று கேட்டார். இந்த அருவிக் கரை பங்களா பிடிக்கிறதா என்று பார்க்கச் சொன்னேன்."

"புதிய மனிதர் தலையில் வாடகையை அதிகமாக வைத்து அமுக்கி விடாதீர்! என்னைக் கேட்டிருந்தால் வாடகை யில்லாமல் சும்மாவே கொடுத்திருப்பேன்."

காசிலிங்கம் குறுக்கிட்டு, "தங்களைக் கேட்டால்தானே? தாங்கள் இருக்கும் பக்கமே வருவதாக உத்தேசம் இல்லை. வாடகை இல்லாமல் குடியிருக்க வீடு கேட்கவும் நான் விரும்பவில்லை!" என்ருர்.

"இவர் என்ன இவ்வளவு கோபமாகப் பேசுகிருர்?" என்று ஜமீன்தார் கேட்டார்.

"நான் ஒன்றும் கோபமாகப் பேசவில்லை. கோபம் வந்தால் நான் பேசுகிற மாதிரியே வேறு!"

"சரிதான்; இவர் ஊருக்குப் புதிது என்று நன்ருய்த் தெரிகிறது. மத்தியானம் தங்கள் வீட்டு வாசலில் யாரோ மாட்டு வண்டியில் வந்திருந்தார்களே? அவர்களைப் பற்றிக் கேட்க வந்தேன்."

"அவர்கள்தான் இவர்கள்! தேகசௌக்கியத்துக்காகப் புருஷனும் மனைவியும் வந்திருக்கிருர்கள்."

"இவரைப் பார்த்தால், தேக சௌக்கியம் குறைவா யிருப்பதாகத் தோன்றவில்லையே! பெரிய வஸ்தாது மாதிரி அல்லவா இருக்கிருர்!..."

"வஸ்தாது மாதிரி என்ன? வஸ்தாது தான்! மத்தியானம் குடை சாய்ந்த வண்டியை இவர் தாங்கிப் பிடித்துக் கொண்டிரா விட்டால், வண்டி இவர் மனையாள் மீது விழுந்திருக்கும்."

"ஐயோ, பாவம்! வண்டிக்குள் ஒரு அம்மாள் இருந்தாளே, அந்தப் பெண் மணிதான் இவருடைய மனையாளோ?"

"ஆமாம்; அந்த அம்மாளுக்குத்தான் உடம்பு சௌக்கியமில்லை."

"அப்படி இருக்குமென்றுதான் நினைத்தேன். நல்ல வேளையாக வண்டி குடை கவிழ்ந்ததில் ஆபத்து ஒன்றும் நேராமற் போயிற்று அல்லவா?"

"அதற்காகத் தங்களுக்கு நான் நன்றி செலுத்துவதற்கில்லை!" என்று ஆத்திரத்துடன் கூறினுர் காசிலிங்கம்.

"என்ன ஐயா, இவர் வலுச் சண்டைக்கு வருகிருர்?" என்ருர் ஜமீன்தார்.

"நான வலுச்சண்டைக்கு வருகிறேன்? நான் வலுச் சண்டைக்கு வருகிறேனு, வழியோடு போகிறவர்களை யெல்லாம் தாங்கள் வலுவில் சண்டைக்கு அழைக்கிறீர்களா? சாலையில் போன மனிதர்கள், மிருகங்கள் எல்லாரும் தங்களைக் கண்டு மிரண்டார்களா, என்னைக் கண்டு மிரண்டார்களா? என்னால் தங்கள் வண்டி குடை கவிழ்ந்ததா, தங்களால் நான் வந்த வண்டி பள்ளத்தில் விழப்பார்த்ததா? ஜமீன்தார் — பணக்காரராக இருந்தால் என்ன வேண்டுமானுலும் செய்யலாம் போலிருக்கிறது! சாலையெல்லாம் உங்களுக்கே சொந்தம் என்ற உத்தேசம் போலிருக்கிறது! பொதுச் சாலை ஐயா, பொதுச் சாலை! இந்த ஊர், இந்த ஊரின்



விதிகள், சாலைகள் எல்லாம் தங்களுக்குச் சொந்தம் அல்லவே?'' என்றார்.

''பொறும், ஐயா, பொறும்! நீர் பாட்டுக்குப் பேசிக் கொண்டே போகிறீரே?'' என்றார் ஜமீன்தார்.

''தம்பி, காசிலிங்கம்! நடந்துபோனதைப் பற்றி இனிப் பேசி என்ன பயன்?'' என்று மந்திரமூர்த்திப் பண்ணையார் சமாதானப் படுத்த முயன்றார்.

''நீங்கள் இதில் தலையிட வேண்டாம். தயவுசெய்து சும்மாயிருந்தால் போதும்!'' என்றார் காசிலிங்கம்.

''அப்படி யில்லை, தம்பி! கொஞ்சம் பொறுமை வேண்டும். 'சாந்தம் சாகரத்திலும் பெரிது' என்று பெரியோர்கள் சொல்லி யிருக்கிறார்கள்.''

''அதையெல்லாம் இந்த வஸ்தாதிடம் சொல்லிப் பயனில்லை, பண்ணையாரே! உம்முடைய வேதாந்த உபதேசம் ஒன்றும் இவரிடம் பலிக்காது. ஓடுகிறவரைக் கண்டால் மேலே மேலே விரட்டுகிறவர் இவர்!'' என்றார் ஜமீன்தார்.

''ஏன், ஐயா! நானு ஓடுகிறவரைக் கண்டால் விரட்டுகிறவன்? அந்தக் குலத்திலேயே நான் பிறந்தவன் அல்ல! நீங்கள் அல்லவா சாலையில் கண்ட நாய், கோழி, மாடு, மனிதர் எல்லாரையும் விரட்டிக் கொண்டு போகிறீர்? மரத்தில் உள்ள குரங்கு கூட அல்லவா உங்களைக் கண்டு மிரண்டு பாய்கிறது?'' என்றார் காசிலிங்கம்.



மந்திர மூர்த்தி ஜமீன்தாரைப் பார்த்து, ''இவருடைய மனையாளுக்கு வண்டி கவிழ்ந்து விழுந்ததில் காலில் காயம்பட்டு விட்டது. அதனால் இவ்வளவு கோபமாகப் பேசுகிறார்!'' என்றார்.

''அதற்காக என் பேரில் இப்படி ஒரேயடியாகக் கோபித்துக் கொண்டு என்ன உபயோகம்?'' என்றார் ஜமீன்தார்.

''பின்னர், யார் பேரில் கோபித்துக் கொள்வது?'' என்றார் காசிலிங்கம்.

''என்னுடைய மோட்டார் சைக்கிளின் பேரில் வேணுமானால் கோபித்துக் கொள்ளுங்கள்! இந்த சைக்கிள்தான் அவ்வளவு தடபுடலாகச் சத்தம் போட்டுச் சாலையில் போகிறவர்களை யெல்லாம் மிரட்டுகிறது!'' என்றார் ஜமீன்தார்.

''தாங்கள் இப்போது சொன்னது நூற்றில் ஒரு வார்த்தை; ரொம்ப நியாயமான பேச்சு. தங்கள் பேரில் குற்றம் சொல்லக் கூடாதுதான். இந்த மோட்டார் சைக்கிள் பேரிலேதான் குற்றம். யாரா யிருந்தாலும், எதுவாயிருந்தாலும், குற்றத்துக்குத் தண்டனை உண்டு அல்லவா? ஆகையால் இந்த மோட்டார் சைக்கிளுக்கும் தண்டனை கொடுக்க வேண்டியதுதான்!''

இவ்விதம் காசிலிங்கம் சொல்லிக் கொண்டே தடாகத்தின் அருகில் நிறுத்தி வைத்திருந்த மோட்டார் சைக்கிள் அண்டை சென்றார். அதை இரண்டு கைகளினாலும் அலக்காகத் தூக்கி எடுத்தார். சாதாரண சைக்கிளைத் தூக்குவதில் அடையக் கூடிய சிரமங் கூட அவருக்கு ஏற்படவில்லை. தம் தலைக்கு மேலேயே தூக்கி விட்டார். மந்திர மூர்த்திக்குத் 'திக்' என்றது. ''ஐயோ! இது என்ன வம்பு? சைக்கிளைப் போட்டு உடைத்து விடப் போகிறானே? இதன் விலை ஆயிரம் ரூபாய்க்கு மேலேகூட இருக்குமே?'' என்று மந்திர மூர்த்தி எண்ணிக் கவலைப் பட்டார்.


''தம்பி! தம்பி! என்ன செய்யப் போகிறாய்?'' என்று கத்தினார்.

''பார்த்துக் கொண்டே இருங்கள்!'' என்று காசிலிங்கம் சொல்லி விட்டு அருவித் தடாகத்தின் ஓரத்தில் சென்றார். மோட்டார் சைக்கிளைப் பலமாக வீசி எறிந்தார். அது தடாகத்தின் மத்தியில் விழுந்து இரண்டொரு விநாடியில் தண்ணீரில் அமுங்கிப் போய் விட்டது.

எட்டாம் அத்தியாயம்

"நண்பருக்கு நண்பன்"

இதையெல்லாம் பங்களாவின் பலகணி வழியாகச் சந்திரமணி பார்த்துக் கொண்டிருந்தாள். காசிலிங்கமும் மந்திர மூர்த்தியும் ஜமீன்தாரைச் சந்திக்கப் போனதிலிருந்தே அவள் கவலை கொண்டிருந்தாள். ஆகையால், கால் வலியைக் கூடப் பொருட்படுத்தாமல் எழுந்து நடந்து வந்து பங்களாவின் முகப்பில் நின்று பார்த்துக் கொண்டிருந்தாள்.



மோட்டார் சைக்கிளைக் காசிலிங்கம் தடாகத்தில் எறிந்ததும் சந்திரமணி 'வீல்' என்று ஒரு சத்தம் போட்டாள். பிறகுதான் சத்தமிட்டது தவறு என்பதை உணர்ந்து வாயைக் கைகளினால் பொத்திக் கொண்டாள்.

சந்திரமணி சத்தமிட்டது தடாகக் கரையில் இருந்த மூன்று பேருடைய காதிலும் விழுந்து, அவர்களுடைய கவனத்தை இழுத்தது. சந்திரமணியின் பீதி கொண்ட முகத்தையும் மூன்று பேரும் பார்த்தார்கள்.

காசிலிங்கம் மோட்டார் சைக்கிளைத் தடாகத்தில் எறிந்த பிறகு, மற்ற இருவரையும் திரும்பிக் கூடப் பாராமல் பங்களாவை நோக்கி விடு விடு என்று நடந்து சென்றான்.

"பெரிய முரட்டு மனிதனாயிருக்கிறானே? இவனை எந்தக் காட்டிலிருந்து பிடித்துக்கொண்டு வந்தீர்கள்?" என்று ஜமீன்தார் கேட்டார்.

"நான் பிடித்து வரவில்லை. இவர்களாகவேதான் வந்து சேர்ந்தார்கள். இந்தப் பிள்ளை முரடனாயிருந்த போதிலும் யோக்கியமானவன். வாழ்க்கையில் கஷ்டப்பட்டவர்கள். இவனுடைய மனையாள்பேரில் இவனுக்கு ரொம்ப ஆசை; அவளுக்கும் இவன் பேரில் உயிர். இம்மாதிரியான தம்பதிகளைப் பார்ப்பதே அருமை!" என்றார் மந்திரமூர்த்தி.

"சற்று முன் உங்கள் பங்களா வாசலில் ஒரு முகம் தெரிந்ததே! அந்தப் பெண்தான் இவனுடைய மனைவியா?"

"ஆமாம்; அவளுக்கு ஏற்கெனவே பஸ் விபத்தில் ஒருகால் எலும்பு முறிந்து விட்டது. அது குணமாக இரண்டு மாதம் ஆயிற்றாம். இன்று வண்டி குடை அடித்ததில் இன்னொரு காலிலும் பலமான அடி பட்டிருக்கிறது. அதோடு, எட்டு மாதக் கர்ப்பிணி!"

"அப்படியா? த்ஸௌ! த்ஸௌ! இவனுக்குக் கோபம் வந்தால், அதற்குத் தக்க காரணம் இருக்கிறது! மோட்டார் சைக்கிளைப் பாறை மீது போட்டுச் சுக்கு நூறாய் உடைத்து விடாமல் இந்த மட்டும் தண்ணீரில் போட்டானே? அடே அப்பா! பீமசேனன் கெட்டான், போங்கள்! என்ன பலம்! என்ன துணிச்சல்! இந்த மாதிரி ஒரு ஆள் நம் சமஸ்தானத்தில் இருந்தால் மிக்க நன்றாயிருக்கும். இவனுக்கு இப்போது என்ன வேலையாம்? ஏதாவது உங்களுக்குத் தெரியுமா?" என்று ஜமீன்தார் கேட்டார்.

"இவனுடைய பழைய வரலாறு ஒன்றும் தெரியாது. சமீபத்தில் இவன் ஜில்லா போர்டு பள்ளிக்கூடத்தில் 'டிரில் மாஸ்டர்' வேலையில் இருந்தானாம். ஜில்லா போர்டு தலைவர் நம்முடைய எஸ். என். ஈசுவர மூர்த்தி முதலியார் இருக்கிறாரே, அவர் யாருடைய பேச்சையோ கேட்டுக் கொண்டு இவனை வேலையிலிருந்து நீக்கி விட்டாராம்!"

"என்ன? என்ன? அப்படியா? ரொம்ப நல்லதாய்ப் போயிற்று! பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று. பண்ணையாரே! அந்தச் சனிசுவர மூர்த்தி முதலியாரைத் தொலைத்துத் தலை முழுகினாலொழிய இந்த ஜில்லாவுக்குக் கதி மோட்சம் கிடையாது; யாருமே நிம்மதியாக இருக்க முடியாது! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"ஆமாம், ஆமாம்! பலபேர் அப்படித்தான் சொல்லுகிறார்கள். எனக்கு ஒன்றும் அவர் கெடுதல் செய்ததில்லை."

"உமக்குக் கெடுதல் செய்யாவிட்டால்? ஊருக்கெல்லாம் கெடுதல் செய்வது போதாதா? இன்றைக்கு எனக்குக் கெடுதல் செய்கிறவன், என்னைத்

தீர்த்துக் கட்டிய பிறகு, நாளைக்கு உம்மிடம் வரலாம் அல்லவா?"

"தங்களைத் தீர்த்துக் கட்டுவது அவ்வளவு சுலபமான காரியமா?" என்றார் குங்குமத்துறைப் பண்ணையார்.

"சுலபம் என்றுதான் அந்தச் சனீசுவர மூர்த்தி முதலியார் நினைத்துக் கொண்டிருக்கிறார். நானும் ஒரு கை பார்த்து விடலாம் என்று இருக்கிறேன்!..."

இவ்விதம் இவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே, காசிலிங்கம் அங்கே திரும்பி வந்து விட்டார்.

சந்திர மணியைக் காசிலிங்கம் பார்த்த போது, "இந்த ஊருக்கு வந்ததும் வராததுமாக இப்படி விரோதம் பண்ணிக் கொள்கிறீர்களே? இது நியாயமா? இந்த ஊரிலாவது நாம் சில மாதம் நிலைத்து இருந்தாக வேண்டுமே? எனக்கு எட்டு மாதம்; அத்துடன் கால் ஒடிந்து கிடக்கிறேன். இந்த நிலைமையில் வேறு இடம் தேடிப் போக முடியுமா? நாலு பேருடைய ஒத்தாசை நமக்கு வேண்டாமா?" என்று மிகக் கனிவாகப் பேசினாள். இதனால் காசிலிங்கத்தின் மனம் வெகுவாக மாறி யிருந்தது.

நேரே ஜமீன்தாரின் அருகில் வந்து, "ஐயா! நான் செய்தது பெரிய பிசகு. அவசரப்பட்டுச் செய்து விட்டேன். தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள்!" என்றார் காசிலிங்கம்.

"உம்மிடந்தான் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும். தங்கள் மனைவியின் நிலையைப் பற்றிப் பண்ணையார் சொல்லி அறிந்தேன். என்னால் உங்களுக்குப் பெரிய சங்கடம் ஏற்பட்டு விட்டது. அதை நினைக்க வருத்தமாயிருக்கிறது!" என்றார் ஜமீன்தார்.

"என்ன இருந்தாலும் இவருக்கு இவ்வளவு பட படப்பு உதவாது! மோட்டார் சைக்கிளைத் தூக்கிக் குளத்திலா போடுவார்கள்? வேறு யாரும் இந்த மாதிரி காரியம் செய்திருக்க மாட்டார்கள்!" என்றார் மந்திரமூர்த்தி.

"வேறு யாராலும் செய்திருக்கவும் முடியாது! மோட்டார் சைக்கிளைத் தூக்கிப் பார்த்தால் அல்லவா தெரியும்? நல்ல வேளையாக, பாறையில் போட்டு உடைக்காமல் நடுத் தடாகத்தில் தண்ணீரில் போட்டாரே? சைக்கிளுக்குச் சேதம் ஒன்றும் நேர்ந்திராது. நானே சைக்கிளைக் கழுவ வேண்டும் என்று நினைத்தேன். இவர் அதற்கு ஏற்பாடு செய்து விட்டார். நாலு ஆளை அனுப்பிச் சைக்கிளை எடுத்துக் கொள்கிறேன்."

"வேண்டாம்; வேண்டாம். தங்களுக்கு அந்தச் சிரமம் வைக்க மாட்டேன். நானே இந்தப் பொய்கையில் இறங்கி எடுத்து விடுகிறேன். எவ்வளவு ஆழம் இருக்கும்?" என்றார் காசிலிங்கம்.

"அதிகம் இல்லை; இரண்டு ஆள் ஆழம் இருக்கும்!" என்றார் ஜமீன்தார்.

"இவ்வளவு தானே?" என்று காசிலிங்கம் சொல்லிவிட்டுத் தடதடவென்று தடாகத்தில் இறங்கினார். தண்ணீரில் இறங்கி மூழ்கினார். சிறிது நேரத்துக்கெல்லாம் மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு வெளியே வந்தார்.

இதற்குள் ஜமீன்தாரும் மந்திரமூர்த்தியும் தடாகக் கரை யோரமாக வந்து நின்றார்கள். மோட்டார் சைக்கிளை அவரிடமிருந்து வாங்கிக் கரை யேற்றினார்கள். காசிலிங்கம் சொட்டச் சொட்ட வெளியேறி வந்து துணிகளைப் பிழிந்தார்.

"பீமசேனன் கெட்டான்!" என்றார் ஜமீன்தார். காசிலிங்கத்திடம் அவர் வியப்பு மேலும் அதிகமாகி விட்டது.

மந்திரமூர்த்தி ஜமீன்தாரைப் பார்த்து, "இனிமேல் இவர் போய்க் குடும்பம் நடத்துவது பற்றிக் கவனிக்கட்டும்! இரண்டு பேரும் உதவிக்கு யாரு மில்லாமல் வந்திருக்கிறார்கள். சமையலுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்!" என்றார்.

"என்னாலான உதவியைச் செய்யத் தயார். எது வேண்டுமானாலும் சொல்லி அனுப்பலாம்!" என்றார் ஜமீன்தார்.



"நான் அப்படி யெல்லாம் ஒருவருடைய உதவியை எதிர்பார்க்கும் வழக்கம் இல்லை!" என்றார் காசிலிங்கம்.

"நான் சொல்வதைத் தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம், காசி லிங்கம்! உங்கள் நிலைமையைப் பற்றிப் பண்ணையார் எனக்கு எல்லாம் கூறினார். ஜில்லா போர்டு சனீசுவரமூர்த்தி முதலியார் உம்மை வேலையிலிருந்து நீக்கி விட்டாராமே?" என்றார் ஜமீன்தார்.

"ஆமாம்; அவருக்கு நான் ஒரு கெடுதலும் செய்யவில்லை. யாரோ சொன்னதைக் கேட்டுக் கொண்டு அவ்விதம் செய்து விட்டார். இத்தனைக்கும் சம்பளம் மாதம் நாற்பத்தேழு ரூபாய் எட்டு அணாத்தான். பிள்ளைகளுக்குத் தேகாப்பியாசம் சொல்லிக் கொடுப்பதில் பொழுது

சற்று உற்சாகமாய்ப் போய்க் கொண்டிருந்தது. அதற்கும் அந்தச் சனீசுவர மூர்த்தி முதலியார் உலை வைத்து விட்டார்!" என்றார் காசிலிங்கம்.

"அந்த மனிதருடைய சுபாவமே அப்படித்தான். யார் குடியையாவது கெடுத்துக் கொண்டிருக்க வேண்டும். அவருடைய விரோதிகள் எல்லாரும் என்னுடைய நண்பர்கள். ஆகையால் நீரும் இன்று முதல் எனக்கு அத்தியந்த நண்பர். சிநேகிதர் என்ற முறையில் உமக்கு வேண்டிய உதவிகள் செய்யத் தயார்!" என்றார் ஜமீன்தார்.

"மிக்க வந்தனம். நான் விரோதிக்கு விரோதி; நண்பருக்கு நண்பன். பண்ணையாருக்கு அது மிக நன்றாகத் தெரியும்!" என்றார் காசிலிங்கம்.

"எங்கே? உம்முடைய கையை இப்படிக் கொடுங்கள்!" என்றார் ஜமீன்தார். அவர் ஆங்கிலேயப் பழக்க வழக்கங்களில் சிறிது பயிற்சி உள்ளவர்.

காசிலிங்கம் தம்முடைய கையை நீட்டினார்; நீட்டிய கையைப் பிடித்து ஜமீன்தார் ஒரு தடவை குலுக்கினார்.

"ஏதேது? நீங்கள் இரண்டு பேரும் சிநேகமாகி என்னைக் கைவிட்டு விடுவீர்கள் போலிருக்கிறதே?" என்று மந்திர மூர்த்தி சொல்லி விட்டுச் சிரித்தார்.

"உம்முடைய சிநேகத்தை நான் விட்டால், சந்திரமணி என்னை இலேசில்விட மாட்டான். அப்புறம் வீட்டில் நான் தலை காட்ட முடியாது! உம்மிடம் ஏதோ மாய மந்திர சக்தி இருக்கிறது! பெயரே மந்திர மூர்த்தி அல்லவா?" என்று கூறி விட்டுக் காசிலிங்கமும் சிரித்தார்.

காசிலிங்கமும் ஜமீன்தாரும் விரைவில் நெருங்கிய நண்பர்கள் ஆனார்கள். இரண்டு பேரும் அடிக்கடி மலைமேலிருந்த காடுகளுக்கு வேட்டையாடப் போனார்கள். ஜமீன்தார் காசிலிங்கத்துக்குத் துப்பாக்கி சுடுவதற்குச் சொல்லிக் கொடுத்தார். முயல், மான், சில சமயம் வேங்கைப் புலி முதலியவற்றை வேட்டையாடிக் கொன்று அவற்றின் உடல்களைக் கொண்டு வந்தார்கள்.

ஜமீன்தாருக்கும் என் தந்தைக்கும் ஏற்பட்ட நட்பு என் அன்னைக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. மந்திர மூர்த்திப் பண்ணையாரும் அதை அவ்வளவாக விரும்பவில்லை. ஆனாலும் அந்த நட்பு நீடித்து வளர்ந்து வந்தது. அதனால் பல விபரீதங்கள் நிகழ்ந்தன. எல்லாருக்கும் பல இன்னல்கள் விளைந்தன. அவர்களுடைய நட்பு வெகு காலத்துக்குப் பிறகு என்னுடைய வாழ்க்கையையும் பாதித்தது. இந்த உலக வாழ்க்கையில் காரண காரியங்களின் தொடர்பு எவ்விதம் நேரிடுகிறது என்பதை யார் வரையறைத்துக் கூற முடியும்? (தொடரும்)

தொழில் துறையில் ஒரு முயற்சி

சாயம் வெளுத்தது என்று சிலேடையாகச் சொல்லுவது உண்டு. மனிதரின் வாழ்க்கையில் சாயம் அவ்வளவு முக்கிய ஸ்தானம் வகிக்கிறது. கடைகளில் ஜவுளி வாங்குவோர் 'சாயம் வெளுத்து விடுமா!' என்று கேட்காமல் இருப்பதில்லை. கடைக்காரர்களும் முக்கியமாகப் புடவைகள், சீட்டிகள் முதலியவற்றின் உயர்வைக் குறிப்பிடச் 'சாயம் வெளுக்காது' என்றே கூறுவார்கள். எனவே, துணிகளின் தரம் சாயம் வெளுப்பதையும் வெளுக்காததையுமே பொறுத்திருக்கிறது என்று ஏற்படுகிறது.


இவ்வளவு முக்கியமான சாயம் இந்தியாவில் உற்பத்தியாகாதது வருந்தத்தக்கது. சாய வகைகளில் பெரும் பகுதி வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதியாகின்றன; இன்னும் பல ஆண்டுகள் வரையில் அன்னிய நாடுகளிலிருந்துதான் அவை இறக்குமதி செய்யப்பட வேண்டும்.

1914-ம் ஆண்டில் முதலாவது மகாயுத்தம் ஏற்படுவதற்கு முன் சாய உற்பத்தியில் ஜெர்மனி உலகத்திலேயே முக்கிய ஸ்தானம் வகித்து வந்தது. பிறகுதான் பிரிட்டன், அமெரிக்கா முதலிய மற்ற நாடுகள் விழித்துக் கொண்டு, சாயத் தொழிலை அபிவிருத்தி செய்யத் தொடங்கின. 1953-ல் இம்பீரியல் கெமிகல் இன்டஸ்ட்ரீஸ் என்ற பிரிட்டிஷ் கம்பெனி சாய ஆராய்ச்சிக்காரர்கள் எழுபத்தைந்து லட்சம் பவுன் செலவழித்து, புதிதாக அறுபத்தாறு சாயவகைகளைக் கண்டு பிடித்தார்கள். சாய வகைகளை உற்பத்தி செய்வதற்கான மூலச் சரக்குகளை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வோருக்கு பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி முதலிய மேல்நாடுகளில் சர்க்கார்கள் பெரும் தொகை அபராதமும், சிறைத் தண்டனையும் விதித்தன எனில், அத்தொழிலை உலக நாடுகள் எவ்வளவு முக்கியமாகக் கருதுகின்றன என்பதை அறியலாம்.

ஜவுளி உற்பத்தியிலும் நெசவுத் தொழிலிலும் மற்ற நாடுகள் பிரமிக்கத்தக்க வண்ணம் முன்னேற்றம் அடைந்துள்ள இந்தியா, அவற்றிற்கு இன்றியமையாத சாய வகைகளுக்குப் பிறநாடுகளை எதிர்பார்க்கும்படி இருப்பது பெரிய குறையே அல்லவா! இந்தக் குறையை நிவர்த்திக்கும் நோக்கத்துடன் பம்பாயில் சென்ற மாதத்திலிருந்து COLOUR AGE என்ற நுட்பத் தொழில், வர்த்தக மாத சஞ்சிகை வெளியாகி வருகிறது. அதன் முதல் இதழ் உயர்ந்த ஆர்ட் காகிதத்தில் கண்கவர் வர்ணங்களுடனும், சாயத் தொழில் சம்பந்தமான பல அரிய கட்டுரைகளுடனும் மிளிர்கின்றது. அதன் சீரிய நோக்கம் வெற்றிபெறுவதற்குற்ற பொதுமக்களின் ஆதரவு அதற்குக் கிடைக்கும் என நம்புகிறோம்.

வருட சந்தா ரூ. 10. தனிப் பிரதி விலை ரூ. 1.

* கிடைக்குமிடம்: R. V. Raghavan, 108, Himalaya House, Palton Road, Bombay.



ஜாபகரைக் கேளுங்கள்
அவாளெல்லாம் பெண்ணுக்கு மாப்பிள்ளையும் பிள்ளைக்கு பெண்ணும் தேடறா!
அப்படித்தானி-ருக்கு இப்போதைய நிலவரம்! கண்ணைத் திறந்து கொண்டு தேடினாலே வரன் கிடைக்கறது கஷ்டமா இருக்கு. இப்படிக் கண்மூடித்தனமா தேடினா கிடைக்குமா? இந்த ஜாபகரைக் 'கன்ஸல்ட்' பண்ணி-னா காரியத்தைக் கல்யாணமாக்கி முடிச்சுடுவார்.


இம் மாதம் 25உ முதல்
குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கும்
குதூகலச் சித்திரம்
வைத்யா பிலிம்ஸாரின்
வைரமாலை
டைரக்ஷன்: N. ஜகந்நாத் பி.ஏ.
பத்மினி • ராகினி
மனோஹர் • தங்கவேலு
பிரண்ட் ராமசாமி • மாலி
ராகவன் • வாதிராஜ்
K.R. செல்லம்
கதை, வசனம்
தோட்டக்கார
விஸ்வநாதன்
ஸ்டுடியோ வாஹினி
வைத்தியா பிலிம்ஸ், 100, யுனைடெட் இந்தியா காலனி, மதராஸ்-24.
EP.

எட்டயபுரம் பாரதி திருநாள்

தி. சுவாமிநாதன்

மகா கவி பாரதி தினமாகிய செப்டம்பர் மீ 11-ம் தேதி காலை எட்டயபுரம் பாரதி மண்டபத்தில் பாரதி விழா கொண்டாடப்பட்டது.

கவி பாரதியாரின் நினைவாகத் தமிழ் கூறும் நல்லுலக மக்களால் சில ஆண்டுகளுக்கு முன் நிர்மாணிக்கப்பட்ட மணி மண்டபம் நன்கு அலங்கரிக்கப் பட்டிருந்தது. விழாவும் மண்டபத்தின் கிழக்குப்புறத்தில் அமைக்கப்பட்ட விசேஷ அலங்காரப் பந்தலில் நடைபெற்றது. பந்தலில் பாரதியின் பாடல்களிலுள்ள முக்கியப் பகுதிகள் அட்டைகளில் எழுதி வைக்கப்பட்டிருந்தன. பந்தலின் வாசலில் இரண்டு பெரிய பாரதியார் திரு உருவப் படங்கள் வைக்கப்பட்டிருந்தன. விழாவில் பத்தாயிரம் மக்களுக்கு மேல் உற்சாகத்துடன் வந்து கலந்து கொண்டார்கள்.

காருகுறிச்சி ஸ்ரீ கே. பி. அருணாசலம் அவர்களின் நாதஸ்வர இசையுடன் விழா பிற்பகல் மூன்று மணிக்குத் துவங்கியது. நாதஸ்வரக் கச்சேரிக்காகப் பந்தலில் இரண்டு மணி நேரம் முன்பே கூட்டம் அலைமோத ஆரம்பித்துவிட்டது. காருகுறிச்சி ஸ்ரீ அருணாசலம் தம்மை மறந்து தம் திறமை முழுவதையும் காட்டி அற்புதமாக நாதஸ்வரம் வாசித்தார். அன்றையக் கச்சேரி முதல்தரமாக அமைந்திருந்தது.

பாரதி விழா சரியாக நாலரை மணிக்குத் துவங்கியது. பாரதியார் விழா வரவேற்புக் கமிட்டியைச் சேர்ந்த ஸ்ரீ டி. பி. சுப்பையா, பேராசிரியர் ஸ்ரீ ரா. பி. சேதுப் பிள்ளையைத் தலைமை வகிக்குமாறு கேட்டுக் கொண்டார். பாரதி மண்டபப் பராமரிப்புக் கமிட்டியின் பொருளாளர் ஸ்ரீ ரு. மாரியப்ப நாடார் ஆமோதித்தார்.

எட்டயபுரம் மாரியப்பா உயர்தர ஆரம்பப் பாடசாலை மாணவிகளின் கடவுள் வணக்கத்துடன் விழா துவங்கியது. விழா வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ கே. ராமசாமி தாஸ் எம். எல். ஏ. வரவேற்புப் பிரசங்கம் செய்தார். எட்டயபுரம் பஞ்சாயத்துச் சபை சார்பாகப் பஞ்சாயத்துத் தலைவர் ஸ்ரீ இ. மு. ஆ. ராமச்சந்திரன் மந்திரி கனம் மாணிக்கவேலருக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார்.

"பாரதியார் வைரம் போன்றவர். வைரத்தின் எந்த பாகத்தைப் பார்த்தாலும் ஒளி வீசும். அதைப் போல பாரதியாரை எந்த முறையில் பார்த்தாலும் அவர் ஒளி வீசக் கூடியவர். பாரதியின் பாடலைப் படித்த பிறகுதான் தமிழ் ஓர் சிறந்த பாஷை என்றும் பாரதி ஓர் உயர்ந்த கவிஞன் என்றும் தெரிந்து கொண்டேன்" என்று கூறி மந்திரி கனம் மாணிக்கவேலு நாயகர் விழாவைத் துவக்கி வைத்தார்.

விழாவுக்கு வந்திருந்த ஆசிச் செய்திகளைப் பஞ்சாயத்துச் சபை உப தலைவர் ஸ்ரீ வி. எஸ். எஸ். வேலு முதலியார் வாசித்தார். பிறகு விழாவுக்குத் தலைமை வகித்துச் சிறப்பித்த ஸ்ரீ ரா. பி. சேதுப் பிள்ளை தமது தலைமை உரையை நிகழ்த்தினார்:—

"சென்னை மாகாணத்தில் எங்கு பாரதி விழா கொண்டாடினாலும் அவர் பிறந்த எட்டயபுரத்தில் விழா கண்டிப்பாகக் கொண்டாட வேண்டும். பெரிய கவிஞர்கள் எல்லாம் சிறிய கிராமங்களில் தான் பிறக்கிறார்கள். மகாகவி கம்பர் தேரழுந்தூர் என்னும் சிற்றூரில்தான் பிறந்தார். திருஞான சம்பந்தர் சீர்காழி என்னும் சிற்றூரில்தான் பிறந்தார். நம்மாழ்வார் குருகூர் என்னும் சிற்றூரில் தான் பிறந்தார். சேக்கிழார் குன்றத்தூர் என்ற சிற்றூரில்தான் பிறந்தார். இதுபோலவேதான் எட்டயபுரத்தில் பாரதியும் பிறந்தார். ஆகவேதான் சொல்லுகிறேன், அவர் அருள் சுரக்கும் இந்த ஊரில்தான் பாரதி விழா மகோன்னதமாகக் கொண்டாட வேண்டும் என்று.

"முன்னாளில் ஆங்கிலத்துக்கு அதிக மதிப்பு. ஆங்கிலத்துக்கு எல்லோரும் அடிமைப்பட்டிருந்தார்கள். அதைக் கண்ட பாரதியார் 'என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்' என்று வேதனைப் பட்டுப் பாடியிருக்கிறார். சென்னை நகரத் தெருக்களிலும் கடற்கரையிலும் கல்லூரி மாணவர்கள் ஆங்கில மொழியில் பேசிக் கொண்டு போவதைப் பார்த்ததும் பாரதி 'தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!' என்று வேண்டுகோள் விடுத்தார்....

விழாவில் குன்றக்குடி அடிகளார் தேசியக் கொடி ஏற்றி வைத்துப் பாரதி லட்சியத்தை மக்கள் உணர்ந்து தெய்வ நம்பிக்கை கொண்டு தமிழை வளர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். பாரதியாரின் தாய் மாமனுரான ஸ்ரீ சாம்பசிவ அய்யர் பாரதி பாடல் ஒன்றைக் கம்பீரமாகப் பாடி விழாவை வாழ்த்திப் பாரதி பொருட் காட்சியைத் திறந்து வைத்தார்.

ஸ்ரீ டி. பி. சுப்பையா மூப்பனார் நன்றி கூற முதல் நாள் பாரதித் திருவிழா முடிந்தது.



சிவநேசச் செல்வரும் தமிழன்பரும் திரு வி. க. வின் ஆப்த நண்பருமான ஸ்ரீ எஸ். சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி. அவர்களின் அருமைக் குமாரி செல்வி மீனாட்சி அவர்களுக்கும் மதுக்கம்பாளையம் மிராசுதார் திரு கோவிந்தராஜன் அவர்களுக்கும் செப்டம்பர் இரண்டாம் தேதி சென்னையில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்துக்கும் மாலையில் செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் நடந்த வரவேற்புக்கும் சென்னை நகரப் பிரமுகர்கள் பலரும் விஜயம் செய்து சிறப்பித்தார்கள். வாழ்க மணமக்கள்!

அன்று இரவு விழாப் பந்தலில் நடைபெற விருந்த இசை வாணர் ஸ்ரீ எம். கே. தியாகராஜ பாகவதர், ஸ்ரீ கொத்தமங்கலம் சுப்பு ஆகியவர் களின் இன்னிசை அரங்குக்காகப் பந்தலில் இரண்டு மணி நேரத்துக்கு முன்பே கூட்டம் நிறைந்து வழிய ஆரம்பித்து விட்டது. இசை வாணர் ஸ்ரீ எம்.கே. தியாகராஜ பாகவதர் கச்சேரியைத் தொடங்கினார். அவர் கணீரென்ற குரலில் பாட ஆரம்பித்ததும் சபையில் கலவரம் அடங்கி நிசப்தம் நிலவியது. கவியரசர் பாரதியாரின் இனிய தமிழ்ப் பாடல்களை வெகு பிரமாதமாகப் பாடினார். மூன்று மணி நேரம் கச்சேரியை மக்கள் மிக அமைதியாக இருந்து பெரிதும் ரசித்தார்கள். அன்று கச்சேரி அருமையாகவும் முதல் தரமாகவும் அமைந்திருந்தது.

இரவு சாப்பாட்டுக்குப் பிறகு ஆரம்பமான ஸ்ரீ கொத்தமங்கலம் சுப்புவின் "பாரதியாரின் கதை" கதா காலட்சேபம் முடிவதற்கு மணி இரண்டாகி விட்டது. பந்தலில் கூடியிருந்த ஜனங்கள் 'ஏதடா! பொழுது விடிவதற்கு முன் எழுந்திருந்து மறுநாள் காலை விழாவுக்கு வரவேண்டுமே!' என்று கவலை கொஞ்சமுமின்றி இராத்திரி இரண்டு மணி வரையில் உட்கார்ந்து ஸ்ரீ கொத்தமங்கலம் சுப்புவின் "பாரதியார் கதை"யைச் சாங்கோபாங்கமாகக் கடைசி வரை கேட்டுக் கொண்டிருந்தார்கள். பாரதி விழாவுக்கே ஸ்ரீ கொத்தமங்கலம் சுப்புவின் "பாரதியார் கதை" தனிச் சிறப்பைக் கொடுத்ததோடு "இதுதான் உண்மையான பாரதி விழா" என்று சொல்லும்படி செய்தது. கதையில் சில இடங்களில் மகாகவி பாரதியாரையே நேரில் பார்த்துத் தரிசனம் செய்த உணர்ச்சி வந்து விட்டது.

மறுநாள் காலை ஒன்பது மணிக்கு விழா ஸ்ரீ ரா. பி. சேதுப்பிள்ளை தலைமையில் துவங்கியது. சீதையின் திருமணத்தைத் தங்களுடைய சொந்த விவாகம் போலக் கருதி ஊர்ப் பெண்மணிகள் அந்த வைபவத்தில் கலந்து கொண்டார்களாம். அதுபோல் காலையிலே எட்டயபுரத்துக்கு விஜயம் செய்திருந்த தமிழன்பர்களும், பாரதி அன்பர்களும் பந்தலில் குழுமி விட்டார்கள். அன்றைய விழா இலக்கிய விழாவாகவே இருந்தது.

பாரதியாரின் பேத்தி விஜயா பாரதியின் பாரதி கீதத்துடன் விழா ஆரம்பமாகியது. பாரதியாரின் மகன் தங்கம்மாள் பாரதி, திருச்சி ஸ்ரீ திரிலோக சீதாராம், ஸ்ரீ வீரசிவ சுப்பிரமணியம், ஸ்ரீ ஹரிஹர சுப்பிரமணியன், சிவகிரி பள்ளி மாணவர் ஸ்ரீ ராமச்சந்திரன் ஆகியோர் "பாரதி கவிநயம்" பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

பாரதி விழா எட்டயபுரத்தில் சிறப்பாக நடைபெறக் காரணமாயிருந்த எட்டயபுரம் பஞ்சாயத்துச் சபைத் தலைவர் ஸ்ரீ இ. மு. ஆ. ராமச்சந்திரன், உபதலைவர் ஸ்ரீ வி. எஸ். எஸ். வேலு முதலியார், பாரதி மண்டபக் கமிட்டி பொக்கிஷதார் ஸ்ரீ கு. மாரியப்ப நாடார், நகர காங்கிரஸ் கமிட்டி உபதலைவர் ஸ்ரீ ச. கிருஷ்ண முதலியார் ஆகியவர்களுக்கு விழாக் கமிட்டியின் சார்பில் நன்றி உரை கூறப்பட்டது.

"பாரதி வாழ்க!" என்ற வாழ்த்துக் கோஷத்தோடு பாரதித் திருவிழா இனிது முடிந்தது.

அட்டைச் சித்திரம்

இன்பக் கனவு

இரவு நேரம். விண்ணகத்தே சந்திரன் தோன்றி இம் மண்ணுலகைப் பொன்னுலகாக்கிக் கொண்டிருந்தான். ஏரியின் நீரும், தன் சலனபுத்தி யிழந்து பூரண சந்திரனின் சௌந்தர்யத்தைப் பருகிக் கொண்டிருந்தது.

இத்தகைய இன்பமானதோர் வேளையில் அவளும் அவனும் படகில் ஏறினர். "ஆகா, நீ இந்த வேளையில் வீணையை மீட்டினால், இந்த இன்பம் இரண்டு மடங்கு ஆகி விடாதா!" என்றான்.

அவளுக்கு அதைக் கேட்கப் பெருமிதமாக இருந்தாலும், கூடவே வெட்கமும் தோன்றியது. நாணத்தோடு தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

"உண்மை; வெறும் புகழ்ச்சிக்காகச் சொல்லவில்லை. எங்கே நீ வீணையை மீட்டு. ஆகா! உன் விரல்கள் பட்ட மாத்திரத்தில் அந்த வீணைதான் எத்தகைய இன்பச் சிலிர்ப்பு பெறுகிறது!..." என்று கூறி வற்புறுத்தினான்.

வெட்கத்தைச் சற்றுத் தளர விட்டு வாசித்தாள்.

ஆகா! அந்த நேரம் எவ்வளவு இன்பமாக இருந்தது! அதைத் தேவலோகத்து இன்பத்துடன் ஈடுபடுத்திக் கூற முடியுமா! முடியாது. அதற்கும் மேலே ஒரு இன்பம் இருக்குமெனின் அத்துடன்தான் ஈடுபடுத்திக் கூற வேண்டும்.

உலகில் இன்பமும் துன்பமும் ஒன்றுடன் ஒன்று மிக நெருக்கமாகப் பின்னிப் பிணைக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, இன்பத்தின் எல்லைக் கோட்டைத் தொட்டு விட்டு வந்த அவள், துன்பத்தின் அதல பாதாளத்தில் அடுத்த கணமே விழுந்தாள். ஆம்; அவள் கண்டதெல்லாம் வெறும் கனவு என்பதை அடுத்த கணமே உணர்ந்தாள். கண் விழித்துப் பார்த்தாள். ஆழம் காண முடியாத சோகத்திலிருந்து பின் வரும் வார்த்தைகள் வெளிப் பட்டன.

நிலவும் பொழியுதடி
நீர் நிலையும் நிற்குதடி
பலபல பேசியென்ன—கிளியே!
படகும் இருந்தென்ன?

வீணை இருக்குதடி
விரலும் இருக்குதடி
நானும் இருக்குதடி—கிளியே!
நாயகன் தானில்லையே!


இன்பக் கனவில் கண்ட காட்சியையும், சோகத்தில் ஆழ்ந்து கிடக்கும் மங்கையையும் நமது சித்திரக்காரர் மணியம் இவ்வாறு அட்டையில் வண்ண ஓவியமாகத் தீட்டியிருக்கிறார்.

கொழும்பு ஸ்ரீ எம். எஸ். சௌரிராஜன் அவர்களின் குமாரி சௌ. **ஜயமணிக்கும்** மதராஸ் ரீடயர்ட் அகௌண்டன்ட் ஜெனரல் ஸ்ரீ டி. எஸ். சுப்ரமணிய அய்யர் அவர்களின் குமாரரும் பொள்ளாச்சி அஸிஸ்டென்ட்கலெக்டருமான சிரஞ்சீவி **ராம்சந்தர்,** ஐ.ஏ.எஸ்.க்கும் சென்ற 23-8-54ல் கும்பகோணத்தில் வெகு விமரிசையாக விவாஹம் நடந்தது.

வாழ்க மணமக்கள்!



B. I. S. N. கம்பெனி லிமிடெட்



S. S. ரஜுலா

சென்னை - நாகப்பட்டினம் - பினங்கு - சிங்கப்பூர்

மேற்படி கப்பல் கீழ்க்கண்ட தேதி வாக்கில் புறப்படும்

சென்னையிலிருந்து 14-10-1954 - நாகப்பட்டினத்திலிருந்து 15-10-1954

மாறுதலுக்கு உட்பட்டது

ஸலூன் இடவசதி முழுவதும் புக் ஆகிவிட்டது. ஆனால் கம்பெனியின் ஏஜண்டுகளிடமிருந்து உணவுடனோ அல்லது உணவு இன்றியோ பர்த் வசதி இல்லாத பிரயாண டிக்கெட்டுகள் கிடைக்கும்.

கீழ்க்கண்ட பிரயாண மற்றும் ஆரோக்கிய பத்திரங்கள் தேவையாகும்.

1. மலேயா அல்லது சிங்கப்பூரில் உள்ள குடியேற்ற அதிகாரிகளால் கையெழுத்திடப்பட்ட அனுமதி பர்மிட்டுடன் கூடியதும் செல்லக் கூடியதுமான ஒரு பாஸ்போர்ட். பாஸ்போர்ட்டில் கையெழுத்திடப்படா விட்டால், ஒரு தனி அனுமதி பர்மிட்டோ அல்லது குடியேற்ற அதிகாரிகளால் அளிக்கப்பட்ட விஸிட்டர்ஸ் பாஸை பாஸ்போர்ட்டுடன் கொடுக்க வேண்டும். அல்லது மலேயா அல்லது சிங்கப்பூரில் உள்ள குடியேற்ற அதிகாரிகளால் அளிக்கப்பட்ட ரீ-எண்ட்ரி பர்மிட். (பாரம் 1-D-64 அல்லது 65)

2. எல்லா ஸலூன், பர்த் வசதி இல்லாத பிரயாணிகளும் வருமான வரி ஆபீஸர்கள் ஒருவரிடமிருந்து (வெளி நாட்டுப் பிரிவு) முழு வருமான வரி செலுத்தியதற்கான அல்லது வரி விலக்கு-சர்ட்டிபிகேட்டை, அவர்கள் வசிக்கும் வட்டாரத்து வருமான வரி ஆபீசரிடமிருந்து " ஏ " பாரம் வாங்கிக் கொண்ட பிற்பாடு பெற்று கொண்டு வரவேண்டும்.

3. சுகாதார சர்டிபிகேட்டுகள் : 1-7-54 தேதி முதல் எல்லா ஸலூன் மற்றும் பர்த் வசதியற்ற பிரயாணிகள் காலரா தடுப்பு ஊசியும் வைசூரி அம்மை வராமலிருப்பதற்காக ஊசியும் போட்டுக் கொண்டதற்கு இந்திய அரசாங்கத்தினரால் வெளியிடப்பட்டுள்ள புதிய பாரங்களில் சர்டிபிகேட் பெறுவதுடன் அதில் கீழ்க்கண்டுள்ள சுகாதார அதிகாரிகளில் ஒருவருடைய அத்தாட்சியும் பெற்றிருக்க வேண்டும்.

டைரக்டர், டிபுடி டைரக்டர், டிபுடி அஸிஸ்டெண்ட் டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் அல்லது கார்ப்பொரேஷன் முனிஸிபாலிடி, ஸ்தல ஸ்தாபனங்களின் சீப் மெடிகல் ஆபீஸர்ஸ், அட்மினிஸ்ட்ரேடிவ் மெடிகல் ஆபீஸர்ஸ், டிஸ்ட்ரிக் மெடிகல் ஆபீஸர்கள் அல்லது கவர்ன்மெண்ட் முனிஸிபல் மற்றும் டிஸ்ட்ரிக்போர்ட் அலோபதிக் ஆஸ்பத்திரிகள், டிஸ்பென்ஸரிகளின் மெடிகல் ஆபீஸர்-இன்-சார்ஜ்.

மேற்கண்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளில் ஒருவரின் அத்தாட்சி பெற்ற சர்டிபிகேட்டுகளே பிரயாண டிக்கட்டுகள் வழங்குவதற்கு உரியது என ஒப்புக் கொள்ளப்படும்.

பினங், போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலான இடங்களுக்கு நேரடியாக சரக்குகளின் ஏற்றுமதி ஏற்றுக் கொள்ளப்படும். சிங்கப்பூரில் மாற்றி பாங்காக்கிற்கு அனுப்புவதற்கான சரக்குகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றுமதி விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதுக :

பின்னி & கோ., (மதராஸ்) லிட்.	**மதுரா கம்பெனி லிமிடெட்**
7, அரமனைக்காரத் தெரு, சென்னை-1	முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்



நரியாரின் தீர்ப்பு

ஸ்ரீ ஜனக குமாரி

அதி வேகமாக ஓடி வந்த நாட்டு நாயைக் கண்ட வக்கீல் குமாஸ்தா குரங்கு, "எங்கே ஸார், அவசரமாகப் போகிறீர்கள்? என்ன விசேஷம்?" என்றது.

நாய், "குமாஸ்தா ஸார், உங்களை வழியில் பார்க்க நேர்ந்ததும் ஒரு நல்ல சகுனம் என்றுதான் சந்தோஷப்படுகிறேன். நான் நீதி மன்றம் வரையில் போக உத்தேசம்" என்று பதில் கூறியது.

குரங்கு ஆவலோடு, "அப்படியா! நீதி மன்றத்தில் என்ன விசேஷம்?" என்றது.

நாய், "எங்கள் பக்கத்துத் தெருவில் இருக்கும் பூனையம்மா எங்கள் குலத்தையே இழிவாகப் பேசிவிட்டாள். அவள் மேல் மான நஷ்ட வழக்குத் தொடுக்கப் போகிறேன்" என்றது.

குரங்கு, "பூனையம்மா என்ன சொன்னாள் உங்களை?" என்று கேட்டது.

நாய் ஓர் உறுமல் உறுமிவிட்டு "என்ன சொன்னாள், தெரியுமா? 'இறந்த வீட்டில் நாய் நுழைவது போல்' என்று தன் குட்டிகளை என் எதிரிலேயே திட்டினாள். என்ன திமிர் பாருங்கள்! நாங்கள் யார் வீட்டில் நுழைந்தோம்? இப்படி அவமானப் படுத்திப் பேசியவர்களைச் சும்மாவா விடுவது?" என்றது.

குரங்கு, "பூனையம்மாவின் புருஷனிடம் சொன்னீர்களா?" என்று கேட்டது.

நாய், "நான் ஏன் சொல்ல வேண்டும்? பூனையம்மாவின் புருஷனும் கூடவேதான் இருந்தான். மேலும் அந்தத் தெருவில் இன்னும் நாலு ஆண் பூனை, பெண் பூனை எல்லோருமே இருந்தார்கள்" என்றது.

குரங்கு "அங்கு நின்ற ஒருவருமே பூனையம்மாவைக் கண்டிக்கவில்லையா? என்ன தைரியம் பாருங்கள்!" என்று கண்ணைச் சிமிட்டிக் கொண்டு கூறியது. பிறகு தொடர்ந்து, "நீங்கள் செய்வது சரியான காரியம். ஒரு பெண் பூனை உங்களை அவமதித்துப் பேசுவதைப் பல பூனைகள் பார்த்திருப்பதற்குச் சும்மா விடக் கூடாது. கட்டாயம் வழக்கைப் போடுங்கள். எங்கள் வக்கீல் புலியாரிடமே வந்து யோசனை கேட்டு வழக்கைப் போடுங்கள். பூனை வர்க்கத்தையே ஒரு அலசு அலச வேண்டுமானால் அதற்கான உதவியை நான் செய்கிறேன். இன்று நீதி மன்றத்துக்கு விடுமுறை ஆனதால் வக்கீல் வீட்டிலிருக்கிறார். இப்பொழுதே வாருங்கள் வக்கீல் வீட்டுக்கு" என்று கூறி அழைத்தது.

நாய், "முதலில் நான் போய் எங்கள் இனத்தார் எல்லோரிடமும் இந்த விஷயத்தைச் சொல்லி ஆலோசித்து, அவர்களையும் அழைத்துக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு மேலே சென்றது.

நாட்டு நாய் தன் வர்க்கத்தைச் சேர்ந்த, அச்சு நாய், குச்சு நாய், கோம்பை நாய் முதலிய எல்லா நாய்களிடமும் பூனை அவமதித்துப் பேசியதைக் கூறி, மான நஷ்ட வழக்குத் தொடர வேண்டுமென்று கூறியது.

எல்லா நாய்களுமாக ஒன்று கூடி ஆலோசித்துப் பூனையம்மா மீது மான நஷ்ட வழக்குத் தொடுக்கத்தான் வேண்டுமென்று தீர்மானித்தன. ஆனால் நீதி மன்றத்துக்குப் போகாமல் கிராமப் பஞ்சாயத்தாரிடமே வழக்கை நடத்தலாமென அவை தீர்மானித்தன.

நாட்டு நாய், "நீங்கள் கூறுவதுதான் சரியான யோசனை. குமாஸ்தா குரங்கு

இரண்டு வார்த்தைகள் என்னோடு பேசிய தற்கே பணம் வாங்கப் பார்த்தது. மேலே வழக்கு நடத்தினல் இன்னும் வக்கீல் பீஸும், செலவுகளும் எவ்வளவு ஆகுமோ? ஆனதால் நீங்கள் சொல்வது போல பஞ்சாயத்தாரிடமே போவதுதான் மேல்'' என்று கூறியது.

• • •

பூனையம்மாவின் மீது மான நஷ்ட வழக்கு விசாரணை நடக்கப்போகிறதென்று கிராமப் பஞ்சாயத்துச் சபையில் ஏராளமான கூட்டம் கூடியிருந்தது. மாடுகள், ஆடுகள், குதிரைகள், மான் முதலிய அநேக மிருகங்கள் அவ்விடம் வந்து கூடியிருந்தன. பஞ்சாயத்துத் தலைவரான நரியாரும், அங்கத்தினர்களான சிங்கம், புலி, யானை, ஒட்டகம், கரடி முதலியவைகளும் வந்து உட்கார்ந்தன.

நீதி மன்றத் தலைவர் நரியார் விசாரணையைத் தொடங்கினர்.

நரியார், "வாதி நாயாரே! என்ன நடந்தது? விவரமாக உங்கள் வழக்கைச் சொல்லுங்கள்!'' என்றது.

"சனிக்கிழமை மாலை ஐந்து மணிக்குத் தோட்டத்துக்குச் சென்று உலாவி விட்டு வரலாமென்று நான் போய்க் கொண்டிருந்தேன். இந்தப் பூனையம்மாவும் இந்த அம்மாவின் புருஷரும் எதிரில் வந்தார்கள். பூனையம்மாவின் குட்டிகள், தாய், தந்தையரைக் கண்டவுடன் பல விடுகளிலிருந்து ஓடி வந்தன. அதைப் பார்த்த பூனையம்மா 'ஏ, குட்டிகளா! திறந்த வீட்டில் நாய் நுழைவது போல ஏன் பிறர் வீட்டில் நுழைந்துவிட்டு ஓடி வருகிறீர்கள்? வெட்கமாக இல்லையா உங்களுக்கு? ஓடுங்கள் வீட்டுக்கு'' என்று இடித்துரைத்தது.

யானை, "பூனையம்மா தன் குட்டிகளைத் தானே திட்டியது, அதற்கு நீங்கள் ஏன் கோபித்துக் கொள்ளவேண்டும்?'' என்றது.

நாய், "நான் வருகிறதைப் பார்த்து விட்டு எங்களை அவமானப்படுத்த வேண்டுமென்றே தன் குட்டிகளைக் கோபிப்பதைப் போலப் பாசாங்கு செய்தது'' என்றது.

"நீங்கள் திறந்த வீட்டுக்குள் நுழைவதுண்டா?'' என்று சிங்கம் கேட்டது.

"அந்த வழக்கமே எங்களிடம் கிடையாது'' என்று பதிலளித்தது நாய்.

"நீங்கள்தான் திறந்த வீட்டில் நுழைவதில்லையே அப்படியிருக்க நீங்கள் ஏன் குற்றமாக எடுத்துக் கொண்டீர்கள்?'' என்று கேட்டது புலி.

"திறந்த வீட்டில் நாய் நுழைவதுபோல் என்று பொய்யாகவும், இழிவாகவும் சொன்ன வார்த்தை எங்கள் குலத்துக்கே அவமானம் இல்லையா? இந்தப் பூனை தங்கள் வர்க்கத்தைப் போல எங்களையும் எண்ணிப் பேசுவது நியாயமா?'' என்றது நாய்.

நரி, "நீங்கள்தான் ஒரு வீட்டுக்குள்ளேயும் போவதில்லையே? நகரத்துக்குப் போனால் எங்கு சாப்பிடுவீர்கள்?'' என்று அதனிடம் கேட்டது.

நாய், "நகரத்தில் வீட்டுக்காரர்கள் சாப்பிட்டு விட்டு வீதியில் போடும் எச்சில் இலைகளில் உள்ளதைச் சாப்பிடுவோம். பங்களா காம்பௌண்டைச் சுற்றி அலைவோம். கிடைப்பதைச் சாப்பிடுவோம். ஒரு வீட்டுக்குள்ளும் போக மாட்டோம். எங்களை அருமையாக வளர்ப்பவர் வீட்டிலுங் கூட, அவர்கள் உத்தரவு கொடுத்துப் புழங்கச் சொல்லும் இடத்தைத் தவிர வேறு எங்கும் போக மாட்டோம். சமையல் அறைக்குள் போக மாட்டோம். அவர்கள் கொடுக்கும் ஆகாரத்தைத் தவிர அவர்கள் அனுமதியின்றி அவர்கள் வைத்திருக்கும் ஆகாரத்தில் வாயை வைக்க மாட்டோம். கோவிலுக்குள் போக மாட்டோம்'' என்று கூறியது.

மற்ரெரு நாய், "தலைவர் அவர்களே, அங்கத்தினர்களே, நானும் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பூனை வர்க்கம் மனிதர்கள் விரட்டும் போதே வெட்கம், மானம், இல்லாமல் எல்லோர் வீட்டுக்குள்ளும் வாசல் வழியாகவும், பின்புறமாகவும், ஜன்னல் வழியாகவும் ஓட்டு வழியாகவும் உள்ளே நுழையும். பால், நெய் மற்ற எல்லா ஆகாரத்தையும் திருடிச் சாப்பிடுவார்கள். பால், நெய்யைக் குடிப்பதோடு அல்லாமல் கொட்டியும் விடுவார்கள். எலிகளைப் பிடித்துப் பாதி தின்று விட்டு வீட்டுக்குள் போட்டு அசுத்தப் படுத்துவார்கள். தம் குட்டிகளை உக்கிராண அறையிலும், பரணிலும் வைப்பார்கள். மனிதர்கள் குட்டிகளின் ஹிம்சை பொறுக்காமல் குட்டிகளைப் பிடித்து வெளியே கொண்டு போய் விடுவார்கள். கோவில் மடப்பள்ளியில் சென்று திருடிச் சாப்பிடுவார்கள். அங்கிருப்பவர்கள் விரட்டுவார்கள். வெட்கமில்லாமல் பூனைகள் திறந்த வீட்டிலும், திறக்காத வீட்டிலும் நுழைவதும் அல்லாமல் ஒரு தவறும் செய்யாத எங்களை இழிவாகப் பேசியதற்குப் பூனைக் குலத்தையே சும்மா விடக் கூடாது'' என்று ஆத்திரத்தோடு எடுத்துக் கூறியது.

கரடி, "இந்தப் பூனையம்மா ஒருத்திதானே உங்களை இழிவாகப் பேசினாள். நீங்கள் பூனை வர்க்கத்தார் எல்லோர் மேலும் ஏன் குற்றம் சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டது.

நாட்டு நாய், "பூனையம்மா சொன்ன வார்த்தையை அந்த வீதியிலுள்ள அநேக ஆண் பூனைகள், பெண் பூனைகள் எல்லோருமே கேட்டுக்கொண்டிருந்தார்கள். அந்த அம்மாவை ஒருவருமே கண்டிக்கவில்லை. ஆனதால் அவர்களும் ஆமோதித்ததாகவே தான் கருத வேண்டும். பெரியோர்களாகிய

வைத்தியத் திருப்பணி

மேற்கு மாம்பலம் வாசிகள் வைத்தியவசதி இல்லாமல் வெகு காலமாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்ததை முன்னிட்டு; சமூக சேவையில் பற்றுள்ளவர்கள் சிலர் முன் வந்து ஒரு வருஷத்துக்கு முன்னால் பொது நலச் சிகிச்சைச் சாலை ஒன்றை நிறுவினார்கள். அது நாளது வரையில் நல்ல முறையில் நடந்து வருகிறது. காலையில் ஸ்திரீ வைத்தியர் வந்து நோயாளிகளைச் சிரத்தையுடன் கவனித்து வைத்தியம் செய்து வருகிறார். மாலையில் ஆண் வைத்தியர்கள் வந்து கவனிக்கிறார்கள். தினந்தோறும் ஆண், பெண், குழந்தைகள் 90 பேர் வரை வந்து சிகிச்சை பெற்றுச் செல்கிறார்கள். சேவையில் பற்றுள்ள படித்த பெண்கள் ஸ்திரீ வைத்தியருக்கு உதவி அளிக்கிறார்கள். இத்தகைய பொது நலச் சிகிச்சைச் சாலைகள் நகரங்களின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்பட வேண்டும். ஆங்காங்கு உள்ள பொது மக்களும் ஆதரவு அளிக்க வேண்டும். மேற்கு மாம்பலத்தில் இந்தச் சிறந்த வைத்தியத் திருப்பணி ஆரம்பமாகி நல்ல முறையில் நடந்து வருவதற்கு முக்கிய காரண புருஷரான 'ஸண்டே டைம்ஸ்' ஸ்ரீ எம். சி. சுப்பிரமணியம் அவர்களுக்கு நமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



நீங்கள் அனைவரும் சரியான தீர்ப்பு செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்'' என்றது.

''பிரதிவாதி பூனையம்மா, என்ன நடந்தது என்று நீங்கள் விவரமாகச் சொல்லுங்கள்'' என்று நரியார் கேட்டது.

''எங்களைப் பற்றி நாய் வர்க்கத்தினர் சொன்ன வார்த்தைகள் எல்லாம் உண்மைதான். எங்கள் வர்க்கத்தார் நகரத்தில் உள்ள குடிசையிலிருந்து, குபேரன் வீடு வரை, எங்கள் சொந்த வீடாகவே கருதி எங்கு வேண்டுமானாலும் புழங்குவோம். நாய் சொன்னபடி பல வழியாக வீட்டுக்குள் போவோம். சமையல் அறையில் பலர் சாப்பிடும் போதுகூடச் சுற்றுவோம், சாப்பிடுவோம். சிலர், 'பூனை காலைச் சுற்றுகிறது சோற்றைப் போடு' என்பார்கள். சிலர் அன்பாகவும் போடுவார்கள். திருடியும் தின்போம். எந்த இடத்துக்கும் போகக் கூடாது என்ற தடை உத்தரவைப் போடவும் முடியாது. போடவும் மாட்டார்கள். நாயைப் போல்



ஆகஸ்டு மீ 21உ முதல் எட்டு தினங்கள் திருவனந்தபுரம் நாம சங்கீர்த்தன சபையின் ஆதரவில் கோகுலாஷ்டமித் திருவிழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவில் திருவையாறு ஸ்ரீ அண்ணாசாமி பாகவதர் பாகவத கதா காலக்ஷேபம் செய்தார். விழாவின் கடைசி நாள் அன்று சுவாதித் திருநாள் சங்கீதக் கலாசாலையின் தலைவர் ஸ்ரீ செம்மங்குடி சீனிவாச ஐயர் ஸ்ரீ அண்ணாசாமி பாகவதருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

நாங்கள் மனிதர்களுக்கு உதவியாக, ஒருவரையும் கடித்து, பயமுறுத்தி, குரைத்து ஒன்றும் செய்ய மாட்டோம். நாங்கள் எப்படி நடந்தாலும் சரி, நாயை அடித்துக் கொல்லுவது போல எங்களைக் கொல்ல மாட்டார்கள். விவரம் தெரியாத குழந்தை எங்களை அடிக்க வந்தாலும் பெரியவர்கள் 'பூனையை அடிக்காதே, ஒரு ரோமம் உதிர்ந்தாலும் பாபம்' என்பார்கள். எங்களிடம் அப்படி நடக்கும் மனிதர்கள் நாய் மேல் கல்லை விட்டெறிவார்கள். அருமையாக வளர்க்கும் நாயைக் கூடத் தண்டனை கொடுப்பது போல் சங்கிலியால் கட்டிப் போடுவார்கள். நாங்கள் வெட்கமில்லாமல் நகரத்தில் புழங்குகிறோம் என்று நாய்கள் அவதூறாகச் சொல்லுவதற்கு நாங்களே அவர்கள் மேல் மான நஷ்ட வழக்குத் தொடர வேண்டும்'' என்று வாதமிட்டது பூனை.

மற்றப் பூனைகளும் பூனையம்மாள் சொல்வதை ஒரே மனதாக ஆமோதித்தன.

''நாய்கள்தான் சுதந்திரமாக உங்களைப் போல ஒரு வீட்டுக்குள்ளும் போக முடியாது என்கிறீர்களே! அப்படியிருக்கத் 'திறந்த வீட்டில் நாய் நுழைவது போல' என்று ஏன் சொன்னீர்கள்?'' என்று நரியார் வினவியது.

பூனை, ''நானாகச் சொல்லவில்லை. தீபாவளிக்கு எல்லோர் வீடுகளிலேயும் பக்ஷணங்கள் செய்வார்கள், சாப்பிடலாமென்று நகரத்துக்குச் சென்றிருந்தோம். அங்குள்ள மனிதர்தான் தங்கள் குழந்தைகளைத் 'திறந்த வீட்டில் நாய் நுழைவது போலப் போகாதே' என்று கண்டித்தார்கள்.

''அன்று நான் வீட்டுக்கு வரும் சமயத்தில் என் குட்டிகள் பல வீடுகளிலிருந்து வந்ததால் மனிதர்கள் சொன்ன வார்த்தை நினைவுக்கு வந்தது. ஆதலால் நானும் சொன்னேன். ஆனால் நாயின் காதில் படவேண்டுமென்று சொல்லவில்லை. தற்செயலாக நாய் அவ்வழி வந்ததைப் பிறகுதான் பார்த்தேன். என் மேல் குற்றமே இல்லை. நீங்கள் எல்லோரும் சரியான தீர்ப்புச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்'' என்று கூறியது.


தந்திரசாலியான நரி சற்று நேரம் மௌனமாக இருந்து யோசித்தது. பிறகு தொண்டையைக் கனைத்து விட்டுக் கொண்டு பேச ஆரம்பித்தது. ''இந்த வழக்கில் பூனையம்மாவின் மீது மான நஷ்ட வழக்குத் தொடர்வது நியாயமில்லை. பூனையம்மா நடந்ததை உள்ளபடி கூறி விட்டது. மனிதர்கள்தான் நாயை அவதூறாகப் பேசியிருக்கிறார்கள். மனிதர்கள் சொன்ன வார்த்தையைத்தானே பூனை திரும்பக் கூறியது? ஆனதால் பூனையை மன்னித்து விட்டு நாய்கள் எல்லோரும் சேர்ந்து மனிதர்கள் மேல் மான நஷ்ட வழக்குத் தொடர்வது தான் சரியான காரியம். 'திறந்தவீட்டில் நாய் நுழைவது போல்' என்ற வார்த்தையை மனிதர்கள் சொன்னார்கள் என்பதற்குப் பூனைகளே சாட்சிக்கு வருவார்கள். நான் கூறும் தீர்ப்பு இதுதான். மற்ற அங்கத்தினர்களும் ஆமோதிப்பார்கள் என நம்புகிறேன்'' என்றது.

அங்கத்தினர்கள் எல்லாம் நரியின் தீர்ப்புச் சரியென ஒப்புக் கொண்டன.

பூனைகள் நரியாரை வாழ்த்திக் கொண்டு பாய்ந்து ஓடி விட்டன. நாய்கள் 'நரியாரின் தீர்ப்பே சரியானது. நரியாரின் தீர்ப்புப் பிரகாரம் மனிதர்கள் மேல் மான நஷ்ட வழக்குத் தொடர்ந்தே தீருவோம்' என்று முடிவு செய்து கொண்டு, ஆரவாரமாகப் பேசிக் கொண்டு அங்கிருந்து சென்றன. மற்ற மாடு, குதிரை, மான் முதலிய மிருகங்களும் நரியாரின் தீர்ப்பை மெச்சின. சபையும் கலைந்தது.

9 a.m.

and time for Office!






மிக முக்கியமான அலுவல்களைக் கவனிக்க வேண்டிய போது, ஒரு சில நிமிஷங்கள் விரைவிலும், திட்டப்படி வகுத்த காரியங்களைத் தடைபடாமலும் வியாபாரத் துறையிலுள்ளவர்களுக்கு சரியான நேரம் காட்டக்கூடிய ஓர் கடியாரம் இன்றியமையாதது. அதற்கு சிறந்தது "வெஸ்ட் எண்ட்" மாடலை விட வேறு ஒன்றும் இருக்காது.

எத்தகைய விலையில் நீங்கள் வாங்கினாலும் ஒரு "வெஸ்ட் எண்ட்" உங்களது பணத்திற்கு முழு மதிப்பையும் அளிக்கிறது. பற்பல ரகங்களில் உள்ள கடியாரங்களில் உங்களுக்கு பிடித்தமான எந்த மாடலை தேர்ந்தெடுத்தாலும் அது உங்களுக்கு நல்ல தோற்றத்தையும், நம்பகமான சேவையையும் அளிக்கும். எத்தகைய நிலைமையிலும் மாசுமறுவற்ற சேவைக்கு "வெஸ்ட் எண்ட்" கடியாரங்களை சிறந்ததென இந்தியா முழுதும் பெயர் பெற்றுள்ளது.

SECUNDUS NEW CALIBRE RECTANGULAR

Nickel Silver	Rs. 112
Everbright Steel	Rs. 129
Rolled Gold Steel Back	Rs. 136
Rolled Gold	Rs. 144
9-ct. Gold	Rs. 220



The

WEST END WATCH CO.

Bombay · Calcutta

பிரசித்திபெற்ற பாண்ட்ஸ் க்ரீம்களின் உதவியால்

உங்கள் வதனத்தை மென்மையாகவும் நிர்மலமாகவும் வைத்திருங்கள்



ஒவ்வொருவருடைய சரும இயல்புக்கும் உகந்தவாறு இரண்டு மேன்மையான க்ரீம்கள்.

எழிலரசியாகத் திகழ எந்தப் பெண்மணியும் ஆசைப்படுவது சகஜமே! அதை உத்தேசித்தே பாண்ட்ஸ் க்ரீம்களின் தயாரிப்பாளர்கள், உங்களுக்கு உதவியாக இதோ இரண்டு அழகு சாதனங்கள் வழங்குகின்றனர். பாண்ட்ஸ் க்ரீம்கள், வரட்சி அல்லது நசநசப்பு மிகுந்த பிரதேசங்களில் உங்கள் சருமத்தைப் பாதுகாப்பதற்கென்றே தயாரிக்கப்பட்டவை; உலர்ந்ததோ, இல்லை எண்ணைப்பசையுடையதோ ஆன எத்தகைய சருமத்திற்கும் பொருத்தமான வகையில் அமைந்தவை. உலகமுழுவதிலும் உள்ள எழில் நங்கையர்களைப் போல் நீங்களும் இந்த க்ரீம்களை பிரதிதினமும் உபயோகித்து, உங்கள் வதனத்தை புதுமலர்ப் புதுமையோங்க வைத்திருங்கள்!



உங்கள் முகப்பொலிவை பாழ்படுத்தும் வரட்சியான பிரதேசங்களில் — பாண்ட்ஸ் கோல்ட் கிரீம் உங்களுக்கு தேவை. அதிலடங்கிய செழிப்பான எண்ணைகள் சருமத்திற்கு சமனூட்டி, கடுமையான வெயில் மற்றும் வரட்சிக்காற்றினுல் அது வாடி வதங்காமல் காப்பாற்றுகின்றன.



வெப்பம், நசநசப்பு மிகுந்த பிரதேசங்களில் — அல்லது சருமம் இயற்கையாகவே எண்ணைப்பசையுடையதாலும் — பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகியுங்கள். இம்மெல்லிய க்ரீம், சரும துவாரங்களில் படியும் பிசுக்கையும் செத்த ஜீவாணுக்களையும் வெளியேற்றி உங்கள் மேனிக்கு சௌமியமான பாதுகாப்பு அளிக்கின்றது.

உங்களுக்கிஷ்டமான பாண்ட்ஸ் க்ரீமை நாள்தோறும் உபயோகியுங்கள். சொற்ப தினங்களில் உங்கள் வதனம் அன்றலர்ந்த மலர்போல் மென்மையாக, புதுமைப் பொலிவுடன் விளங்குவதைக் காண்பீர்கள் — உணரவும் செய்வீர்கள்!

உலகில் எழிலரசிகள் உபயோகிக்கும் க்ரீம்கள்

பாண்ட்ஸ்

கோல்ட் க்ரீம்

வானிஷிங் க்ரீம்



P. 9945



19. மண் பொம்மை

ஜுகல்கிஷோரைக் கண்டதும் பிஹாரிலால் அவனை யார் என்று புரிந்து கொண்டு விட்டார். அவருக்கு அவனை நன்றாகத் தெரியும். ஆனால் அவன் அவருக்கு நண்பன் அல்ல. பொதுவாகவே அவருக்கு நண்பர்களோ அறிமுகமானவர்களோ வெகு குறைவு. ஆயினும் அவரைப் பார்த்துப் போக எத்தனையோ பேர் வந்து போய்க் கொண்டிருந்தார்கள். வந்து போவோர் பலருக்கு அவரைத் தெரியாது. அவருக்கு வந்துபோவோர் பலரைத் தெரியாது. வருபவர் யாரா யிருந்தாலும் அவர் வெகு நயமாக நடந்து கொள்வார்; இன்பமுடன் இனிமையாகப் பேசி மகிழ்வார். பழகும் விஷயத்தில் அவரிடம் யாரும் எந்தக் குறையும் காண முடியாது. இருந்தாலும் அவர் எப்பொழுதும் தனிமையையே நாடி வந்தார். ஜனக் கும்பல் அவருக்கு அவ்வளவாகப் பிடிப்பதில்லை.

அவரிடம் அதிகாரிகள் வருவார்கள். தனவந்தர்கள் வருவார்கள். விருந்தினர்கள் வருவார்கள். அண்டிப் பிழைப்பவர்கள் வருவார்கள். அவரவர்கள் தங்கள் தங்கள் தன்னலத்தை உத்தேசித்துத்தான் அவரைச் சந்திக்க வருவார்கள். ஆனால் அவர் யாரையும் எந்தக் காரணத்தையும் கொண்டு சந்திக்கப் போவதில்லை. பணக்காரர், நாகரிகம் வாய்ந்தவர் என்ற ஹோதாவில் அவர் முன்னுக்கு வரப் பல சந்தர்ப்பங்கள் அவர் முன் வந்துநின்றன. ஆனால் அந்தச் சந்தர்ப்பங்களையெல்லாம் அவர் துளிக்கூட லட்சியம் செய்ததில்லை. பறந்து விழுந்து கொண்டு அதைப் பயன்படுத்திக் கொள்ளப் பிரயாசைப் பட்டதில்லை. அவர் நடந்து கொண்ட முறையைக் காணும் பொழுது அவருக்குக் கிடைத்த 'ஸர்' பட்டம் கூட அவர் இஷ்டமின்றியே அவருக்குக் கிடைத்திருப்பது போலத் தோன்றியது. தமக்குப் பட்டம் கிடைத்திருக்கிறதே என்பதற்காக அவருக்கு மகிழ்ச்சியோ துயரமோ சிறிதும் ஏற்படவில்லை.

தொழில் துறையிலிருந்தும் வியாபாரத் துறையிலிருந்தும் அவர் தமது மனத்தைச் சிறிது சிறிதாக அகற்றிக் கொண்டு விட்டார்; தம்மிடத்திலே ஒருவித விரக்தி மனோபாவத்தை வருவித்துக் கொண்டு விட்டார். அதற்கேற்றாற் போல் பொறுப்பு முழுவதையும் தம் நம்பிக்கைக்குப் பாத்திரமான பிராணலாலிடம் ஒப்படைத்து விட்டுத் தாம் தாமரையிலைத் தண்ணீராகப் பட்டும் படாமலும் வாழ்க்கை நடத்தத் தொடங்கி யிருந்தார். இருந்தாலும் சிற்சில சமயம் அவர் கணக்கு வழக்குகளைக் கவனிக்கத் தவறுவதில்லை. வேலைக்கு ஆட்கள் நியமிப்பது, தொழில் சம்பந்தமான அறிவிப்புகளோ, வியாபார சம்பந்தமான விளம்பரங்களோ வெளியிடுவது—இது போன்ற அலுவல்களைக் கவனிக்கவும் செய்வார். ஆனால் ஒன்று; எந்தக் காரியத்திலும் தாம் நேரிடையாக ஈடுபட மாட்டார். எதையும் பிராணலாலைக் கொண்டேதான் கவனிப்பார்.

எந்தத் தொழிலும் ஒரு முறை சுவடு பிடித்து ஒழுங்காக வேரூன்றி நிலைத்து நடக்கத் தொடங்கி ,விட்டால், அப்புறம் அது தன் போக்கில் நடை பெறுவது சகஜந்தானே? ஸர் பிஹாரிலாலின் தொழில் அதுபோல நன்றாகச் சுவடு பிடித்து நடந்து கொண்டிருந்தது. எசமான விசுவாசமுள்ள பிராணலால் மீது அவருக்கு நம்பிக்கைக் குறைவு உண்டாவதற்கு எவ்வித முகாந்தரமும் இல்லை. ஆரம்ப காலத்தில் எத்தனையோ சோதனைகள் ஏற்பட்டன. அந்தச் சோதனைகளில் எல்லாம் பிராணலால் தேறி விட்டார்; வெற்றி கண்டு விட்டார். அப்புறம் அவரை நம்பித் தொழிலை விடுவதில் ஸர் பிஹாரிலாலுக்கு என்ன ஆட்சேபனைதான் இருக்க முடியும்?

பிராணலாலுக்கு ஒரு பிள்ளை இருந்தான். அவன் யாருக்கும் அடங்காமல் தான்தோன்றியாகத் திரிந்து கொண்டிருந்தான். அவன் கவலைதான் அவரை மிகவும் வாட்டிக் கொண்டிருந்தது. மற்றபடி அவர் கவனம் முழுவதும் பிஹாரிலாலின் ஆலையே குறியாக இருந்தது. தம் ஆலையைக் கவனித்துக் கொள்ளச் சரியான ஆள் கிடைத்து விடவே, ஸர் பிஹாரிலால் தம் கவலையை யொழித்து நூல்களைப் படிப்பதில் தம் நேரம் முழுவதையும் செலவிட்டு வந்தார். தொழில் துறையில்தான் அவருக்குக் கவலையில்லையென்றால் குடும்பத்தைக் கவனித்துக் கொள்ளும் விஷயத்திலும் அவருக்குக் கவலை உண்டாகவில்லை. காரணம், குடும்பப் பொறுப்பை



ஸ்ரீ எஸ். வி. சௌந்தரராஜன் இயற்றிய "கிராசை" என்னும் நாடகம் தியாகராஜநகர் ஸ்ரீ தியாகப் பிரம்மகான சபை அங்கத்தினரால் வாணி மகாலில் ஆகஸ்டு மீ 22உ மிகச் சிறப்பாக நடிக்கப்பட்டது. நடிகர்களையும் நாடக ஆசிரியரையும் படத்தில் காணலாம்.

அவர் தம் மகன் குஸுமாவிடம் ஒப்படைத்து விட்டதுதான். கெட்டிக்காரியான குஸுமா குடும்பப் பாங்கில் ஊறித் திளைத்துக் குடும்ப பாரமே அவருக்குத் தெரியாமல் கவனித்துக் கொள்ளத் தொடங்கி விட்டாள். அப்படியிருக்கும் பொழுது பிக்கல்-பிடுங்கல் இல்லாத அவர் புஸ்தகப் படிப்பில் மனத்தைச் செலவிட்டதில் வியப்பு என்ன?

இவ்விதம் வாழ்க்கைக்கு ஒரு வரன்-முறை வகுத்துக் கொண்டு விட்ட ஸர் பிஹாரிலால் யாரிடமும் அதிகமாக நெருங்கி நட்புரிமை பாராட்டுவதில்லை; தோழமை கொள்வதில்லை. இருந்த பொழுதிலும் தமது இனிய சுபாவம், சமூகத்தில் தமக்கிருந்த அந்தஸ்து இவற்றின் காரணமாகப் பலரைப் பார்த்திருந்தார்; பலரோடு பரிச்சயமும் கொண்டிருந்தார்.

ஜுகல் கிஷோரோடு அவருக்கு அதிகமாகப் பரிச்சயம் கிடையாது. ஆனால் அவன் பெயரைக் கேள்விப் பட்டிருந்தார். அதோடு ஆளைப் பார்த்தால் அடையாளம் கண்டு கொள்ளும் அளவுக்கு அவனைப் பார்த்தும் இருந்தார். தொழிலாளர்களைத் தூண்டி விட்டு இழுத்த இழுப்புக்கு இயக்கங்கள் ஆரம்பிப்பவர்களிடையே அவன் பெயரும் இடம் பெற்றிருந்தது. ஒரு காரியத்துக்கு வேண்டாம் என்று அவனை ஒதுக்கித் தள்ளி விட முடியாது. காற்றுப் புக முடியாத இடத்திலும் புகுந்து அவன் காரியம் சாதித்து விடுவான். ஜுகல் கிஷோரின் பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே யாரும் பெரும் பீதி கொள்ள வேண்டும். அப்படி அவன் அச்சத்தின் அவதாரமாக விளங்கி வந்தான். அவனைப் பற்றி உலவி வந்த வதந்திகளும் கதைகளும் அனந்தம்.

பிஹாரிலாலைப் பார்த்ததும் ஜுகல் கிஷோர் கைகூப்பி வணக்கம் தெரிவித்தான். பிஹாரிலால் மறு வணக்கம் தெரிவித்து விட்டு அவனைத் தம் அருகில் உட்கார வைத்துக் கொண்டார். பிறகு குஸுமாவையும் ரமேஷையும் கலை சம்பந்தமாகப் புதிதாக வந்திருக்கும் புஸ்தகங்களில் சிலவற்றைத் தேடியெடுத்துக் கொண்டு வருமாறு கூறி அறைக்கு வெளியே அனுப்பினார்.

"ஸார்! உங்களுக்கு ஒருவேளை என்னைத் தெரியாமல் இருக்கலாம்!" என்று அவரிடம் பேச்சை ஆரம்பித்தான் ஜுகல் கிஷோர்.

"தெரியாமல் என்ன? நான் உங்களைப் பற்றிப் பல விஷயங்கள் கூடக் கேள்விப்பட்டிருக்கிறேனே!" என்று பதில் அளித்தார் ஸர் பிஹாரி லால்.

அதைக் கேட்ட ஜுகல் கிஷோர் இலேசாக இளநகை புரிந்தான். "என்னைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பதாகச் சொன்னீர்களே, அந்த விஷயங்களை ஆதாரமாகக் கொண்டு பார்க்கப் போனால் தங்களைப் பேட்டி காணும் பாக்கியம் பெறுவதற்கு நான் அருகதை உள்ளவனா என்பது யோசிக்க வேண்டிய விஷயமாகி விடும் என்பது எனக்குத் தெரிந்த விஷயம். அதனால்தான் தாங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் கல்லடி மங்களுகத் தங்களைப் பேட்டிகண்டே செல்வதென்ற தீர்மானமான முடிவுடன் வந்திருக்கிறேன்!" என்றான்.

"தாங்கள் நினைப்பது போல் ஜனங்கள் சொல்வதை ஆதாரமாகக் கொண்டு நான் ஒரு முடிவுக்கும் வருவதில்லை. என்னைப் பற்றித் தாங்கள்தான் தவறான அபிப்பிராயம் கொண்டு விட்டீர்கள். பரவாயில்லை. என்னைக் காணவேண்டித் தாங்கள் இத்தனை சிரமம் எதற்காக ஏற்க நேர்ந்ததோ?" என்று பவ்யமாகக் கேட்டார் பிஹாரிலால்.

"தங்கள் ஆலையில் வேலைசெய்யும் தொழிலாளர்களைப் பற்றித் தங்களுடன் கொஞ்சம் பேச வேண்டும்!"

"ஆலை விஷயம் தானே? அதற்குப் பிராணலாலைப் பாருங்களேன்! அவர்தான் அதற்குத் தக்க ஆசாமி. அதனால் தாங்கள் சொல்ல வேண்டியதை அவரிடமே சொல்லலாமே!" என்றார் பிஹாரி லால்.

"அதெல்லாம் நான் சொல்லப் போவது அவரிடம் சொல்லக்கூடிய விஷயங்கள் இல்லை. அவர் பழைய காலத்துக் கட்டுப்பெட்டி ஆசாமி. அவருடைய எண்ணங்கள் நோக்கங்கள் எல்லாம் மிகவும் பிற்போக்கானவை!" என்றான் ஜுகல் கிஷோர்.

"உங்களுக்குப் பழைய காலத்துக் கட்டுப்பெட்டி ஆசாமிகளைப் பிடிக்கவில்லையென்

ஞல் ரமேஷைக் கூப்பிடுகிறேன். அவன் இந்தக் காலத்துப் பையன். என்ன, கூப்பிடட்டுமா?'' என்ருர் பிஹாரிலால்.

"வேண்டாம், வேண்டாம். நான் சொல்லப் போகும் விஷயத்தை உங்களிடம்தான் சொல்ல வேண்டும்!'' என்ருன்.

"சரி, சொல்லுங்கள்!'' என்ருர்.

"என்னைச் சாந்தா கௌரி அம்மாள் தங்களிடம் அனுப்பி யிருக்கிருர்கள்!''


வாக்கியத்தைச் சொல்லி முடிப்பதற்கு முன்பாகவே ஜுகல்கிஷோர், ஸர் பிஹாரிலாலின் முகத் தோற்றத்தில் என்ன பாவங்கள் பிரதிபலிக்கின்றன என்பதைக் காண்பதற்காக அவர் முகத்தைப் பார்க்கலானுன். சாந்தா கௌரியைப் பற்றிப் பேச்சு எழுவது அவருக்குப் பிடிக்கவில்லை என்பது விளங்க அவனுக்கு நேரம் பிடிக்கவில்லை.

"அடாடா! அந்த அம்மாள் பெயரை எடுத்தாலே உங்களுக்குப் பிடிக்காதோ? அவர் பெயரைச் சொன்னதும் உங்கள் முகம் ஏன் இப்படிப் போய் விட்டது?''

பிஹாரிலாலின் முகபாவத்தை முழுவதும் உணர்ந்துகொண்டு விட்டவன் போல ஜுகல் கிஷோர் தன் கற்பனையையும் சேர்த்துக் கொண்டு ஒரு ஊகத்தில் சொல்லி வைத்தான். அதைக் கேட்ட பிஹாரிலாலின் முகத்தில் படர்ந்த கலவரக் குறி இன்னும் கொஞ்சம் அதிகமாகி விட்டது.

"யார் பெயரை எடுத்தால் எனக்கு என்ன? என்னைப் பயமுறுத்திப் பணம் பிடுங்கலாம் என்ற நினைப்பில்தானே வந்திருக்கிருய்?'' — பிஹாரிலால் தமக்கு வந்த கோபத்தில் மரியாதையை மறந்து ஏக வசனத்தில் கேட்கத் தொடங்கி விட்டார்.

"எனக்கு இந்த வேலை வராது என்பதில்லை. ஆனல் உங்களைப் போன்றவர்களிடமிருந்து வேறு விதமாகவும் பணம் பெற முடியும். எனக்கு இப்பொழுது நீங்கள் நினைப்பது போலப் பணம் தேவையில்லை. நான் இப்பொழுது உங்களிடம் வேறு ஒரு விஷயமாக வந்திருக்கிறேன். தொழிலாளர்களிடையே அதிருப்தி நிலவியிருப்பதற்கு முக்கியமான காரணம் என்னவென்பது உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டான் ஜுகல் கிஷோர்.



ஆகஸ்டு மாதம் ஆரும் தேதியன்று மலாயாவைச் சேர்ந்த மத்திய ஜோகூர் இந்தியப் பாடசாலைகளின் ஏழாவது வருட விளையாட்டுப் போட்டிப் பந்தயம் ஜோகூர் மாகாணப் பிரதம உதவி வித்தியா தரிசி திரு ஏ. வி. அருணசலம் அவர்களின் தலைமையில் நடந்தது. இந்த விளையாட்டுப் போட்டிக் காட்சிகளில் சிலவற்றை மேலே உள்ள படத்தில் காணலாம்.

"தெரியாமல் என்ன? தொழிலாளர்களிடையே வேண்டுமென்றே அதிருப்தி வருவிக்கப் பட்டிருக்கிறது; பரப்பப்பட்டிருக்கிறது. அப்படித்தானே?''

"இல்லை. அதிருப்தி என்பது தாங்கள் நினைத்துப் பேசுவது போல் ஒரு செயற்கைப் பொருள் அல்ல, ஒருவன் பரப்பி அது பரவுவதற்கு! எத்தனை பரவ வேண்டுமோ, அத்தனை அது பரவியே தீரும். அதைத் தடுத்து நிறுத்த யாராலும் ஆகாது.''

"நீ சொல்வது சரியான வார்த்தை. ஆனல் அதற்கும் ஒரு காரணம் வேண்டும் அல்லவா? சம்பளம் குறைவாகக் கிடைக்கிறதா? வேலை அளவுக்கு மீறி வாங்கப்படுகிறதா? அல்லது தொழிலாளர்களுக்குத் தாங்க முடியாத வேறு வகையான கஷ்டங்கள் ஏதாவது அளிக்கப்படுகின்றனவா? என்னைக் கேட்டால், என்னைப் பொறுத்தவரை நான் அம்மாதிரி இதுவரை நடந்து கொண்டதில்லை என்று தைரியமாகச் சொல்வேன். தொழிலாளர்களிடம் எனக்கு எப்பொழுதுமே அநுதாபம்தான் இருந்து வந்திருக்கிறது!''

"சார்! இது எனக்குத் தெரிந்த விஷயம்தான். இருந்தாலும் உங்கள் ஆலையில் அதிருப்தி நிலவியிருக்கிறதே, ஏன் தெரியுமா? தாழ்ந்தோர் வகுப்பு என்பது மண் பொம்மையைப் போன்றது. மண்ணுக்கு எந்த உருவம் வேண்டுமானுலும் கொடுக்கலாம் அல்லவா? அதே போலத் தாழ்ந்த வகுப்பினரை ஒருவன் நினைத்தபடி திருப்பலாம்; ஆட்டி வைக்கலாம். ஆனல் அதைப்பற்றி நான் இப்பொழுது பேச வரவில்லை. நான் வந்த காரணமே வேறு. சாந்தா கௌரியம்மாள் என்னை அனுப்பி யிருக்கிருர்கள்!'' என்ருன் ஜுகல் கிஷோர்.

"என்ன வென்று விஷயத்தைத் தான் சொல்லித் தொலையுங்களேன்!''—ஸர் பிஹாரிலாலின் பேச்சில் மரியாதைக் குறைவு தொனிக்காவிட்டாலும் ஆத்திரம் தீரவில்லை என்பது மட்டும் தெரிந்தது.

"சாந்தா கௌரியின் பிள்ளையைத் தங்களுக்குத் தெரியும் அல்லவா?''

"ஆமாம், அவனுக்கு ஒரு பிள்ளை இருக்கிறான் என்பது தெரியும். அவன் தொழிலாளர்களைத் தூண்டித் திரிகிறான் என்பதையும் அறிவேன்!'' என்ருர் ஸர் பிஹாரிலால்.

"அவ்வளவு போதும். உங்களுக்கு ஒரு பெண் இருக்கிறாள் என்பதும் சாந்தாகௌரியம்மாளுக்குத் தெரியும். அவர் பிள்ளை மனோஹர் மிக புத்திசாலி. ஆனால் அவனிடம் இன்னும் அடக்கம் தான் உண்டாகவில்லை. அவன் கல்யாணம் ஆகாதவன். உங்கள் பெண்ணும் கல்யாணம் ஆகாதவள். அதனால் உங்கள் பெண்ணுக்கும் அவனுக்கும் கல்யாணம் நடந்து விட்டால்..."

ஜுகல்கிஷோர் வாக்கியத்தை முடிக்கவில்லை. ஸர் பிஹாரிலால் இடையில் குறுக்கிட்டு, "கல்யாணம் நடப்பது இருக்கட்டும். முதலில் சாந்தா கௌரியிடம் போய் அவள் பிள்ளையின் முகத் தோற்றம் தகப்பனாரைப் போலிருக்கிறதா அல்லது தாயாரைப் போலிருக்கிறதா என்று கேளுங்கள். அவள் சொல்லி யனுப்பும் பதிலைக் கேட்டபின் நான் யோசனை செய்து முடிவு கூறுகிறேன். சரி, நீங்கள் போய் வரலாம். எனக்கு வேலை இருக்கிறது!" என்று கூறினார். அதோடு மட்டும் இல்லை. ஜுகல்கிஷோருக்கு மேலும் பேசச் சந்தர்ப்பம் அளிக்காமலேயே எழுந்து புறப்பட்டும் விட்டார்.

ஜுகல்கிஷோருக்கு அப்புறம் அங்கே என்ன வேலை? அவனும் எழுந்து வெளியே வந்தான். எதிர்பாராமலே அவனுக்கு அநேக விஷயங்கள் தெரிய வந்தன. அதை நினைத்துப் பார்த்த அவன் தனக்குத் தானே சிரித்துக் கொண்டான். அப்பொழுதும் அவனுக்கு முழு விவரங்களும் சரிவர விளங்கவில்லைதான். இருந்தாலும் யோசித்துப் பார்த்ததில் அவனுக்குத் தன் முடிவுகள் சரியாகவே இருக்க வேண்டும் என்று பட்டன. மண்ணாலான பொம்மையும் சிற்பியின் கைபட்டு மன்மத உருக் கொள்வதில்லையா? பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத அழகுச் சிலையாக இருந்தாலும் மண்ணாலும் கல்லாலும் தானே உருவாக்கப்படுகிறது?

இவ்விதம் யோசித்துக் கொண்டே நடந்து கொண்டிருந்த அவனுக்குச் சாந்தா கௌரியைப் பற்றி ஒரு கவிஞனின் உள்ளத்திலிருந்து வெளி வந்த மனவெழுச்சிகள் நினைவு வந்தன. எனவே, அதற்காக மறுபடியும் ஒரு முறை முறுவலித்துக் கொண்டான்.

தோட்டத்தில் ஒருபுறத்தில் ரமேஷும் சுஷுமாவும் ஏதோ எழுத உட்கார்ந்திருந்தார்கள். அதைக் கண்ட ஜுகல்கிஷோரின் மனத் திரையிலே சிருஷ்டி முறையைப் பற்றி அருமையானதோர் கோட்டுச் சித்திரம் தீட்டப்பட்டுப் பசுமையாக நின்றது.


சிருஷ்டி என்பது என்ன? ஆண்-பெண் உறவுதானா? ஆம். ஆண் - பெண் சேர்க்கை இன்றி இந்த உலகம் ஏது? அரண்மனைக்குச் சென்றாலும் இதே ஜோடி. வீட்டுக்கு வந்தாலும் இதே காட்சி. குடிசைக்குப் போனாலும் இதே ஆண்-பெண் கூட்டுறவு. வாழ்க்கைக்கு அஸ்திவாரமே இந்த ஆணும் - பெண்ணும் தான். இந்த அஸ்திவாரத்துக்கு மேல், படிக்கு மேல் படியாகப் பல படிகள் அமைக்கப்பட்டுள்ளன. கல்யாணம்-குடும்பம், வீடு-வாசல், குழந்தை-குட்டிகள், மக்கள்-மாக்கள் கிராமம்-நகரம் என்னும் பெரும் மாளிகைகள் சிருஷ்டிக்கப்பட்டுள்ளன. இயல், இசை, நாடகம், இலக்கியம், கலை என்பது போன்ற அலங்காரப் பொருள்கள் இம் மாளிகைக்கு மெருகு ஏற்றிப் பகட்டை அதிகப் படுத்துகின்றன. ஆனால் ஆராய்ந்து பார்க்கப் புகுந்தால் இப்பெரும் மாளிகையின் அடியிலே ஆண்-பெண் உறவுதான் அஸ்திவாரமாக அமைந்திருக்கிறது. அந்த அஸ்திவாரத்தின் அடியைத் தோண்டிப் பார்த்தால் மிருகத் தன்மையைத் தான் காண்கிறோம். பாவ-புண்ணியம் ஆகியவைகூட இவற்றின் ஆதாரத்தைக் கொண்டேதான் கற்பனை செய்து உருவகப் படுத்தப் பட்டிருக்கின்றன. மனிதனுக்கு அநுகூலமாகப் பட்டது புண்ணியம்; பிரதிகூலமாகப் பட்டது பாவம். திருமணச் சடங்கு புண்ணியம் தோய்ந்தது. திருமணத் தொடர்பில்லாத விபசாரம் பாவம் நிரம்பியது. ஆனால் விவாகத்தில் விபசாரம் ஏற்படுவதில்லையா? மிருகத் தன்மையைத் தன் இஷ்டப்படி அநுபவிப்பதற்குப் பூரண சுதந்திரமும் பூரண அதிகாரமும் எந்தத் தொடர்பின் மூலம் கிட்டுகிறதோ, அந்த உறவுக்குப் பெயர்தான் விவாகமா?

இம்மாதிரி யோசனை செய்து கொண்டேதான் ஜுகல்கிஷோர் முன்னேறிக் கொண்டிருந்தான். இம்மாதிரி அவன் யோசனை செய்து யோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்திருந்தான். தன் அபிப்பிராயம் என்று ஒரு அபிப்பிராயமும் கொண்டிருந்தான். யோசிக்கும் முறையில் தனதென்று ஒரு வழியே கூட அவன் வகுத்துக் கொண்டு விட்டான். தன் மனத்தில் தோன்றிய தர்க்க விதர்க்கங்களுக்கு ஒரு ஆதரவு கிடைத்து விட்டதாகத் தோன்றவே அவன் மனத்துள் மிகவும் மகிழ்ந்து கொண்டும் இருந்தான்.

கலைஞனின் கண் கொண்டு பாவத்தைப் பார்த்தவாறே அவன் வாழும் வகையைப் பற்றிச் சிந்தித்தான். மற்ற தொழில்களைப் போலவே அவன் கண்களுக்குப் பாவமும் வாழ்வுக்கு ஒரு வகை செய்து கொள்ளும் தொழிலாகவே பட்டது. எனவே, சுகம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட அவன், "எல்லோரும் ஏன் இந்தத் தவறு இழைக்கிறார்கள்? மனிதன் ஒரு மிருகம். இந்த உண்மையை எத்தனைக் கெத்தனை மனிதர்கள் மறக்கிறார்களோ, அத்தனைக் கத்தனை வழி தவறி விடுகிறார்கள்!" என்று தன் மனத்துள் கூறிக் கொண்டான்.

அப்பொழுது தூரத்தில் ஜகதீஷ் போய்க் கொண்டிருப்பதை அவன் கவனித்தான். அடுத்த நிமிஷம் அவனைப் பிடிக்க எண்ணி வேகமாக நடந்தான். அப்பொழுது ஜுகல்கிஷோரின் மனத்திலே 'இவன் ஒரு மிருகம்!' என்ற எண்ணம்தான் மேலோங்கி நின்று கொண்டிருந்தது.

(தொடரும்)



·SANFORIZED·
REGD TD MK
SHRUNK
'சான்பொரைஸ்ட்' துணியில்
தைக்கப்படும் உடைகள்
உடம்புக்குப்
பொருந்தாதபடி
சுருங்கவே செய்யாது
–எத்தனை முறை
சலவை செய்தாலும்
முக்கிய கவனிப்பு
உங்கள் தையல்காரரிடம் சொல்லுங்கள் :
"இது 'சான்பொரைஸ்ட்' துணி
–உடை தைப்பதற்குமுன்
நனைக்க வேண்டாம்"



சூப்பர் இந்தியா

டயர்களையே கேட்டு வாங்குங்கள்

"டயர்களில் மிகச் சிறந்தவை"

IT. 5446 (A)

வீரனின் பரிசு

ரா. ஜானகிராமன்

காலை நேரம். கிழக்கே அடிவானத்திலிருந்து உதய சூரியன் பொன் தகட்டைப் போல் 'தகதக' வென்று பிரகாசித்துக் கொண்டே உயர எழும்பிக் கொண்டிருந்தான். கோவாவிலிருந்து விஜய நகரத்துக்குச் செல்லும் ராஜபாட்டை வழியே குதிரையின் மேல் ஒரு வாலிபன் சென்று கொண்டிருந்தான். நகரம் இன்னும் எவ்வளவு தொலைவில் இருக்கிற தென்பதைப் பார்க்க எண்ணிப் பாதையின் பக்கத்திலிருந்த ஒரு உயர்ந்த மேட்டின் மேல் குதிரையைச் செலுத்தினான். அது உச்சியை அடைந்தது. குதிரையின் களைப்புத் தீர அதைத் தட்டிக் கொண்டே எதிரே நோக்கினான் அவன்.

அளவிட முடியாத ஆச்சரியத்தினால் அவனுடைய விழிகள் அகல விரிந்தன!

வைத்த கண்ணை எடுக்காமல் விஜயநகரத்தின் வனப்பை வெகு நேரம் ரசித்துக் கொண்டிருந்தான் அவன். ஆகா! அந்த நகரை நிர்மாணித்த நிபுணர்கள் என்ன முன் யோசனையுடன் ஒவ்வொரு காரியத்தையும் செய்திருக்கிறார்கள்! நகரின் வடக்கே ஓடிக்கொண்டிருந்த துங்கபத்திரை ஒரு இயற்கைப் பாதுகாப்பாக அமைந்திருந்ததோடு மட்டுமிராமல் கால்வாய்கள் மூலம் நகரவாசிகள் எல்லோருக்கும் குறையாத தண்ணீர் வசதியைக் கொடுத்துதவிக் கொண்டிருந்தது. கிழக்கே உயர எழும்பி நின்ற குன்றுகள் எதிரிகளால் தகர்க்க முடியாத அரண்களைப் போல் நகரைப் பாதுகாத்து நின்றன. நகரைச் சுற்றிலும் ஏழடுக்கு மதிற் சுவர்கள் எழுப்பப்பட்டிருந்தன. நுட்பமான சித்திர வேலைப்பாடுகளமைந்த மாளிகைகளும் கோபுரங்களும் அவனுடைய மனத்தைத் தங்கள்பால் ஆகர்ஷித்தன.

அச்சமயத்தில் விஜயநகரத்தைச் சாளுவ வம்சத்தைச் சேர்ந்த இரண்டாவது கிருஷ்ண தேவராயர் ஆண்டு வந்தார். ராயர் சுத்த வீரர். சிறந்த மேதை. அறிவிலும் ஆற்றலிலும் அவரை மிஞ்சக் கூடிய அரசர் எவருமே அந்தக் காலத்தில் இல்லையென்று சொன்னாலும் மிகையாகாது. அவரது ஆட்சியில் விஜயநகரம் பொருளாதாரத்திலும் அரசியலிலும் ஒரு மகோன்னதமான ஸ்திதியை அடைந்தது. அருகிலிருந்த சிற்றரசர்கள் கண்டு நடுங்கவும், உலகோர் கண்டு வியக்கவும், மாபெரும் சாம்ராஜ்யமெனத் திகழ்ந்தது விஜயநகரம்.

நகரை நோக்கிக் குதிரையில் சென்றான் விஜயனென்ற பெயர் கொண்ட அந்த இளைஞன். அவனுடைய சொந்த ஊர் தஞ்சாவூருக்கு அருகில் இருந்த ஒரு சிறிய கிராமம். வியாபாரத்தில் உதவியாயிருக்குமென்று நினைத்து அவனுடைய சிறிய தந்தை அவனைக் கோவாவுக்கு அழைத்துச் சென்றார். ஆனால் அவனுடைய மனம் வணிகத்தில் ஈடுபடவில்லை. வீரத் தமிழ் மரபைச் சேர்ந்த விஜயனின் உள்ளம் ஒரு போர் வீரனின் வாழ்க்கையையே நாடியது. கோவாவிலிருந்த போர்ச்சுகீசியரிடமிருந்து குதிரை யேற்றத்தையும் வாள் வித்தையையும் கற்று நன்கு தேர்ச்சி பெற்றான். சிறுகச் சிறுகச் சேர்த்து வைத்திருந்த பொருளைக் கொண்டு பாரசீகக் குதிரை யொன்றும் போர் வாளும் வாங்கிக் கொண்டான். ஒரு நாள் சிறிய தந்தையின் அனுமதியைப் பெற்று விஜய நகரத்தை நோக்கிப் பிரயாணமானான்.

நகரில் நுழைந்த விஜயன் வீதிகளின் வழியே கும்பல் கும்பலாக ஜனங்கள் போய்க் கொண்டிருப்பதைக் கண்டான். எல்லோரும் புத்தாடைகள் உடுத்திக் கோலாகலத்துடன் சென்று கொண்டிருந்தனர். எங்கு பார்த்தாலும் திருவிழாக் காலங்களைப் போல் தோரணங்கள் தொங்கிக் கொண்டிருந்தன.

விஜயன் ஒருவனைப் பிடித்து நிறுத்தி, "ஐயா! இந்த ஆரவாரத்திற்குக் காரணம் என்ன! எல்லோரும் எங்கே போய்க் கொண்டிருக்கிறார்கள்!" என்று வினவினான்.

'ஓகோ! ஆசாமி ஊருக்குப் புதிது போலிருக்கிறது!' என்று தனக்குத்தானே சொல்லி விட்டு, அந்த மனிதன் விஜயனை நோக்கி, "தம்பி! இன்று எங்கள் மன்னரின் பிறந்த நாள். அதை முன்னிட்டு அரண்மனையில் நடக்க விருக்கும் பந்தயங்களைக் காணச் செல்கிறோம். போட்டியில் வெற்றி பெறுபவருக்குப் பரிசும் பதவியும் உண்டு" என்று சொல்லிக் கொண்டே விரைந்தான்.

'பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று' என்று எண்ணிக் கொண்டே விஜயனும் அவர்களுடன் கூடச் சென்றான்.

அரண்மனையை அடுத்திருந்த ஒரு விசாலமான மைதானத்தில் வட்ட வடிவமாகப் பிரும்மாண்டமான மண்டபம் கட்டப்பட்டிருந்தது. அடுக்கடுக்காக எழுப்பப்பட்டிருந்த ஆசனங்களிலெல்லாம் ஆயிரக் கணக்கில் மக்கள் உட்கார்ந்திருந்தனர். ஒரு பக்கத்தில் மன்னரும் அரச குடும்பத்தினரும் அமர்ந்திருக்க அழகான மேடை யொன்று கட்டப்பட்டு அதன்மீது பிரத்தியேகமான ஆசனங்கள் வைக்கப்பட்டிருந்தன.

போட்டியில் தன் பெயரையும் பதிவு செய்து கொண்டான் விஜயன். காலையிலெல்லாம் மல்யுத்தம் ஜல்லிக் கட்டு, செம்மறியாட்டுச் சண்டை என்று இவ்வாறு வெவ்வேறு விளையாட்டுகளும் சண்டைகளும் நடைபெற்றன.

முக்கிய நிகழ்ச்சியான ஈட்டிச் சண்டை பிற்பகலில் ஆரம்பமாயிற்று. ஒவ்வொரு வீரனையும் தோற்கடித்துக் கொண்டு வந்த விஜயனும் பெத்ரோ என்ற போர்ச்சுகீயனும் கடைசியில் எஞ்சி நின்றனர்.

பெத்ரோ என்ற பறங்கிக்காரன் கோவாவில் கவர்னரா யிருந்த ஆல்புகர்க்கின் தூர உறவினன். வியாபார விஷயமாக ஒரு முறை விஜய நகரத்துக்கு வந்தவன் அங்கேயே தங்கி விட்டான். பெத்ரோவை ஒரு குதிரைப் படைத் தலைவனாக நியமித்திருந்தார் கிருஷ்ண தேவராயர்.

அந்தக் காலத்தில் ஈட்டிச் சண்டை யென்பது இரு வீரர்களுக்கிடையே நடைபெறும் ஒரு அபாயமான போட்டி. அதில் வெற்றி பெறக் குதிரைச் சவாரியில் வல்லவனாயிருந்தால் மட்டும் போதாது. ஓடும் குதிரையிலிருந்தே குறி தவறாது ஈட்டியைப் பாய்ச்சும் திறமையும் வேண்டும்.

பெத்ரோவும் விஜயனும் மைதானத்தின் இரு கோடிகளில் ஒருவரை யொருவர் பார்த்தவாறு குதிரைகளின் மேல் ஆரோகணித்திருந்தனர். இருவரும் உடல் முழுவதும் மூடும் இரும்புக் கவசம் அணிந்திருந்தனர். கையில் கூரிய ஈட்டிகளைப் பிடித்திருந்தனர்.

வெடிச் சத்தமொன்று கேட்டதும் அதி வேகத்துடன் ஒருவரை யொருவர் நோக்கிப் பாய்ந்து வந்தனர் விஜயனும் பெத்ரோவும். மைதானத்தின் நடுவில் இரு குதிரைகளும் சந்தித்தன. பெத்ரோவின் ஈட்டி விஜயனின் கேடயத்தைத் துளைத்துச் சென்றது. விஜயனின் ஈட்டி பெத்ரோவின் தலைக் கவசத்தைத் தாக்கி அதைத்



தூக்கி யெறிந்தது. ஒன்றை யொன்று தாக்கிய அதிர்ச்சியில் குதிரைகள் இரண்டும் முன்னங் கால்களை எழுப்பிக்கொண்டு நின்றன. பெத்ரோ வின் குதிரை உடலின் கனத்தைத் தாங்க முடியா மல் மல்லாந்து விழுந்தது. எழுந்திருக்கப் பிரயத் தனப்பட்டுக் கொண்டிருந்த பெத்ரோவைத் தூக்கிவிடும் நோக்கத்துடன் விஜயன் கீழ குதித் தான். அந்தச் சமயத்தில் யாரும் எதிர்பாராத விதமாக பெத்ரோ குதித்தெழுந்து இடையிலிருந்த வாளை உருவிக் கொண்டே விஜயனின் மேல் பாய்ந் தான். கூட்டத்தின் பல பாகங்களிலிருந்து பெத் ரோவின் செய்கையைக் கண்டித்து எண்ணற்ற குரல்கள் எழும்பின.

கண்மூடித் திறக்கும் நேரத்துக்குள் தன் வாளை யும் வெளியே எடுத்துச் சண்டைக்கு ஆயத்தமாய் நின்றான் விஜயன். தோல்வியால் ஏற்பட்ட வெறி யில் மதியை இழந்திருந்த போர்ச்சுகீசியன் ஆத் திரத்துடன் வீசிய ஒவ்வொரு கத்திச் சுழலையும் அனாயாசமாகத் தடுத்து நிறுத்தினான் விஜயன். போர்ச்சுகீசியரின் வாள் சண்டையிலிருந்த தந் திரங்களைப் பற்றியெல்லாம் அவன் அறிந்திருந்த படியால் சிறிது நேரத்துக்குள் பெத்ரோவின் கத்தியைச் சுழற்றித் தூர எறிந்து விட்டான். கரகோஷம் வானைப் பிளந்தது.

பிறகு கிருஷ்ண தேவராயரின் முன் மண்டியிட் டான் விஜயன்.

"வீரனே! உன் திறமையை மெச்சினோம். இன்றிலிருந்து உன்னை நமது மெய்காப்பாளரில் ஒருவனாக நியமித்திருக்கிறோம்" என்று சொல்லிக் கொண்டே மன்னர் எழுந்து ஒரு நவரத்ன மாலையை அவனிடம் அணித்தார்.

விஜயன் மெய் சிலிர்த்து நின்றான். அவனுடைய கவனமெல்லாம் மன்னரின் தோற்றத்திலிருந்த கம்பீரத்திலேயே லயித்திருந்தபடியால் அவன் இரண்டு முக்கியமான விஷயங்களைக் கவனிக்கத் தவறி விட்டான்.

தூரத்திலே நின்ற பெத்ரோவின் முகம் தோல்வி யினால் ஏற்பட்ட அவமானத்தாலும் குரோதத் தாலும் விகாரமடைந்து காணப்பட்டது. அதே சமயத்தில் அரசியின் பணிப் பெண்களில் ஒருத்தி விஜயனைக் காதல் நிறைந்த விழிகளால் நோக்கினாள்.

*

கிருஷ்ணா நதிக்கு வடக்கே யிருந்த பீஜப்பூருக் கும் விஜயநகரத்துக்கும் வெகுநாட்களாகத் தீராப் பிரச்னை யொன்று இருந்து வந்தது. அதற்குக் காரணம் அவர்களுக்கிடையே யிருந்த செழுமை யான பிரதேசமும் அதில் நிறுவப்பட்டிருந்த ரெய்ச்சூர் கோட்டையும்தான். கிருஷ்ண தேவ ராயர் காலத்தில் ரெய்ச்சூர் பீஜப்பூர் சுல்தான் வசத்தில் இருந்தது. ராயர் அந்தக் கோட்டை யைப் பிடித்துப் பீஜப்பூரின் மேல் படையெடுக்கத் தீர்மானித்திருந்தார். யுத்த முஸ்தீப்புகளெல்லாம் மிகவும் ரகசியமாக நடந்து வந்தன. நாட்டின் மந்திரியும் மகா வீரனுமாகிய சாளுவ திம்மனின் மேற் பார்வையில் விஜயநகரம் போருக்கு ஆயத்த மாகிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் இரவு. கடைத் தெருக்களெல்லாம் ஓசையடங்கி வெகு நேரமாகி விட்டது.

விட்டல ஸ்வாமியின் கோயிலை நோக்கி விரைந்து கொண்டிருந்தான் விஜயன். திரும்பத் திரும்ப அவன் மனம் பிற்பகல் தன்னிடம் வந்த ஓலையில் எழுதியிருந்ததையே நினைத்து மிகவும் வியந்து கொண்டிருந்தது.

அவனை இந்த இரவு வேளையில் கோயிலை அடுத்த நந்த வனத்தில் சந்திக்கச் சொல்லி யிருப்பது யாராயிருக்க முடியும்! அவன் எவ் வளவு சிந்தித்தும் தகுந்த விடை கிடைக்கவில்லை. அவன் நந்த வனத்தில் நுழைந்த சமயம் கோயி லில் மூன்றாவது ஜாம பூஜையை அறிவிக்கும் மணி ஒலித்தது.

நந்தவனத்தில் ஒரே இருட்டு. குறுகிய பாதை வழியே மிகுந்த சிரமத்துடன் நடந்து சென்றான் விஜயன். அப்பொழுது தொலைவில் ஆந்தை யொன்று கத்தும் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து நாலைந்து தீவட்டிகள் கொளுத்தப் படுவதைக் கண்டான் அவன். விஷயம் என்ன வென்றறிந்து கொள்வதற்காகத் தீவட்டி வெளிச் சத்தை நோக்கி நடந்தான்.

அந்தக் கணத்தில் அவன் சிறிதும் எதிர் பாராத அந்தச் சம்பவம் நிகழ்ந்தது. இருட்டிலே யாரோ ஒருவன் குதிரையின்மீது வெகு வேக மாகப் பாதை வழியே வந்தான். விஜயன் 'சரே'லென்று ஒதுங்கி யிராவிடில் குதிரையின்

கால்களுக் கிடையில் அகப்பட்டு நசுங்கிப் போயிருப்பான். பெரியோர் புண்ணியத்தால் தப்பினோமென்று எண்ணிக் கொண்ட விஜயன் எதிரே நோக்கவும் தீவட்டிகளைப் பிடித்துக் கொண்டு நாலைந்து வீரர்கள் ஓடி வருவதைக் கண்டான். குதிரை மேல் சென்றவனைப் பிடிக்கத்தான் அவர்கள் வருகிறார்களென்று விஜயன் தீர்மானிப்பதற்குள் வீரர்கள் அவனை அணுகி விட்டார்கள். தீவட்டி வெளிச்சத்தில் அவர்களுடன் பெத்ரோ இருப்பதைக் கண்டு, "பெத்ரோ! குதிரை மேல் சென்றவன் இந்தப் பாதை வழியாகச் சென்று வடக்கு நோக்கித் திரும்பினானென்று எண்ணுகிறேன். ஓடி அவனைப் பிடிப்பது அசாத்தியம். யாரிடமாவது குதிரையிருந்தால் முயன்று பார்க்கலாம்" என்றான்.

பெத்ரோ 'கடகட' வென்று நகைத்தான். தன் பின்னால் நின்றிருந்த வீரர்களிடம், "பார்த்தீர்களா! இந்த வேஷதாரியின் சமயோசித புத்தியை! பீஜப்பூர் சுல்தான் சரியான ஒற்றனாகத் தான் பார்த்து அனுப்பியிருக்கிறான்!" என்று சொன்னான்.

விஜயனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆனால் பெத்ரோ தன்னை ஏதோ ஆழமான சூழ்ச்சியில் பிடித்துத் தள்ளுகிறான் என்பதை மட்டும் அறிந்து கொண்டான்.



"பெத்ரோ! நீ என்ன சொல்கிறாய் என்றே எனக்குப் புரியவில்லை" என்று அவன் சொல்லி வாய் மூடுவதற்குள் பெத்ரோ வீரர்களிடம் ஏதோ சமிக்ஞை செய்தான். உடனே அவர்கள் விஜயனுடைய கைகளைப் பிணித்தனர்.

"ஒற்றனே! மன்னரிடம் நேரில் வந்து பேசிக் கொள். அப்பொழுது தானாக உனக்கு எல்லாம் புரியும்" என்றான் பெத்ரோ.

★

கிருஷ்ணதேவராயர் மந்திராலோசனை மண்டபத்தில் மந்திரி சாளுவ திம்மனுடன் பேசிக் கொண்டிருந்தார்.

உள்ளே வந்தவர்களைக் கண்டதும் ஆச்சரியம் கலந்த குரலில், "பெத்ரோ! இது என்ன கூத்து! என் மெய்க்காப்பாளரில் ஒருவனாகிய இவனை ஏன் இந்தக் கோலத்தில் இழுத்து வந்திருக்கிறீர்கள்!" என்று கேட்டார்.

"மன்னரே! இந்தக் கயவன் பீஜப்பூர் சுல்தானின் ஒற்றர்களில் ஒருவன். எனக்கென்னவோ இவனைப் பார்த்தது முதலே சந்தேகம். ஆனால் அவசரப்பட்டுத் தங்களிடம் எதையும் சொல்லத் தயங்கினேன். இவனுடைய நடவடிக்கைகளை மறைவில் கண்காணித்து வரச் சொன்னேன். இன்று நன்றாக அகப்பட்டுக் கொண்டான். விட்டல ஸ்வாமியின் கோயிலுக்கு அடுத்த நந்தவனத்தில் பீஜப்பூர் வீரனொருவனுடன் நின்று பேசிக் கொண்டிருந்தான். எங்களைக் கண்டதும் அந்த முகலாயன் குதிரை மீது தாவியேறி ஓடி விட்டான். ஆனால் இவன் மட்டும் தப்ப வழியில்லாமல் சிக்கிக் கொண்டான். பீஜப்பூருக்கு இவன் மூலம் இது வரை என்ன செய்திகள் போயிருக்குமென்று தெரியவில்லை. தங்கள் ஆக்ஞைப்படி இவனைத் தண்டிக்கச் சித்தமாயிருக்கிறோம். உத்தரவு கொடுங்கள்" என்றான் பெத்ரோ பணிவுடன்.

ஏதோ சொல்ல வாயெடுத்த விஜயன் மன்னரின் கோபாவேசத்தைக் கண்டு நடுங்கி வாளா விருந்தான். ராயரின் மீசை துடித்தது. கண்கள் அனல் துண்டுகளைப் போல் பளபளத்தன.

"இந்த நீசனை இழுத்துச் சென்று கழுவேற்றுங்கள்...... பொறுங்கள். முதலில் காளவாயில் இட்டுச் சித்ரவதை செய்து அவனுக்குத் தெரிந்த விஷயங்களை அறிந்து வாருங்கள்." —என்ன பேசுகிறோ மென்பதை அறியாமல் சொன்னார் ராயர்.

அதுவரை மௌனமாக இருந்த சாளுவ திம்மன் குறுக்கிட்டார்.

"அரசே! இவன் முகத்தைப் பார்த்தால் கொடிய ஒற்றனைப் போல் எனக்குத் தோன்றவில்லை. தற்சமயம் சிறையிலடைத்து வைத்துப் பிற்பாடு உண்மையை விசாரித்தறியலாம். ஆத்திரத்தில் ஒரு உயிரை மாய்த்துவிட்டு அப்புறம் வருந்துவதில் பிரயோஜனமில்லை" என்றார் அவர்.

ராயரின் சீற்றம் சிறிது தணிந்தது. எந்த விஷயத்திலும் மந்திரியின் வார்த்தைகளுக்கு அவர் ஒரு தனி மதிப்பு அளித்து வந்தார். மன்னரின் உத்தரவின் மேல் விஜயனைச் சிறையில் கொண்டு தள்ளினார்கள் வீரர்கள்.

பெத்ரோவுக்கு உள்ளூறப் பெருத்த ஏமாற்றம். தன் சூழ்ச்சி முழுவதும் பலித்து விஜயனை ஒழிக்க முடியவில்லையே யென்று அவன் வருந்திய போதிலும், சிறையிலாவது அடைத்தோமே யென்று ஆறுதலடைந்தான்.

சிறையில் விஜயன் அடைபட்டு ஒரு மாதத்துக்கு மேலாகி விட்டது. பாராக்காரர்களிடம் அவன் ஏதாவது கேட்டால்கூட அவர்கள் சரியாகப் பதில் சொல்வதில்லை. செய்யாத குற்றத்துக்குத் தன்னைத் தண்டிக்கிறார்களே யென்று அவன் மனம் ஏங்கியது. அதற்குக் காரணமாயிருந்த பெத்ரோவின் மேல் அவன் கோபம் திரும்பியது. என்றாவது ஒருநாள் பழி வாங்கத் தீர்மானித்துக் கொண்டான் அவன்.

விஜயன் சிறையிலிருந்த அறையில் ஒரு சிறு சாளரம் வெகு உயரத்தில் வைக்கப்பட்டிருந்தது. அவன் மஞ்சத்தின் மேல ஏறிப் பார்த்தால் ஒரு வீதி தெரியும். திடீரென்று ஒரு நாள் ரெய்ச்சூரின் மேல் படையெடுப்பது தீர்மானமாயிற்று. விஜய

னிடம் அந்த விஷயத்தை ஒருவரும் சொல்லா விடினும், வெளியேயிருந்து வந்த ஆரவாரங்களி லிருந்தும் வாத்திய முழக்கங்களிலிருந்தும் ஊகித் துக் கொண்டான் அவன்.

சாளரத்தின் வழியே பார்த்துக் கொண்டிருந்த விஜயன் வரிசை வரிசையாக வீரர்கள் அணிவகுத் துச் செல்வதைக் கண்டு உள்ளம் புழுங்கினான். தானும் அவர்களில் ஒருவனாகக் கையில் வேல் பிடித்து இடையில் வாள் மின்னப் போக முடிய வில்லையே என்று ஏங்கியது அவன் மனம்.

அப்பொழுது அந்த வழியே பெத்ரோ தலைமையாக ஒரு குதிரையின் மேல் செல்வதைக் கண்டான். அவன் ரத்தம் கொதித்தது. அவனை அழைத்து அறைகூவலாமென்று நினைத்த சமயத்தில் அகஸ் மாத்தாகப் பெத்ரோவே மேலே நோக்கினான். முகத்தை ஒரு பக்கம் இழுத்துக் கண்ணைச் சிமிட்டி னான் பெத்ரோ. பெருமிதத்துடன் புன்னகை புரிந்து விட்டுக் குதிரையைத் தட்டி விட்டான்.

வாயடைத்து நின்றான் விஜயன். கண் கொட் டாமல் பெத்ரோவைப் பார்த்துக் கொண்டிருந் தவன், அவனுடைய இடையிலிருந்து ஒரு ஓலை நழுவி விழுவதைக் கவனித்தான். வீதியில் சென்று கொண்டிருந்த ஒரு சிறுவனை விளித்து அந்த ஓலையைத் தன்னிடம் கொண்டு வருமாறு வேண்டினான். அந்தச் சிறுவனும் நல்ல மனது வைத்து அந்த ஓலையைப் பொறுக்கி வந்து ஒரு கல்லை அதனுடன் சேர்த்துக் கட்டிச் சாளரத்தை நோக்கி எறிந்தான். அறையில் வந்து விழுந்த ஓலையைப் படித்த விஜயன் திடுக்கிட்டான்.

"பெத்ரோவுக்கு,

உன்னுடைய யோசனையை நான் முழு மனத் துடன் ஆதரிக்கின்றேன். செய்ச்சூருக்கும் முத் கல்லுக்கும் இடையே இருக்கும் குன்றுத் தொடர் களின் பின்னால் நம்முடைய பீரங்கிகள் தயாராக இருக்கும். விஜயநகரத்தின் குதிரைப் படையை அந்த வழியே அழைத்து வருவது உன் பொறுப்பு. மற்றவைகளை என் படையினர் கவனித்துக் கொள்ளுவர். நமக்கு வெற்றி கிட்டினால் உன் பெருமதியை மறக்க மாட்டேன். அல்லாவின் மேல் ஆணை. விஜயநகரத்தில் பாதியை ஆளும் உரிமை உனக்கு உண்டு. ஞாபகமிருக்கட்டும்.

இஸ்மாயில் அடில் ஷா
பீஜப்பூர் சுல்தான்."

ஓலையின் மேலிருந்த பீஜப்பூரின் ராஜமுத்திரை விஜயனின் கொஞ்ச நஞ்ச சந்தேகத்தையும் நிவர்த்தி செய்து விட்டது. எப்படியேனும் பெத் ரோவின் சூழ்ச்சியைக் குலைத்து விஜயநகரத்தின் குதிரைப் படையைக் கோரமான முடிவிலிருந்து தப்புவிக்க வேண்டுமென்று அவன் மனத்தில் உறுதி கொண்டான்.

★

அன்றிரவு விஜயநகரத்தின் சேனை ரெய்ச் சூரை நோக்கிப் பிரயாணமாகி வெகு நேரமாகி விட்டது. நிர்மானுஷ்யமான பிரதேசங்களில் நிலவும் ஒருவிதப் பயங்கர அமைதி நகரில் குடி கொண்டிருந்தது.

விஜயனிருந்த சிறைக்கூடத்தைப் பாதுகாக்க ஒரு பாராக்காரனே யிருந்தான். விஜயன் அவனை மெல்லிய குரலில் அழைத்து, "வீரனே! கடும் சுரத்தில் என்னால் இந்தக் குளிரைத் தாங்க முடிய வில்லை. மஞ்சத்தை இழுத்து ஓரத்தில் போடவும் என் கைகளில் பலம் இல்லை. எனக்கு ஒரு கை கொடுத்து உதவ உன்னால் முடியுமா!" என்று மிகவும் உருக்கமாகக் கேட்டான்.

விஜயன் கூறியதை உண்மையென்று நம்பிக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான் காவற்காரன். உடனே விஜயன் அவன் கையை முறுக்கிக் கீழே தள்ளினான். அவன் கூச்சலிடும் முன் வாயில் ஒரு துணியைத் திணித்து மஞ்சத்துடன் அவனைச் சேர்த்து இறுகக் கட்டினான். கைகால்களை அசைக்க முடியாமல் 'திரு திரு' வென்று விழித்துக் கொண்டிருந்தவனைப் பார்த்து, "அப்பனே! என்னை மன்னித்துவிடு. நாட்டின் நன்மையை உத்தேசித்துத்தான் நான் உன்னைத் தாக்கினேன். யாரேனும் வந்து உன்னை விடுவிக்கும் வரை சற்றுப் பொறுமையோடிரு" என்று கூறிவிட்டு வெளியே வந்தான்.

எதிரே தென்பட்ட ஒரு பாதை வழியே சென்றான். சிறிது தூரம் சென்ற பிறகுதான் அவனுக்கு வெளியே வரும் வழியைத் தவற விட்டோம் என்பது தெரிந்தது. நேரமோ போய்க் கொண்டிருந்தது. பொறுமை இழந்து சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தவன் கடைசியில் ஒரு நீண்ட தாழ்வாரத்தை அடைந்தான். அரண்மனையில் ஒரு பகுதிக்கு வந்து விட்டதை உணர்ந்தான் விஜயன். வந்த வழியே திரும்ப நினைத்தவனின் செவிகளில் தாழ்வாரத்தின் கோடியில் யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்டது.

விஜயன் நுழைந்த அறையில் பிரகாசமான விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. விளக்கொளியில் தன்னை நோக்கி ஒரு பெண் வருவதைக் கண்ட பின்தான், தன்னுடைய அடாத செய்கையின் முழு விளைவை உணர்ந்தான் அவன். அந்த மங்கை கூச்சலிட்டுத் தன்னைக் காட்டிக் கொடுப்பதற்கு முன்னால் வெளியே போய் விடுவது நலமென்றெண்ணி ஒரு அடி பின் வைத்தான். அதற்குள் அந்தப் பெண் ஓடி வந்து அவன் காலடியில் விழுந்தாள். ஆச்சரியத்தினால், "பெண்ணே! இது என்ன காரியம்! உனக்கு என்ன வேண்டும்!" என்று கேட்டான் விஜயன்.

அவள் முகம் வெட்கத்தினால் 'குப்'பென்று சிவந்தது. கட்டை விரலைத் தரையில் நிரடிக் கொண்டு குனிந்தவாறே பேசினாள் அவள்.

"ஸ்வாமி! என் இதயக் கோயிலில் வைத்துப் பூஜை செய்யும் தங்களைத் திடீரென்று கண்ட அதிர்ச்சியினால் பெண்களுக்கு இயற்கையாயுள்ள நாணத்தையும் மறந்தேன். முதன் முதலாக மன்னரின் பிறந்த நாள் விழாவில் தங்களைக் கண்டவுடன் என் மனத்தை நீங்கள் பறித்துக் கொண்டு விட்டீர்கள். உங்களுடைய முக விலாசத்திலிருந்து நீங்கள் தமிழரென்பதை அறிந்தேன். நானும் தமிழ் நாட்டைச் சேர்ந்தவள்தான். என் பெயர் கனிவி. வர்த்தகம் செய்வதற்கென்று வெளிநாடு சென்ற என் தந்தையுடன் நானும் என் தாயும் சென்றோம். நடுக்கடலில் மரக்கலம் கவிழவும் எல்லோரும் நீரில் மூழ்கி இறந்தார்கள். நானும் இன்னும் சிலரும் மட்டும் உயிர் தப்பினோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அராபியக் கடற் கொள்ளைக்காரரிடம் சிக்கிக் கொண்டோம். அவர்கள் என்னை இங்கு கொண்டு வந்து அடிமையாக விற்றுச் சென்று விட்டார்கள். நொந்து கிடந்த என் மனத்தில் தங்களைக் கண்டது முதல் ஏனோ ஒரு ஆறுதல் ஏற்பட்டது. என் அடிமை வாழ்வும் மலரும் என்ற நம்பிக்கை பிறந்து விட்டது. என்னை எப்படியாவது இந்த அரண்மனையிலிருந்து மீட்டுச் செல்லுங்கள்." கனிவியின் நா தழதழத்தது. குரல் கம்பியது.

அவளுடைய முகத்தைக் கூர்ந்து நோக்கினான் விஜயன். அழகுத் தெய்வமே தன்னிடம் வரம் வேண்டி நிற்பதாகத் தோன்றியது அவனுக்கு.

அவனுடைய நெஞ்சம் நெகிழ்ந்தது.

"பெண்ணே! என்னால் இயன்றதைச் செய்கிறேன். ஆனால் இப்பொழுது நாம் பேசிக் கொண்டிருக்க நேரமில்லை. விஜய நகரத்தின் படைகள் பேராபத்தில் சிக்கப் போகின்றன. அதைத் தடுக்க வேண்டியது என் முதல் கடமை."

நளினியிடம் முழு விவரங்களையும் சொன்னான். பீஜப்பூர் சுல்தானின் ஓலையையும் காட்டினான்.

"ஸ்வாமி! இங்கிருந்து மூதல் கோட்டைக்கு வெளியே செல்லும் இரகசியப் பாதை எனக்குத் தெரியும். அரண்மனை உபயோகத்துக்கென்று தயாராகவிருக்கும் குதிரைகளில் ஒன்றை எடுத்துச் செல்லுங்கள். யுத்தகாலமாயிருப்பதனால் தாங்கள் நகருக்கு வெளியே செல்வதை யாரும் தடை செய்ய மாட்டார்கள்" என்றாள் நளினி.

★

துங்கபத்திரையின் வடகரையில் விஜய நகரத்தின் சைன்யம் கூடாரமடித்துத் தங்கியிருந்த இடத்தை விஜயன் அடைவதற்குள் பொழுது புலர்ந்து விட்டது. வீரர்களெல்லாம் அணிவகுத்துப் புறப்படச் சித்தமாகிக் கொண்டிருந்தார்கள்.

அரசரின் பாசறையை அடைந்ததும் உள்ளே போக எத்தனித்த விஜயனை ஒரு வீரன் தடுத்து நிறுத்தினான். கூடாரத்துக்குள் பெத்ரோ பேசிக் கொண்டிருந்தது அவனுடைய காதில் விழுந்தது.

"அரசே! நம் காலாட் படைகள் ரெய்ச்சூரை அடையுமுன் நான் ஐயாயிரம் குதிரை வீரர்களுடன் கோட்டையைச் சுற்றிச் சென்று வடக்குப் புறத்திலிருந்து தாக்குகிறேன். முகம்மதியர் அதைச் சிறிதும் எதிர் பார்க்க மாட்டார்கள். இன்றிரவுக்குள் கோட்டை விழுந்து விடும்."

அதற்கு ராயர் என்ன பதில் சொல்லுகிறாரென்பதைக் கேட்டுக் கொண்டு விஜயன் நிற்கவில்லை. வழியை மறைத்து நின்ற வீரனை ஒரு கையால் அப்புறப் படுத்திவிட்டு, பாசறைக்குள் வெகு வேகமாக நுழைந்தான்.

திடீரென்று உள்ளே வந்த விஜயனைக் கண்டு எல்லோரும் வியப்படைந்தனர். பெத்ரோவின் முகத்தில் கலவரமும் பீதியும் காணப்பட்டன.

ராயரின் முன்னால் மண்டியிட்டு எழுந்து, "அரசே! இந்தப் பறங்கியன் பேச்சை நம்பாதீர்கள். நம் படைகளை அடியோடு ஒழிக்கத் திட்டமிடுகிறான் இவன். இந்த ஓலையைப் படித்தால் உங்களுக்கு எல்லாம் விளங்கும்" என்று விஜயன் கூறி முடிப்பதற்குள் இடையிலிருந்த துப்பாக்கியை எடுத்து விஜயனை நோக்கிக் குறி வைத்தான் பெத்ரோ. ஆனால் அவன் அருகில் நின்றிருந்த திம்மரசு கண்ணிமைக்கும் நேரத்தில் துப்பாக்கியைத் தட்டி விட்டார். 'டுமீல்' என்ற சப்தத்துடன் பாய்ந்த ரவை கூடாரத் துணியைப் பிய்த்துக் கொண்டு மேலே சென்றது. மீண்டும் பெத்ரோ சுடுவதற்குள் இரு வீரர்கள் அவனைக் கட்டிப் பிடித்தனர்.

ஓலையைப் படித்த ராயரின் முகத்தில் வியப்பும் சினமும் ஒருங்கே தோன்றின.

"இந்த வெள்ளை நாயை வெட்டிக் கழுகுகளுக்கு இரையாக்குங்கள்" என்று இடியைப் போன்ற குரலில் கர்ஜித்தார் கிருஷ்ண தேவ ராயர்.

★

வெற்றிமாலை சூடித் திரும்பியது விஜய நகரத்தின் சேனை. பீஜப்பூர் சுல்தான் போர்க்களத்திலிருந்து புறமுதுகு காட்டி ஓடினான். ரெய்ச்சூரும் ராயரின் வசம் வந்தது.

போரில் பெத்ரோவின் பதவியை விஜயனே ஏற்று வகித்தான். அவனுடைய வீரத்தை மெச்சிய கிருஷ்ணதேவராயர் விஜயநகரத்துக்குத் திரும்பியபின், அவனிடம், "வீரனே! உன்னுடைய முயற்சியும் தைரியமும் நம்முடைய வெற்றிக்கு முக்கிய காரணங்களாயிருந்தன. உனக்குத் தகுந்த சன்மானம் அளிக்க விரும்புகிறோம். என்ன வேண்டுமோ, கேள்!" என்றார்.

"அரசே! நான் உங்களிடம் பொன்னும் பொருளும் யாசித்துப் பெறப் போவதில்லை. அரண்மனையில் நளினி என்றொரு பெண் இருக்கிறாள். அவளை எனது மனைவியாகக் கொள்ள விரும்புகிறேன்" என்றான் விஜயன். ஒரு செல்வச் சீமாட்டியை மணக்கக் கூடிய பதவியிலிருந்த விஜயன், அடிமைப் பெண்ணைக் கைப் பிடிக்க நினைத்ததைக் கண்டு ராயர் வியப்படைந்தார்.

ஒரு நாள், மாலை நேரம். விஜயனுடைய மாளிகையின் உப்பரிகையின் மேல் நின்றுகொண்டிருந்த நளினி கதிரவன் மலைவாயில் விழும் ரம்மியமான காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். சத்தம் செய்யாமல் அவள் பின்னால் வந்து, விஜயன் "என் இதய ராணி என்ன யோசனையில் ஆழ்ந்திருக்கிறாள்?" என்று கேட்டான்.

சட்டென்று திரும்பி, அவன் கைகளைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டாள் நளினி.

"இந்த அடிமையிடம் தாங்கள் காட்டும் கருணையையும் அன்பையும் எண்ணிப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றாள்.

சட்டென்று அவளுடைய வாயைப் பொத்தி, "அசட்டுப் பெண்ணே! என்ன உளறுகிறாய்! இனிமேல் நான் தான் உனக்கு அடிமை" என்றான்.

பொங்கியெழுந்த மகிழ்ச்சியில் உள்ளம் பூரித்துப் போய் நின்றாள் பேதை.



ஸிங்கர்* 206 K
தையல் இயந்திரம்
பலவித அலங்காரத்
தையல்கள்
செய்ய
SINGER
தெளி வட்டத்தில் அமைந்திருக்கும் இருவிசைகள் தையல் இயக்கத்தை நிதானித்து, வேலை செய்பவர் சாதாரணத் தையல் வேலையிலிருந்து அதிக உபயோகமானதும், அலங்கார வேலைப் பாடுமுள்ள தெளி தையல் வேலைகளுக்கு எளிதில் மாற்றிக் கொள்ள உதவுகிறது.
அதிகப்படியான உபகரணங்களற்றது
இந்த ஆச்சரியகரமானதும், எவ்வித வேலைக்கும், எளிதில் மாற்றிக் கொள்ளக் கூடிய தையல் இயந்திரம் வரையற்ற அலங்காரத் தையல்களை, ப்ரத்யேக உபகரணங்களின்றியே, எளிதில் நன்கு முடித்துக்கொடுக்கும் இதைக்கொண்டும், தையல் தொழில் காரர்களைப்போலவே பித்தான் துளையிடுதல், பித்தான் தைத்தல் ஒட்டு வேலைகள், சரிகை பொருத்தல், கரை தைத்தல், இழை கூட்டல் முதலிய வேலைகளை நீங்களே கச்சிதமாகச் செய்யக்கூடுவதோடு, புதுப்புதுப் பாஷன்கள் உண்டாக்கவும் கூடும்.
ஸிங்கர்* உலகெங்கும் விரும்பப்படுவது...
ஸிங்கர் ஸுயிங் மெஷின் கம்பெனி.
வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் அமெரிக்க ஐக்ய நாடுகளில் இணைக்கப்பட்டது
* ஸிங்கர் மான்யுபாக்சரிங் கம்பெனியின் டிரேட் மார்க்.
SEWING MACHINE

சக்கரவர்த்தித்

26. வனம் சென்றனர்!

குமாரன் மரவுரி தரித்துக் கடைசியாகப் பேசியதைக் கேட்ட அரசன் மனமுடைந்து படுக்கையில் கிடந்தான். ராமனை நினைத்துக் கொண்டு அழுதான். பேச முடியவில்லை.

பேசுவதற்குக் கொஞ்சம் சக்தி வந்ததும், "நான் எத்தனையோ கன்றுகளைக் கொன்று தாய்ப் பசுக்களை இம்சித்திருக்க வேண்டும். இல்லாவிடில் இந்தத் துக்கம் எனக்கு நேர்ந்திராது. மரணமும் நாம் வேண்டுகிறபோது நம் இஷ்டப் பிரகாரம் வராது. கைகேயினுடைய இம்சையை நான் அனுபவிக்க வேண்டியதாக இருக்கிறது."

"அக்னி தேவனைப் போல் எழில் கொண்ட என் மகன் தன் உடையைக் கழற்றி விட்டு மரவுரியைத் தரித்தான். நானும் பார்த்துக் கொண்டு உயிருடன் இருக்கிறேன்...ராம......ராம...ராம......வனம்போய் விட்டாயா?" என்று முணுமுணுத்துக் கொண்டு படுக்கையில் அரை நினைவாகக் கிடந்தான்.

பிறகு தெளிந்து "சுமந்திரனே, ரதம் கொண்டு வந்து குழந்தைகளையும் ஜானகியையும் ஏற்றிக் கொண்டு ராஜ்யத்து எல்லை வரையில் போ!" என்றான்.

* * *

லக்ஷ்மணன் சுமித்திரா தேவியின் பாதங்களைத் தொட்டு வணங்கி, "அம்மா!" என்று சொல்லி, வேறு பேச்சில்லாமல் நின்றான்.

அவனைக் கட்டியணைத்துச் சுமித்திரை உச்சி மோந்து, "நீ அண்ணன் பேரில் வைத்திருக்கும் அன்பே போதும், உன்னைப் பெற்றதின் பெரும் பாக்கியம் அடைந்து விட்டேன். குழந்தாய், ராமனைக் காப்பது உன் கடமை. வனத்தில் மிக ஜாக்கிரதையாக அண்ணன் பக்கத்தில் எப்போதும் இருக்க வேண்டும். தம்பிக்கு அண்ணன் குருவும் அரசனுமே யாவான். இது நம் குலத்தின் தருமம். போய் வருவாய், லக்ஷ்மணா! காட்டில் ராமனே உனக்குத் தந்தை; ஜானகியே நான்; இதை அறிவாய். வனத்தையே அயோத்தியாகப் பாவிப்பாய். சந்தோஷமாகப் போ, என் அன்புக்குரிய மகனே!" என்றாள்.

* * *

ராமாயணக் கதையில் அதிகம் பேசாத மகாஞானி, எதையும் முதிர்ந்த அறிவுடன் சரியாக உணர்ந்து நடந்து கொள்ளுகிறவள் சுமித்திராதேவி. ராமனுடைய அவதார ரகசியம் சுமித்திரைக்குத் தெரிந்திருந்ததாகப் பெரியோர்கள் சொல்லுவார்கள். கௌசல்யா தேவியைப் போல் மகனைத் தடுத்துப் பேசாமல் "போய் வருவாய்" என்று சுமித்திரை தன் மகன் லக்ஷ்மணனுக்குத் தைரியமாகச் சொன்னாள்.

"ரதத்தில் ஏறுவாய் சக்கரவர்த்தித் திருமகனே! புகழின் சிகரமே! உனக்கு மங்களம். எங்கு செல்ல வேண்டுமோ, சொல்லுவாய். உனக்கு மங்களம். பதினான்கு வருஷம் இப்பொழுதிலிருந்தே ஆரம்பமாகி விட்டது, ராஜகுமாரா!" என்றான் சுமந்திரன்.

* * *

சீதை சிரிப்பும் சந்தோஷமுமாகத் தேரில் ஏறினாள். அவளுக்கு வேண்டிய துணிமணிகளையெல்லாம் மாமி



திருமகள்

கௌசல்யை கட்டிக் கொடுத்திருந்தாள். இரு சகோதரர்களுடைய கவசங்களும் ஆயுதங்களும் கிழங்கு தேடி வெட்டிக் கொள்வதற்கான குந்தாலியும் கூடையும் தேரில் வைக்கப் பட்டன. வன வாசத்துக்கு முக்கியமாகக் கூடையும் குந்தாலியும் வேண்டும்.

ராம லக்ஷ்மணர்களும் ஏறினார்கள். சுமந்திரன் தேரை ஓட்டினான்.

இந்தக் கட்டத்தில் கொஞ்சம் நின்று நாம் ஆண்டவனைத் தியானிக்கலாம். வனவாச ஆரம்பமாகிய இந்தப் புண்ணிய கட்டத்தில் நம்முடைய பாப எண்ணங்களை விலக்கித் தூய்மையடைய விரும்பிப் பிரார்த்திப்போமாக. சத்தியம், தீரம், அன்பு இவை ராமாயணத்திலிருந்து நாம் பெறும் பிரசாதம். அதற்காகவே தான் ராமாவதாரம். மரவுரி உடுத்திய சக்கரவர்த்தித் திருமகனையும் தம்பி லக்ஷ்மணனையும் ஜானகியையும் மனத்தில் நிறுத்தி ஆண்டவன் அருள் பிரசாதத்தைக் கேட்போமாக.

ராஜாஜி

"இழுத்துப் பிடி, இழுத்துப் பிடி, சாரதியே! ரதத்தை மெள்ள ஓட்டு! ராமன் முகத்தையாவது நன்றாகப் பார்ப்போம்" என்று தெருவில் நின்ற ஜனங்கள் கத்தினார்கள்.

"ஐயோ, இப்பேர்ப்பட்ட புத்திரர்களைப் பெற்றுவிட்டு, காட்டுக்கு அனுப்புகிறார்களே! இவர்களைப் பெற்ற தாய்மார்களுடைய வயிறு எரியாதா? உயிர் நிற்குமா? பார்த்தாயா வைதேஹியை? இவளல்லவோ புண்ணியவதி! இந்த லக்ஷ்மணன் அல்லவோ பாக்கியவான்! இவனல்லவோ ஒரு தம்பி? தருமம் அறிந்த வீரன்!"

இப்படியெல்லாம் பேசிக் கொண்டு ரதத்தைத் தொடர்ந்து நகரத்துஜனங்கள் ஓடினார்கள். அவர்களுடைய துக்கம் ஆறாகப் பெருகிற்று.

ஒரு பக்கம், "ரதத்தை வேகமாகச் செலுத்து" என்கிறான் ராமன். ஜனங்களோ, "மெள்ள மெள்ள!" என்கிறார்கள். கூட்டமோ மிகப் பெருங் கூட்டமாகப் போயிற்று.

எப்படியோ சமாளித்துக்கொண்டு சுமந்திரன் ரதத்தை அயோத்தியை விட்டு வெளியே செலுத்தினான். நகரம் துக்கத்தில் மூழ்கிற்று. ஒவ்வொரு வீட்டிலும் கண்ணீரும் உபவாசமும் சிந்தனையுமாக இருந்தது.

* * *

அரசன் அந்தப்புரத்தை விட்டு வெளியே வந்து ரதம் புறப்பட்டதைப் பார்த்துக் கொண்டு வெகு நேரம் நின்றான். தேர் கிளப்பிய தூசியையே ராமனாகப் பாவித்து அந்தத் தூசி கண்ணுக்குத் தெரியும் வரையில் பார்த்துக் கொண்டு நின்றான். அந்தத் தூசியும் மறைந்து போன பின் 'ஐயோ!' என்று கதறிக் கீழே விழுந்தான். ஒரு பக்கம் கௌசல்யையும் ஒரு பக்கம் கைகேயியும் இருந்தார்கள்.



தசரதன் கைகேயியைப் பார்த்துச் சொன்னான்: "பாவியே! என்னைத் தொடாதே. நெறி தவறியவளே, உன் முகத்தைப் பார்க்க எனக்கு வேண்டியிருக்கவில்லை. உனக்கும் எனக்கும் சம்பந்தம் அற்றது. உன்னை விட்டேன்! விட்டேன்!" என்றான்.

"பரதனும் இதற்குச் சம்மதித்து ராஜ்யத்தைச் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டானேயானால் எனக்காக அவன் நீர்க்கடன் செய்தாலும் அது என்னைச் சேராது" என்றான்.

"ராமன் எவ்வாறு காட்டில் வசிப்பான்? கல்லோ கட்டையோ தலைக்கு வைத்துத் தரையிலா படுப்பான்? ஐயோ, அவன் எவ்வாறு கிழங்கும் காயும் உண்டு பிழைப்பான்?"

இப்படிப் பலவாறு பிரலாபித்தான். தானே நெருப்பில் கைவைத்துக் கையைச் சுட்டுக் கொண்டு அழுவதுபோல் தசரதன் தானே செய்த காரியத்தின் முடிவை எண்ணி எண்ணிப் பிரலாபித்தான்.

"கைகேயி, நீ சுகமாக இரு. உன் காரியத்தை நடத்தி முடித்தாய் அல்லவா? விதவையாகிச் சந்தோஷமாக இரு!" என்று அவளை நினைத்து நினைத்துக் கோபாவேசமானான். மயானத்தில் ஸ்நானம் செய்து திரும்பிய நிலையில் அந்தப்புரம் போய்ச் சேர்ந்தான்.

"இங்கே வேண்டாம். என்னைக் கௌசல்யை வீட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்த்து விடுங்கள்" என்றான்.

அவ்வாறே செய்தார்கள். கௌசல்யா தேவியின் அந்தப்புரத்தில் தசரதன் பிரலாபித்துக் கொண்டு படுத்தான்.

* * *

நடு ராத்திரியில் "கௌசல்யா, நீ இருக்கிறாயா? கைகளால் தொட்டுக் காட்டு. என் கண்களில் திருஷ்டி போய் விட்டது, ராமனுடன் போய் விட்டது" என்றான்.


கௌசல்யா தேவியின் துக்கமோ, மிகப் பெரிது. தன் துக்கத்தையும் பொறுத்து அரசனுக்கு அவள் என்ன சமாதானம் சொல்ல முடியும்?

"இராத்திரி நேரங் கூட நடு மத்தியான வெய்யிலைப் போல் உடலைச் சுடுகிறதே" என்று அவளும் அழுதாள்.

சுமித்திரை கௌசல்யைக்குச் சொன்னாள்: "அக்கா! சாஸ்திரமும் தருமமும் தெரிந்த நீ ஏன் துக்கப்படுகிறாய்? மற்றவர்களுக்கு வழி காட்ட வேண்டிய நீ இப்படித் தைரியம் இழக்கலாகாது. சத்தியத்துக்காக அல்லவோ ராமன் வனம் சென்றிருக்கிறான்? ராஜ்யத்தைத் துச்சமாக எண்ணித் தந்தையைச் சத்தியவான் ஆக்குவதே தன் கடமை என்று வனம் சென்ற தீரனை மகனாய்ப் பெற்ற நீயல்லவோ பாக்கியசாலி? கஷ்டமான தருமத்தைக் குறைவற நடத்திப் பயனடையும் உன் மகனைப் பற்றி நீ துக்கப்படலாமா? முன்னோர் வழியில் நடந்து அனந்தமான — முடிவில்லாத — புகழ் பெறும் ராமனைப் பற்றி நாம் துயரப்படலாகாது. லக்ஷ்மணனும் அவனுடன் சென்றானே என்று என் மகனைப் பற்றி நான் பெருமைப் படுகிறேன். வன வாசத்தின் கஷ்டங்களை நன்றாகத் தெரிந்தும் ஜானகி உன் மகனுடன் சென்றிருக்கிறாளே! ராமனுடைய கீர்த்தி மேலோங்கிப் பிரகாசித்து உலகமெல்லாம் ஒளி வீசும். நாம் துக்கப்படலாகாது. மகாத்மாவான உன் மகனுடைய பரிசுத்தமும் உத்தம குணங்களும் அவனுக்குப் பூரண கவசமும் காப்புமாகும். சூரியனுடைய வெய்யில் அவன் உடல்மேல் பட்டாலும் அது சுடாது. காற்றும் அவன்மேல் குளிர்ந்து வீசும். இரவில் தூங்கும்போது அவனுடைய புண்ணிய தேகத்தை சந்திரனுடைய கிரணங்கள், பெற்ற குழந்தையைத் தகப்பன் தழுவி ஆலிங்கனம் செய்வதுபோல், அவன்மேல் வீசிக் காப்பாற்றும். நம்முடைய வீரராகவனைப் பற்றி நீ கவலைப்படாதே! எந்தப் பகைவனும் அவனை எதிர்த்து உயிருடன் மீள முடியாது. நம்முடைய ராமன் சர்வ கல்யாண குணங்களும் பொருந்தியவன், சூரன், அவன் நிச்சயம் திரும்பி வந்து அயோத்தியாதிபதியாக சிம்மாசனம் ஏறுவான். லோகநாதனே ராமன். உன் மருமகள் சீதை அவனுடன் சென்றிருக்கிறாள். சீதை வேறு, லக்ஷ்மி வேறல்ல. திரும்பி வந்ததும் பூதேவியையும் ராமன் அடைவான். நீ சந்தேகப்படாதே. அவன் வனம் போவதைப் பார்த்த நகரத்து ஜனங்களுடைய அனுதாபத்தைப் பார்த்தாய். என் வீர மகன் வில்லும் கத்தியும் கையில் தாங்கி அவனைக் காக்கக் கூடவே போயிருக்கிறான். ராமனுக்கு ஒரு குறையோ பயமோ கிடையாது. செய்த பிரதிக்ஞையை முடித்து விட்டு அவன் திரும்பி வருவதை உன் கண்ணாலேயே பார்ப்பாய். சோகத்தை விடு. நான் சொல்லுவது சத்தியம். சந்திரனைப்போல் பூரண கலையுடன் திரும்பி வந்து உன்

10 லக்ஷம் குடும்பங்களுக்குப் போதுமான உணவு!

பம்பாய் நகருக்கு அருகிலுள்ள டிராம்பேயில் ஸ்தாபிக்கப்படும் பர்மா-ஷெல்லாரின் ரிபைனரி இந்தியாவிலேயே மிகப்பெரியது. இங்கு தயாரிக்கப்படும் மண்ணெண்ணெய் இந்நாட்டிலுள்ள 10 லக்ஷம் குடும்பங்களுக்கு ஒரு வருஷத்தில் பிரதிதினமும் மண்ணெண்ணெய் ஸ்டவ்வில் உணவை சமயல் செய்து கொள்வதற்குப் போதுமானதாகும்.



பர்மா-ஷெல் ... பாரத நாட்டின் வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறது.

பாதங்களைத் தொட்டு வணங்கி நிற்பதைப் பார்ப்பாய். அப்போது உன் கண்களிலிருந்து ஆனந்தக்கண்ணீர் பெருகும். என் அன்புக்குரிய கௌசல்யே! துக்கம் வேண்டாம். மூவரும் திரும்பி வருவார்கள். துக்கப்படும் அந்தப்புரத்து ஜனங்களுக்கு ஆறுதலும் தைரியமும் நீ சொல்ல வேண்டும். அப்படியிருக்க நீயே மனமுடைந்து நிற்கிறாய். வேண்டாம். இந்த உலகத்தில் ராமனைப்போல் தருமத்தில் உறுதியாய் நிற்பவன் வேறு யார்? அதைப் பற்றி நாம் துக்கப்படலாமா? நீ பெருமைப்பட வேண்டும்."

இவ்வாறு சுமித்திரை தேற்றினாள். சுமித்திரா தேவியின் தைரியமான வார்த்தைகளைக் கேட்டு கௌசல்யையின் துக்கம் ஓரளவு அகன்றது.

* * *


ராமனுடைய தேருடன் கூடவே நகரத்து ஜனங்கள் பெருங் கூட்டமாகத் தொடர்ந்து சென்றார்கள்.

"வனம் போக வேண்டாம், திரும்புங்கள்" என்று ரதம் போவதைத் தடுத்துக் கொண்டு ஓடினார்கள்.

"தகப்பனாரைச் சத்திய சந்தராகச் செய்வதற்காக நான் வனம் போகிறேன். இதற்கு நீங்கள் துக்கப்படலாகாது. என்னை நிறுத்த வேண்டாம்" என்று எவ்வளவு கேட்டுக் கொண்டும் அவர்கள் விடவில்லை, கூடவே சென்றார்கள். ராமன் பேரில் அவர்களுக்கிருந்த அளவற்ற பிரியத்தினால் என்ன சொல்லியும் "வனம் போக வேண்டாம்! வனம் போக வேண்டாம்!" என்று சொல்லிக் கொண்டு ரதத்தோடு ஓடினார்கள்.

ராமன் ரதத்தை நிறுத்தி அன்பு நிறைந்த பார்வையுடன் அவர்களுக்குச் சொன்னான்:

"அயோத்தி நகரத்து மக்களே! என் மேல் நீங்கள் வைத்திருக்கும் பிரியமும் கௌரவமும் நான் அறிவேன். அதையெல்லாம் நீங்கள் இனி பரதன்மேல் செலுத்த வேண்டும். அதுவே எனக்கும் திருப்தி தரும். சீலமும் சகல கல்யாண குணங்களும் பொருந்தியவன் பரதன். அவன் மனம் திருப்தி யடையுமாறு நடந்து கொள்ளுங்கள். அவனுக்குச் செய்ய வேண்டியதை யெல்லாம் சரியாகச் செய்யுங்கள். அவன் வயதில் சிறியவனாக இருந்தாலும் ஞானத்தில் முதிர்ந்தவன். வீரமும் மென்மையும் இரண்டும் கலந்த சிரேஷ்டமான உள்ளம் பெற்றவன், உங்களை க்ஷேமமாகக் காப்பாற்றும் சக்தி அவனுக்கு உண்டு. அவனே உங்கள் நாதன். தகப்பன் சொல்லைச் சத்திய வாக்காகச் செய்வதற்கு நான் வனம் போகிறேன். பரதனை யுவராஜனாக அரசர் நியமித்திருக்கிறார். அவன் அந்த பதவிக்குத் தகுந்த குணங்களைப் பெற்றவன். மகாராஜா விதித்தபடி நானும்நீங்களும் எல்லோரும் நடக்க வேண்டும். தந்தைக்கு உண்டாகும் துயரத்தைப் போக்க நீங்கள் எல்லா முயற்சிகளும் செய்ய வேண்டும்."



வான்கார்டு இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டின் மானேஜர் ஸ்ரீ ஏ. எஸ். மணி, எம்.ஏ., பி.எல்., எப்.ஐ.ஏ. அவர்களுக்கும் போர்ட்பிளேர், கால்நடை அதிகாரி ஸ்ரீ எம். கே. ஸ்ரீனிவாசன் அவர்கள் புதல்வி சௌ. ஜெயலக்ஷ்மிக்கும் 9-9-54ல் சென்னை சேத்துபட்டு, பச்சையப்பன் ஹாஸ்டல் ரோடு "ராம பவன"த்தில் திருமணம் சிறப்பாக நடந்தேறியது. வாழ்க, மணமக்கள்!

இப்படி ராமன் அவர்களுக்குப் புத்திமதியும் நல்ல வார்த்தையும் சொன்னான். ஆனால் அவர்களோ, ராமனுடைய வார்த்தைகளில் நிறைந்திருந்த தருமமும் நீதியும் அன்பும்கண்டு முன்னை விட அதிகமாகவே அவனை விரும்பினார்கள்.

சிரேஷ்ட குணம் பொருந்தியவர்களும் வயதில் மிக முதிர்ந்தவர்களுமான பிராமணர்கள் சிலர் வேகமாகப் போகும் தேரைப் பார்த்து, "ஹே, குதிரைகாள்! ஏன் எங்கள் ராமனை வனம் கொண்டு போகிறீர்கள்? வேண்டாம்! குதிரைகளுக்கு ஓசைப்புலன் மிகக் கூர்மையானது என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். நாங்கள் சொல்லுவதைக் காதில் வாங்கி நின்று ராமனைத் திருப்பிக் கொண்டு வந்து எங்களிடம் விட்டு விடுவீர்களாக!" என்று புலம்பினார்கள்.

இப்படி வயோதிக அந்தணர்கள் இறைஞ்சுவதைக் கண்டு ராமன் தேரை

நிறுத்தினான். மூவரும் பிறகு தேரிலிருந்து இறங்கிக் காலால் நடந்து சென்றார்கள்.

பாமர ஜனங்களும் நகரத்து முக்கியஸ்தர்களும் ஞானமும் வயதும் விரத நியமங்களால் சித்தியும் அடைந்த அந்தணர்களும் அயோத்தியில் பறக்கும் பறவைகளுங் கூட ராமனை வனம் போக வேண்டாம் என்று வற்புறுத்தி வருவதைப் பார்த்து தமஸா நதி குறுக்கே வந்து தடுத்தது போல் தோன்றியது. தமஸா நதிக் கரையில் தேர் நின்றது. சுமந்திரன் குதிரைகளை அவிழ்த்து விட்டுத் தண்ணீர் காட்டிப் புல் மேய விட்டான்.

"லக்ஷ்மணா! இதுவே நம்முடைய வனவாசத்தில் முதல் ராத்திரி. இந்த புண்ணிய நதிக் கரையில் இன்று தங்குவோம். வனவாசம் ஒன்றும் கஷ்டம் இல்லை. பார், வனத்திலுள்ள பக்ஷிகளும், மிருகங்களும் மரங்களுங்கூட நம்மிடம் அநுதாபம் காட்டுவது போல் சப்தமும் காட்சியும் அளிக்கின்றன. ஆனால் அயோத்தியையில் நம்முடைய பெற்றோர்களின் துயரத்தை நினைத்தால் கஷ்டமாகத்தான் இருக்கிறது. பரதனுடைய குணங்களை நினைத்துத் தைரியம் அடைகிறேன். அவன் நம்முடைய பெற்றோர்களைப் பிரியமாகக் கவனித்துக் கொள்வான். சந்தேகமில்லை. சுமந்திரரே, குதிரைகளுக்கு வேண்டியதைச் செய்யவும்" என்றான் ராமன்.

பிறகு நதியில் மாலை வந்தனங்கள் செய்துவிட்டு ராமன், "இன்று உபவாசமிருக்கலாம். இது நம்முடைய வனவாச ஆரம்ப ராத்திரி. லக்ஷ்மணா! நீ என்னுடன் இருக்கிறபடியால் எனக்கு ஒரு கவலையுமில்லாமலிருக்கிறது" என்றான்.

ராமனுக்கும் சீதைக்கும் படுப்பதற்குப் புல் பரப்பி அமைத்துக் கொடுத்து லக்ஷ்மணன் சுமந்திரனுடன் பேசிக்கொண்டே இரவைக் கழித்தான்; தூங்கவில்லை.


• • •

அதிகாலையில், விடிவதற்கு முன் ராமன் எழுந்திருந்து சுமந்திரனைப் பார்த்து, "நகரத்து ஜனங்கள் ஆற்றங்கரையில் எங்கெங்கோ படுத்து ஓடி வந்த களைப்பினால் நன்றாகத் தூங்குகிறார்கள். எங்கள் பேரில் இவர்கள் வைத்திருக்கும் அன்பைப் பார்த்து எனக்குத் துக்கமாக இருக்கிறது. எப்படியாவது என்னை நிர்ப்பந்தித்துத் திருப்பி அழைத்துப் போவதே இவர்கள் எண்ணம்: ஆகையால் நாம் இப்போதே கிளம்புவோம்" என்றான்.

குதிரைகளைப் பூட்டி மெள்ள நதியைத் தாண்டி அக்கரை சேர்ந்தார்கள். அங்கே நின்று ராமன் சுமந்திரனுக்குச் சொன்னான்: "தேரை மறுபடி ஜனங்கள் தூங்கும் அக்கரைக்குச் செலுத்தி அங்கிருந்து அயோத்தியை நோக்கித் தேரைக் கொஞ்ச தூரம் ஓட்டிப் பிறகு தேரைத் திருப்பி இவ்விடம் ஓட்டி வந்தால் ஜனங்கள் விழிப்பதற்கு முன் நாம் ஏறிச் செல்வோம். தேரின் சுவடு பார்த்து நாம் நகரத்துக்குத் திரும்பிப் போய் விட்டதாக எண்ணி அவர்களும் ஊர் திரும்புவார்கள். இல்லாவிடில் இந்த ஜனக் கூட்டம் நம்மை விடாமல் பின் தொடர்ந்து வரும்" என்றான்.

சுமந்திரனும் அப்படியே செய்தான். தேர் திரும்பி வந்ததும் மூவரும் ஏறித் தெற்கு முகமாகச் சென்றார்கள்.

போட்டிக் கதை:



கேதாரியின் மனைவி

அலமேலு நாத்தம்

"கேதாரியை உனக்குத் தெரியுமா?"

அதுவரை ஒன்றுமே பேசாமல் இருந்தவர் திடீரென்று அப்படிக் கேட்டது என்னைத் தூக்கத்திலிருந்து விழிக்கச் செய்தது. மறுபடி நாங்கள் யாத்திரை செய்து கொண்டிருந்த நீராவிப்படகின் யந்திரத்தின் சத்தம் உரத்துக் கேட்கலாயிற்று.

"...ஊ...ஹூ...ம் உனக்கு அவரைத் தெரிந்திருக்க நியாயமில்லை. பார்த்தால் உனக்கு இருபத்தைந்து வயதுக்குமேல் இராது என்று தோன்றுகிறது. அப்படியானால் அவருடைய யுவதசை உன் காலத்துக்கு ரொம்ப முந்தினது. அதனால் உனக்கு அவரைத் தெரிந்திருக்காது. ஆனால் எனக்குக் கேதாரியை நன்றாகத் தெரியும்" என்று அவரே பதிலளித்துக் கொண்டார்.

கேதாரி, கேதாரி! யாரது இந்தக் கேதாரி! எதற்காக அவர் பெயரைக் கொணர்ந்து என் உணர்வில் புகுத்தி, என் அழகிய சிந்தனைகளையும் கனவுகளையும் கலைக்கிறார் இந்த மனுஷ்யர்! நான் சற்று எரிச்சலுடன் என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த அப் பெரியவரைத் திரும்பிப் பார்த்தேன்.

ஆனால் அவர் என்னைப் பார்க்கவில்லை. அவர் கண்கள் ஒன்றையும் குறிப்பாகப் பாராமல் தூரத்தில் எதையோ, சிந்தனையிலாழ்ந்தவாறு நோக்கிக் கொண்டிருந்தன.

பெரியாறு அணைக்கட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்த அந்தப் படகில், நான் அந்தப் பெரியவர் இரண்டே பேர்தான் இருந்தோம். மேலே யிருந்த படகின் அறையில் படகோட்டும் மாலுமி ஒருவன் இருந்தான். இருந்தாலும் படகின் அறைக்கு மேலிருந்த மொட்டைத் தளத்தில் நாங்கள் மாத்திரம்தான் இருந்தோம். அந்த மாலுமி கண்ணில் தென்படாததால் அவன் என்னுடைய நினைவை விட்டு அகன்றே விட்டான் என்று சொல்லலாம்.

என்னோடு வந்த அந்தப் பெரியவரை எனக்கு முன்பின் தெரியாது. தேக்கடி, பெரியாறு முதலிய இடங்களையெல்லாம் எனக்குச் சுற்றிக் காண்பிப்பதாகச் சொல்லித் தாமாகவே வலுவில் முன் வந்தார். ஆனால் வந்தவர் நாங்கள் பார்த்த இடங்களின் வனப்பைப் பற்றியோ, விசேஷத்தைப் பற்றியோ ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. இருந்தாலும் அவருடைய அந்த மௌனம்தான் எனக்கு ரொம்பப் பிடித்திருந்தது.

அப்பொழுதுதான் மெதுவாகப் பனிப் போர்வையை விலக்கிக் கொண்டு, உலகம் விழித்துக் கொள்ள ஆரம்பித்திருந்தது. சுற்றிலும் இருந்த காடுகளடர்ந்த பசும் மலைகளுக்கும், பள்ளத் தாக்குகளுக்கும் சூரியன் மெல்ல மெல்ல தங்கப் பூச்சு கொடுக்க ஆரம்பித்திருந்தான். படகு போய்க் கொண்டிருந்த நதியில் இலையற்று மொட்டையாக நின்ற பட்டுப்போன தேக்கு மரங்களெல்லாம், மறுபடி காலை வெளிச்சத்தில் தங்கள் மூடுவை ஒருவித சோக அமைதியுடன் பறைசாற்றிக் கொண்டிருந்தன. எல்லாவற்றையும்விட அந்த இடத்தில் நிலவிய அமைதிதான் என் மனத்தை ரொம்பவும் கவர்ந்தது.

உடனே, என் சிந்தனைகளைப் படிப்பவர் போல் அவர், "இந்த இடத்தைப் பார்த்தால், இதைப் போன்ற அமைதியான, சாந்தமான இடத்தை நீ பார்த்ததே இல்லை என்று சொல்லும் படியாக இருக்கிறதல்லவா!" என்று கேட்டார்.

அர்த்தமில்லாத, சம்பந்தமில்லாத பேச்சுக்கள் தான். இருந்தாலும் 'ஆமாம்' என்னும் பாவனையில் தலையசைத்து வைத்தேன்.

"இருந்தாலும், முன்பு இதே இடத்தில் மிக கோரமான ஒரு சம்பவம் நடந்தது."

"ம்...ம்...ம்."

"ஆமாம். உண்மையாகத்தான். அந்தச் சம்பவம் நடந்து சிலகாலம் ஆகிவிட்டது. அதோடு, அந்தச் சம்பவம் இந்த மாதிரி காலை வேளையில் நடக்கவில்லை. இரவில், நிலவொளியில்தான் நடந்

தது. சில சம்பவங்கள் பகல் வெளிச்சத்தைக் காண அருகதை அற்றவை என்பது என் அபிப்பிராயம்'' என்று வேறு கூறினர்.

சரி, மௌனம்தான் சூழ்ந்தது. கதையாவது சுவாரஸ்யமாக இருக்கட்டும் என்று நினைத்துக் கொண்டேன் நான்.

"அந்தக் கோர சம்பவம் நான் சொன்ன கேதாரியின் வாழ்க்கையில் நடந்த ஒரு துர்ச் சம்பவம். கேதாரிக்கு மனைவி இருந்தாள். அவள் பெயர் சியாமா. பெயரைக் கேட்டுவிட்டு அவள் நிறமும் அப்படித்தான் இருக்குமோ என்று எண்ணிக் கொண்டு விடாதே! ரோஜா இதழைப் பாலில் தோய்த்து எடுத்தாற் போலிருக்கும் அவளுடைய மேனியின் நிறம்.

"அவள் அழகைப் பற்றி வருணிக்க வேண்டுமானல், அது ஒருவராலுமே சாத்தியமாகாது என்று எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றால் அவளுடைய கவர்ச்சியிலிருந்த அடிப்படையான ஆகர்ஷண சக்தியை ஒருவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. உன்னத சௌந்தரியம் படைத்த எல்லா வஸ்துக்களிடமும் காணப்படும் ஒருவகை அற்புதம் கலந்த மர்மம் அவளிடம் நிரம்பிக் காணப்பட்டது என்பதைத் தவிர அவள் அழகைப்பற்றி வேறு ஒரு வருணனையும்தர இயலாது.

"கேதாரி, சியாமா இருவருமே ஒரு விசித்திரமான தம்பதிகள். கேதாரி மனைவியின் மீது தன் உயிரையே வைத்திருந்தார் என்று எல்லோரும் சொல்லிக் கொள்ளுவார்கள். பணத்திலேயே நீந்தித் திளைத்துக் கொண்டிருந்த கேதாரிக்கு ஒரு பெண்ணின் சாமானிய இச்சைகளையெல்லாம் பூர்த்தி செய்வது ஒன்றும் பிரமாதமான விஷயமல்ல. இருந்தாலும் சியாமா விரும்பினல், அவளுக்காகத் தம் உயிரையே கொடுப்பதற்குக் கூடத் தயங்கி இருக்க மாட்டார் என்று அவரைத் தெரிந்தவர்கள் பேசிக் கொள்ளுவார்கள்.

"கேதாரி அவள்மீது ஏன் அவ்வளவு காதல் வைத்திருந்தார்! அவர் அவள் அழகுக்கு அடிமையாகி இருந்தார் என்பது என்னவோ வாஸ்தவம் தான். ஆனல் அழகு, மோகம் என்பவை எத்தனை நாட்களுக்கு நீடித்திருக்கும்! உலக வழக்கத்துக்குப் புறம்பாக, கேதாரியின் அன்பு தேய்ந்து போவதற்குப் பதிலாக இன்னும் அதிகரித்துக்கொண்டு போவது அந்தத் தம்பதிகளைப் பார்க்கும் ஜனங்களுக்கெல்லாம் ஒரு ஆச்சரியமும், புதிருமாக இருந்தது.

"கேதாரியின் மனைவி சியாமாவும் ஒரு விசித்திரப் பிறவியாக இருந்தாள். சாதாரணப் பெண்களிடத்தில் காணப்படும் மனித உணர்ச்சிகளோ, குணாதிசயங்களோ, அவளிடம் ஒன்றும் இருந்ததாகவே தெரியவில்லை. எப்பொழுதும் தனிமையிலேயே சஞ்சரித்துக் கொண்டு, தன் போன்ற பெண்களுடனே, இதர மனுஷ்யர்களுடனே கலந்து பழகுவதற்கே சிறிதும் பிரியப்படாதவளாக இருந்தாள்.

"சிற்சில சமயங்களில் அவளுடைய அசாதாரணமான விருப்பங்கள், செய்கைகள், விபரீதமான பேர்களுக்கு இடமளிக்கும் வண்ணம் இருந்தன. சிறிது கூட அச்சமில்லாமல் இருட்டு வேளைகளில் கூட, ஜன நடமாட்டமில்லாத சோலைகளிலும், வனங்களிலும் திரிந்து கொண்டிருப்பாள். அதுவும் நிலாக் காலங்கள் வந்து விட்டால் அவளிடம் ஒருவித அதிசயமான அமைதியின்மை கண்டு விடும். இரண்டொரு பௌர்ணமி காலங்களில், அவள் தனிமையில் நிர்மானுஷ்யமான காடுகளிலோ, சோலைகளிலோ தன்னை மறந்து நடனமாடிக் கொண்டிருந்ததை நேரில் பார்த்ததாக எத்தனையோ பேர் சொல்லி இருக்கிறார்கள்.

"இதெல்லாம் போதாதென்று, கேதாரியை மணப்பதற்கு முந்திய அவளுடைய பூர்வ சரிதம் வேறு ஒருவருக்கும் தெரியாத மர்மமாக இருந்தது. அவள் யார்! அவளுடைய தாய் தகப்பனர் யார்! கேதாரியை மணப்பதற்கு முன் அவள் என்ன செய்து கொண்டிருந்தாள்! திடீரென்று அவள் எப்படி அவர் வாழ்க்கையில் வந்து முளைத்தாள்! இவைகளெல்லாம் ஒருவருக்குமே தெரியாத இரகசியங்களாக இருந்தன.

"எப்படியாவது அவைகளை அறிய விரும்பி, எத்தனையோ பேர்கள் சியாமாவிடமே அவைகளைப் பற்றித் தூண்டி விசாரிக்கப் பார்த்திருக்கிறார்கள். ஊ...ஹூ...ம். அவள்தான் ஒருவரையுமே அதிகம் நெருங்க விடுவதில்லையே! உண்மையைச் சொல்லப்போனல் அவள் சேர்ந்தாற்போல் நான்கு வார்த்தைகளுக்கு மேல் பேசியே ஒருவரும் கேட்டதில்லை.

"இப்படி இருக்கையில் கேதாரியின் மனைவியைப் பற்றிப் பலவித விபரீத வதந்திகள் வழங்கியதைக் குறித்து நாம் அதிசயப் படுவதற்கு ஒன்றுமில்லை.

"'அவளுக்குப் பைத்தியம். அவள் சித்தப் பிரமை பௌர்ணமிக்குப் பௌர்ணமி அதிகமாகிறது. பாவம், கேதாரி எதற்காகத்தான் அவளைப் போய்க் கலியாணம் பண்ணிக் கொண்டாரோ!' என்றார்கள் சிலர்.

"'அவள் ஒரு மனுஷ்யப் பிறவியாக இருப்பாள் என்றே எனக்குத் தோன்றவில்லை. ஒருவேளை மோஹினிப் பிசாசு பெண் உருவம் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறதோ என்னவோ!' என்பது வேறு சிலர் முடிவு.

"இவைகள் எல்லாவற்றிலுமே கொஞ்சம் உண்மை இருந்தது. என்றாலும் ஒன்றையும் முழு உண்மை என்று சொல்லுவதற்கில்லை. ஆனல் கேதாரியின் விவேகமில்லாப் பாசத்தினல் அவருக்கு ஏதோ பெரிய கெடுதிநேரவிருக்கிறது என்று எல்லோரும் ஒருமுகமாக எதிர்பார்த்தார்கள்.

"கேதாரியும், அவர் மனைவியும் சில நாட்கள் இங்கே தேக்கடியில் வந்து தங்கினர்கள். எவ்வளவு பிரும்மாண்டமான காரியமாக இருந்தா



லும், சியாமா வாயைத் திறந்து தன் இச்சையை வெளியிட வேண்டியதுதான், உடனே 'அல்லாவுதீனின்' பூதத்தைப் போல் கேதாரி உடனே அதைச் செய்து முடிப்பார்.

"தேக்கடியின் அடர்ந்த காடுகளும், மலைகளும் சியாமாவின் மனத்துக்குப் பிடித்த வண்ணம் அமைந்திருந்தன. தினந்தோறும் காலையிலும், மாலையிலும் நதியில், படகில் போய்விட்டு வருவது அவளுக்கு ரொம்பப் பிடித்திருந்தது. அவளுக்காக வென்றே இதேபோன்ற ஒரு சிறிய இரண்டு பேர்கள் வசிக்கக் கூடிய மொட்டைத்தளம் படைத்த படகு ஒன்றை வாங்கியிருந்தார் கேதாரி. அவளுக்குப் பிடிக்கிறதென்பதற்காகவே, இரவு வேளைகளில் கூடப் பிரத்தியேக அனுமதி வாங்கி அவளைப் படகில் அழைத்துக் கொண்டு போய்விட்டு வருவார்.

"ஒரு பௌர்ணமி அன்று கேதாரிக்குப் பிறந்த நாள். அதை முன்னிட்டு நிலா விருந்து ஒன்று ஏற்படுத்தி அதற்குத் தம் நண்பர்கள் சிலரை அழைத்திருந்தார்.

"அன்று இரவு நிலா விருந்து முடிந்ததும், எல்லோரும் நிலாவில் சற்று நேரம் உல்லாசமாகப் படகு யாத்திரை செய்துவிட்டு வருவதற்காகக் கிளம்பினார்கள்.

"பட்டப்பகல் போல் நிலா காய்ந்து கொண்டிருந்தது. 'ஜிலு ஜிலு' வென்று மலைக்காற்று வீசிக் கொண்டிருந்தது. அன்று நிலா விருந்திலும் படகு யாத்திரையிலும் பங்கெடுத்துக் கொண்டவர்களில் நானும் ஒருவன் என்று சொல்லத் தேவையில்லை. எங்கள் எல்லோருக்கும் படகின் அறைக்குள் இடமில்லை. அதோடு அத்தனை அழகிய இரவை, மூடிய இடத்துக்குள் உட்கார்ந்து வீணாக்க எங்கள் ஒருவருக்கும் மனதாகவில்லை. அதனால், இப்பொழுது நாம் இருவரும் செய்வது போலவே, அன்றைக்கு நாங்கள் எல்லோரும் படகின் மொட்டைத் தளத்தின் மேலேயே உட்கார்ந்து கொண்டோம்.

"மௌனமான இரவில் 'ப்...ர்...ர்...ர்' என்று படகின் யந்திரம் சுருதி கூட்டலாயிற்று. வெள்ளி வெளிச்சத்தில் மூழ்கிக் குளித்துக் கொண்டிருந்த அந்த இரவு, ஆயிரம் அதிசயங்களையும் மர்மங்களையும் பொதிந்து வைத்துக் கொண்டிருப்பது போல் ஆழ்ந்து இருந்தது. அப்பேர்ப்பட்ட இரவில் என்ன அற்புதம் வேண்டுமானாலும் நிகழும் என்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது எனக்கு. அதனால்தானோ என்னவோ, திடீரென்று, கேதாரியின் மனைவி படகின் மொட்டைத் தளத்தில், நிலவொளியில் நாட்டியமாட ஆரம்பித்தவுடன், அதைப் பற்றி அதிசயப்படவே எங்கள் ஒருவருக்கும் தோன்றவில்லை.

"ஹா! அன்று இரவு அவள் நாட்டியத்தைப் பார்த்தவர்கள் எல்லோரும் உலகத்திலேயே ஏதோ ஒரு அரிய காட்சியைக் கண்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். இரண்டு வெண் புறாக்கள் சிறகடித்து விளையாடுவதுபோல் நடமாடிக் கொண்டிருந்த அவளுடைய பாதங்களிலேயே ஒருவித இயற்கையான சங்கீதம் இருந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். இல்லாவிட்டால், அவள் அணிந்திருந்த வெறும் சலங்கைகளினால் மாத்திரம், எப்படி அந்த அமைதியான இரவில் அப்பேர்ப்பட்ட நாதத்தைக் கிளப்ப முடிந்திருக்கும்! சாதாரணமாக அவளிடத்தில் இலேசாகத் தென்பட்ட அமானுஷ்யத் தன்மை, அன்று இரவு அவள் நாட்டியமாடிக் கொண்டிருந்த பொழுது இன்னும் அதிகமாக்கப்பட்டுத் தெரிந்தது. அவள் நாட்டியம் ஒரு சாதாரண மானிடப் பெண்ணின் நாட்டியமாகவே தோன்றவில்லை.

"ஏதோ இந்திர ஜாலக்காரனின் மந்திரத்தில் வசியப்பட்டவர்கள் போல், நாங்கள் எல்லோரும் அவளைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தோம். மயக்கம் பிடித்த எங்கள் கண்களுக்கு, எங்களைச் சுற்றி, மெல்லிய பனிப் போர்வைக்குள் மௌனமாகத் தூங்கிக் கொண்டிருந்த மலைத் தொடர்களும், காடுகளும், வெள்ளி ஆறும், ஆழ்ந்த இரவும்கூட, அவளுடைய ஜாலத்தினால், அவள் நாட்டியத்துக்காகவென்றே ஒரு பின்னணியாகச் சிருஷ்டிக்கப்பட்ட திரையோ என்ற பிரமை ஏற்பட்டது.

"திடீரென்று எங்கேயோ தூரத்தில், சேர்ந்தாற்போல் ஆயிரம் வெள்ளி மணிகள் ஓசை செய்வது போன்ற ஒலி எழுந்தது. அவளுடைய கால்கள் படகின் தளத்தின் ஓரத்தில் வெகு வேகமாகச் சுழன்று கொண்டிருந்தன.

"...ஏனோ தெரியவில்லை, அவளுடைய அபாயமான நிலையைப் பற்றி எச்சரிக்க வேண்டும் என்று எங்கள் ஒருவரின் புத்தியிலும் எட்ட வில்லை.

"ஒரே ஒரு முறை அவள் கால் தவறியது. மறுகணம், சுமார் நூறு அடி ஆழமிருந்த



தண்ணீருக்குள், அவன் மின்னல் மறைவது போல் மறைந்தான்.

"அவனுக்கு இரண்டே அடி சமீபத்தில் உட்கார்ந்திருந்த கேதாரியால் கூட அவன் விழுவதைத் தடுக்க முடியவில்லை.

"நாங்கள் சுய உணர்வு பெற்று, மாலுமியிடம் சொல்லிப் படகைத் திருப்பிக் கொண்டு வருவதற்குள், அவனுடைய உயிரற்ற உடல் ஒரு தேக்கு மரத்தால் தேக்கப்பட்டுத் தண்ணீரின் மேலே மிதந்துகொண்டிருந்தது.

"ஹா! அந்தக் கோரக் காட்சியை நான் என் உயிருள்ள வரை மறக்கவே மாட்டேன். இன்னும் கூட சில சமயங்களில் அந்தக் கோரக் காட்சி என் கனவுகளில் தோன்றிப் பதறவைப்பது உண்டு!

"அதோடு கேதாரியின் மனைவியின் வாழ்க்கை முடிவடைந்து விட்டது. அத்துடன் அவர் வாழ்க்கையும் அஸ்தமித்துவிட்டது என்றே சொல்லலாம். அவன் மறைந்து சில நாட்களுக்குள்ளாகவே, ஏதோ சொல்ல இயலாத துன்பத்தினால் வாட்டப்பட்டவர் போல், அவர் ஒன்றுக்கும் உதவாத நடைப்பிணம் போல் ஆகிவிட்டார்.

"ஆனால் இதுதான் நான் சொல்லிய வரலாற்றுக்கு முடிவு என்று நினைத்துவிடாதே. அன்று இரவு படகில் உட்கார்ந்து அந்தச் சம்பவத்தைப் பார்த்தவர்கள் எல்லோரும், அது தற்செயலாக நேர்ந்த கோர ஒரு விபத்து என்றுதான் எண்ணிக் கொண்டார்கள். ஆனால் நான் அப்படி எண்ணவில்லை. அது ஒரு கொலை. விபத்துபோல் காண்பிக்கப் பட்ட ஒரு கொலை!"

"கொலையா!" அவர் அந்த வரலாற்றைச் சொல்லத் துவங்கியதிலிருந்து அதுதான் முதல் முறையாக நான் பேசியது.

"ஆமாம். கொலைதான். இது ஒரு வெறும் விபத்தாக மாத்திரம் இருந்ததென்றால், இந்த வரலாற்றை நான் எதற்காக உன்னிடம் இவ்வளவு நேரம் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும்.

"அது ஒரு கொலைதான். எனக்கு அதைப் பற்றி நிச்சயமாகத் தெரியும். இனி நான் சொல்லப் போவதிலிருந்து, வழக்கமாக உலகத்தில் ஜனங்கள் வெளித் தோற்றங்களை மாத்திரம் வைத்துக் கொண்டு ஊகித்துச் சொல்லுவதற்கும், உள்ளுக்குள் இருக்கும் உண்மைக்கும் எத்தனை வித்தியாசம் இருக்குமென்பதை நீயாகவே புரிந்து கொள்ளுவாய். கேதாரி தன் மனைவிக்காகத் தன்



கலா ரஸிக சிரோமணியும் கொடை வள்ளலுமான ஸ்ரீ வி. வி. சீனிவாசய்யங்கார் அவர்கள் வாழ்ந்திருந்த பி. ஆர். ஸ்குயர் என்னும் சென்னை நகர்ப் பகுதியில் ஸ்ரீ கோமல் சேஷாச்சாரியார் ஸ்வாமிகள் வால்மீகி ராமாயணச் சொற்பொழிவுகள் ஆற்றி வருகிறார்கள். இராமாயணத்தில் பாதுகா பட்டாபிஷேகம் நடந்த கட்டத்தை பி. ஆர் ஸ்குயர் வாசிகள் ஒரு பெரும் விழாவாக நாலு தினங்கள் சிறப்பாக நடத்தினார்கள். ஸ்ரீராம பாதுகைகளை யானை மேல் வைத்து மேள தாளங்களுடன் ஊர்வலம் விட்டார்கள். ஒரு நாள் அண்ணாமலை மன்றத்தில் ராஜாஜியின் தலைமையில் பாதுகா பட்டாபிஷேக நாடகமும் நடத்தினார்கள். நாடகத்தில் நடித்தவர் அனைவரும் நன்றாக நடித்தும், பாடிப் பேசியும் சபையோரின் பாராட்டுதலைப் பெற்றுக் கொண்டார்கள். யானை ஊர்வலத்தையும் நாடகத்தில் நடித்தவர்களையும் மேலே காணலாம். ராஜாஜிக்கு அருகில் வீற்றிருப்பவர் கோமல் ஸ்ரீ சேஷாச்சாரியார். ஒலிபெருக்கியில் பேசுகிறவர் அமரர் ஸ்ரீ வி. வி. சீனிவாசய்யங்காரின் புதல்வரான ஸ்ரீ வி. வி. ராமதுரை பி. ஏ., பி. எல்.

உயிரைக் கொடுக்க வேண்டியிருந்தால்கூட, அதற்காகத் தயங்க மாட்டார் என்று வெளி ஜனங்கள் எல்லோரும் சொல்லுவார்கள். ஆனால் அதே கேதாரிதான் ஒரு சாமானிய காரணத்துக்காகத் தம் மனைவியைக் கொலை செய்தார்."

"கேதாரியா!" இதென்ன இவர் விபரீத முடிவுகள் கொண்ட கதை புனையும் ஆசிரியரா!

"ஆமாம். கேதாரியேதான். உன்னால் நம்ப முடியவில்லையா! தம்பி. இது ரொம்ப விசித்திரமான வரலாறு. அதைவிட விசித்திரமானவர்கள் அவர்கள் இருவரும். கேதாரிதான் சியாமாவைக் கொலை செய்தார். எனக்கு அது நிச்சயமாகத் தெரியும். அவர் மிகவும் சாமர்த்தியமாக அந்தக் கொலையை உத்தேசித்து முடித்திருந்தார்.

"கேதாரியைப் பற்றி நான் இன்னும் சில விஷயங்களைக் கூறின பிறகு, அந்தக் கொலையைப் பற்றிய முழு விவரமும் உனக்குப் புரியும். கேதாரியைப் பற்றிச் சொல்லுமுன் நான் ஒன்றே ஒன்று சொல்லி விடுகிறேன். அவரைப் பற்றி நான் சொல்லுவது ஒன்றாவது தவறாக இருக்க முடியாது. ஏனென்றால் கேதாரியை எனக்குத் தெரிந்தாற்போல் வேறு ஒருவருக்கும் தெரிந்திருக்க முடியாது!

"வெற்றி, அதிகாரம், பட்டம், பதவி என்ற ஒருவித வெறி பிடித்து, படிப்படியாக ஏறிக் கொண்டு போய், எவ்வளவு நல்ல சுற்றும் உயரத்துக்குப் போனாலும் வெறி தணியாமல் இன்னும் மேலே மேலே ஏறிக் கொண்டு போக முயலுகிறார்களே, அந்தமாதிரி ரகத்தைச் சேர்ந்தவர் கேதாரி. அவருடைய தகப்பனார் அவருக்கு ஒரு குறையும் இல்லாமல் எல்லாவித சுக போகங்களையும், செல்வத்தையும் வைத்துவிட்டுப் போயிருந்தார். இருந்தாலும் கேதாரிக்கு அவை மாத்திரம் போதவில்லை. அவரை இள வயதிலேயே இந்த வெறி பிடித்துக் கொண்டது.

"அப்பேர்ப்பட்டவருக்குச் சியாமாவைப் போன்றவள் மனைவியாக வாய்த்தது பெரிய துக்ககரமான சம்பவம்தான்.

"சியாமாவைப் பற்றி வழங்கி வந்த வதந்திகளில் எல்லாவற்றிலும் கொஞ்சம் கொஞ்சம் உண்மை இருந்தது என்று சொன்னேன் அல்லவா! அவை எல்லாவற்றையும் பற்றிக் கேதாரிக்குத் தெரியும். ஏதோ பால்யத்திலிருந்த பலவீனத்தில் அவருடைய பந்தத்தை வரவேற்றுக் கொண்டார். பிற்பாடு அவள் ஒரு கால்கட்டாக மாறிவிட்டாள். அவர் அரசியலில் இறங்கி இருந்தார். அதனால் ஜனங்களின் விருப்பு, வெறுப்புகள், அபிப்பிராயங்கள் அவர் வாழ்க்கையைப் பெரிதும் பாதிக்கும் என்று நினைத்தார். அந்தக் காரணத்தினால் சியாமாவைப் போன்றவள் தனக்கு உற்ற துணைவி அல்ல என்று தீர்மானித்து விட்டார்.

"சாதாரணமாகத் தெளிவாக இருப்பவர்கள் ஒருவரும் அதைப் பற்றி அப்படியெல்லாம் யோசித்திருக்க மாட்டார்கள். கவலைப்பட்டிருக்க மாட்டார்கள். ஆனால் கேதாரியின் புத்தியும், திருஷ்டியும் வெறியின் காரணத்தால் சில சமயங்களில் மயங்கிக் கிடந்தன என்றேனே!

"அப்படியானால் அவர் அவளிடமிருந்து விலகிப் போய், அந்தப் பந்தத்தை அறுத்துக் கொண்டு போவதற்கென்ன! எதற்காக அவளைக் கொலை செய்தார் என்று கேட்கிறாயா!


"ஹூம்! அவர் அவளிடமிருந்து வேறு விதமாகத் தப்பிப் போக முயற்சி செய்யவில்லை என்று நீ நினைக்கிறாயா! ஆயிரம் முறைகளில் அவர் அவளிடமிருந்து தப்பி ஓடிப் போகப் பார்த்திருக்கிறார். ஆனால் என்ன பிரயோசனம்!

"சியாமாவின் அமானுஷ்யத் தன்மையைக் குறித்து வழங்கி வந்த வதந்திகளிலும் கொஞ்சம் உண்மை இருந்திருக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லையா! அதனால்தான் கேதாரி அவளிடமிருந்து தப்பி ஓடி இந்த உலகத்தில் எங்கு சென்றாலும் சரி, சியாமாவின் சதங்கைகளிலிருந்த ஒருவித சங்கீதம் அவரைத் துரத்திக் கொண்டு போய்ப் பிடித்திழுத்து வந்து விடும். ஒருவித அமானுஷ்ய காந்த சக்தி படைத்த அவளுடைய கண்கள் அவர் எவ்வளவு தூரத்தில் ஒளிந்திருந்தாலும் அவரைக் கண்டு பிடித்துக் கொண்டு வந்து விடும் போலிருந்தது.

"கடைசியில் கேதாரிக்கு அந்தப் பந்தத்தை அறுக்க ஒரே ஒரு வழிதான் தோன்றியது. மரணம்தான் அவர்கள் இருவரையும் பிரிக்க முடியும் என்று தீர்மானித்தார்.

"அதனால்தான் மாதக் கணக்கில், ஹூம், வருஷக் கணக்கில் இரவு கண் விழித்துத் திட்டமிட்டு, அந்த விபத்தை ஏற்பாடு செய்து வெற்றிகரமாக முடித்திருந்தார்.

"...ஆனால் என்ன பிரயோசனம்! சியாமா போன பிறகு கேதாரி உருப்படி ஆனார் என்று நினைக்கிறாயா! அதுதான் இல்லை. அவருடைய குற்றத்தின் பளுவே அவரை அழுத்தி அவர் வாழ்க்கையைப் பாழாக்கியது. அவர் குற்றத்துக்கு நேரடியான தண்டனையை அனுபவித்திருந்தால் கூட அவ்வளவு மோசமாக இருந்திராது, என்றைக்கு அது அவரைச் சுட்டிக் கொடுத்து



பொள்ளாச்சி ராஜா பிரிண்டிங் & பப்ளிஷிங்வொர்க்ஸ் உரிமையாளர் திரு B. ராஜமுத்து செட்டியார் அவர்கள் தம்பி சிரஞ்சீவி B. **கிருஷ்ணசாமிக்கும்** உடுமலை தாலூகா மானுப்பட்டி திரு P. கோபால் செட்டியார் அவர்கள் குமாரத்தி சௌபாக்கியவதி **விஜயலக்ஷ்மிக்கும்** 30-8-54 திங்கட்கிழமையன்று பொள்ளாச்சியில் வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. மணமக்களுக்கு ஏராளமான பரிசுகளும், வாழ்த்திதழ்களும் வழங்கப்பட்டன. மணமக்களை வாழ்த்தி ஏராளமான தந்தி, தபால்கள் வந்தன. திருமணத்திற்கு நகரப் பிரமுகர்களும், உத்தியோகஸ்தர்களும், நண்பர்களும் உறவினர்களும் ஏராளமாக வருகை தந்து சிறப்பித்தனர்.

வாழ்க, கிருஷ்ணசாமி - விஜயலக்ஷ்மி

அம்மா! உன் கனவுகள் உண்மையாகட்டும்



உங்கள் குழந்தை ஆரோக்கியமாகவும் திடமாகவும் இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள். உங்களுடைய ஆரோக்கியத்தையும் அழகையும் பாதுகாத்துக் கொள்ளவும் விரும்புகிறீர்கள். உங்கள் குழந்தையையும் உங்களையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள். உங்கள் இருவருக்கும் காட்லிவர் ஆயில் மிகவும் சிறந்தது. ஸெவன்ஸீஸ் சுத்தமான காட்லிவர் ஆயில் நேர்த்தியான இயற்கை உணவு.

சுவாசக் கோளாறுகளையும் ஜலதோஷத்தையும் நிவர்த்தி செய்து குடும்பத்தைப் பாதுகாக்கும் ஓர் சிறந்த சஞ்சீவி.

SevenSeaS



ஸெவன்ஸீஸ்

சுத்தமான காட் லிவர் ஆயில்

விவரங்களுக்கு :

கார் அண்டு கம்பெனி லிமிடெட்

த. பெ. 152 - 7814 - 1243

பம்பாய் - கல்கத்தா - மதராஸ்



தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பொக்கிஷதாரும் மற்றும் பல பொதுநலப் பணிகளில் ஈடுபட்டவருமான ஸ்ரீ ட்ரோஜன் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் அருமைக் குமாரி செல்வி சுசீலா அவர்களுக்கும், காரைக்குடி திரு ஏ. எம். கே. எம். ஸ்டி. முத்துக்கருப்பன் செட்டியார் அவர்களின் புதல்வர் செல்வன் சிதம்பரம் அவர்களுக்கும் செப்டம்பர் 9ல கானாடுகாத்தானில் மிகச் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. செட்டி நாட்டு அரசர் ஸ்ரீ முத்தையா செட்டியார் முதலிய பிரமுகர்களும் விஜயம் செய்து புதுமணம் புரிந்து கொண்ட தம்பதிகளுக்கு ஆசி கூறினர். மணமக்களுக்கு மத்திய சர்க்கார் மந்திரிகள், மாகாண கவர்னர்கள், இன்னும் பல ராஜ்ய மந்திரிகளிடமிருந்தும், இந்தியாவின் பல பாகங்களில் உள்ள பிரமுகர்களிடமிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன. திருமண வைபவத்தன்று ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு அன்னதானம் அளிக்கப்பட்டது. வாழ்க, மணமக்கள்!

விடுமோ என்ற பீதியும், வேதனையுமே, அவருடைய இரவுகளையும் பகல்களையும் நரகமாக்கியது.

"...அது போகட்டும். அவர் அன்று இரவு சியாமாவை எவ்வாறு கொலை செய்தார் தெரியுமா! அவர் கையாண்டது ரொம்ப எளிதான முறை. நீ, ஒரு குறுகிய மதில் சுவரின் மீது நடந்து கொண்டிருக்கும்பொழுது உன் காலில் ஒரு தேள் கொட்டினால் என்ன நேரிடும்! நீ கால் தவறிக் கீழே விழுவாய் அல்லவா! சியாமாவுக்கு அன்று அப்படித்தான் நேரிட்டது. அவள் படகின் தளத்தில் தன்னை மறந்து நாட்டியத்தில் சுழன்று கொண்டிருந்த பொழுது, அவள் காலில் 'சுருக்' கென்று ஏதோ ஒரு கூரிய வஸ்து தைத்தது. அதனால்தான் அவள் நிலைதடுமாறி விழ நேர்ந்தது.

"கேதாரி அதற்காக ஒரு சர்வ சாதாரணமான கருவியைத்தான், தனது கொலைக் கருவியாக உபயோகித்திருந்தார். அந்தக் கருவி என்ன தெரியுமா! கூரிய முனை படைத்த, சுமார் அரை அடி நீளமிருந்த ஒரு உடைந்த குடைக் கம்பி. விபத்துக்கப்புறம் இருந்த குழப்பத்தில் கேதாரி அந்தக் கருவியைத் தூர எறியத் தவறி விட்டார். அதை நான் இன்னும்கூடப் பத்திரமாகக் காப்பாற்றி வைத்துக் கொண்டிருக்கிறேன். இதோ பார்!"

உடனே அவர் தன் ஜேபிக்குள் கையை விட்டு அந்த உடைந்த குடைக் கம்பியை எடுத்துக் காண்பித்தார். அந்த விசித்திரமான கொலைக் கருவியை நான் கையில் வாங்கிக் கொள்ளாமலே அதிசயத்துடன் பார்த்தேன்.

"அப்புறம் இன்னொரு சமாசாரம். நான் இது வரை சொன்னதிலிருந்து சியாமா ரொம்பவும் விசித்திரமான பெண்ணாகத்தான் இருந்திருக்க வேண்டும் என்று நீ நினைப்பாய். ஆனால் உண்மையில் அவள் நீ நினைப்பது போலவோ, வெளி ஜனங்கள் கருதியது போலவோ அவ்வளவு விசித்திரமான பெண்ணல்ல. அவள் ஒருவருடனும் பேசுவதில்லை. எப்பொழுதும் தனிமையிலேயே சஞ்சரித்துக் கொண்டிருக்க விரும்புவாள்; அவளிடம் ஒருவித அமானுஷ்ய ஆகர்ஷண சக்தி இருந்தது என்பதெல்லாம் என்னவோ உண்மைதான். ஆனால் அவள் ஒவ்வொரு நிலாக் காலங்களிலும் தனிமையில் நாட்டியமாடியதெல்லாம் கேதாரி செய்த தந்திரங்களில் ஒரு முக்கிய பகுதி. இரண்டொரு முறை அவளாகவே, கேதாரிக்காக நிலா வெளிச்சத்தில் நாட்டியமாடிக் காண்பித்திருக்கிறாள். அதிலிருந்துதான் அவருக்கு அந்த யோசனையே தோன்றியது. அப்புறமெல்லாம் அவர் தூண்டுதலின் பேரில்தான் அவள் அப்படிச் செய்யலானாள்.

"ஆனால் கேதாரி நேரடியான தூண்டுதலினால் மாத்திரம் அப்படியெல்லாம் ஆட்டி வைக்கவில்லை. இள வயதில் கேதாரி சில நாட்கள் வைத்



செங்கோட்டை வட்டம், இலத்தூர் கிராமம் மிராசுதார் திரு ஆர். எஸ். அனந்தநாராயண அய்யர் அவர்கள் குமாரி செல்வி கிருஷ்ணம்பாளுக்கும், ஒய்வு பெற்ற ரயில்வே போர்டு உதவி டைரக்டர் திரு எம். கே. சங்கர அய்யரின் குமாரன் செல்வன் சீதாராமனுக்கும் ஆகஸ்டு முப்பதாம் தேதி இலத்தூரில் சிறப்பாகத் திருமணம் நடந்தது. திருமணத்துக்கு நண்பர்களும் உறவினர்களும் திரளாக விஜயம் செய்து மணமக்களுக்கு ஆசி கூறினர்.

வாழ்க, மணமக்கள் !

தியமும், மருந்துகளைப் பற்றிய இரசாயன சாஸ்திரமும் படித்திருந்தார். அதோடு அவருக்கு மனோதத்துவம், ஹிப்னடிஸம் போன்ற சாஸ்திரங்களிலும் கொஞ்சம் பரிச்சயம் உண்டு. இப்பொழுது அந்தக் கல்வியெல்லாம் அவர் உதவிக்கு வந்தன.

"சில மயக்க மருந்துகளை ஊசியின் மூலம் உடலில் செலுத்தி மயக்கம் ஏற்பட்டு, அந்த மயக்கம் தெளியும் சமயத்தில் மயங்கிக் கிடந்தவர்களிடத்தில், யாரேனும் ஏதாவது யோசனை சொன்னால், அதை இறுக்கிப் பிடித்துக் கொண்டு அதன்படி நடக்க ஆரம்பிப்பார்கள். இந்தமாதிரி மருந்து ரகத்தைச் சேர்ந்ததுதான் சோடா — அமாடில் என்ற மருந்தும். அதைக் கேதாரி அடிக்கடி சியாமாவுக்குக் கொடுத்தே அவ்வாறு பழக்கினார். சியாமாவை அவ்வாறு விசித்திரமாக நடந்து கொள்ளச் செய்வதில் கேதாரியின் 'ஹிப்னடிக்' தூண்டுதல் ரொம்பவும் வெற்றிகரமாக இருந்தது. அவ்வளவுதான்" என்று கூறி முடித்தார் அவர்.

இப்படியும் நடந்திருக்குமா !

"ஏன் ஸார், உங்களுக்குத்தான் இத்தனையும் தெரிந்து, உங்களிடம்தான் இத்தனை சாட்சியங்களும் இருக்கின்றனவே, அப்படி இருக்கையில் நீங்கள் ஏன் கேதாரியைப் போலீஸாரிடம் பிடித்துக் கொடுக்கவில்லை !" என்று கேட்டேன் நான்.

"ஹா ! இந்தக் கேள்வியை நீ கேட்பாய் என்று நான் முன்னமேயே எதிர்பார்த்தேன். நான் ஏன் கேதாரியைப் பிடித்துக் கொடுக்கவில்லை என்று கேட்கிறாயா ! ஏனென்றால் நான்தான் அந்தக் கேதாரி !" என்றார் பெரியவர்.

தவறுதலாக ஒரு முழுக் கொட்டைப் பாக்கை விழுங்கி, அது போய் என் தொண்டையில் மாட்டிக் கொண்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது எனக்கு.

நான் படித்த துப்பறியும் இலக்கியங்களில் இருந்த எச்சரிக்கைகளெல்லாம் என் ஞாபகத்துக்கு வந்தன. உள்ளூற ஒரு பீதியும் எனக்கு ஏற்பட்டது.

உணர்ச்சிகள் என் முகத்தில் பிரதிபலித்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

"பயப்படாதே தம்பி ! நான் உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன். என் இரகசியம் உனக்குத் தெரிந்ததைப் பற்றி எனக்குக் கவலையே இல்லை. இன்னும் ஒரு மாதத்துக்கு மேல் நான் தங்க மாட்டேன் என்று என் டாக்டர்கள் சொல்லி விட்டார்கள். என்னுள் இருக்கும் புற்று நோய் வளர்ச்சியை ஆபரேஷன் செய்தாலும் நான் பிழைப்பது சந்தேகந்தான் என்கிறார்கள்" என்றார் அவர்.

இருந்தாலும் கரையை அடைந்த பிறகும் எனக்கு அவருடன் போவதற்குத் தயக்கமாகத்தான் இருந்தது. எங்கள் படகை ஓட்டி வந்த மாலுமியுடனேயே நான் தயங்கி நின்றேன்.

"என்ன ஸார் ! அவர் உங்களிடம் ஏதாவது கதை சொன்னாரா ! அவருக்குக் கொஞ்சம் 'ஸ்கூரு லூஸ்'ங்க. யாரை இங்கே அழைத்து வந்தாலும், தன் மனைவியை முன்பு இங்கே நதியில் தள்ளிக் கொலை செய்து விட்டதாகச் சொல்லிக் கொள்ளுவார். அவரை நம்பாதது மாதிரி மாத்திரம் யாராவது காட்டிக் கொண்டால் போதும். உடனே பிரமாதமாகக் கோபம் வந்து விடும்" என்று கூறினான் மாலுமி.

அவன் என்ன சொன்னால் என்ன ! பத்து நாட்களுக்குப் பின்பு, கேதாரிநாதன், புற்றுநோய் ஆஸ்பத்திரியில், ஆப்பரேஷன் தியேட்டரில் இறந்து போனார் என்ற செய்தி என் காதில் விழும் வரையில் என் மனம் நிம்மதி அடையவில்லை.

நாலடியார்

சமணர்கள் தமிழுக்குப் புரிந்த அருந் தொண்டுகளில் எல்லாம் சிறந்தது நாலடியாராகும். சொற்சுவையும் பொருளாழமும் கொண்ட நானூறு பாடல்கள் கொண்டது இந்நூல். இதற்கும் பலர் உரை கண்டிருக்கிறார்கள். அவற்றில் எல்லாம் வைத்துத் தமிழிலக்கிய உலகில் போற்றப்படுவது பதுமனார் உரையாகும். தஞ்சை சரஸ்வதி மகாலிலுள்ள ஏடுகளில் மேற் கண்ட பதுமனார் உரையும், தருமர் என்பவரின் உரையும், பெயர் தெரியாத ஒருவரின் உரையும் இருந்தன. அவற்றை நல்ல முறையில் தொகுத்து, இலக்கியத் துறையில் ஆராய்ச்சி புரிபவர்களும், சாதாரணமாக நாலடியார் படிக்க விரும்புபவர்களும் படித்துப் பயன் அடையும் முறையில் தக்க பொருள் விளக்கங்களுடன் வெளியிட்டிருக்கிறார்கள்.

பதிப்பாசிரியர்கள் : எஸ். முத்துரத்தின முதலியார், எம். ஆர். கந்தசாமிப் பிள்ளை.

பிரசுரம் : எஸ். கோபாலன், சரஸ்வதி மகால் நிர்வாகக் கமிட்டி, தஞ்சை. விலை : முதல் புத்தகம் ரூ. 6. இரண்டாம் புத்தகம் 6—9—0.



நீங்கள் இன்று
புரோடெக்ஸ்
உபயோகித்தீர்களா?
நீங்கள் நாள் முழுதும் புதுமையுடனும்
வாசனையுடனும் இருக்க, உயர்ந்த,
புதிய புரோடெக்ஸ் ஆல்-பர்பஸ் டாய்லட்
பவுடர். மென்மையும், நறுமணமும்
சேர்ந்த புரோடெக்ஸ் குடும்ப முழுதுக்கும்
வெப்பத்தில் குளுமையும்
இனிமையும் தருகிறது.
ஸ்நானத்துக்குப் பின்
வாசனைப் பூஷணம். ஈரத்தை
உறிஞ்சி புதுமை தருகிறது.
குளுமை! குதூகலம்!
கோடையின் கொடுமையில்
நேர்த்தியும் மென்மை!
யும்-குழந்தைக்கு எற்றது.
மிக எடுப்பானது
உங்கள் வதனத்தை அழகு
படுத்தும் பவுடர்.
புதிது!!
PROTEX
All-Purpose
TOILET POWDER
புரோடெக்ஸ்
ஆல் பர்பஸ்
டாய்லட் பவுடர்
கால்கேட்டின் புதிய
சிறந்த தயாரிப்பு



ஒவல்டின்

திரும்ப ஆரோக்யத்தைப் பெற
அவளுக்கு உதவுகிறது!

ஜுரத்திற்குப் பின் ஏற்பட்ட சோர்வு, உடல் இளைப்பிலிருந்து அவள் மெச்சத்தக்க முறையில் மீண்டு வருகிறாள். கூடிய விரைவில் அவளை ஒவல்டின் அருந்தி வரும்படி டாக்டர் யோசனை கூறினார். இப்போது அவள் வேகமாக உடல் பலம் பெற்று வருகிறாள். போஷாக்கு நிறைந்துள்ள ''ஒவல்டின்'' அனாரோக்கியத்திலிருந்து மீட்டு வருகிறது.

''ஒவல்டின்'' சிறந்த இயற்கை ஆகாரச் சத்துக்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது. இத்துடன் பி & டி வைட்டமின்கள் சேர்ந்து உருவாகிறது. அதன் மனங்கவர் நறு மணம், அசக்தர்களாலும் சுலபமாக ஜீரணிக்கப்படக் கூடிய தன்மை ஆகிய சிறப்புகளின் காரணமாக, ஆரோக்கியமிழந்தவர்களுக்கு இது இன்றியமையாததாகிறது. ஆகவே ''ஒவல்டின்'' ஆஸ்பத்திரிகளிலும், நர்ஸிங் விடுதிகளிலும் உபயோகிக்கப்படுகிறது. உலகெங்கும் டாக்டர்களால் சிபாரிசு செய்யப்படுகிறது.

''ஒவல்டின்'' ஒன்றையே கேளுங்கள். போலிகளை மறுத்து விடுங்கள்.



IV. 442

வியாதியால் சோர்ந்த பிறகு ஆரோக்யம் பெற

ஒவல்டின்

வினியோகஸ்தர்கள்:

கிரஹாம்ஸ் ட்ரேடிங் கோ., (இந்தியா) லி-ட்.,

சனிக்கிழமைகளில் இரவு 8 முதல் 8-30 வரை ரேடியோ சிலோனில் (அதிர்வு 41.72 மீட்டர்கள்) ஒவல்டின் அமெச்சூர் நேரத்தைக் கேளுங்கள்.

வேதமூர்த்தியின் காதல்



ரா. பாலகிருஷ்ணன்



"ஜாங்கிரி எப்படியிருக்கிறது?" என்று கேட்டாள் பத்மா.

"ஓ! பேஷாயிருக்கிறதே!" என்றான் வேதமூர்த்தி. உண்மையிலேயே அதன் ருசி பிரமாதமாக இருந்தது. தவிர, தலை தீபாவளிக்கு மாமனார் வீட்டுக்கு வந்துள்ள மாப்பிள்ளை, அவன் மனைவியின் மலர்க் கரத்தால் கொடுக்கப்பட்ட ஜாங்கிரியின் சுவைக்குக் கேட்பானேன்?

"நிஜமாகத்தானே சொல்லுகிறீர்கள்?"

"நான் பொய் சொல்லுவதேயில்லை."

"அதிருக்கட்டும், ஜாங்கிரியைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் கேட்டேனே, ஏன் தெரியுமா?" என்றாள்.

"சொல்லேன்!"

"அதை என் கைகளாலேயே செய்தேன்! உங்களுக்காக வென்று..."

"அதை முதலில் சொல்லியிருக்கலாமே?"

"சொல்லியிருந்தால் மட்டும் என்னவாம்?"

"மெடல் கொடுப்பேன் என்று எதிர்பார்த்திருக்க மாட்டாயே? சமையற்காரியின் மகள்தானே, நீ? ஜாங்கிரி செய்வது உனக்குப் பெரிய காரியமா, பத்மா?" என்று கேலியாகச் சொல்லி விட்டு அவள் எழில் வதனத்தைப் பார்த்தான் வேதமூர்த்தி.

அவள் லேசாக முறுவலித்தாள்.

"ஏதேது! வாழ்நாள் முழுதும் சொல்லிக் காட்டுவீர்கள் போலிருக்கிறதே?"

"என்றென்றும் மறக்க முடியாத விஷயமாயிற்றே அது, பத்மா!" என்று அவள் மணி விரலைப் பற்றினான் வேதமூர்த்தி.

கீழேயிருந்து 'பத்மா' வென்ற குரல் கேட்டது. "இதோ வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே வேதமூர்த்தியின் மீது ஒரு மோகனப் புன்னகையை வீசி விட்டுப் புதுப் புடவை சலசலக்க மாடிப் படிகளில் கிடுகிடுவென்று இறங்கி மறைந்தாள் பத்மா.

சாய்வு நாற்காலியில் அமர்ந்து ஏதேதோ இன்ப நினைவுகளில் ஈடுபட்டான் வேதமூர்த்தி.

* * *

திடீரென்று வேதமூர்த்தியினிடம் தோன்றிய மாறுதல்களின் காரணம் அவன் நெருங்கிய நண்பர்களுக்கே எளிதில் விளங்கவில்லை. திருவள்ளூர் ரயில் நிலையத்தில் தன் தோழர்களுடன் வண்டியிலேறி உட்கார்ந்தானானால், சென்டிரல் வருகிற வரையிலும் வேதமூர்த்திக்கு இந்த உலகைப் பற்றிய நினைவே வராது. அவன் மட்டுமென்ன, அவன் நண்பர்களும் அப்படித்



செப்டம்பர் முதல் தேதியன்று பல்லாவரத்தில் "மறைமலை அடிகள் மன்றம்" முதலாண்டு விழாவும் மறைமலை அடிகளாரின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. மறைமலை அடிகளாரின் திரு உருவப் படத்தை அலங்கரித்து மேள வாத்தியம் முழங்க ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். மாலையில் பாரிப்பாக்கம் திரு கண்ணப்ப முதலியார் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் மறைமலையடிகளைப் பற்றிப் பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர். தமிழறிஞர்கள் மறைமலை அடிகளின் திரு உருவப் படத்தைச் சுமந்து நிற்பதை மேலே காணலாம்.

தான்! மூன்றாம் வகுப்புப் பெட்டியின் ஒரு மூலையில் தன் நண்பர்களுடன் சீட்டாடத் தொடங்கி விட்டால், பொழுது போவது எப்படித் தெரியும்? சென்னையிலுள்ள சர்க்கார் காரியாலயத்தில் அவனுக்கு நான்கு வருடங்களுக்கு முன்பு உத்தியோகம் கிடைத்தது. தினமும் திருவள்ளூரிலிருந்து தான் போய் வருகிறான். திருவள்ளூர்தான் அவனுக்குப் பூர்வீகம். அங்கே சொந்த வீடும், பெற்றோர்களும் இருந்தபடியால் சென்னைக்கு அன்றாடம் போய் வருவதுதான் சௌகரியமாகப் பட்டது அவனுக்கு. ரயில் பிரயாணம் அலுப்புத் தட்டாமலிருக்கத்தான் சீட்டுக் கச்சேரி இருக்கவே யிருக்கிறதே!

அந்த வேதமூர்த்தியா இன்று இப்படி மாறி விட்டான்! நான்கு வருடப் பழக்கத்தை ஒரே நாளில் உதறி விட்டானே! இப்போதெல்லாம் அவன் மூன்றாம் வகுப்புப் பிரயாணியல்ல. மூன்றாம் வகுப்பிலிருந்து 'இண்டர்' வகுப்புக்கு மாற்றிக் கொண்டான். இந்த மாறுதலின் காரணம் அவன் தோழர்கள் ஒருவருக்கும் விளங்கவில்லை.

கடந்த சில நாட்களாக அதே வண்டியில் திருவள்ளூரில் ரயிலேறிச் சென்னை வரைக்கும் பிரயாணம் செய்து வருகிறாளே ஒரு எழிலரசி—அவளைக் கேட்டாலல்லவா உண்மை விளங்கும்? சுமார் பதினெட்டு வயதிருக்கும் அவளுக்கு. படைப்புத் தேவனுக்கு ஒரு எடுத்துக் காட்டாகப் பருவத்தின் பூரண சோபையுடன் விளங்கினாள் அந்த யுவதி. கலை பொருந்திய வதனம். துருதுருவென்று கரு வண்டினையொத்த கண்கள். எடுப்பான நாசியின் ஒரு பக்கத்தில் மூக்குத்தி யொன்று பளபளத்தது. இடது கையில் லாகவத்துடன் பிடிக்கப்பட்ட சிற்சில புத்தகங்களுடன் அவள் ரயில் ஏறும் ஒயிலில் சொக்கி விட்டான் வேதமூர்த்தி. அன்று முதல் அவன் புது மனிதனாகி விட்டான். அவன் பழக்க வழக்கங்களும் மாறி விட்டன. இளாவர் ராணியிடமும், ஸ்பேட் ராணியிடத்திலும் அவனுக்கிருந்த மோகமெல்லாம் மாயமாய் மறைந்து விட்டது.

ஒரு வாரம் அதே வண்டியில் அந்த அழகு மங்கையுடன் பிரயாணம் செய்த பிறகும் அவள் யார், திருவள்ளூரில் எங்கேயிருக்கிறாள், எந்தக் கல்லூரியில், எந்த வகுப்பில் படிக்கிறாள் என்ற விவரம் எதுவும் அறிந்து கொள்ள முடியவில்லை அவனால்.

காலையில் ரயில் பிரயாணம் இப்போதெல்லாம் அவனுக்குத் தெவிட்டாத இன்பமாயிருந்தது. சௌந்தரிய தேவதையின் எதிரில் அமர்ந்து அவள் எழிலைப் பருகிய வண்ணம் பிரயாணம் செய்யும் ஒவ்வொரு நாளும், ரயில் இப்படியே ஓடிக் கொண்டிருக்கக் கூடாதா வென்று ஏங்குவான் வேதமூர்த்தி. அவ்வப்போது அவள் ஜாடையாகத் தன்னைக் கவனிப்பதை யுணர்ந்ததும் அவன் உள்ளம் பூரிப்பால் விரியும். ஒரு நாள் அவள் வரவில்லையென்றால், அன்று சூன்யமாக விருக்கும் அவனுக்கு. காரியாலயத்தில்கூட வேலையே ஓடாது. மனம் அமைதி யிழந்து தவிக்கும்.

'இத்தனை நாள் இல்லாமல் இப்போது திடீரென்று எங்கிருந்து வந்து முளைத்தாள், இந்த ரூபவதி? சலனமற்ற என் வாழ்க்கையிலே ஒரு புதிய ஜீவனைத் தோற்றுவித்த அந்தப் பெண் ஒருகால் இனி வரவே மாட்டாளோ? அப்படியானால்...! சே! என்ன அசட்டுத்தனம்! அவள் பெயரைக்கூடத் தெரிந்து கொள்ள வில்லையே! அவளுடன் ஒரு வார்த்தை பேசக்கூடச் சந்தர்ப்பமில்லாமல் போய் விட்டதே? சந்தர்ப்பம் தானே வந்து வாய்க்குமா? சந்தர்ப்பத்தை நானே சிருஷ்டித்துக் கொண்டிருக்க வேண்டும்' என்று ஏதேதோ எண்ணி மனம் புழுங்கினான் அவன். நாட்கள் ஓடின.

அன்று தீவிரமாகச் சிந்தனை செய்தான் வேதமூர்த்தி. 'உன் பெயர் என்ன?' என்று கேட்டிருந்தால் அவள் தலையை வாங்கியிருப்பாளா என்ன? இஷ்டமிருந்தால் சொல்லட்டும்; இல்லா விட்டால் பேசாம

விருந்து விட்டிருப்பான்! நஷ்டமொதுவுமில்லை. பெயரை விசாரிப்பதில் தவறென்ன? உம்... போனது போகட்டும். இனியும் இப்படியே செயலற்று இருந்தால் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போய்விடும். ஆகவே...' நீண்ட சிந்தனைக்குப் பிறகு அவன், ஒரு கடிதம் எழுதினான் :

"அன்புள்ள......,

உன்னைக் கண்டது முதல் என் உள்ளம் நிலையிழந்து தத்தளிக்கிறது. இது வரை நான் அனுபவித்தறியாத ஒரு அபூர்வ உணர்ச்சியால் பூரித்துப் போய் விட்டேன். பெருமைக்காகச் சொல்லவில்லை. எத்தனையோ பெண்களைத் தட்டிக் கழித்து விட்டேன், அவர்கள் அழகில்லை என்ற காரணத்துக்காக. பார்த்தவுடன் பரவசமடையச் செய்யும் உன் ரூபலாவண்யம் என்னைக் கொள்ளை கொண்டு விட்டது. உன் மனத்தையறியத் துடிக்கிறேன். காதல் என்ற சொல்லின் பொருளை இப்போது தான் என் வாழ்க்கையில் முதன் முறையாக அறியும் சந்தர்ப்பம் கிட்டியது. உன் அபிப்பிராயத்தை வெளியிட்டால் நன்றியுள்ளவனாயிருப்பேன். என் மனத்துக்குப் பிடித்த பெண்ணை மணந்து கொள்ளும் விஷயத்தில் என் பெற்றோர்கள் தடை சொல்ல மாட்டார்கள். உன் மறு மொழியை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். வேதமூர்த்தி."

சென்டிரல் ஸ்டேஷனில் வண்டியை விட்டு இறங்கும் சமயம் அசாதாரணத் துணிச்சலுடன் கடிதத்தை அந்த எழில் அரசியின் கையில் கொடுத்துவிட்டான் வேதமூர்த்தி.

* * *

இரண்டு நாட்களாகியும் அவளிடமிருந்து பதிலே வரவில்லை. அவன் ரயிலுக்கு வருவது கூட நின்று விட்டது. இனமறியாத பயம் ஒன்று அவன் மனத்தைக் கௌவியது. 'என்ன முட்டாள்தனம்! ஏன் அக் கடிதம் எழுதினேன்? அதை அவள் தன் பெற்றோர்களிடம் கொடுத்திருந்தால்...? சென்டிரலில் வண்டியை விட்டு இறங்கி நண்பர்களுடன் பேசிக் கொண்டே வெளியே செல்லும்போதுஅவன் பின்னாலேயே வந்து கொண்டிருப்பாளோ? என்னைப் பற்றிய முழு விவரமும் அவளுக்குத் தெரிந்திருக்கும். நான் வேலை செய்யும் இடம் கூட அவளுக்கு நிச்சயம் தெரிந் திருக்கும். ஒருகால் என் மேலதிகாரிகளிடம் அவள் அந்தக் கடிதத்தைக் கொடுத்தால், என் நிலைமை என்னவாகும்? காரியாலயம் முழுவதும் சிரிக்குமே?' அதற்கு மேல் சிந்தனையை வளர்க்க விரும்பவில்லை, அவன். அவமான உணர்ச்சியால் குன்றிப் போனான் வேதமூர்த்தி.

இதன் விளைவு என்னவாகுமோ என்ற ஏக்கத்தால் பீடிக்கப்பட்டவனாய்த் தலைக்கு மேல் சுழலும் மின்சார விசிறியின் மீது நிலைகுத்திய பார்வையுடன் காரியாலயத்தில் உட்கார்ந்திருந்த வேதமூர்த்தி, "சார்! உங்களை ஆபீசர் கூப்பிடுகிறார்" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தான். 'எவ்வளவு நாழியாக இப்படி வேலையே செய்யாமல் உட்கார்ந்திருக்கிறேனோ? அதைத் தற்செயலாகக் கவனித்துவிட்டுத்தான் அவர் என்னை அழைத்திருக்கிறாரா? அல்லது நான் எழுதிய கடிதத்தின் விளைவுதானோ, இது?' என்ற யோசனையுடன் அதிகாரியின் அறைக்குள் நுழைந்தான் வேதமூர்த்தி.

"வா, அப்பா! வேதமூர்த்தி! அப்படி உட்கார்!" என்று அவர் கூறியதும் அவன் ஒரு பெருமூச்சுடன் நாற்காலியில் அமர்ந்தான். அதிகாரியின் குரலில் தொனித்த கனிவு அவன் பயத்தைப் போக்கியது.



நீ விரும்புகிறாய்? அழகுடன் அவள் குணத்துக்கும் நான் உத்தரவாதம். என்ன சொல்லுகிறாய்?'' என்றார் அந்த அதிகாரி.

அவன்சொல்லுவதற்கு என்ன இருக்கிறது? எந்த அழகு மங்கையை அடைய அவன் ஒவ்வொரு விநாடியும் துடியாய்த் துடித்தானோ, அதே பெண் இப்போது அவனுடையவள். முகத்தில் அசடு வழிய அவன் தன் மேலதிகாரியைப் பார்த்தான். அவன் ஆசையை அவர் புரிந்து கொண்டு விட்டார்.

''உனக்குத் திருப்தியென்று படுகிறது. உன் தகப்பனாரிடமும் நான் ஏற்கெனவேயே இது விஷயமாகப் பிரஸ்தாபித்திருக்கிறேன். 'பையனுக்குப் பெண்ணைப் பிடித்திருந்தால் சரி. மற்ற விஷயங்களைப் பற்றி எனக்குக் கவலையில்லை' என்று அவர் சொல்லிவிட்டார். உன்னிடம் உன் தகப்பனார் இதுபற்றி விசாரித்தால் உன் அபிப்பிராயத்தை அவரிடம் கூறிவிடு. கல்யாண ஏற்பாடுகளுக்கு நான் பொறுப்பு. நீயும் கவலையின்றிப் பரீட்சைக்குப்படிப்பதில் கவனம் செலுத்தலாம்'' என்று அவர் கூறியதும், ஆகட்டுமென்ற பாவனையில் தலையை அசைத்து விட்டு அவன் வெளியேறினான். அந்தக் கடிதம் அவரிடம் சிக்கியிருக்குமோ? அல்லது அந்தப் பெண்ணை ஆபீசரிடம் கொடுத்திருப்பாளோ? அது மட்டும் அவனுக்கு விளங்கவில்லை.

மறுநாள் அந்த அழகி வந்தாள். வந்ததுடன் மட்டுமா? அவன் செய்தது போலவே, செண்டிரலில் இறங்கும்போது ஒரு கடிதத்தை அவனிடம் நீட்டினாள் அவள். அதைப் படித்து முடிப்பதற்குள் அவனுக்கு உடலெல்லாம் ஒரு தரம் வியர்த்து விட்டது.

அவள் எழுதியிருந்தாள் :

''எனக்கும் தங்களைப் போலவே...ஆனால், அழகு நிலையானதல்ல. என் அந்தஸ்தைப் பற்றித் தாங்கள் பின்னால் வருத்தப்பட நேரிடலாம். மனித புத்தி எப்போதும் ஒரே மாதிரி இருக்காதல்லவா? நான் ஒரு சமையற்காரியின் மகள் என்றால், தாங்கள் நம் இருவருடைய அந்தஸ்திலும் உள்ள வேற்றுமை காரணமாகப் பிற்காலத்தில் என்னை வெறுக்க மாட்டீர்கள் என்று நம்பலாமா? என் தாயார் ஒரு சமையற்காரி. இந்த விஷயம் தங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டியது அவசியம் என்று நான் கருதுவதால் இதை எழுதுகிறேன். ஆலோசித்து முடிவுக்கு வரவும்.........''

கையெழுத்துக்கூட இல்லை கடிதத்தில். அவனுக்கு உலகமே இருண்டு சூன்யமாகிவிட்டது போலிருந்தது. அவள் சமையற்காரியின் பெண்ணா? அத்தனை சிறந்த அழகியா? ஏன் இருக்க முடியாது? வயிற்றுப் பிழைப்புக்காக மேற்கொள்ளும் தொழிலுக்கும் அழகுக்கும் என்ன சம்பந்தம்? பெரிய மனிதர்கள் வீட்டுப் பெண்கள் எல்லோருமே அழகிகளா, என்ன? பொருளைத் தேட முடியும், மனிதர்கள் முயன்றால். ஆனால், அழகு...? அது இயற்கையின் அருள்! இயற்





கையின் கவர்ச்சி பொருந்திய அவள் அழகு என்னை அடிமை கொண்டு விட்டது. ஆனால் அந்தஸ்து? அப்பா இது விஷயத்தில் விட்டுக் கொடுப்பாரா? ஏழையின் மகள் என்றாலும் பரவாயில்லை. ஒரு சமையற்காரியின் மகளை அவள் அழகி என்பதற்காக - நான் மணந்து கொள்ள விரும்புவதாக எந்த முகத்துடன் அப்பாவிடம் கேட்பது? ஆபீசர் கேட்ட போது தலையை ஆட்டி விட்டேன். இப்போது மறுத்துக் கூறினால் நன்றாயிருக்குமா? அவர் மட்டும் ஏன் என்னிடம் இந்த உண்மையை மறைத்தார்? அவரைச் சொல்லியும் பலனில்லை. 'பெண் அழகாக இருக்கவேண்டியது ஒன்றுதான் எனக்குப் பிரதானம்' என்று அப்பா அவரிடம் கூறியிருக்கலாம். அந்த மட்டும் அவர் கூறியது உண்மைதானே? எதற்கும் அப்பாவே இதைப்பற்றி ஏதாவது கேட்கிறாரா வென்று பார்க்கலாம். இல்லாவிட்டால் பேசாமலிருந்து விடலாம்' என்று ஒரு முடிவுக்கு வந்தான் வேதமூர்த்தி.

அவன் தகப்பனாரோ, தாயாரோ அவனிடம் எதுவுமே கேட்கவில்லை. மேலதிகாரியும் அவனிடம் மறுபடி எதுவும் சொல்லவில்லை. அந்தப் பெண்ணுக்கும் அவன் பதில் எழுதவில்லை. ஒரு வாரம் அவனுக்கு வாழ்க்கை 'சப்'பென்று இருந்தது. பிறகு பரீட்சைக்குப் படிப்பதில் முனைந்தான். காதலியை மறந்த வேகத்தில், படிப்பில் அக்கறை காட்டினானா, அல்லது பரீட்சைக்குப் படிக்கும் மும்முரத்தில் அவளை மறந்தானா என்பது அவனுக்கே தெரியாது.

பரீட்சை முடிந்து ஒருவாரம் கழித்து அவன் தகப்பனார் ஒருநாள், "வேது! இந்தப் பத்திரிகையைப் பார்! சரியா யிருக்கிறதா வென்று" என்று ஒரு கல்யாணப் பத்திரிகையை அவனிடம் நீட்டினார். "யாருக்குக் கல்யாணம்?" என்று கேட்டவனாய் அதைப் பிரித்தான். நின்ற விடத்திலேயே ஒரு துள்ளுத் துள்ளினான். ஆச்சரியத்தினால் அவனுக்கு நிலைகொள்ள வில்லை. எல்லாம் ஒரே புதிராயிருந்தது. "பிரதம கணக்கு அதிகாரி ஸ்ரீ ராமபிரம்மத்தின் குமாரி சௌபாக்கியவதி பத்மாவை ...... சிரஞ்சீவி வேதமூர்த்திக்கு......" என்று கொட்டை எழுத்துக்களில் அச்சாகி யிருந்ததை அவன் எப்படி நம்பாம லிருக்க முடியுமா?

"அப்பா! என்ன இதெல்லாம்? பத்மா என் ஆபீசரின் பெண்ணா? அவர் வீட்டுச் சமையற்காரியின் பெண்ணா?" என்றான். அவன் தகப்பனார் சிரித்த வண்ணம் கூறினார்:

"அவள் உண்மையிலேயே சமையற்காரியின் பெண்ணாக இருந்தால் என்ன செய்வாய்? அவளுக்குக் காதல் கடிதம் எழுதினாயே, அதற்கு முன்பேயல்லவா அதைப் பற்றி யோசனை செய்திருக்க வேண்டும் நீ! அவசரத்தில் ஒரு காரியம் செய்தால், அதன் விளைவு எப்படி யிருந்தாலும் சமாளித்துக் கொள்ளும் தைரியம் வேண்டாமா? அந்தமாதிரி ஒரு பொய் சொன்னதால்தான் நீ அந்த ஏமாற்றத்தின் விளைவாகப் பரீட்சையில் கவனம் செலுத்த முடிந்தது. பரீட்சைக்குப் பிறகு தான் கல்யாணம் செய்ய வேண்டுமென்று என்னதான் நாங்கள் தீர்மானித்து விட்டாலும் உன் நினைவெல்லாம் அவளைச் சுற்றித்தான் வட்டமிட்டுக் கொண்டிருக்கும். அதற்காக உன் மாமனாரே ஏற்பாடு செய்த பொய்தான் அது. மேலும், நீ அந்தப் பெண்ணை உண்மையாகவே விரும்புகிறாயா அல்லது மேலதிகாரியாயிற்றே என்பதற்காக அவர் வார்த்தையைத் தட்ட முடியாமல் தலைவிதியே என்று ஒப்புக் கொள்ளுகிறாயா என்று பரீட்சிக்க விரும்பினார், அவர். பருவத்தின் விளையாட்டல்ல; நீ உண்மையாகவே அவளை விரும்புகிறாய் என்பதை ஊர்ஜிதம் செய்து கொள்ள அவர் செய்த வேலைதான். இனிமேல் இதைப் பற்றி நீ உன் மாமனாரிடம் சண்டை போட்டுக் கொள்ளு!" என்று சொல்லி விட்டுச் சிரித்தார் அவன் தகப்பனார். அவனுக்கும் சிரிப்புத்தான் வந்தது.

* * *

'கல, கல' வென்ற சிரிப்பொலி கேட்டு நிமிர்ந்து உட்கார்ந்தான் வேதமூர்த்தி.

"என் அரிச்சந்திர மகாராஜா தூக்கத்திலேயே வாய்விட்டுச் சிரிக்கிறார் போலிருக்கிறதே!" என்றாள் பத்மா.

"விழித்துக் கொண்டிருக்கும் போது மனதாரப் பொய் பேசுவதைவிடத் தூக்கத்தில் உண்மையைப் பிதற்றுவது எவ்வளவோ மேல் பத்மா! ஒரு சமையற்காரியின் மகளைப் பற்றிய நிழலாட்டத்தை மனத் திரையில் படம் போட்டுப் பார்த்தேன்."

"அந்தச் சமையற்காரியின் மகள் இப்போது 'அக்கௌண்டெண்ட்' மனைவி!" என்றாள் பத்மா விஷமச் சிரிப்புடன்.

"என்ன? என்ன சொல்லுகிறாய், பத்மா!" என்றான் அவன் திகைப்புடன்.

காரியாலயத்துக்கு லீவு போட்டுவிட்டு மாமனார் வீட்டில் வந்து உட்கார்ந்து விட்டால், காரியாலயத்தில் நடக்கும் காரியம் உங்களுக்கு எப்படித் தெரியும்? நாலு நாள் முன்னதாகவே தலை தீபாவளிக்கு வந்து விடவும் என்று மரியாதைக்குச் சொன்னால், நீங்கள் நிஜமாகவே நாலு நாள் முன்பு வந்து 'முகாம்' போட்டு விட்டீர்கள்! பரீட்சை முடிவு வந்து விட்டதாம். நீங்கள் அதில் தேறி விட்டீர்கள் என்று அப்பா சொன்னார்" என்றாள் பத்மா. அவன் எழுந்து தன் காதல் மனைவியை யணுகினான்.

"அதோ பாருங்கள், அப்பா வருகிறார்!" என்று கூறி விட்டு அவள் 'சட்'டென்று பின்னால் நகர்ந்து கொண்டாள்.

"எந்தப் பரீட்சையில் நான் தேறினேன் பத்மா? காரியாலயப் பரீட்சையிலா, காதல் பரீட்சையிலா?" என்றான் வேதமூர்த்தி.


மற்றெந்த தேயிலையையும் விட
ப்ரூக் பாண்ட் தேயிலையையே
அதிகப்படியான ஜனங்கள்
வாங்குகிறார்கள்
முதல் காரணம் ப்ரூக் பாண்ட் தேயிலை நித்தமும் புத்தம் புதியதாக இருப்பதே!
தோட்டத்திலிருந்து கடைகளுக்கு துரிதமாக அனுப்பப்படுவதால் ப்ரூக பாண்ட் தேயிலை எப்பொழுதும் புத்தம் புதியதாக இருக்கிறது.
மற்றொரு காரணம் அதன் பரிசுத்தத் தன்மையே!
காற்றுப் புகாமல் பாக் செய்யப்பட்டிருப்பதால் ப்ரூக் பாண்ட் தேயிலை மாசு மருவற்று, கலப்பற்று, களங்கமற்று விளங்குகிறது.
FINEST TEA
யோசித்து வாங்குங்கள்!
செலவைக் குறையுங்கள்!
ப்ரூக் பாண்ட் தேயிலையே உங்களுடைய பணத்திற்கு அதிகமான, ருசியான, நல்ல தேநீரை அளிக்கிறது.



பருக்களும் விகாரமான சருமமும் 24 மணி நேரத்தில் குணமடைகிறது

நிக்ஸோடேர்ம் (Nixoderm) கண்டு பிடித்தது முதல் யாரும் எக்ஸிமா, பரு, ரத்தக் கட்டி ஆகிய சரும வியாதிகளால் அவதியுறவும், உங்களுக்கும் பிறருக்கும் வெறுப்பு ஏற்படவும் வேண்டாம். ரஸாயன முறையில் தயாரித்த நிக்ஸோடேர்ம் (Nixoderm) உதவியால் சருமத்தை சுத்தமாக்குங்கள். அநாயாசமாக வைத்துக்கொண்டு பிறர் உங்களை வியாதியஸ்தரெனக் கருத இடம் தராதீர்.

ஒரு புதிய சாதனம்

நிக்ஸோடேர்ம் (Nixoderm) ஒரு புதிய களிம்பு. ஆனால் நீங்கள் உபயோகித்த இதர களிம்பைப் போன்றதல்ல. பிசுக்கற்றது. மேலே தடவும் போதே ஒரு பவுடரைப்போல உணருவீர்கள். சருமத் துவாரங்களினூடே சென்று வியாதிக்கு மூலமான இடத்தை தாக்குகிறது. நிக்ஸோடேர்ம் (Nixoderm) மூன்று வழிகளில் உபாதையைத் தாக்குகிறது: (1) நோய்க்குக் காரணமாகும் கிருமிகளைக் கொல்லுகிறது. (2) அரிந்து, எரிந்து வெந்துபோவதை 7 முதல் 10 நிமிஷத்தில் தடுத்து சருமத்தை மென்மையாக்குகிறது. (3) இயற்கையாகவே ஆற்றி, சுத்தமாக மிருதுவாகப் பட்டுப் போல வழவழுப்பாகவும் ஆக்குகிறது.

விரைவில் பலனளிக்கிறது

சரும நோய்களை நிவர்த்திக்கவே விஞ்ஞான முறையில் தயாரான நிக்ஸோடேர்ம் (Nixoderm) மற்றதைவிட சீக்கிரம் வேலை செய்கிறது. நமைச்சல், எரிச்சலை சில நிமிஷத்தில் நிறுத்தி விரைவில் சருமத்தை சுத்தமாக ஆற்றி, மிருதுவாகவும் வழவழுப்பாகவும் செய்கிறது. ஓரிரண்டு தினங்களில் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள். தேடிய சஞ்சீவி—நாடிய வைத்தியம் கிடைத்ததை உணர்வீர்கள். நிக்ஸோடேர்ம் (Nixoderm) ஆயிரக்கணக்கானவர்களது சருமத்தைச் சுத்தமாக்கி



புஷ்டியாக்கியது. அவர்களில் ஒருவரான மிஸ்டர் R. K. கூறுகிறார். "12 வருஷமாக நமைச்சலும் எரிச்சலும் தரும் எக்ஸிமாவினால் கஷ்டப்பட்டேன். பல மருந்துகளுக்குப்பிறகு நிக்ஸோடேர்ம் (Nixoderm) உபயோகித்தேன். 10 நிமிஷத்தில் நமைச்சல் நின்று மறுநாளே சருமம் சுத்தமாகியது. என் தோற்றத்தின் மாறுதலைக் கண்ட நண்பர்கள் ஆச்சரியமடைந்தனர்."

திருப்திக்கு உத்தரவாதம்

சருமம் திருப்தியாகாதவரை நிக்ஸோடேர்ம் (Nixoderm) மதிப்பை இழக்கிறது. இன்றே நிக்ஸோடேர்ம் (Nixoderm) வாங்குங்கள். தோற்றத்தில் ஏற்படும் அபிவிருத்தியைக் காண ஆச்சரியப்படுவீர்கள். ஒரு வாரத்துக்கு உபயோகித்தால் சருமம் வழவழுப்பாயும் மிருதுவாயும் சுத்தமாயும் வசீகரமாகவும் ஆவது நிச்சயம். இல்லையேல் காலிப் பெட்டியைத் திருப்பிக் கொடுத்து, கொடுத்த விலையை வாபஸ் பெறுங்கள். இன்றே நிக்ஸோடேர்ம் (Nixoderm) வாங்குங்கள். அதளித்த உத்தரவாதமே உங்களுக்கான உறுதி.

அதிக மான்யம் வேண்டும்!

எங்கள் ஊரான அரக்கோணத்தில் பஞ்சாயத்து ஆட்சி நடைபெற்று வருகிறது. கிராமப் பஞ்சாயத்து ஆட்சிக்குட்பட்ட எங்கள் கிராமம் சுமார் ஒரு சதுர மைல் விஸ்தீரண முள்ளது. கிராமத்தின் மத்தியில் தென்னிந்திய ரயில்வே சந்திப்பு நிலையமும், மேற்கே ரயில்வே தொழிற்சாலையு மிருப்பதால் குடியிருப்பவர்களில் பெரும்பான்மையோர் ரயில்வே சிப்பந்திகளாவர். பஞ்சாயத்துச் சபைக்கு வருஷ வருமானம் சுமாராக ஒன்றேகால் லட்ச ரூபாய்க்கு மேற்பட்டதாகும்.

எங்கள் ஊர்ப் பஞ்சாயத்தின் தலைவர் பழைய பஞ்சாயத்துச் சபையிலும் அங்கத்தினராக இருந்து அனுபவம் பெற்றவர். தேசியப் போராட்டங்களில் ஈடுபட்டுச் சிறை சென்றவர். இளம் வயதினர். புதுமுறையில் நடைபெற்ற பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலில் பலத்த போட்டிகளுக் கிடையில் பெருத்த வோட்டுக்களைப் பெற்று வெற்றி பெற்றவர்.

கல்யாணம் பண்ணிப் பார்ப்பதும், வீட்டைக் கட்டிப் பார்ப்பதும் கஷ்டமான காரியமே. அதைவிட மிகவும் கஷ்டமானது பஞ்சாயத்து வேலைகளாகும். முக்கியமாகப் பஞ்சாயத்துத் தலைவர் தாமாக ஒன்றும் செய்ய முடியாது. அதோடு நிர்வாக அதிகாரி தம் போக்கிலேயே பஞ்சாயத்து விஷயங்களை நடத்த ஆரம்பித்தால் கேட்கவே வேண்டாம். கல்லோடு சோறு மெல்லவும் முடியவில்லை, விழுங்கவும் முடியவில்லை என்று ஒரு பழமொழி உண்டு. அந்த இரண்டுங் கெட்டான் நிலைமையில்தான் இருக்கிறது பஞ்சாயத்துத் தலைவருடைய நிலைமையும்.

எங்கள் ஊரில் தற்போது லைசன்ஸ் கட்டணங்கள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. வியாபாரம் மந்தமாக உள்ள இந்தக் காலத்தில் லைசன்ஸ் கட்டண உயர்வினால் சிறிய வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட் டிருக்கிறார்கள். அடுத்தபடியாக வீட்டு வரியும் உயர்த்தப்பட் டிருக்கிறது. இதனால் எங்கள் ஊரில் பல குடும்பங்கள் சிரமப்படுவதை முக்கியமாக இங்கு குறிப்பிட வேண்டி யிருக்கிறது. இங்குள்ள வீட்டுக்காரர்களில் பெரும்பான்மையோர் உத்தியோகத்திலிருந்து விலகி ஓய்வு பெற்ற ரயில்வே சிப்பந்திகளாகவோ அல்லது அவர்களின் ஆதரவில் வாழ வேண்டியவர்களாகவோதான் இருப்பார்கள். வீட்டு வாடகை ஒன்றினாலே தான் அவர்கள் ஜீவனம் நடந்து வருகிறது. இந்த வீட்டு வரி உயர்வினால் அவர்களின் வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.


எங்கள் ஊரில் புதிதாக ஏற்படுத்தப் பட்டுள்ள வீதிகளுக்கும், சுகாதார சிப்பந்திகள் வசித்து வரும் வீதிகளுக்கும் மின்சார விளக்குகள் போட வேண்டுமென்று சுமார் எட்டு வருஷங்களாகப் பஞ்சாயத்துச் சபை முயன்று வருகிறது. இது தவிரக் குடி தண்ணீர் வசதிக்காகப் பொதுக் குழாய்கள் போட வேண்டுமென்றும் தீர்மானித்துள்ளது. இவ்விரண்டு விஷயங்களிலும் எவ்வித முன்னேற்றமும் இதுவரை காணவில்லை.

பஞ்சாயத்துக்குச் சொந்தமான இடத்தில் காரியாலயம் கட்டத் தீர்மானித்திருந்தும் இதுவரை அதற்கு உத்தரவு வரவில்லை. பஞ்சாயத்துக்குச் சொந்தமான தினசரி காய்கறிக் கடைகள் பொருத்தமான கட்டிடமில்லாமல் மிகவும் கேவலமான நிலையில் இருக்கின்றன. இதற்கும் மேலதிகாரிகளிடமிருந்து உத்தரவு வரவில்லை. பஞ்சாயத்தில் வேலை செய்துவரும் சுகாதார சிப்பந்திகள் மிகவும் கேவலமான குடிசைகளில் வசித்து வருகிறார்கள். அவர்களுக்குக் குடியிருக்க வீடு கட்டிக் கொடுக்கச் சரியான முயற்சி எடுக்கப்படவில்லை. வெளியூர் செல்லும் பிரயாணிகளின் சௌகரியத்தை முன்னிட்டுப் பொது பஸ் நிலையம் ரயில்வே ஸ்டேஷன் அருகில் அமைக்க வேண்டுமென்று பஞ்சாயத்துச் சபை பல முறை முயற்சி செய்தும் ரயில்வே அதிகாரிகள் அதைக் கவனிக்கவில்லை. ஆகவே எங்கள் கிராம முன்னேற்றம் எழுத்தில்தான் இருக்கிறது; அவை நிறைவேற இன்னும் எத்தனை வருஷங்களாகுமோ!

பஞ்சாயத்து நிர்வாகம் பெருத்த அளவில் முன்னேற வேண்டுமானால் முதலாவதாக அரசாங்க உத்தியோகஸ்தரான நிர்வாக அதிகாரி பஞ்சாயத்துத் தலைவருக்கு உட்பட்டு நிர்வாகம் நடத்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அவர் சபை நிறைவேற்றும் தீர்மானங்களைக் கூடியவரை



'மயிலாப்பூர் அகாடமி' என்னும் பெயருடன் மயிலையிலும் சுற்றுப்புறங்களிலும் சமூக சேவை செய்து வரும் வாலிபர் சங்கத்தார் மகாத்மா காந்தி மண்டப நிதிக்காகப் பணம் வசூல் செய்து செப்டம்பர் நாலாம் தேதி நடந்த பொதுக் கூட்டத்தில் ராஜாஜி அவர்களிடம் ரூ. 2527—0—0 அளித்தார்கள். மேற்படி சங்கத்தின் முக்கிய நிர்வாகிகள் சிலரை மேலேயுள்ள படத்தில் காணலாம்.



விழுப்புரம் நகராட்சி உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியரும், திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் மாணவருமாகிய ஸ்ரீ ந. ஆறுமுகம் அவர்கள் இருபத்தைந்து ஆண்டுகளாகச் செய்து வரும் தமிழ்ப் பணியைப் போற்றுவதற்காக 29—8—54ல் ஒரு பாராட்டு விழா நடந்தது. அந்த விழாவுக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் தலைமை வகித்தார். விழுப்புரம் முன்னாள் நகர் மன்றத் தலைவர் திரு என். கோவிந்தராஜுலு நாயுடு புலவர்க்குப் பொன்னாடை போர்த்தினார். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், வித்வான்கள் ச. தண்டபாணி தேசிகர், வெள்ளை வாரணனார், திருக்குறள் முனுசாமி எம். பி., அருண்மொழி, இரா. நெடுஞ்செழியன், என். ரங்கநாதன் முதலியவர்கள் பாராட்டுச் சொற்பொழிவுகள் நடத்த விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. விழுப்புரம் தாலுக்கா மக்கள் சார்பிலும் பழைய பள்ளி மாணவர்கள் சார்பிலும் விழுப்புரம் நகர் மன்றத் துணைத் தலைவர் டாக்டர் டி. தியாகராசன் அவர்களும், உறுப்பினர் திரு வாசுதேவன் அவர்களும் இவ் விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

அமுலாக்க முயற்சி செய்ய வேண்டும். பஞ்சாயத்துச் சபை அங்கத்தினர்கள் மாதாந்திர கூட்டங்களுக்கு வந்து போவதோடு அவர்கள் பொறுப்பு தீர்ந்து விடுவதாயிருத்தல் கூடாது. பஞ்சாயத்து அங்கத்தினர்களுக்குக் கிராம விஷயத்தில் அதிக அக்கறை ஏற்படும்படியாக சுகாதாரம், கல்வி, வரி முதலிய இனங்களுக்குத் தனித்தனி கமிட்டிகள் நியமித்து அவர்களுக்குப் பல பொறுப்புகளை அளிக்க வேண்டும். பஞ்சாயத்துத் தலைவருக்கு நிர்வாக விஷயத்தில் அதிகப்படியான அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். தலைவர் பஞ்சாயத்துக் கூட்டங்களில் விவாதிக்கப்படும் தீர்மானங்களைக் கூடிய மட்டில் ஏகமனதாக நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். முக்கியமாக அங்கத்தினர்களிடையே அபிப்பிராயபேதம் ஏற்பட்டு வோட்டு மூலம் தீர்மானிக்கப்படும் சமயங்களில் தலைவர் நடுநிலைமை வகிக்க முயற்சி செய்ய வேண்டும். அங்கத்தினர்களுடைய வோட்டுகள் சரிசமமாக இருக்கும் சமயங்களில் மட்டும் தன் வாக்கையும் தலைவர் அளித்துத் தீர்மானத்தை நிறைவேற்றலாம். இம்முறையினால் அங்கத்தினர்களுக்கும் தலைவருக்கும் பரஸ்பரம் நல்லுறவு ஏற்படுவதுடன் கட்சிப் பூசல் ஏற்படாமல் தடுக்கலாம்.

புதிய சமுதாய அமைப்பை உருவாக்குவதற்குப் பஞ்சாயத்துச் சபைகளே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. ஆகவே பஞ்சாயத்துத் தேர்தல்கள் கட்சி சார்பில் நடைபெறக் கூடாது. கிராம மக்கள் அனைவருக்கும் பஞ்சாயத்து பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும். அங்கத்தினர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். புதிய முறைப்படி பொது மக்களால் தலைவர் தேர்ந்தெடுக்கப் படுவதைவிட பழைய முறைப்படி அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவதே மிகவும் சிறந்ததாகும். அப்படிச் செய்வதால் அங்கத்தினர்களுடைய ஒத்துழைப்பும் ஆதரவும் தலைவருக்கு எப்போதும் இருக்கும். பஞ்சாயத்து நிர்வாகத்தையும் அவர் திறம்பட நடத்திவர முடியும்.


தற்போது உள்ள பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் நல்ல முறையில் நடந்து வருவதோடு வெற்றியளித்து வருகிறது. ஆகவே அவைகளுக்கு மேலும் குற்றங்களை விசாரணை செய்யும் அதிகாரம் அளிப்பதால் பஞ்சாயத்துச் சபைகளின் முக்கியத்துவம் அதிகமாகும். இதனால் எந்தவிதமான குறைபாடும் ஏற்பட்டு விடாது. அதன் மதிப்பும் அதிகரிக்கும். கிராம தேவைகளுக்கான பால் விநியோகம் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நடைபெறுவதைவிட பஞ்சாயத்து சபை மூலம் நடைபெற்றால் நல்ல பால் கிடைப்பதோடு பஞ்சாயத்துக்கும் அதிக வருமானம் கிடைக்கும். ரோடுகள் அபிவிருத்தி, மின்சார வசதி ஆகியவற்றுக்கு மத்திய சர்க்காரும் சென்னை சர்க்காரும் பண உதவி செய்ய வேண்டும். அப்போது தான் திறம்படப் பஞ்சாயத்துச் சபைகள் வேலை செய்ய முடியும். பஞ்சாயத்துச் சபைகள் அமைக்கப்பெற்ற ஊர்களும் பஞ்சாயத்துச் சபை ஏற்பட்டதால் ஓரளவாவது நல்ல பலன் அடைய ஏதுவாகும்.

வரப்போகும் ஐந்து வருஷத் திட்டத்தைப் பற்றி ஒவ்வொரு நாளும் நம் தலைவர்கள் வானளாவப் புகழ்ந்து பேசிய வண்ணம் இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை எவ்வளவு விரைவில் அமுல் நடத்துகிறோமோ அப்பொழுதுதான் அதன் பலன் நாட்டுக்குக் கிடைக்கும். அப்படி நிறைவேற்றுவதில் பஞ்சாயத்துச் சபைகளுக்கு அதிக பங்கும் பொறுப்பும் அளிக்கப்பட வேண்டும். அப்படியானால் தான் பொது மக்களுக்குத் தாமும் திட்டத்தில் பங்காளிகள் என்ற உணர்ச்சி ஏற்படும். கிராம அபிவிருத்தித் திட்டங்களை அந்தந்த பஞ்சாயத்துக்களே நிர்ணயிக்க வழிவகைகள் செய்ய வேண்டும். பொருளாதார அபிவிருத்தி சம்பந்தமான கொள் முதல், விற்பனை போன்ற விஷயங்களைக் கூட்டுறவு ஸ்தாபனங்களின் பொறுப்புகளுக்கு விட்டு விடலாம். வரி விதிப்பு மூலமாகப் பஞ்சாயத்துச் சபைகளின் வருமானத்தைப் பெருக்குவதற்கு இல்லை. ஆகவே, ராஜ்ய சர்க்கார்கள் பஞ்சாயத்துக்களுக்கு அதிக மான்யம் தரவேண்டுவது மிக அவசியமாகும்.

அரக்கோணம்
2—7—54

எல். எஸ். ராஜா
(பஞ்சாயத்து அங்கத்தினர்)


பிரபல திருமணம்



கொழும்பு பிரபல வர்த்தகரும், தேயிலைத் தோட்ட சொந்தக்காரருமாகிய, திரு கு. பெ. காளியப்ப பிள்ளை அவர்களின் புதல்வி சௌபாக்கியவதி விஜயலக்ஷ்மிக்கும், திருச்சி ஜில்லா, மூநகர் பிரபல காங்கிரஸ்வாதியும், மிராசுதாரரும், இலங்கையில் தேயிலைத் தோட்ட சொந்தக்காரருமாகிய திரு சித. பொ. மாரிமுத்துப் பிள்ளை அவர்கள் புதல்வர் சிரஞ்சீவி சுந்தரம் B. Sc. (Ag) க்கும், 2-9-54-ல் இலங்கையில் மடுல்கொல்ல, மானிலாண்ட் எஸ்டேட்டில் வெகு விமரிசையாக திருமணம் நடந்தேறியது. 4-9-54-ல் கொழும்பு வெள்ளவத்தை செல்ல மஹாலில், காளியப்ப பிள்ளை அவர்கள் நடத்திய விருந்துபசார வைபவத்திற்கு ஓய்வுபெற்ற சுப்ரீம் கோர்ட் நீதிபதி, கனம் குரேஜட் தம்பையா, கே. கனகரத்னம், பெரி. சுந்தரம், வீரகேசரி ஆசிரியர் கே. பி. ஹரன், முதலிய ஏராளமான நண்பர்களும் பந்துக்களும் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினார்கள்.

வாழ்க. விஜயலக்ஷ்மி — சுந்தரம்

'ஏன் தலைவன்'



ஆர். சூடாமணி

“எப்போது பார்த்தாலும் கடிதம் எழுது, கடிதம் எழுது என்று என் பிராணனை வாங்குகிறாளே, இவளை என்னவென்று சொல்வது! கோபித்துப் பேசவும் முடியவில்லை” என்றான் மூர்த்தி.

“பாவம், அவளுக்கு உலகத்தில் என்ன இருக்கிறது! கண் பார்வை போய் விட்டால் அப்புறம் எதற்கும் இன்னொருவர் தயவைத்தானே நாட வேண்டியிருக்கிறது!” என்றாள் அவன் மனைவி.

“அது சரி, உன்னை விட்டு எழுதச் சொல்வதற்கென்னவாம்!”

“என்ன இருந்தாலும் நீங்கள் அவள் அண்ணா. தன் மனத்திலுள்ள ஆவலையும் அன்பையும் உங்களைக் கொண்டு வெளியிடுவதில் அவளுக்கு அவ்வளவு கூச்சமிருக்காது.”

“ஆனால் எனக்கென்னமோ கோபம்தான் வருகிறது. ஏதடா, அவளை இப்படித் தினம் நமக்காக உட்கார்ந்து கடிதமெழுதச் சொல்கிறோமே, அவனுக்கு வேறு வேலை இல்லையா, சலித்துக் கொள்ள மாட்டானா, என்று ராஜத்துக்குத் தோன்ற வேண்டாமா! அல்லது ஒவ்வொரு கடிதத்திலும் புருஷனை வருந்தி வருந்தி அழைக்கிறாளே, அவன் வந்து தன்னை அழைத்துக் கொண்டு போவான் என்று நினைக்கிறாளா!”

“பெண்கள் மனம் உங்களுக்குத் தெரியாது. அவளுக்கு அந்த நம்பிக்கையைத் தவிர வேறு என்ன இருக்கிறது!”

“இவ்வளவு வருஷங்களுக்குப் பிறகுமா!”

“நம்பிக்கைக்கு வயது உண்டா!”

★

ராஜேச்வரி பெண்மையின் தளராத பொறுமையின் ஓர் உருவம். கண்களில் பார்வையில்லை. ஆனால் உள்ளத்தில் ஒளி மயமான ஓர் உலகமே இருந்தது. இன்பத்தை அவள் முழுவதும் அனுபவிக்கவில்லை. அதனாலேயே அந்த இன்பம் அவள் கற்பனையில் அதிகப் பொலிவுடன் விளங்கியது. நிறைவேறாத ஒரு நீண்ட கனவின் எழில் அவள் உயிர் நாடியிலேயே நிறைந்து துடித்துக் கொண்டிருந்தது.

பதினெட்டாவது வயதில் அவள் ரங்கநாதனை விவாகம் செய்து கொண்டாள். ஒரு வருஷம் வரை அவனுடன் வாழ்க்கை நடத்தும் இன்பத்தில் திளைத்து அவன் அன்பை எண்ணி எண்ணி மனம் பூரித்தவளாய்க் காலம் கடத்தினாள்.

அப்போதெல்லாம் அவள் கண்கள் இரு ஒளிப்பிழம்புகளாய் ஜொலித்துக் கொண்டிருந்தன. அவள் கால்கள் எப்படி இடத்துக்கு இடம் தாவிக் குதித்து ஓடிக் கொண்டிருந்தனவோ அப்படியே அவள் உள்ளமும் உவகையால் குதித்துக் கொண்டிருந்தது. அவள் கண்களும் மாறி மாறிப் பலவிதக் காட்சிகளின் மேல் குதித்துச் சென்றன. ஆனால் ரங்கநாதனைக் கண்டபோதெல்லாம மட்டும் அந்தக் காட்சியில் லயித்து நின்றுவிடும்.

ஆனால் அக்கண்கள் தம் பார்வையை இழந்து விட்டது மட்டுமல்ல. அவள் வாழ்வும் மலர்ச்சியை இழந்து விட்டது.

பத்தொன்பதாம் வயதில் பிறந்தகத்துக்கு ஒரு தரம் வந்திருந்தபோது வைசூரியால் பார்வையை இழந்தாள் ராஜேச்வரி. பல மாதங்கள் படுக்கையோடு படுக்கையாய்க் கிடந்தாள். அந்தக் காலத்தில் ரங்கநாதனும் அவன் மனிதர்களும் ஒரு முறை அவளை வந்து பார்த்தார்கள். அந்த நிலையிலும் ராஜேச்வரி மனமகிழ்ந்தாள். கண் போனதால் கணவனின் அன்பு பதின்மடங்கு உறுதியாய்க் கிடைத்து விட்டதென்றே நம்பினாள். 'கண்ணால் அவரைக் காண முடியாவிட்டால் என்ன. உயிரின் ஒவ்வொரு அணுவாலும் அவரை உணர்ந்து கொள்ளும்போது' என்று அவள் இளம் உள்ளம் எண்ணியது.

இன்றும் அதே எண்ணம்தான், எண்ணம் ஏமாற்றமாக மாறி விட்டாலும், இன்னும் அவளுக்கு அதே குழந்தை யுள்ளம்தான். ஐந்து வருஷங்கள் கடந்து விட்டன.

அன்று வந்து பார்த்த ரங்கநாதன் அதற்குப் பிறகு வரவில்லை. காலவரம்பின்றி ராஜேச்வரி பிறந்தகத்தில் இருந்தாள். அவள் பெற்றோர்கள் விஷயத்தைப் புரிந்து கொண்டார்கள். ஒன்றில் கல்லைப் போட்டது போலிருந்த ரங்கநாதனுடனும் அவன் தாய் தந்தையருடனும் எத்தனையோ சண்டை போட்டார்கள். எத்தனையோ கோப தாபங்கள், எத்தனையோ கண்ணீர் வெள்ளங்கள், மகளுடைய துர்ப்பாக்கியத்தையும் தெய்வ அநீதியையும் நொந்து எத்தனையோ திட்டுகள். ஆனால் இன்பம் மட்டும் மறுபடி துளிர்க்கவில்லை.

ராஜேச்வரிக்கு என்றும் பத்தொன்பது வயது தான். அந்தக் காலத்தில் புருஷனை எவ்வளவு ஆவலாய் எதிர் பார்த்திருந்தாளோ அப்படியே இன்னும் எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் உள்ளம் நம்பிக்கையைப் பிடிவாதமாகப் பற்றிக் கொண்டிருந்தது. அவள் வாழ்வு முடிவில்லாத ஓர் எதிர்பார்த்தலிலேயே சென்று கொண்டிருந்தது. அவளைத் துயரம் ஒரு பக்கம் வாட்டிக் கொண்டிருப்பினும் ஆவல் மறையவில்லை. கவலைக் கோடுகள் அவள் முகத்தை நிறைத்திருந்தன. ஆனால் இளம் உள்ளத்து ஆவல் இன்னும் இளமையாகவே இருந்தது—பூர்த்தி யடையாததால். அவள் இன்னும் தன் காதுகளைத் தீட்டிக் கொண்டு, வராத புருஷனின் வருகையை எதிர் நோக்கிக் காத்திருந்தாள். எப்போதும் ஆழ்ந்து செவியுற்றிருந்ததால் அவள் முகத்தின் ஒவ்வொரு அவயவத்திலும் ஒரு உன்னிப்பு, ஒரு கவனம், ஒரு கிளர்ச்சி இருந்தன. பேராவல் காரணமாக அந்த முகம் நிரந்தரமாய் விகசித முற்றிருந்ததுபோல் காணப்பட்டது.

“அண்ணா! ஒரு கடிதம் அவருக்கு எழுத வேண்டும்” என்று எத்தனை தரம் கேட்டிருக்கிறாள்

ஆரம்பத்தில் மூர்த்தி இதை ஒரு பவித்திரமான கடமையாய் நினைத்துச் செய்து வந்தான். குருட்டுத் தங்கையிடம் அவனுக்கு அளவில்லாத அன்பும் பரிதாபமும் இருந்தன. அவள் பக்கத்தில் உட்கார்ந்து அவள் உள்ளத்திலிருந்து பொங்கி எழும் உணர்ச்சிகளை எழுதிக் கொடுப்பதில் பெருமை கொண்டான். தன் சிறு சிறு வேலைகளைத் தியாகம் செய்து விட்டு அவள் கூப்பிடும் போதெல்லாம் அவளுக்குக் கடிதம் எழுதிக் கொடுக்க விரைவான்.

ஆனால் இரண்டு வருஷங்களுக்குள் ஒன்றையே திருப்பித் திருப்பிச் செய்வதில் அவனுடைய உற்சாகம் குறைந்து விட்டது. தியாகத்துக்கு ஆரம்பத்தில் இருந்த கவர்ச்சி இப்போது இல்லை. குருடானாலும் ராஜேச்வரி கூடவே இருப்பவளாகி விட்டாள். அவள் குறையும் ஒரு பழைய விஷயமாகி விட்டது. அதன் காரணமாக அவள் தன்னைத் தொந்தரவு செய்வது அவனுக்குக் கோபத்தை உண்டாக்கியது.

மேலும் இந்தக் கடிதங்களால் பயனேதவும் இல்லையென்பதை அவன் எப்போதோ தெரிந்து கொண்டு விட்டான். அவன் எழுதிப் போட்ட கடிதங்களில் ஒன்றுக்காவது ரங்கநாதனிடமிருந்து பதில் வரவில்லை. இந்த அசட்டுப் பெண் இன்னும் எதனால்தான் நம்பிக்கை வைத்திருக்கிறாள்!

"ராஜம்! உன் போக்கு விசித்திரமாயிருக்கிறது" என்பான் ஒவ்வொரு சமயம்.

இளைத்த முகத்தில் ஒளி பரவ, தளராத நம்பிக்கையின் உறுதியிடையே ஒரு இன்பத்தை அனுபவித்தவளாய் ராஜேச்வரி பதிலளிப்பாள், "விசித்திரம் என்ன அண்ணா! அவர் வராமலிருப்பதற்கு என்னிடம் அன்பில்லாதது காரணமாயிருக்க முடியாது. நான் அவருக்கு ஒரு தவறும் செய்யவில்லையல்லவா! பெற்றோரிடம் உள்ள பயமோ, அல்லது வேறு ஏதோ காரணம் இருக்கும். என் அன்பு மாறாதிருக்கிறதென்று நிச்சயப்பட்டால் ஒரு நாள் கட்டாயம் வருவார். கல் கூடக் கரையும் என்கிறார்களே, மனித இதயம் கரையாதா! அன்புக்குப் பலனில்லாமல் போய்விடுமா!"

அவள் கண்களில் நிறையும் கண்ணீரைப் பார்த்து அவன் மேலே எதுவும் சொல்லாமல் நிறுத்திக் கொள்வான். ஆயினும் அவள் நம்பிக்கை பைத்தியக்காரத்தனமானது என்ற எண்ணம் மட்டும் அவனுக்கு மாறவில்லை. தன் அசௌகரியத்தைக் கருதாமல் தினம் ஒரு கடிதம் எழுதத் தன்னை அழைக்கும் சகோதரியை அவனால் கோபித்துப் பேசுவது சாத்தியமாயில்லை. ஆனால் ஏமாற்றுவது சாத்தியமாயிருந்தது. கொஞ்ச காலம் காகிதத்தைச் சுவாரஸ்யமின்றிக் கையில் பிடித்தபடி அவள் சொல்வதில் பாதி எழுதுவதும் பாதி எழுதாததுமாய்த் தன் சொந்த அலுவல்களைப் பற்றி யோசித்தபடி உட்காரும் வழக்கம் அவனுக்கு ஏற்பட்டது. கடைசியில் அவளருகில் உட்கார்ந்து ஏதோ புத்தகம் படித்துக் கொண்டோ தன் காரியத்தைக் கவனித்துக் கொண்டோ இருக்கத் தொடங்கினான். சொல்ல வேண்டியதையெல்லாம் அவள் சொல்லி முடித்ததும் வெறும் காகிதத்தை அவள் கையொப்பமிடுவதற்குக் கொடுப்பான்.

ராஜேச்வரி ஒவ்வொரு கடிதத்திலும் சொல்வது ஏறக்குறைய இந்த ரீதியில்தான் இருக்கும்:

"ஒவ்வொரு நிமிஷமும் உங்களை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன். எப்போது வருவீர்கள்! நீங்களும் வரவில்லை, ஒரு கடிதமும் போடவில்லை. ஆயினும் நான் உங்களை மனப்பூர்வமாய் நம்புகிறேன். நீங்கள் வராவிட்டாலும் என்னை மறந்து விட்டதாகவோ வெறுத்து விட்டதாகவோ நான் எண்ணவில்லை. எனக்கு நீங்கள் துரோகம் செய்ய மாட்டீர்கள். என் அன்பு சிறிதும் மாறவில்லையென்று நிச்சயமாய் நம்பி உடனே வாருங்கள். நான் இன்னும் காத்துக் கொண்டிருக்கிறேன். காத்துக் காத்து என் கண்கள் குருடாகவில்லை. குருடாகிவிட்டதனாலேயே காத்திருக்க நேர்ந்து விட்டது. எந்தக் காலத்தில் எந்தச் சந்தர்ப்பத்தில், எந்த நிலையில் நீங்கள் வந்தாலும் என் வீடும் உள்ளமும் உங்களுக்காகத் திறந்தேயிருக்கும்......"

அவள் சொல்லும்போது தலை சற்று நிமிர்ந்திருக்கும். நம்பிக்கையாலும் துயராலும் கனிந்த அன்பு அவள் குரலை மிருதுவாக்கி அவள் பேச்சை இதயத்திலிருந்து வரும் ஒரு பிரார்த்தனையைப் போல் தொனிக்கச் செய்யும். உணர்ச்சியால் அவள் உதடுகள் துடித்துக் கொண்டிருக்கும், சிறைப்பட்ட பறவையின் சிறகுகளைப் போல். கண்களில் கண்ணீர். ஆனால் முகத்தில் ஒரு காந்தி. மூர்த்திக்கு இது என்றும் விளங்காத ஒரு புதிர். அவளைக் கவனிக்காமல் படித்துக் கொண்டிருக்கும் போது அவள் பேச்சின் உணர்ச்சி அவனைத் திரும்பிப் பார்க்கச் செய்யும்.

"என்ன நம்பிக்கை உனக்கு ராஜம்! அவன் தான் உனக்குப் பதில் கூடப் போடுவதில்லையே!"

"ஏதாவது காரணம் இருக்கும். நீ வேண்டுமானால் பார், அண்ணா! ஒரு நாள் பதில் போடுவார் அல்லது தாமே வருவார்."

அவளுடைய ஒளி மிளிரும் புன்னகையின் அமைதி அவன் வாயை மூடிவிடும். தங்கையின் பரிதாபகரமான நிலைக்கு இரங்குவான். ஒருதரம் மூன்று வருஷங்களுக்கு முன் அவன் ரங்கநாதன் இருந்த ஊருக்கு—நெல்லிக்கு—போயிருந்தான். ஆனால் அவனோ, அவன் பெற்றோர்களோ முகம் கொடுத்தும் பேசவில்லை.

"பாவம், பைத்தியக்காரி. அவளுக்கு என்னால் ஒரு உதவியும் செய்ய முடியாமல் இருக்கிறது" என்று எண்ணி மூர்த்தி பெருமூச்சு விட்டான்.

ராஜேச்வரியின் கடிதமான வெறும் காகிதத்தில் அவள் கையெழுத்தை வாங்கிக் கொண்டு உள்ளே சென்றான் மூர்த்தி. மனைவியிடம் 'இன்று ராஜம் சரியாக ஒரு மணி நேரம் உட்கார வைத்து விட்டாள். கண்தான் குருடென்றால் புத்தியுமா குருடாய் விடும்' சுத்த அசடு. என்ன சொன்னாலும் தெரிகிறதில்லை. எனக்கு என்னமோ போலிருக்கிறது. எங்கேயாவது ஒரு சினிமாவுக்குப் போய் வருகிறேன்" என்று புறப்பட்டான்.

அன்று சினிமாவுக்கு ஒரே கூட்டம். வெளியில் நின்று கொண்டு டிக்கட் வாங்க முயற்சி செய்வதா வேண்டாமா என்று மூர்த்தி யோசித்துக் கொண்டிருந்தான். அருகில் ஒருவர் "அடேயப்பா, இந்த உதவாக்கரைப் படங்களுக்கெல்லாம் கூட என்ன கூட்டம்! மனுஷனைச் சட்டினி செய்து விடும்போல் இருக்கிறதே" என்றார்.

அந்தக் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு மூர்த்தி திரும்பிப் பார்த்தான். சந்தேகமில்லை. அது ரங்கநாதன்தான்.

அவன் பார்த்த அதே நிமிஷம் ரங்கநாதனும் அவனைப் பார்த்து விட்டான். உடனே வேறு பக்கம் நகரத் தொடங்கினான்.

மூர்த்திக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. ஒருவேளை ராஜத்தின் நம்பிக்கைதான் பலித்து

விட்டதா! இவன் இந்த ஊருக்கே வந்து விட்டானே! "ரங்கா!" என்று குரல் கொடுத்த வாறே அவன் ரங்கநாதன் பின் ஓடினான்.

ரங்கநாதனுக்கு இப்போது நிற்கவேண்டி வந்து விட்டது. "என்ன!" என்றான் வெறுப்பாக.

"எங்கே நீ இந்த ஊருக்கு வந்தது? எப்போது வந்தாய்? நேரா வீட்டுக்கு வருவதற்கென்ன! ராஜம் எவ்வளவு சந்தோஷப்படுவாள்!" மூர்த்தி ஆனந்தப் பெருக்கில் அவன் கைகளைப் பிடித்துக் குலுக்கினான். "கடைசியில் அவள் ஆவல் பலித்தது. கடைசியில் நீ அவளைத் தேடி வந்து விட்டாய்! என்ன அதிர்ஷ்டம்! என்ன ஆனந்தம்!"

ரங்கநாதன் தன் கைகளை விடுவித்துக் கொண்டு வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டான். "நான் அங்கு வரவில்லை."

"ஏன்!" மூர்த்திக்குத் தூக்கிவாரிப்போட்டது. "ஏன் அப்படி! எனக்கு ஒன்றும் புரியவில்லை. இந்த ஊருக்குப் பின் எதற்காக வந்தாய்! அவளுக்காகத்தானே!"

"நான் இந்த ஊருக்கு இதற்கு முன்னும் வந்திருக்கிறேன்."

மூர்த்தி சிறிது நேரம் மௌனமாயிருந்தான். ரங்கநாதனின் பேச்சு அவனுக்குப் புரியச் சற்று நேரமாயிற்று.

"ஆனால் எங்கள் வீட்டுக்கு ஒருதரமும் வரவில்லையே!"

"ஆமாம்." ரங்கநாதன் அவனை நேருக்கு நேர் பார்த்தான். "ஒளிவு மறைவு என்ன! விஷயத்தை உன்னிடம் சொல்லியே விடுகிறேன். அதோ பார்த்தாயா, ஒருத்தி சிவப்புப் புடவை கட்டிக் கொண்டு நிற்கிறாளே, அவளை நான் இரண்டு வருஷங்களுக்கு முன் மணந்து கொண்டேன்."

மூர்த்திக்குத் தலையில் இடிவிழுந்தது போலிருந்தது. "என்ன சொன்னாய்!" குபீரென்று அவன் ரத்தம் கொதித்தது. "அட பாவி, அப்படியா சமாசாரம்! அங்கே என் தங்கை, என் ராஜம், உன்னையே நினைத்துக் கொண்டு இரவும் பகலும்



பாரதி விழா



★ சென்னை தியாகராய நகரில் பாரதி சங்கத்தின் ஆதரவில் செப்டம்பர் மாதம் 11, 12 தேதிகளில் பாரதியார் விழா சிறப்பாக நடந்தது. மேற்படி விழாவுக்கு சுவாமி சுத்தானந்த பாரதியார் தலைமை வகித்துப் பேருரை நிகழ்த்தினர். பன்மொழிப் புலவர் திரு டி. பி. மீனுட்சி சுந்தரனர், டாக்டர் வரதராசனர், திரு ஜீவானந்தம், பேராசிரியர் அ. சீனிவாச ராகவன், பரலி சு. நெல்லையப்பர், திரு. எஸ்.ஏ.பி. அண்ணுமலை ஸ்ரீசோமு, ஸ்ரீமதி சுகப்ரியை முதலிய பாரதி அன்பர்கள் விழாவில் கலந்து கொண்டு சொற்பொழி வாற்றிச் சிறப்பித்தார்கள்.

முதல் நாள் விழாவன்று ஸ்ரீமதி சாவித்திரி கணேசன் மகாகவி பாரதியார் பாடல்களைக் கொண்ட இனிய இசைக் கச்சேரியை மிகவும் சிறப்பாகச் செய்தார். இரண்டாம் நாள் குமாரி சுசீலாவின் பரத நாட்டியமும் ரசிகப் பெருமக்கள் பாராட்டும் வண்ணம் நடை பெற்றது.

பாரதி சங்கக் காரியதரிசி திரு ஆக்கூர் அனந்தாச்சாரியாரும், பொக்கிஷதார் திரு அனகப்பச் செட்டியாரும் மிக்க சிரத்தையுடன் இரண்டு நாள் திருவிழாவையும் நிர்வகித்து மிகவும் சிறப்பாக நடத்தி வைத்தார்கள். வாழ்க அமர கவி பாரதி நாமம்!

காத்திருக்கிருள். தன் உள்ளத்தைக் கொட்டி உனக்குக் கடிதங்கள் எழுதினளே, நீ ஒருநாள் வருவாயென்று நம்பிக்கை கொண்டு தன் சிதைந்த வாழ்வைச் சீர்படுத்த முயன்று கொண்டிருக்கிருளே, உனக்காகவே உயிரை வைத்துக் கொண்டிருக்கிருளே, அவளுக்கா இந்தத் துரோகம்! உன் அன்பு தனக்கு உண்டு என்றல்லவா ராஜம் நினைத்துக் கொண்டிருக்கிருள்!''

''அதற்கு நான் என்ன செய்யலாம்! நீயே சொல்லு, குருட்டு மனைவியுடன் நான் எப்படி வாழ்க்கை நடத்துவது! அவளுக்கு நான் பணிவிடை செய்து கொண்டிருப்பதிலேயே என் காலம் கழிந்து விடும். இருவருக்கும் சமத்துவம் இருந்தாலல்லவா வாழ்க்கை சுகிக்கக் கூடியதாக இருக்கும்! அந்தச் சமத்துவம் அவளிடம் இல்லாத போது என் அன்பை அவள் எதிர்பார்க்கலாமா! இதோ இவளும் நானும் ஒன்ருய்ப் பல காட்சிகள் பார்த்துக் களிக்கிறோம். இவள் எனக்கு வேண்டியவற்றைக் கவனித்துக் கொள்கிருள். என்னுடன் எங்கும் சேர்ந்து வந்து சமூகத்தில் எனக்குச் சமமான ஸ்தானம் வகிக்கிருள். இதெல்லாம் ராஜத்தால் முடியுமா!''

மூர்த்திக்குக் கோபத்தில் உடல் நடுங்கியது. ஆயினும் சமாளித்துக் கொண்டு கெஞ்சும் குரலில்



உங்கள் பணத்திற்கு கிடைக்கக்கூடிய மிகப் பத்திரமான, நெடுங்காலம் உழைக்கும் டயர்கள்

பரிசோதனை நிலையத்திலும் பரிசோதனை வண்டிகளிலும் மற்றும் இண்டியானபோலீஸ் பந்தயம் போன்ற உலகப் பிரஸித்தமான நிகழ்ச்சிகளிலும் நிரூபணமான பிரத்யேகமான புதிய **பயர்ஸ்டோன்** சூப்பர் கம்-டிப்பிங் முறையால் டயர் கடுமையான அதிர்ச்சிகளைத் தாங்கவும், சிருப்புகள் ஏற்படாமலும், நூல் பிரியாமலும், டயர் உஷ்ணத்தால் ஏற்படும் விளைவுகள் ஏற்படாமலும் பாதுகாக்க டயரின் நூலங்கம் 60% மேலும் வலுவடைகிறது. நீங்கள் **பயர்ஸ்டோன்** சூப்பர் கம்-டிப்பிங் டயர்களை வாங்கினால் உங்கள் பணத்தின் மதிப்பு அதிகரிக்கிறது; ஏனெனில், அதிகச் செலவில்லாமலேயே நீங்கள் கூடுதலான அம்சங்களைப் பெறுகிறீர்கள்.


பயர்ஸ்டோன்

Firestone

சூப்பர் கம்-டிப்பிங்

டயர்களையே கேளுங்கள்

பயர்ஸ்டோன் இன்று சிறந்தது-நாளை மேலும் சிறந்தோங்குவது


நெருக்கடியான பட்டணத்து ரோடுகளிலும்
காட்டுப்புறத்து கரடுமுரடான பாதையிலும்
புதிய பார்கோ டிரக்குகள்
ஓரேபோல நன்ருக செல்லுகின்றன
பாதை எவ்வளவு மோசமாயிருந்தாலும், தூக்கிச் செல்லும் பளு எவ்வளவு அதிகமாயிருந்தாலும், புதிய பார்கோ டிரக்குகள் அவைகளை சமாளிக்கும்படி தயாரிக்கப்பட்டுள்ளன. பல புதிய சீர்திருத்தங்கள் கொண்ட இந்த டிரக்குகள் நம்பக்கூடியவைகளாகவும் சிறந்த உழைப்புத்தன்மை கொண்டவைகளாகவும் இருக்கின்றன.
★ நிச்சயமான பிடிப்புள்ள உறுதியான கிளச்
★ வலிமையான சமமாக கழக்கும் ஹைட்ராலிக் பிரேக்குகள்
★ சக்கரங்களுக்கிடையே சிறிது அதிக அளவு நீளம்
★ சாதாரணமாக செலுத்தக்கூடிய வேகத்திலும் உச்ச நிலை சக்தியைத் தருகிறது
பலவகை வீல் பேஸ் அளவுகளோடும் அதிக கனம் தாங்கும் சக்தியோடும் மாடல்கள் கிடைக்கின்றன.
முன்னேற்றத்தோடு தயாரிப்பவர்கள் :-
தி பிரிமியர் ஆட்டோமொபைல்ஸ் லிட்
ஆக்ரா ரோடு, குர்லா பம்பாய்.
சதர்ன் மோட்டார்ஸ், மவுண்ட்ரோடு, மதராஸ்

"போகட்டும், இவ்வளவு காலத்துக்குப் பிறகாவது ராஜத்தின் குறையைத் தீர்க்க வரமாட்டாயா! அவள் உன்னையே நினைத்துக் கொண்டிருக்கிறாள்" என்றான்.

"அதைப் பற்றி நான் ஒன்றும் செய்வதற்கில்லை. அந்த வீட்டுப் பக்கமே நான் வரமாட்டேன்......சரி, சரி, நான் இப்படியே பேசிக் கொண்டிருந்தால் டிக்கட் வாங்கின மாதிரிதான். அப்புறம் அவள் கோபித்துக் கொள்வாள்."

மூர்த்திக்குக் கண் இருட்டிக் கொண்டு வந்தது. பூமி பிளந்து தன்னை விழுங்கிவிடாதா என்று ஏங்கினான். இந்தச் சந்திப்பை, இந்த விஷயத்தை. ராஜத்திடம் சொல்வதா! அன்பற்றவனின் அன்பைத் தன் வாழ்வின் ஆதாரமாக்கிக் கொண்டு விட்டவளிடம் அவன் என்னவென்று சொல்வது! அவள் தாங்குவாளா! "அவளுக்கு அந்த நம்பிக்கையைத் தவிர வேறு என்ன இருக்கிறது!" என்று தன் மனைவி சொன்னது அவன் நினைவுக்கு வந்தது. இப்போது அவன் என்ன செய்ய வேண்டும்! இந்தச் செய்தியைப் பேதை ராஜம் எப்படித் தாங்குவாள்! அவன் இதயம் துடித்தது.

மறுநாள் காலை மூர்த்தி ராஜேச்வரியிடம் வந்தான். அவன் முகத்தில் ஒரு சோகமும் தீர்மானமும் காணப்பட்டன. கடைசியாகத் தங்கையின் ஆறுதலுக்கு வழி தேடிவிட்ட ஒரு அமைதியும் அவன் உள்ளத்தில் இருந்தது.

"ராஜம்! உனக்கொரு நல்ல செய்தியம்மா."

"என்ன அண்ணா!"

"உன் புருஷனிடமிருந்து உனக்குக் கடிதம் வந்திருக்கிறது."

"என்ன! அண்ணா. நிஜமாகவா! நிஜமாகவா!" குருட்டுக் கண்களுக்கும் ஒளியைக் கொடுத்து விடும்போன்ற ஒரு ஆனந்தச் சுடர் ராஜேச்வரியின் முகத்தில் பரவியது. சட்டென்று எழுந்து தன் நிலையை மறந்தவளாய் அவசரமாக முன்னால் அடியெடுத்து வைத்தபடியே, "எங்கே எங்கே!" என்றாள்.

மூர்த்தி அவளைப் பரிவாகப் பிடித்து உட்கார வைத்தான். ஒரு வெறும் காகிதத் துண்டை அவள் கையில் கொடுத்தான்.

பதறும் கைகளால் ராஜேச்வரி அந்தத் துண்டைத் தடவித் தடவிப் பார்த்தாள். அவள் மூச்சு உஷ்ணமாக வந்து கொண்டிருந்தது. "கடைசியாக...கடைசியாக...எழுதி விட்டார்!...அண்ணா, சீக்கிரம் இதைப் படித்துச் சொல்." அவள் மார்பு படபடவென்று அடித்துக் கொண்டது. கடிதத்தை அவன் கையில் கொடுத்துவிட்டு ஆவலும் இன்பமும் பூண்ட முகத்தை அவன் பக்கம் திருப்பி மூச்சிரைக்க, "படி சீக்கிரம்..." என்று குழறினாள். அந்த அன்பு உருவத்தைப் பார்த்து, கண்களில் நீருடன் மூர்த்தி நிதானமாகப் பேச ஆரம்பித்தான். காகிதம் அவன் கையில் இருந்தது. அவன் கண்கள் தங்கையின் மலர்ந்த முகத்தை நோக்கியிருந்தன.

"என் உயிருக்குயிரான ராஜம், நீ பார்வையை இழந்தவுடனேயே உன்னை என்னருகில் வைத்துப் பாதுகாக்க என் உள்ளம் துடித்தது. ஆனால் என் பெற்றோர் அதைத் தடுத்தது மட்டுமன்றி வேறொரு பெண்ணை என் தலையில் சுமத்தவும் முயன்றார்கள். அவர்களுடன் எத்தனையோ போராடி வெற்றி பெற முடியாமல் இறுதியில் தேசத்தை விட்டே வந்து விட்டேன். பல நாடுகளில் ஏதேதோ



பொள்ளாச்சி பிரபல ஜவுளி வியாபாரியான G. சஞ்சீவி செட்டி அண்டு கோ. வின் சீனியர் பாகஸ்தர் திரு D. V. நாராயண செட்டியாரின் குமாரத்தி செல்வி **நாகலக்ஷ்மிக்கும்**, ஹிந்துப்பூர் திரு B. N. ஸ்ரீ ராமையா செட்டி அவர்களின் குமாரன் செல்வன் B. S. **ராமகிருஷ்ணன்** M. B. B. S. க்கும் 23-8-54-ந் தேதி திங்கட்கிழமை கன்னிகா பரமேஸ்வரி தேவஸ்தானத்தில் திருமணம் சிறப்பாக நடந்தேறியது. ஏராளமான வாழ்த்துச் செய்திகளும், வாழ்த்துப் பத்திரங்களும் பரிசுகளும் மணமக்களுக்கு வந்தன.

வாழ்க, நாகலக்ஷ்மி – ராமகிருஷ்ணன்

வியாபாரம் செய்து பிழைத்தேன். இப்போது நான் தென் ஆப்ரிக்காவில் இருக்கிறேன். இத்தனை வருஷங்களாய் உன்னை என் உள்ளம் ஒரு நிமிஷமும் மறக்கவில்லை. உன் மேல் எனக்குள்ள அன்பே எத்தனையோ ஆபத்துக்களிலிருந்து என்னைக் காப்பாற்றி. வாழ்க்கையில் எனக்கு வழிகாட்டியாகவும் ஆணையாகவும் அமைந்தது.

"இங்கு நேர்ந்த ஒரு கோர விபத்தில் நான் தற்செயலாக அகப்பட்டுக் கொள்ள நேர்ந்து விட்டது. அதன் விளைவு—என் இரு கைகளும் சுவாதீனமற்றுப் போய் விட்டன. இந்தக் கடிதத்தை, தெய்வச் செயலாய் இங்கு வந்திருக்கும் நம் ஊர்ப் பையனொருவனைக் கொண்டுதான் எழுதுகிறேன். இதில்கூட - நம் துர்ப்பாக்கியத்தில்கூட - தெய்வம் நமக்கு ஒரே கதியை அளித்தது, நம்முடைய பரஸ்பர ஆத்மீக அன்பினால் தான். ஆனால் நான் இதற்குப் பின் உனக்குக் கடிதம் எழுதுவது சந்தேகம்தான். அதனால் என்ன! என் உள்ளம் உன்னிடமே யிருக்கிறது.

"இங்கு எனக்கு இந்த நிலையில் உதவுகிறவர்கள் ஒரு பிற ஜாதிக் குடும்பத்தினர். நான் இவர்களுக்குக் கடமைப் பட்டவனாகி விட்டதாலும் இவர்கள் உதவியின்றி வாழ முடியாததாலும் இந்த ஊரை விட்டு இவர்கள் கிளம்பினாலன்றி நான் வருவதற்கில்லை. ஆகையால் நாம் இனி சந்திப்போமா என்பது சந்தேகம்தான்.

"ஆனால் ராஜம்! இரு உள்ளங்கள் ஒன்றோடொன்று ஒன்றிக் கொள்வதே சந்திப்பானால் நீயும் நானும் என்றும் பிரியமுடியாது. வாழ்வின் ஒவ்வொரு கணமும் உன்னை நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். நீ என்னுடன் இல்லாதது ஒரு பெரும் குறைதான். ஆனால் உன் வடிவம்

என் இதயத்துள் நிலைத்து நிற்கிறது. அந்த வடிவே என் உயிர், என் இன்பம், என் அன்பு. நான் எத்தனை ஜன்மங்கள் எடுத்தாலும் இந்த உண்மை மாறாது. ரங்கநாதன்."

மூர்த்தியின் கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியது. அதன் வழியே தங்கையின் முகத்தைப் பார்த்தான்.

ராஜேச்வரியின் முகத்தில் அன்று வரையில் இல்லாத ஒரு புது அமைதி விளங்கியது. அந்த அமைதியில் ஒரு இன்பம், உயிரோடு ஒன்றிய ஒரு ஆழ்ந்த பரிபூரண உணர்ச்சி-தெய்வ சன்னிதானத்தில் பக்தனுக்குக் கிடைக்கும்படியானது. ராஜேச்வரி அந்தக் காகிதத்தைத் தன் கண்களில் ஒற்றிக் கண்ணீரால் நனைத்தாள். இதய ஆழத்துள் மறைந்திருந்த துயரமும் வெறுமையும் மறைந்து ஒரு கம்பீரமான சாந்தி அவளிடம் குடி கொண்டது. ஒரு அழகிய மந்தஹாஸத்தோடு "பார்த்தாயா, அண்ணா' வரமாட்டார் என்றாயே' இதோ வந்து விட்டார். இந்தக் கடிதத்தின் மூலம் அவர் எனக்குக் கிடைத்ததைப் போல் உண்மையில் யாரும் கிடைத்ததில்லை. என் நம்பிக்கை வீண் போகவில்லை. என் அன்பு பலித்து விட்டது. அவசியம் இந்தக் கடிதத்துக்குப் பதில் எழுத வேண்டும், அண்ணா!" என்றாள் ராஜேச்வரி.

இந்தத் தடவை மூர்த்தி உண்மையாகவே காகிதமும் பேனாவும் கொண்டு வந்து "உம், சொல்லம்மா" என்றான்.

வெற்றுக் காகிதத்தை இதயத்துடன் அணைத்துக் கொண்டு ராஜேச்வரி பரவசமாய்ப் பேசினாள்: "உங்கள் அன்புச் செய்தியைப் படித்த என் ஜன்மம் சாபல்யமாகிவிட்டது. நான் காத்திருந்தது வீணாகவில்லை. நமது உண்மையான சந்திப்பு நடந்து விட்டது. என் இன்பம் நிறைந்தது. உண்மையில் என் எதிர்பார்த்தல் இன்றோடு தீர்ந்து விட்டது. நீங்கள் நேரில் எப்போது வருவதானாலும்...அதுவரை காத்திருப்பேன்.... அது நடக்காமலே போய்விட்டாலும் இனி எனக்குச் சிறிதும் வருத்தமில்லை...கடிதத்தைத் தபாலில் சேர்த்து விடு, அண்ணா."

"சரி" என்று மூர்த்தி அதை ஒரு கவரில் போட்டு மேலே "என் தலைவன்" என்று விலாசமிட்டான். பிறகு பூஜை அறையில் தெய்வ விக்கிரகத்தின் முன் அதைப் பரிவுடன் சமர்ப்பித்தான்.

படித்துப் பாருங்கள் !

கோவைக் குரல்

தமிழ்ப் பத்திரிகை உலகில் குறிப்பாகக் கவனிக்க வேண்டிய பத்திரிகை "கோவைக் குரல்." அது அரசியல் உலகில் புகுந்து காரசாரமான அபிப்பிராயங்களைத் தயவு தாட்சண்யமற்ற முறையில் தெரிவித்து வருகிறது. அந்தப் பத்திரிகையின் சுதந்திர இதழ் சிறுகதை, அழகுக் கவிதைகள், பல நோக் கவிதைகள், கட்டுரைகள் முதலிய பல அம்சங்களுடன் வெளியாகி யிருக்கிறது. படிப்பதற்கு மிகவும் சுவாரஸ்யமா யிருக்கும் இந்த மலரின் விலை அணா 4 தான்.

ஆசிரியர் : கே. பி. சாரதி, 93, ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர்.

ஸ்ரீமத் பஜனம்ருதம்

ஸ்ரீ ராமதாஸ், புரந்தரதாஸ் கீர்த்தனங்கள், தியாகய்யர் கீர்த்தனம். மற்றும் பல தியான ஸ்லோகங்கள் யாவும் கொண்டு இந்நூல் பஜனை பத்ததிக்கு ஏற்றதாக அமைந்திருக்கிறது. பகவத் கைங்கரியத்தில் சிறந்து விளங்கும் புதுக்கோட்டை ஸ்ரீ கோபால கிருஷ்ண பாகவதர் அவர்கள் சரி பார்த்து வெளி வந்திருக்கிறது.

பிரசுரகர்த்தா : கி. ஸஞ்ஜீவி, நெ. 2320/2. கீழ் 3-ம் வீதி, புதுக்கோட்டை; விலை: ரூ. 2-0-0.

பிரணவ கணபதி

"பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரணவற்புத மலர் தலைக்கணிவோமே"

என்ற ஆன்றோர் வாக்குப்படி விநாயகப் பெருமான் ஓங்கார சொரூபமாக உள்ளவர்; அந்த திவ்ய மங்கள ஸ்வரூபத்தை வண்ண ஓவியமாக வடித்து, அழகாக அச்சிட்டிருக்கிறார்கள்.

பிரசுரம்: Higginbothams Ltd. Book sellers & Publishers, Post Box No. 311. Madras: Price: Annas - 3.

பூக்காரி

பாமர மக்களின் வாழ்க்கை லட்சியங்கள், இதய தாபங்கள், மனோ பாவங்கள்-முதலியவற்றைச் சித்திரிக்கும் கதைகளையே இன்றைய மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள். அவர்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்யக் கூடிய தொகுதி இது என்பதைப் புத்தகத்தின் தலைப்பே எடுத்துக் கூறுகிறது.

பூக்காரி செங்கமலம் சிறுமிதான். ஆயினும் தர்ம நியாயம் உணர்ந்தவள். ஓர் இடத்தில் ஒருவர் பூ கொடுத்துக் கொண்டிருக்கும் போது, அந்த இடத்துக்குத் தானும் போய், போட்டியிடக் கூடாது என்பதை யுணர்ந்தவள். இந்தப் பண்பு பூக்கார நாராயணனைக் கவர்ந்ததோடல்லாமல் படிப்பவர்கள் உள்ளத்தையும் கவர்கிறது !

தபால்கார நாராயணசாமி ஒரு தவறு அன்பு காரணமாகச் செய்து விட்டார். அந்தத் தவறைத் திருத்திக் கொள்ள அவர் மனச்சாட்சி எப்படியெல்லாம் வதைத்து எடுத்தது. 'அபராதம்' அவர் மனச்சாட்சியின் வெற்றியை நிலை காட்டுகிறது. யாவரும் படித்து இன்புறக்கூடிய பல ரஸங்கள் கொண்ட கதைத் தொகுதி.

ஆசிரியர்: கி. வா. ஜகந்நாதன், பிரசுரம்: அமுத நிலையம், தேனாம் பேட்டை சென்னை-18. விலை : ரூ. 1—12—0.

ஸ்ரீ சாரதா தேவியாரின் அன்பு மொழிகள்

உலகப் பற்றை அறவே துறந்து, ஞானப் பெருவாழ்வில் தம்மை மறந்திருந்த ஸ்ரீ சாரதாமணி தேவியார் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் தர்ம பத்தினியாராவார். ஸ்ரீ பரமஹம்ஸரைப் போலவே பாரமார்த்திகத் துறையில் உயர்ந்தவர். அவருடைய ஞானோபதேசங்கள் இச் சிறு நூலில் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

பிரசுரம்: ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை—4 ; விலை : ரூ. 0—6—0.

சர்வதேச ஸ்டாம்புகள்,

தபால் பொருட்காட்சி

ஈஸ்டர்ன் கோர்ட், க்வீன்ஸ்வே, புது டில்லி

○★○

முக்கிய அம்சங்கள் :

★ ஸ்டாம்புகள் பொருட்காட்சி

★ ஸ்டாம்புகள் பற்றிய வரலாறு

★ சர்வதேசக் குழந்தைகள்
ஸ்டாம்பு வரையும் போட்டி.
பரிசுக்குரியவைகளின் கண் காட்சி

★ தபால் இலாக்கா பொருட்காட்சி

★ திறந்த வெளி அரங்கில்
கலை நிகழ்ச்சி

1954 அக்டோபர் 2-ந் தேதி ஆரம்பம்

பொதுமக்களும் விஜயம் செய்யலாம்

○★○

ஞாபகார்த்த வெளியீடுகளும் பிரசுரங்களும்
கிடைக்குமிடங்கள் :

எல்லா தபால் பொருட்காட்சி பீரோக்கள் அண்டு
டைரக்டர் ஜெனரல், போஸ்ட் அண்ட் டெலிகிராப்ஸ், புது டில்லி

AC 587

இதற்கு இணை இது ஒன்றே

ப்ரூக்லாக்ஸ்

உலகில் மிகவும் விரும்பப்படும் சாக்லேட் பேதி மருந்து



ஒரே இரவில்

மலச் சிக்கலை அகற்றுகிறது

போலிகளைப்பற்றி ஜாக்கிரதை!

ப்ரூக்லாக்ஸ் ஒரு

வெஸ்ட்மின்ஸ்டர் லாபரேடரீஸ் லிட்., லண்டன் தயாரிப்பாகும்

எப்பொழுதும் 8 அல்லது [24 வில்லைகளடங்கிய சிவப்பு டின்களிலேயே கிடைக்கும்

2 வில்லைகளின்	கிரயம்	3 அணாதான்

வியாபார விசாரணைகளுக்கு: ஓரியண்டல் மார்க்கன்டைல் ஏஜன்ஸி
தபால் பெட்டி நெ. 10, மதராஸ்-1

வட்ட மேஜை

விசாரணை நடத்த வேண்டும்

தென் திருவாங்கூரைச் சேர்ந்த தமிழர் பகுதிகளில் சமீபத்தில் நடந்த கொடுமையான துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாயும், அதன் பின் தொடர்ந்து அங்கு நடந்த போலீஸ் அடக்கு முறைகளைப் பற்றியும் சகலரும் அறிவர். அச்சம்பவங்களால் பாதிக்கப்பட்டு, அப்பிரதேசங்களில் வாழ வகையின்றி உயிருக்கும் மானத்துக்கும் அஞ்சி அண்மையிலுள்ள திருநெல்வேலி ஜில்லாவுக்குள் ஓடி வந்துள்ள தமிழர்கள் சொல்லும் வரலாறுகள் நம்மெல்லோருக்கும் பெரும் மனக் கொதிப்பை உண்டுபண்ணுவதாக இருக்கின்றன. அவர்கள் கூறும் சோகக் கதை கல் நெஞ்சையும் உருக்கி விடும் என்பதில் ஐயமில்லை.

திருவாங்கூரில் அரசாங்கம் நடத்தும் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியார் காந்திய தத்துவங்களைப் பற்றிப் பேசி, தாங்கள் மக்களுக்குச் சேவை செய்ய வந்திருப்பதாக மேடைப் பிரசங்கங்கள் செய்து ஜனங்களிடம் வாக்குரிமை பெற்றார்கள். ஆனால் நடைமுறையில் நாம் காண்பது என்ன? இந்த ஆட்சியாளர்களின் போக்கைக் கண்டு மனம் உடைந்து அக்கட்சியைச் சேர்ந்த டாக்டர் லோஹியா அக்கட்சியில் தாம் வகித்த பதவியை ராஜிநாமாச் செய்துள்ளார். அந்த அடக்குமுறையைக் கண்டித்து, அது விஷயமாய்ப் பகிரங்க விசாரணை நடத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்நிலைமையில் தமிழர்களாகிய நாம் இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வது என்னவெனில், உடனடியாகப் பொறுப்புள்ள, பட்சபாதமற்ற ஒரு கமிட்டி நியமித்து மேற்படி சம்பவம் குறித்து ஒரு பகிரங்க விசாரணை நடத்தி, மேற்கொண்டு தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான்.

பாளையங்கோட்டை
24—8—54 ஆர். எம். கே. செந்திலாறுமுகம்

★

ஏழைகளிடம் கொள்ளை!

சென்ற 1953-ம் வருடம் ஜூன் மாதம் ரயில்வே இலாகாவில் 'குமாஸ்தா' வேலைக்கு எஸ். எஸ். எல். ஸி. தேறியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கேட்டு விளம்பரம் எல்லா முக்கிய செய்தித்தாள்களிலும் வந்திருந்தது. அதன் பிரகாரம் ஒரு ரூபாய் கொடுத்து, விண்ணப்ப மனு வாங்கி 'கெஜடெட் ஆபீசர்களிடம்' அலைந்து சர்டிபிகேட்டுகள் வாங்கி, ரூ 0-12-0 தபால் செலவு செய்து விண்ணப்பங்கள் போட்ட ஆயிரக்கணக்கானவர்களில் நானும் ஒருவன். பல மாதங்கள் வரை யாதொருவிதமான பதிலும் வரவில்லையாகையால் என்னைத் தேர்ந்தெடுக்கவில்லை என்று எண்ணியிருந்தேன். ஆனால் 12-2-54 அன்று திருச்சிக்கு என்னைப் பரீட்சை எழுத வரச் சொன்னார்கள். என்னுடைய சொந்தச் செலவில் போனேன். பரீட்சை முடிந்ததும் போகச் சொல்லி விட்டார்கள். அந்த 'ஸென்டரில்' மட்டும் ஒரு நாளைக்கு 200 பேர் விதம் ஐந்தாறு நாட்கள் பரீட்சை எழுதினார்கள். மறுபடி 16-3-54 அன்று என்னை நேர்முகப் பரீட்சைக்கு வரச்சொன்னார்கள். இந்தத் தடவையும் சொந்தச் செலவில் போனேன். தினம் 50 பேர் விதம் நாலைந்து தினங்கள் இண்டர்வியூ நடந்தது. தகவல் ஏதுமில்லை. மலையே நான் நம்பினேன். இன்றுவரை பதில் ஏதும் வரவில்லை. ஆனால் மறு விளம்பரம் வந்து விட்டது. '800 பேருக்கு வேலை கொடுக்கப்படும். விண்ணப்பம் போடுங்கள். விண்ணப்ப 'பாரம்' விலை ரூபாய் ஒன்று'' என்று. ஆகையால் என்னைத் தேர்ந்தெடுக்கவில்லை எனத் தெரிய வருகிறது. நானும் மறுபடியும் பல்லாயிரக் கணக்கானவர்களுடன் விண்ணப்பம் போட்டிருக்கிறேன்.

சமீபத்தில் என் நண்பர் ஒருவர் மூலம் விசாரித்ததில் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் 600க்கு 300க்கு அதிகமான மார்க்குகள் வாங்கியவர்களுக்குத் தான் ஆர்டரோ, ஸெலக்ஷனோ கிடைக்குமென்று ஒருவர் தெரிவித்தாராம். இதை அவர்கள் விளம்பரத்தில் போட்டு விட்டால் என் போன்ற எத்தனையோ ஏழைகள் இதற்கு மனுப் போட்டு வீண் செலவு செய்யாமல் மிஞ்சுவார்கள். அப்படி 600க்கு 300 வாங்கியவர்களுக்குத் தான் வேலை கொடுக்கப்படுமென்று சொல்வது சர்க்காரையே அவமானம் செய்வதாகும். பிறகு சர்க்கார் கொடுத்த எஸ். எஸ். எல். ஸி. சர்டிபிகேட்டுக்கு என்ன மதிப்பு!

எனக்காவது பதில் வந்தது; வரச் சொல்லித்தான்! ஆனால் மூக்கால் பங்குக்கு மேலானவர்களுக்கு எந்தவிதமான பதிலும் வருவதில்லை. ஆனால் அவர்கள் என்னைவிட அதிஷ்டசாலிகள் என்று சொல்ல வேண்டும். நான் 20 ரூபாய்க்கு அதிகமாகச் செலவு செய்து தோல்வியடைந்தேன்.

நாகப்பட்டணம்
19—8—54 என். ஸ்ரீனிவாஸன்

★

இரவுக் கல்லூரி

இந்தியாவில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு என்பது உலகறிந்த விஷயம். இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு, மக்களிடையே அறிவைப் பெருக்குவதற்கு நமது அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்தது. இப்பொழுதும் எடுத்துக் கொண்டு தான் இருக்கிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பள்ளிக்கூடங்கள் புதிது புதிதாகத் தோன்ற ஆரம்பித்திருக்கின்றன. இந்தியா-பாகிஸ்தான் சச்சரவினால் கூட இந்தியாவிலிருந்த அநேக குடும்பங்கள், தங்கள் குழந்தைகளைப் படிப்பிப்பதற்குக் கூட நாதியற்றுப் போயின.

மேற்கூறியவைகளை யெல்லாம் நினைத்துப் பார்த்து இந்திய அரசாங்கம், அதன் தலைநகரான புதுடில்லியில் ஓர் இரவுக் கல்லூரியை நடத்துவதற்குப் பஞ்சாப் சர்வகலாசாலை அதிகாரிகளுக்கு அனுமதி கொடுத்தது. ''தங்கள் வாழ்க்கையில் இனி முன்னேறுவது மிகக் கஷ்டமான காரியம்'' என்று நினைத்து வந்த பல்லாயிரக் கணக்கான மாணவர்களுக்கு புதுடில்லியில் ஆரம்பிக்கப்பட்ட இரவுக் கல்லூரியானது ஆறுதலளித்து வருகிறது. இக்கல்லூரியில் 3 000 மாணவர்கள் இரவில் கல்வி பெறுகின்றனர். அவர்களுக்கு என்று பிரத்தியேகமாக நிறுவப்பட்ட இந்தக் கல்லூரியில் பல தமிழர்களும் கல்வி பயின்று வருகின்றனர்.

இப்பொழுது இந்தக் கல்லூரி பஞ்சாப் சர்வகலாசாலை அதிகாரிகளால் நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் இக்கல்லூரி டில்லி சர்வகலாசாலை

எல்லைக்குட்பட்டது. ஆதலால் டில்லி சர்வகலா சாலை அதிகாரிகளும், வேறு பலரும் இந்தக் கல்லூரியின் நீடிப்பை விரும்பவில்லை.

கடைசியில் டில்லி சர்வகலாசாலை தங்களுக்கும் ஒரு இரவுக் கல்லூரியை நடத்த அனுமதி கோரி ஓர் விண்ணப்பம் சமர்ப்பித்தது. டில்லி சர்வகலா சாலை பஞ்சாப் சர்வகலாசாலையைப் போல் நிறைய மாணவர்களுக்குக் கல்வி புகட்ட வசதி ஏற்படுத்தும் வரை, அந்தச் சர்வகலாசாலை டில்லியில் இருப்பது பற்றித் தடையொன்றும் செய்யாது என்று ஓர் அறிக்கையும் வெளியிட்டது.

இப்பொழுது புதியதாக வெளி வந்துள்ள ஒரு செய்தியிலிருந்து ''இரவுக் கல்லூரியின் நீடிப்பைப் பற்றிய விஷயம் இந்த வருடம் டிஸம்பர் மாதம் தீர்மானிக்கப்படும்'' என்று தெரிய வந்திருக்கிறது. அத்துடன் ''இரவுக் கல்லூரியில் பயின்று வரும் மாணவர்கள் பட்டதாரிகளாக ஆகவேண்டுமானால், பகல் கல்லூரிகளில் பயின்று வரும் மாணவர்களைவிட ஒரு வருடம் அதிகம் கல்வி பயில வேண்டும்'' என்ற கொள்கையை டில்லி சர்வ கலாசாலை உப அத்யட்சகர் ஸ்ரீ மகாஜனி பின் தாங்கி யிருக்கிறார். காரணம்—இரவுக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள், பகல் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களைப் போல் ஊக்க முடையவர்களாக இருக்க முடியாதாம்.

முக்கியமாக ஒரு கல்வி ஸ்தாபனத்தின் மதிப்பைக் குறிப்பிடுவது, அந்தக் கல்லூரியில் வருடா வருடம் தேறும் மாணவர்களின சத விகிதமல்லவா! இந்த வருடம் பி. ஏ. வகுப்பில் தேறிய மாணவர்களின் சதவிகிதம் இந்தக் கல்லூரியைப் பொறுத்த மட்டில் சுமார் எழுபது சத விகிதம். ஆனால் ஆகமொத்தம் பஞ்சாப் சர்வ கலாசாலையில் நாற்பத்தைந்து சத விகிதமே தேறியுள்ளனர். இதிலிருந்தே இக்கல்லூரியில் பயிற்சி பெறும் மாணவர்கள் எவ்வளவு ஊக்கத்துடன் கல்வி பயின்று வருகின்றனர் என்று தெரியவில்லையா! சென்ற மூன்று வருடங்களிலும் இதே போல் மாணவர்கள் மிக ஊக்கமுடன் படித்து இக் கல்லூரிக்கு நல்ல பெயர் வாங்கித் தந்துள்ளனர். இக்கல்லூரி நிறுவப்பட்டு இப்பொழுது 5-வது வருடம் நடை பெறுகிறது. இந்தக் கல்லூரியில் பயின்று வந்த மாணவர்கள், தங்களுக்கு இந்தக் கல்லூரி கடவுளின் ஒரு வரப் பிரசாத மென்றே நினைத்து வந்துள்ளனர்.

இந்தக் கல்லூரியின் நீடிப்பைப் பற்றி டிஸம்பர் மாதத்தில் நடக்கப் போகும் மகாநாட்டில் என்ன தீர்மானம் அமுலுக்கு வரப் போகிறதோ தெரியவில்லை.

புது டில்லி
22-7-54 டி. வி. சங்கரன்

★

யார் குற்றம்?

எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை எழுதின மாணவர்களில் சராசரி பாதிப்பேர் தேறாத உண்மைக் காரணத்தைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

டாக்டர் ஸி. வி. ராமன், ராஜாஜி, ஈரோடு பெரியார் இம்மூவரும் சினிமாவினால் தீமையே ஒழிய நன்மை கிடையாது என்று சொல்வது முற்றிலும் உண்மை. காரணம் மாணவர்கள் 17 வயது முதல் 20 வயதுக்குள் பரீட்சை எழுதுகிறார்கள். இவர்கள் நன்மை எது, தீமை எது என்று தெரியாத பருவத்தினர். இப்பொழுது வெளி வரும் சினிமாப் படத்தில் காதல் கட்டத்தைப் பார்த்துக் களிப்படைகின்றார்கள். எப்பொழுது பார்த்தாலும் சினிமா, சினிமா சம்பந்தமான பேச்சாகவே பேசிக் கொள்ளுகின்றனர். நாம் எப்பொழுதாவது மாட்னி சினிமாவுக்குப் போனால் 17 வயது முதல் 20 வயதுள்ள மாணவர்களையே தியேட்டரில் ஏராளமாகப் பார்க்க முடிகிறது. உதாரணமாக என் மகன் 'செலக்ஷன்' ஆவதே கஷ்டம் என்று நினைத்தேன். எப்படியோ செலக்ஷன் ஆகி விட்டது. 'பரீட்சை முடியும் வரை சினிமா பார்க்காதே' என்று கண்டித்தும்கூட சிநேகிதர்களின் வற்புறுத்தலின் பேரில் சிநேகிதர்களின் பணத்துடன் சினிமா பார்த்துப் பரீட்சையில் 'கோட்' அடித்தான். சினிமா வேண்டாம் என்று சொல்லவில்லை. சினிமாவில் காதல் கட்டம் அளவுக்கு மீறிக் காட்டப் படுவதால்தான் மாணவர்கள் கெட நேருகிறது. சமீபத்தில் ஆயிரக்கணக்கான தாய்மார்கள் டில்லி சர்க்காரிடம் முறையிட்டுக் கொண்டும் டில்லி சர்க்கார் கவனிக்கவில்லை. நாம் படிக்கும்போது ரொம்பவும் கடினமான பாடமாக இருந்தன. இப்பொழுது கொடுக்கும் பாடங்களோ சுலபமாகத் தெரிகிறது. இந்தப் பாடங்களைக் கூடச் சரியாகப் படியாமல் மனத்தைக் கட்டுப்பாடில்லாமல் விட்டுப் பரீட்சையில் சேராமல் இருந்தது மாணவர்களின் குற்றமே.

மதுரை
23—8—54 பி. எம். ராமலிங்கய்யர்

★

சக்கரவர்த்தித் திருமகன்

ஸ்ரீ ராஜாஜி அவர்கள் எழுதும் ''சக்கரவர்த்தித் திருமகன்'' 'கல்கி'யில் வெளி வர ஆரம்பித்ததிலிருந்து ''கல்கி''க்கே ஒரு தனி ஒளி ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இது வரையில் ''கல்கி'' சிறியோருக்கும் நடுத்தர வயதுடையவருக்கும் ஏற்ற புத்தகமாக வெளி வந்து கொண்டிருந்தது. இப்படிச் சொல்வதால் முதியோர்கள் ''கல்கி''யைப் புறக்கணித்து வந்தனர் என்று அர்த்தமில்லை.


வெள்ளிக் கிழமை தோறும் எங்கள் வீட்டுக்கு 'கல்கி' வரும்; தவறினால் கட்டாயம் சனிக்கிழமை கிடைக்கும். 'கல்கி' ஏஜெண்ட், 'ஸார்' என்று கூப்பிடக் கூடத் தேவை யில்லை. நான், நீ என்று எங்கள் வீட்டிலுள்ளவர்கள் முந்திக் கொண்டு போய் வாங்கிக் கொண்டு வந்து விடுவார்கள். இது நாள் வரையில் நாங்கள் குழந்தைகள் முந்துவோம் 'கல்கி' புத்தகத்துக்கு. இப்பொழுது சென்ற இரண்டு மூன்று வாரங்களாக எங்கள் தாத்தா, '''கல்கி'யை இப்படிக் கொடுங்கள். பத்து நிமிஷத்தில் 'சக்கரவர்த்தித் திருமக'னைப் படித்து விட்டுத் தந்து விடுகிறேன்'' என்கிறார்.

புது டில்லி
23-7-54 டி. வி. எஸ்.

★

சர்க்கார் இதைக் கவனிக்குமா?

என் சகோதரி ஹையர்கிரேட் டிரெயினிங்குக் காக அரசாங்க ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் சேருவதற்கு, இரண்டு வருடங்களாகச் சேலம் பெண்கள் பாடசாலை இன்ஸ்பெக்ட்ரஸுக்கு மனுப் போட்டாள். ஆனால் இரண்டு வருடமும் தேர்வு ஆக வில்லை. நான் இந்தத் தடவை நேரில் சென்று இன்ஸ்பெக்ட்ரஸிடம் விவரமாக விஷயத்தைச் சொன்னேன். கவனிப்பதாகச் சொன்னார்



சென்ற ஆகஸ்டு பதினைந்தாம் தேதி சுதந்திர தின விழாவைச் சிவகாசி தீப்பெட்டி சங்கத்தார் வெகு சிறப்பாகக் கொண்டாடினர். விழாவுக்கு ராமநாதபுரம் ஜில்லா கலெக்டர் திரு வி. பாலசுந்தரம் ஐ. ஏ. எஸ். தலைமை வகித்தார். விழாவில் சிவகாசி நகரப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். சிவகாசி சப் கலெக்டர் ஸ்ரீ என். வி. சந்திரன், ஸ்ரீ அய்ய நாடார், சிம்சோ ஸ்ரீ ஆறுமுகசாமி நாடார் முதலியவர்களை மேலேயுள்ள படத்தில் காணலாம்.

ன். ஆனால் பயனில்லை. என் சகோதரி அதற்குத் தேவையான இ. எஸ். எல். ஸி. படிப்பு நல்ல மார்க்குடன் தேறியிருக்கிறாள். இருந்தும் பயனில்லை. சர்க்காரால் இ. எஸ். எல். ஸி. படித்தவர்களுக்குத்தான் முதலில் தேர்வு ஆகும் என்று கேள்விப்பட்டு, அதைப் படிக்க வைத்தோம். ஆனால் இ. எஸ். எல். ஸி. படிக்காத, ஒரு நான்காம் பாரம் படித்த பெண்ணுக்குச் சிபார்சின் பேரில் இந்த வருடம் செலக்ஷன் ஆகி இருக்கிறது. எங்களைப் போன்ற ஏழைகள் சிபார்சுக்கு எங்கு போவது? அத்துடன் அடிக்கடி சேலம் போய் வரச் சௌகரியம் இல்லை. இப்படியே ஒவ்வொரு வருடமும் செலக்ஷன் ஆகாமல் இருந்தால், என் சகோதரியின் வாழ்க்கை என்ன ஆவது? மேற்கொண்டும் படிக்க வைக்க வழி வேறு இல்லை. என் சகோதரி போல் அநேக சகோதரிகள் இடம் கிடைக்காமல் கஷ்டப் படுகிறார்கள். இதைச் சர்க்கார் கவனித்துச் சௌகரியம் செய்ய வேண்டும்.

மேட்டூர் அணை
17—8—54

கே. வெங்கடராமன்

★

என்ன ஆனந்தமோ?

நான் 1952-ம் வருஷம் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் பாஸ் செய்தேன். பாஸ் செய்தவுடன் வேலை கிடைக்காததால் 1953-ம் வருஷம் சர்க்காரின் வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தில் என் பெயரைப் பதிவு செய்தேன்.

வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தில் இருந்து இதுவரை எனக்கு ஒரு வேலையும் தேடித் தரவில்லை. இதர சர்க்கார் ஆபீஸ்-களில் வேலைக்கு மனுப் போட்டால் அவர்கள் 'வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தின் சிபாரிசு தேவை' என்று சொல்லுகிறார்கள். அதுபோல் இரண்டு மூன்று இன்டர்வியூக்கள் கிடைத்தன. அவைகளில் ஒன்று ஏதோ ஒரு ஆபீஸில் அட்டெண்டர் உத்யோகத்துக்கு. குறிப்பிட்ட நாளன்று ஆபீசுக்கு (இருக்கும் இடத்திற்கு) சுமார் 60 மைல் சென்றேன். இதே உத்தியோகத்துக்கு என்னைப் போல் நூறு பேர்கள் வந்திருந்தார்கள். கடைசியில் காலையிலிருந்து மாலை வரை காத்திருந்து திரும்ப வேண்டியதாகி விட்டது. இது போல் இந்த வேலைக்காக 5, 6 பேர்களை வெகு தூரத்திலிருந்து வரவழைத்துத் திருப்பி அனுப்புவதில் தான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு என்ன ஆனந்தமோ தெரியவில்லை!

காரைக்குடி
25—8—54

ரெ. சௌரிராஜன்

★

பலன் உண்டு!

எனது ஜில்லாவிலுள்ள வேலை தேடித் தரும் ஸ்தாபனம் அவ்வளவு மோசமானதல்ல. பதிவுக் கார்டைப் புதுப்பிக்கச் செலவு மூக்காலணாதான். ரிப்ளை கார்டு அனுப்ப வேண்டியதில்லை. எனக்கு மாசம் ஒரு முறை "இன்டர்வ்யூ" கார்டு வந்து விடுகிறது. அதன் மூலம் இது வரை எட்டு "இன்டர்வியூ"க்களுக்குச் சென்றிருக்கிறேன். பலன் பூஜ்யம்தான்.

ஆனால் ஒரு திருப்தி. மாதம் தவறாது இன்டர்வியூக் கார்டு வந்து விடுவதால் அதற்குரிய செலவை வீட்டில் கொடுத்து விடுகிறார்கள். அந்த ஒரு நாளாவது வீட்டில் அடைந்து கிடக்காமல் வேற்றூர் சென்று நம் நண்பர்களை (அதாவது வேலையில்லாதோரை) கண்டு அளவளாவலாம்.

மேலும் இன்னொரு பலன்! பல இடங்களுக்கு இன்டர்வியூக்குச் செல்வதால் பல விதப்பட்ட அதிகாரிகளைக் காணலாம். "குதிரைக்கு எத்தனை கொம்புகள்?" என்பது போன்ற வினாக்களுக்கு விடையளிக்கவும் நேரலாம். எது எப்படியோ! அன்றைப் பொழுது மிகவும் தமாஷாகக் கழிந்து விடுகிறது.

எனவே வேலை தேடித் தரும் ஸ்தாபனம் வாழ்க எனக் கோஷமிடுகிறேன்.

பழைய பல்லாவரம்
24—8—54

இ. அ. நாராயணன்

Edited, Printed and Published by K. Krishnamurthy at the "Kalki" Press,
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras 10.


க்ஷணத்தில் நுரையும் ஸன்லைட் அடித்துத்துவைக்காமலே
வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்யும்
என் மனைவி என் ஆடைகளை மிகவும் ஜாக்கிரதையாக கவனித்துக் கொள்கிறாள். அவள் ஸன்லைட் சோப்பைத்தான் உபயோகிக்கிறாள். ஸன்லைட் சோப்பின் அதிசீக்கிரம் வேலை செய்யும் செழிப்பான நுரை ஆடைகளிலுள்ள அழுக்கை அடித்துத் துவைக்காமலே அகற்றி விடுகிறது. அதனால் துணிகள் நீடித்திருக்கின்றன.
ஸன்லைட் சோப்பால் துணிகளை சலவை செய்வது மிகவும் சுலபம் அதனால் பொழுதுபோக்கிற்கு சாவகாசம் கிடைக்கிறது. ஸன்லைட் சோப்பின் சுறுசுறுப்பான நுரை அழுக்கை விரட்டி, கலர் துணிகளை நந்தவனம்போல் பிரகாசமாகச் செய்கிறது.
SUNLIGHT SOAP
ஸன்லைட் சோப்
துணிகளைக் காப்பாற்றுகிறது, சிரமத்தைக் குறைக்கிறது, பணத்தை மிச்சப்படுத்துகிறது
S. 220-50 TM
இந்தியாவில் தயாரித்தது

REGISTERED No. M. 4392

Registered as a news paper in Ceylon

